கற்றது கைம்மண்ணளவு
கல்லாதது உலகளவு

**நியூ செஞ்சுரியின்**

# உங்கள் நூலகம்

**மாத இதழ்**

*திருவள்ளுவராண்டு 2053*

*மலர் - 15 இதழ் - 01 - ஏப்ரல் 2023*

ஆசிரியர்

**த.ஸ்டாலின் குணசேகரன்**

பொறுப்பாசிரியர்

**சண்முகம் சரவணன்**

ஆசிரியர் குழு

பேராசிரியர் ஆ.சிவசுப்பிரமணியன்
முனைவர் ச.சுபாஷ் சந்திரபோஸ்
முனைவர் ந.முத்துமோகன்
முனைவர் மு.இராமசுவாமி
முனைவர் நா.இராமச்சந்திரன்
முனைவர் பா.ஆனந்தகுமார்
முனைவர் ஞா.ஸ்டீபன்
ப.கு.ராஜன்
முனைவர் இரா.அறவேந்தன்
முனைவர் இரா.காமராசு
முனைவர் உ.அலிபாவா

இதழ் வடிவமைப்பு

*கா. குணசேகரன்*

நியூ செஞ்சுரி வாசகர் சங்கம்
பதிவு எண் : 21/2005/ 11/2/2005
16 (142). ஜானி ஜான்கான் ரோடு.
இராயப்பேட்டை. சென்னை - 600 014
ungalnoolagam@gmail.com | www.ncbhpublisher.in
இணைய தள முகவரி: **www.keetru.com**

தனி இதழ் ₹ 45.00. ஆண்டு சந்தா ₹ 540.00
மாணவர்களுக்கு ₹ 500.00
ஆயுள் சந்தா ₹ 5400.00
அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ 4050.00

*சந்தா தொகையை*
**New Century Reader's Sangam**
**Central Bank of India**
**Ambattur Branch. Chennai - 600 050**
**A/c.No. 1035249018**
**IFSC Code : CBIN0282161**
*என்ற வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.*

---

உங்கள் நூலகம் பற்றிய விமர்சனக் கடிதங்கள்,
உங்கள் நூலகத்திற்கான படைப்புகள், கட்டுரைகள்,
நூல் விமர்சனங்கள், மதிப்புரைக்கான நூல்கள்
ஆகியவற்றைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புமாறு வேண்டுகிறோம்.

**பொறுப்பாசிரியர்**
**உங்கள் நூலகம்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
**41-பி. சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்.**
**அம்பத்தூர். சென்னை - 600 050.**
**தொலைபேசி எண் : 044-26251968, 26258410**

## உள்ளே...

**1** ‘இருண்ட கண்டத்தின்’ ஒளிக் கீற்றுகள்
ஆசிரியர் குழு......04

**2** சச்சிதானந்தன் சுகிர்தராஜாவின் மூன்று நூல்கள்
ஆ.சிவசுப்பிரமணியன்......06

**3** மதராஸ் அரசாங்க முதல் கலைச் சொல் பட்டியல் (1923) தமிழில் இல்லை
டாக்டர். சு. நரேந்திரன்......11

**4** வீணாதி வீணன் கதை
அ.கா.பெருமாள்......15

**5** ஒரு குறள் இரு குரல்கள்
சச்சிதானந்தன் சுகிர்தராஜா......23

**6** எது இனிய இல்லறம்?
பாவண்ணன்......29

**7** களம் காலியாக உள்ளது
க. பழனித்துரை......35

**8** புதிய நோக்கில் களப்பிரர் வரலாறு
சண்முக.ஞானசம்பந்தன்......41

**9** இனவெறியும் இலக்கிய சாட்சியும்
முனைவர் த. பாலுசாமி......47

**10** உங்கள் குழந்தையின் எடை அதிகமாக உள்ளதா?
மருத்துவர் ப.வைத்திலிங்கம்......51

**11** இந்திய அரசமைப்புச் சட்டத்தைக் காப்பாற்ற வேண்டும்
தொல்.திருமாவளவன்......55

**12** விடுதலைக்களத்தில் வீர மகளிர்
நிகழ் அய்க்கண்......61

**13** இலக்கியம் பார்வையற்றவர்களுக்கு எதிரானதா?
கென்னத் ஜெர்னிகன்......66

# ‘இருண்ட கண்டத்தின்’ ஒளிக் கீற்றுகள்

ஆப்பிரிக்கா, தனது பஞ்சம், பசி, பட்டினி, இனக்கொலைகள் போன்றவற்றிற்காக இந்திய ஊடகங்களில் இடம் பிடித்தால்தான் உண்டு. மைய நீரோட்ட ஊடகங்களில் வந்த எத்தியோப்பியா, சோமாலியா மக்களின் பட்டினிக் காட்சிகள், ருவாண்டாவின் படுகொலைகள், இடி அமீன் ‘பிள்ளைக்கறி’ உண்ட புராணம் போன்றவற்றின் மூலம்தான் இந்திய தமிழக மக்களுக்கு ஆப்பிரிக்க அறிமுகம். நெல்சன் மண்டேலாவும் சினுவா அச்சுபி, வோல் சோயிங்கா, ங்கூகி வாதிங்கா, சிமெமன்டா அடிச்சி போன்ற இலக்கியகர்த்தாக்களும்தான் ஆப்பிரிக்கா குறித்த நேர்மறையானதும் நம்பிக்கை அளிக்கக் கூடியதுமான சித்திரத்தை அளித்தவர்கள்.

சமீபகாலமாக ஆப்பிரிக்க அரசியல் வானில் மெல்லிய ஒளிக் கீற்றுகள் தெரியத் தொடங்கியுள்ளன. தன்சனியா, ருவாண்டா, கென்யா, உகாண்டா ஆகிய நாடுகளில் (மொத்த மக்கள் தொகை: 17.6 கோடி) அலுவல் மொழி, வேறு சில நாடுகளில் சிறுபான்மையினர் மொழி என்ற அங்கீகாரம் பெற்றது ஸ்வாஹிலி. 2022 ஆம் ஆண்டுதான் ஸ்வாஹிலி மொழியில் மார்க்சின் ‘மூலதனம்’ நூலின் முதல் தொகுதி வந்துள்ளது. தமிழில் என்.சி.பி.ஹெச் வெளியீடாக வந்து இந்த மாதத்துடன் 25 ஆண்டுகள் முடிவடைகின்றன.

தென்னாப்பிரிக்காவில் கம்யூனிஸ்ட் கட்சி *(SACP)* ஆட்சியில் ஒரு இளைய பங்காளி. இந்தியாவில் கம்யூனிஸ்ட்டுகள் இந்திய தேசிய காங்கிரஸில் இணைந்து உள்ளிருந்து பணியாற்றியது போல தென்னாப்பிரிக்காவிலும் ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸில் இருந்து பணியாற்றுவது வழக்கம். நெல்சன் மண்டேலா கைதாகி 27 ஆண்டுகால தண்டனைக்கு சிறைக்குச் சென்றபோது கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு உறுப்பினர் என்பது அவரது மரணத்திற்குப் பின்புதான் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

இப்போது கென்யா, தன்சனியா, கானா, ஜாம்பியா, ஜிம்பாப்வே... என்று பல நாடுகளில் சிறிய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கட்சிகள் இயங்கி வருகின்றன. இளைஞர்கள், மாணவர்கள் மத்தியில் மார்க்சியம் பரவி வருகின்றது. ஆப்பிரிக்க நாடுகள் காலங்காலமாக ஐரோப்பிய நாடுகளையே வணிகத்திற்கும் உதவிகளுக்கும் நம்பியிருந்தன. ஐரோப்பிய நாடுகள் ஆப்பிரிக்க நாடுகளின் நிலையைத் தங்கள் நலன்களுக்காகப் பயன்படுத்திச் சுரண்டி வந்தன. அமெரிக்கா 29 இடங்களிலும் ஃபிரான்ஸ் 10 இடங்களிலும் ராணுவத் தளங்களை வைத்துள்ளன. அப்படி ஏதும் இல்லாமலேயே இன்று சீனா ஆப்பிரிக்க நாடுகளின் முதன்மையான வணிகக் கூட்டாளியாக மாறியுள்ளது. அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளைக் காட்டிலும் அதிக அளவில் சீனாவின் பொருளாதார உதவிகளும் கிடைத்து வருகின்றன. சீனா செல்வாக்குள்ள நட்பு நாடாக மாறியுள்ளது. அமெரிக்கா, சீன நட்பை தொடர்ந்து குறை கூறி வருகின்றது. ஆனால் அமெரிக்காவை நிராகரித்து ஆப்பிரிக்க இடதுசாரிகள், மார்க்சிஸ்ட்டுகளின் குரல்கள் சமூக ஊடகங்களும் இடதுசாரி இதழ்களிலும் ஒலிக்கத் தொடங்கியுள்ளன.

முக்கண்ட சமூக ஆய்வுக் கழகம் *(Tricontinental : Institute for Social Research)* அதன் வெளியீட்டில் *(Studies)* கானா சோசலிஸ்ட் இயக்கம் *(Socialist Movement of Ghana)* அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் தோழர்.கிரேட்வி ஒப்போக்கு *(Kyeretive Opoke)* எழுதியுள்ள சிறு கட்டுரையின் சுருக்கம் கீழே உள்ளது. (முழுமை பின்னர் சிறுநூலாக வரும்). வாசித்துப் பாருங்கள்:

**ஏகாதிபத்திய 'விதிகள் அடிப்படையிலான ஒழுங்கில்' எட்டு முரண்பாடுகள்**

நாம் இப்போது உலக வரலாற்றின் பண்புரீதியான புதிய கட்டத்திற்குள் நுழைந்து கொண்டிருக்கிறோம். 2008-ல் ஏற்பட்ட பெரும் நிதித்துறை நெருக்கடியைத் தொடர்ந்து வந்த ஆண்டுகளில் உலக அளவில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட ஆரம்பித்துள்ளன. இதனை ஏகாதிபத்தியத்தின் புதிய நிலையிலும், எட்டு முரண்பாடுகளின் குறிப்பான தன்மைகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களிலும் காண முடிகிறது.

1. *அந்திமக்கால ஏகாதிபத்தியத்துக்கும் சீனாவின் தலைமையில் உருவெடுத்து வரும் வெற்றிகரமான சோசலிசத்துக்கும் இடையிலான முரண்பாடு*
2. *ஏகாதிபத்திய ஜி7 நாடுகள் என்ற குறுகிய வட்டத்தில் உள்ள ஆளும் வர்க்கங்களுக்கும் உலகளாவிய தென்புல முதலாளித்துவ நாடுகளின் அரசியல் மற்றும் பொருளாதார மேல்தட்டினருக்கும் இடையிலான முரண்பாடு*
3. *உலகளாவிய தென்புல நாடுகளில் உள்ள பரந்து விரிந்த நகர்ப்புற மற்றும் கிராமப்புற உழைக்கும் வர்க்கம் மற்றும் கீழ்த்தட்டு குட்டி-முதலாளித்துவ வர்க்கம் (ஒன்றாக சேர்ந்து பெருந்திரள் வர்க்கங்கள் என்று அறியப்படுகின்றன) அதிகாரத்தில் உள்ள அமெரிக்க ஐக்கிய நாடுகள் தலைமையிலான ஏகாதிபத்திய மேல் தட்டினருடன் கொண்டிருக்கும் முரண்பாடு*
4. *தொழில்துறை, சுற்றுச்சூழல்ரீதியில் நிலைப்புருவான விவசாயம், வேலைவாய்ப்பு, மேம்பாடு ஆகியவற்றில் முதலீட்டுக்கான சமூகங்களின் தேவைகளை ஒழுங்கமைப்பது தொடர்பாக, கப்பம் ஈட்டும் முன்னேறிய நிதித்துறை மூலதனத்துக்கும் சோசலிசம் அல்லாத நாடுகளின் மக்கள்திரள் வர்க்கங்களின் மற்றும் மூலதனத்தின் ஒரு சில பிரிவுகளின் தேவைகளுக்கும் இடையிலான முரண்பாடு.*
5. *உலகளாவிய தென்புல நாடுகளில் உள்ள வெகுமக்கள் வர்க்கங்களுக்கும் அந்நாடுகளில் அதிகாரத்தில் உள்ள அரசியல் பொருளாதார மேட்டுக்குடியினருக்கும் இடையிலான முரண்பாடு*
6. *அமெரிக்க ஐக்கிய நாடுகள் தலைமையிலான ஏகாதிபத்தியத்துக்கும், தமது இறையாண்மையை உறுதியாக பாதுகாக்க முயற்சிக்கும் நாடுகளுக்கும் இடையிலான முரண்பாடு*
7. *உலகளாவிய வடபுல நாடுகளில் ஒதுக்கித் தள்ளப்பட்ட கோடிக்கணக்கான உழைக்கும் வர்க்க ஏழைகளுக்கும், இந்த நாடுகளில் அதிகாரத்தில் உள்ள முதலாளி வர்க்கத்தினருக்கும் இடையிலான முரண்பாடு*
8. *மேற்கத்திய முதலாளித்துவத்துக்கும் பூமிக்கோள் மற்றும் மானுட வாழ்வுக்கும் இடையிலான முரண்பாடு.*

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் உலகப் பேரரசின் முடிவை நாம் காணப் போகும் ஒரு புதிய சகாப்தத்தின் தொடக்கத்தில் உலகம் இன்று உள்ளது. பல உள்ளார்ந்த முரண்பாடுகள், வரலாற்றுரீதியான அநீதிகள், பொருளாதாரரீதியாக செயலற்றுப் போவது ஆகியவற்றின் சுமையின் கீழ் நவ-தாராளவாத அமைப்பு சீர்குலைந்து கொண்டிருக்கிறது. ஒரு மேம்பட்ட மாற்று இல்லை என்றால், உலகம் இன்னும் அதிக குழப்பங்களுக்குள் வீழ்ந்து விடும். இத்தகைய சமூகரீதியான துயரம் இல்லாத வேறு ஒரு உலகம் சாத்தியம் என்ற நம்பிக்கையை நமது இயக்கங்கள் புதுப்பித்துள்ளன.

– டிரைகாண்டினெண்டல்


*https://thetricontinental.org/eight-contradiction-of-the-imperialist-rules-based-order/*

‘சமூகரீதியான துயரம் இல்லாத வேறு ஒரு உலகம் சாத்தியம்’ என்ற ஆப்பிரிக்கத் தோழர்களின் நம்பிக்கையை 100 ஆண்டு கால பொதுவுடைமை இயக்க வரலாறு கொண்ட நாமும் கொள்ளலாம்.

**– ஆசிரியர் குழு**

நூல் அறிமுகம்

# சச்சிதானந்தன் சுகிர்தராஜாவின் மூன்று நூல்கள்




ஆ.சிவசுப்பிரமணியன்

தமிழில் தீவிர வாசகர்களுக்கு நன்கு அறிமுகமான எழுத்தாளர் சச்சிதானந்தன் சுகிர்தராஜா. இலங்கைத் தமிழரான இவர் இங்கிலாந்தின் பர்மிங்காம் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெற்று அங்கேயே பேராசிரியராகப் பணியாற்றியவர். உயர் கல்விப்புலம் சார்ந்த இவர் பின்காலனியத்துவத்தில் புலமை மிக்கவர். இவரது நூல்கள் ஆக்ஸ்போர்ட், கேம்பிரிட்ஜ், ஹார்டுவேர்டு பல்கலைக் கழகங்களின் வெளியீடுகளாக வந்துள்ளன. தமிழ், ஆங்கிலம் மொழிகளில் மட்டுமின்றி ஜெர்மன், ஸ்பானிஷ், இத்தாலியன், கொரியன், மலேயன், சீன மொழிகளிலும் இவரது நூல்கள் வெளிவந்துள்ளன.

இந்த ஆண்டின் (2023) தொடக்கத்தில் (1) ஆசியாவை அசத்த முயன்ற பொதுவுடைமைவாதிகள் (2) யூதர்கள், சைவர்களான கதை (3) நான் தடுப்பூசி குத்தப்போனேன் ஆகிய இவரது மூன்று நூல்கள் நியூ செஞ்சுரி புத்தக நிறுவன வெளியீடாக வெளிவந்துள்ளன. இவை குறித்த அறிமுகமே இக்கட்டுரைத் தொடர்.

> “எழுத்துக்களின் வேலை என்பது “அதிகாரத்திற்கும் அந்தஸ்துக்கும் எப்போதும் அச்சுறுத்தலாக இருப்பது’ (எட்வரட் ஸெயித்)”

**முதல் நூல்:**

*2021-2023* ஆம் ஆண்டுகளில் காலச்சுவடு இதழில் வெளிவந்த இவரது எட்டு கட்டுரைகளின் தொகுப்பில் இடம் பெற்றுள்ள ‘ஆசியாவை அசத்த முயன்ற பொதுவுடைமைவாதிகள்’ என்ற தலைப்பிலான கட்டுரையே இந் நூலின் தலைப்பாக அமைந்துள்ளது. இக்கட்டுரை ஆசியாவில் செயல்பட்ட மூன்று உலகப் புகழ்பெற்ற பொதுவுடைமைவாதிகளை (நூலாசிரியர் மொழியில்: திருமூர்த்திகள்) அறிமுகம் செய்கிறது. இம்மூவருள் முதலாமவர் இந்தோனேசியாவின் டேன்மலாக்கா, இரண்டாமவர், வியட்நாமின் கொச் சீ மின் (ஹோசிமின்) மூன்றாமவர் இந்தியாவின் எம்.என்.ராய். இவர்கள் மூவரும் பல்வேறு பெயர்களில் பல ஐரோப்பிய, தென் அமெரிக்க, ஆசிய ஊர்களில் நடமாடினார்கள் என்று குறிப்பிட்டுவிட்டு இம்மூவர் குறித்தும் பின்வரும் மதிப்பீட்டை நூலின் முன்னுரையில் நம்முன் வைத்துள்ளார்:

*"இவர்களுடைய முக்கியப் பணி அன்றைய ஆண்டகை நாடுகளான ஐக்கிய ராச்சியம், பிரான்ஸ், ஒல்லாந்து, அமெரிக்கர்களிடமிருந்து, தங்கள் நாடுகளை விடுதலை செய்து சோசலிச ஆட்சியை நிறுவுவதே. ஒரு தேசத்திற்காக அல்லது ஓர் இனத்திற்காக இவர்கள் போராடவில்லை. இவர்களின் போராட்டம் பரந்த பார்வை கொண்டது, உலகளாவியது. அது மட்டுமல்ல கம்யூனிச சிந்தனைக்கு அவர்கள் ஆசியக் கண்ணோட்டத்தை அளிக்க முயன்றனர். அக்காலத்தின் மாஸ்கோ தலைப்பீட (தலைமைப்பீடத்தின்) தேவையில்லாத தலையீடுகள், புவி சார் அரசியலின் காரணமாக அவர்களின் போராட்டம் தோல்வியில் முடிந்தது. இவர்கள் மறுதலிக்கப்பட்டார்கள். இவர்களுக்கு நடந்ததைப் பார்க்கும் போது, ஒரு இந்தோனிசியா நாவலில் வரும் ஒருவரி நினைவுக்கு வருகிறது. இது புரட்சியாளர்களுக்கு சோர்வைத் தரும். ஆனாலும் தருகிறேன்: அனைத்துப் புரட்சியாளர்களும் இறுதியில் துப்பாக்கிச் சூடு படையின் முன் நிறுத்திவைக்கப்படுவார்கள்."*

இப் பொதுவான மதிப்பீட்டுடன் கூடிய அறிமுகக் கட்டுரையை அடுத்து ஏனைய கட்டுரைகளின் உள்ளடக்கம் இடம்பெற்றுள்ளது. (நூலாசிரியரின் 'உங்களுடன் ஒரு வார்த்தை' என்ற தலைப்பிலான முன்னுரையில் ஐந்தாவது கட்டுரைத் தலைப்பு இடம் பெற தவறிவிட்டது.)

நூலின் தலைப்பைத் தாங்கிய முதல் கட்டுரை ஏகாதிபத்தியங்களுக்கு எதிரான பொதுவுடைமைப் புரட்சி குறித்து 2021 இல் வெளியான 864பக்கங்கள் கொண்ட நூலை (Underground Asia: Global Revolutionaries and the Assault On the Empire) அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது. காவல்துறையின் குறிப்புகளில் இருந்து இந்நூலுக்கான செய்திகளை நூலாசிரியரான டிம் ஹார்பர் (Tim Harper) திரட்டி உள்ளார். முதலில் குறிப்பிட்ட மூவருடன் ஒரு கட்டம் வரை அரவிந்தரும் இணைந்திருந்ததாகவும் இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவர்கள் மேற் கொண்டிருந்த பணி குறித்து:

- "இவர்களுடைய வேலை அன்றைய ஏகாதிபத்தியங்களான ஆங்கில, பிரான்ஸ், ஒல்லாந்து, (டச் நாடு) அமெரிக்கர்களிடமிருந்து தங்கள் நாடுகளை விடுதலை செய்து பொதுவுடைமை ஆட்சியை அமைப்பது. ஓர் இனத்திற்காக ஒரு நாட்டிற்காக இவர்கள் போராடவில்லை. இவர்களின் போராட்டம் சர்வதேசத் தன்மை வாய்ந்தது. இவர்கள் இந்தியர் அல்லாத இந்தியர்கள். சீனரல்லாத சீனர்கள். வியட்நாமியர் அல்லாத வியட்நாமியர். இவர்கள் தங்களை உலகப் பிரஜைகளாகப் பார்த்தார்கள். உலகம்தான் இவர்களது அரசியல் அரங்கு."



**சச்சிதானந்தன் சுகிர்தராஜா**

- "இன்றைய பின்காலனியச் சொல்லாடலில் முணுமுணுக்கப்படும் மேற்கை மாகாணத் தன்மை ஆக்குவது, ஐரோப்பிய எண்ணங்களிலிருந்து மூளையை விடுதலைப் பெறச்செய்வது பற்றி இவர்கள் அப்பவே எழுதியிருந்தார்கள். ஐரோப்பாதான் உலகம் என்பது அல்ல என்று அப்போதே சொன்னவர் ராய். கீழைத் தேசியவாதிகள் ஏங்கியது போல் காலனியத்திற்கு முற்பட்ட பொற்காலத்துக்கு இவர்கள் ஏங்கவில்லை."
- "இவர்கள் தங்களைத் தேசியவாதம், மதம் முதலியவற்றிலிருந்து முற்றுமாக வெட்டிக்கொள்ள விரும்பவில்லை."

என்று இவர்களின் செயல்பாடுகள் குறித்த அறிமுகத்தை இக்கட்டுரை செய்துள்ளது.

இரண்டாவது கட்டுரையான "அதிகாரத்திற்கு உண்மை சொல்லல்; அதிகாரம் பற்றிய உண்மையையும் சொல்லல்" எட்வர்ட் ஸெயித் குறித்த காய்தல் உவத்தல் இல்லாத சுருக்கமான அறிமுகக்கட்டுரை. சுருக்கமான கட்டுரை என்றாலும் நறுக்கென்று அவரது எழுத்துக்கள் குறித்த மதிப்பீட்டை வாசகன் முன் வைக்கிறார்

கிழக்குலகம் அங்கு வாழும் மக்கள், கலாசாரம் பற்றிய பொய் புனைவுகளை எவ்வாறு ஐரோப்பா உருவாக்கியது, எப்படி அரசியல், பொருளாதார கட்டமைப்புகளுக்குப் பயன்படுத்தியது, பணிபுரிய வைத்தது என்பது ஸெயித்தின் சாதனை" என்பதும் "கிழக்கின் வாழ்நிலையையும் அதன் மதங்கள் புனிதப் புத்தகங்கள், நாகரிகங்கள் ஆகியவற்றையும் சந்தேகத்திற்குரியவை, போலியானவை என்று மேற்கத்தியர் தமது கண்காணிப்பிற்கும் பிரதிபடுத்தலுக்கும் கொண்டுவர முயலும் போதெல்லாம் எட்வர்ட் ஸெயித் எழுதிய கிழக்கு மேற்கு கேள்விகள் தொடர்ந்து கொண்டே இருக்கும் என்பதும் " அவரது முடிவாக உள்ளது.

மூன்றாவது கட்டுரையான "சாத்தானின் வேலை இன்னும் ஓயவில்லை" சல்மான் ருஷ்டியைக் குறித்த அறிமுகமும் திறனாய்வும் இணைந்த கட்டுரை. "ஒரு படைப்பாளியின் வேலை பெயரற்றதைப் பெயர்ப்படுத்துவது, பாசாங்குத்தனத்தை அம்பலப்படுத்துவது, பலவீனர் பக்கம் சாய்வது, விவாதங்களை ஆரம்பிப்பது, அகிலத்தை அசத்துவது உலகம் உறங்காமல் இருக்கும்படி பார்த்துக் கொள்வது" என்ற சாலமன் ருஷ்டியின் கவிதை வரியுடன் இக் கட்டுரை முடிவுடைகிறது. உண்மையான படைப்பாளியின் உள்ளத்தை ஊடுருவி நிற்கும் கூர்மையான சொற்கள் இவை.

நான்காவது கட்டுரை வெர்ஜினியா வூல்ஃப் (Virginia Wolf) என்ற ஆங்கில எழுத்தாளரின் கணவரான லேனார்ட் வூல்ஃப் என்பவரைக் குறித்தது. ஆங்கில அரசின் குடிமை(சிவில்) உயர் அதிகாரியாக ஆறு ஆண்டுகள் இலங்கையின் யாழ்ப்பாணப் பகுதியில் பணியாற்றிய இவரின் செயல்பாடுகள், அவதானிப்புகள், படைப்புகள் குறித்த எள்ளல் தன்மையுடன் கூடிய இக்கட்டுரை சில வரலாற்றுச் செய்திகளையும் உள்ளடக்கி உள்ளது. சிறுபான்மையினரான தமிழர்களுக்கான கூட்டாட்சி முறையை முன் மொழிந்த ஓர் ஆங்கிலேயர் என்ற உண்மையை இக்கட்டுரை வெளிப்படுத்துகிறது,

ஐந்தாவது கட்டுரை "எலிசபெத்துக்கு ஏங்குங்கள் எகாதிபத்திய எச்சங்களை எடைபோடுங்கள்". 2022இல் நிகழ்ந்த இங்கிலாந்தின் எலிசபெத் ராணியின் இறுதி ஊர்வலத்தை மையமாகக் கொண்டு வரலாறும் எள்ளலும் இழையோட எழுதப்பட்ட கட்டுரை இது. இராணியாரின் இறுதி ஊர்வலத்தை தொலைக் காட்சியில் கண்டு உள்ளம் உருகி நின்றோரை சற்றே சிந்திக்க வைக்கும் கட்டுரை இது.

ஆறாவது கட்டுரையான "கண்டிராசன் கதை" இலங்கையின கண்டி நகரைத் தலைநகரமாகக் கொண்டு ஆட்சி புரிந்த விக்கிரம ராஜசிங்கன் ஆங்கிலேயர்களால் நாடு கடத்தப்பட்டு தமிழ் நாட்டின் வேலூர் சிறையில் அடைக்கப் பட்டதைக் கூறுகிறது. ஆங்கில ஆவணங்களின் துணையுடன் எழுதப்பட்ட இக் கட்டுரையில் நாடுகடத்தல் என்பது ஏகாதிபத்தியத்தின் சூழ்ச்சிகளில் ஒன்றாக விளங்கியதையும் எடுத்துக்காட்டுகளுடன் குறிப்பிட்டுள்ளார். கண்டி மன்னன் வேலூர் சிறைக்கு அனுப்பப்பட்டது குறித்து,

"இதே சிறைச்சாலையில்தான் சிப்பாய்கள் ஆங்கிலக் கம்பனியருக்கு எதிராக 1803 இல் கொதித்து எழுந்தார்கள். சாவர்க்கர் தன்னுடைய புத்தகத்தில் 1857தான் முதல் இந்திய விடுதலைப்போர் என்று உணர்வுப் பெருக்கோடும் சரித்திர நினைவு இழப்போடும் வாதாடுகிறார். இவரின் நூலில் வேலூர் என்ற சொல்லே இல்லை" என்று நினைவு கூர்ந்துள்ளார்.

ஏழாவது கட்டுரை இரண்டு சர்வதேச விளையாட்டுப் போட்டிகளின் தொடக்கவிழா குறித்தது. எட்டாவது கட்டுரை நான்கு தலைமுறை ஈழத்தமிழர்கள் குறித்த நாடகம் குறித்தது. மூன்றரை மணிநேரம் நிகழும் நாடகத்தின் விமர்சனமாக மட்டுமின்றி ஈழத் தமிழர்களின் துயர வரலாற்றையும் நினைவூட்டுவதாக அமைந்துள்ளது. "இந்த நாடகம் தமிழர்களையும் சிங்களவர்களையும் துவித எதிர் நிலைகளாகப் பார்க்கவில்லை. ஒடுக்கப்பட்ட அடிமட்டச் சிங்களவர்களின் குரலும் கேட்கிறது" என்று அவதானித்துள்ளார் சுகிர்தராஜா.


நூலாசிரியரின் ஆழமான வாசிப்பின் வெளிப்பாடாக, சமூகப்பார்வையுடனும் பகடித்தன்மையுடனும் எழுதப்பட்ட கட்டுரைகளை உள்ளடக்கிய இச் சிறு நூலை (86பக்கங்கள்) ஒரு குறுகியதூரப் பயணத்தில் படித்து முடித்துவிடலாம்தான். ஆனால் இதன் தாக்கம்? ஆன்மீகவாதிகளின் மொழியில் கூறினால் "மூர்த்தி சிறிதானாலும் கீர்த்தி பெரிது."

*(அடுத்த இதழில் "யூதர்கள் சைவர்களான கதை" என்ற நூலைப் பற்றி...)*


●

கட்டுரையாளர், தமிழர் சமூக வரலாற்று ஆய்வாளர்,


# நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் புதிய வெளியீடுகள்





₹ 375/-




₹ 550/-




₹ 1200/-




₹ 825/-


**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**

41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.

☎: 044-26251968, 26258410, 48601884 Email: info@ncbh.in | www.ncbhpublisher.in

# நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் புதிய வெளியீடுகள்




₹ 200/-




₹ 165/-




₹ 50/-




₹ 140/-


**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**

41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.

☎: 044-26251968, 26258410, 48601884 Email: info@ncbh.in | www.ncbhpublisher.in

கட்டுரை

# மதராஸ் அரசாங்க முதல் கலைச் சொல் பட்டியல் (1923) தமிழில் இல்லை



டாக்டர். சு. நரேந்திரன்

**1917** ஆம் ஆண்டு சிம்லா கல்வி மாநாட்டில் விவாதிக்கப்பட்ட வட்டார மொழிகளைப் பயிற்றுமொழியாக்கும் திட்டம் குறித்து அன்றைய மையஅரசு சென்னை மாகாண அரசிடம் கருத்துக்கேட்டது. இக்கருத்தை அறியும் பொருட்டும், சென்னை மாகாணக் கல்வி குறித்து ஆராயவும் சால்டர் ஆணையம் அமைக்கப்பட்டது. அவ் ஆணையம்

> "உயர்நிலைப்பள்ளிகளில் வட்டார மொழியே பயிற்றுமொழியாக பயன்படுத்தப்படவேண்டும். ஆங்கிலம், கணிதக்கல்வி ஆகியவை மட்டும் பள்ளிப்படிப்பின் நான்கு கடைசி ஆண்டுகளில் ஆங்கிலத்திலே கற்பிக்கப்படவேண்டும். உயர்நிலைப்பள்ளித் தேர்வுகளில் மாணவர்கள் ஆங்கிலம், கணிதம் தவிர பிற பாடங்களில் வட்டார மொழிகளிலோ ஆங்கிலத்திலோ எழுத அனுமதிக்கவேண்டும்"

எனப் பரிந்துரைகளை வழங்கியுள்ளது.

**கலைச்சொல்லாக்கப் போக்குகள் (1920)**

அ.மாதவையா முதலானவர்களால் தொடங்கப்பெற்ற, தமிழர் கல்விச் சங்கத்தின் சார்பில் வெளிவந்த 'தமிழர்நேசன்' இதழில் அக்காலக் கலைச்சொல்லாக்கப் போக்குகளை அடையாளப்படுத்தும் வகையில் வெளிவந்த குறிப்பு வருமாறு:

> "நாம் தேட வேண்டிய பிரதிபதங்களைத் தனித்தமிழ் வேர்களினின்றே அமைத்துக்கொள்ள வேண்டுமென்றே சிலர் வற்புறுத்துகிறார்கள். தமிழருக்கு சகோதர பாஷையிலிருந்து வரும் வட மொழியிலாவது அப்பிரதிபதங்களை தேடிக்கொள்ள வேண்டுமென்று சிலர் துணிகின்றனர். வேறு சிலர் வீண் முயற்சி ஏன்; உலகெங்கும் பரவிவரும் ஆங்கில மொழியை அப்படியே ஏற்றுக்கொள்ளலாமா? என்று கேட்கின்றனர். இதைப்பற்றி நாம் ஒருவித தீர்மானத்தைக் கொள்ள வேண்டும். அப்படியாற்றான் பிரதிபதங்கள் அமைப்பது சற்றே எளிதாகும்."

இக்காலகட்டத்தில் கலைச்சொற்களை தமிழ்ச்சொற்களின் வேர்களிலிருந்து உருவாக்க வேண்டும், வட மொழியிலிருந்து ஏற்றுக்கொள்ள வேண்டும், ஆங்கிலச்சொல்லை அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற மூன்று போக்குகள் கலைச்சொல்லாக்கத்தில் இடம்பெற்றிருந்ததை மேற்காட்டிய பகுதி புலப்படுத்துகிறது.

**வட்டார மொழிகளில் தேர்வுகள்**

இதே காலகட்டத்தில் சென்னைப் பல்கலைக்கழகப் பேரவை (senate) எஸ்.எஸ்.எல்.சி. தேர்வினை வட்டாரமொழியில் எழுதலாம் என்ற பரிந்துரையினை வழங்கியுள்ளது. *1921*இல் அமைக்கப்பட்ட அரசாங்க கல்வி மறுசீரமைப்புக்குழு (Government Education Re organisation Committee) வட்டாரமொழிக் கல்வி, வட்டார மொழிகளில் தேர்வு எழுதுவது குறித்தான கருத்துக்களை வெளியிட்டுள்ளது

சென்னை இம்பீரியல் அவையில் தொடர்ந்து நடந்துவந்த பயிற்றுமொழி தொடர்பான விவாதங்களும், சிம்லா கல்வி மாநாட்டுத் தீர்மானங்களும், சால்டர் ஆணையப் பரிந்துரைகளும், அரசாங்கக் கல்வி மறுசீரமைப்புக்குழுவின் பரிந்துரைகளும், தனியார் பாடநூல் தயாரிப்பாளர்களிடையே ஏற்பட்ட கலைச்சொல்லாக்க சீர்மையின்மையும் புதிதாகக் கலைச்சொல்லாக்கக் குழு உருவாக்க வேண்டிய தேவையை ஏற்படுத்தியது.

**சென்னை மாகாண அரசு கலைச்சொல் குழு (1923)**

சென்னை மாகாண பள்ளிக் கல்வித் துறைக்குப் பொறுப்பு வகித்த ஆர்.ஜி.கிரிவ் வட்டாரமொழிகளில் கலைச்சொல்லாக்கக் குழு உருவாக்க வேண்டியதன் தேவையை வற்புறுத்தி, கலைச்சொல்லாக்கக் குழு உறுப்பினர்களின் பட்டியலுடன் அன்றைய அரசு செயலருக்குக் கடிதம் ஒன்றை *12.12.1923*இல் எழுதினார். அக்கடிதம் வருமாறு:

> “தொடக்கப்பள்ளி, உயர்நிலைப்பள்ளிகளின் வகுப்புக்களுக்கு பயன்படும், மாகாணத்தில் கல்வி கற்பிக்கப்படும் வட்டாரமொழிகளின் தரப்படுத்தப்பட்ட கலைச்சொல் பட்டியல் தயாரிக்கப்பட வேண்டும். இவ்வாறு தயாரிக்கப்படும் பட்டியல் மாகாணத்தின் வட்டாரமொழிகளின் வழி கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும், பள்ளிகளில் பயன்படும். மேலும் அறிவியல் நூல்களை எழுதுபவர்களுக்கும் நூல் வெளியீட்டாளர்களுக்கும் பயன்படும். அரசு இந்த யோசனையை ஏற்றுக்கொள்ளும் என நம்புகிறேன். எனவே இக்கடிதத்துடன் கலைச்சொல்லாக்கக் குழு உறுப்பினர்களின் பட்டியலை அனுப்பியுள்ளேன்”

போக்குவரத்துச் செலவு, தங்கும் செலவு ஆகியவைகளைத் தவிர்க்கும் நோக்கில் பெரும்பாலும் சென்னையில் பணியாற்றுபவர்களை மட்டுமே இப்பணியில் ஈடுபடுத்த கிரிவ் பரிந்துரை செய்துள்ளார். மேலும்,

> “குழுவில் கூடுதல் உறுப்பினர்களாக திருச்சிராப்பள்ளி செயிண்ட் ஜோசப் கல்லூரியில் பணியாற்றும் பி.டி. ஸ்ரீனிவாச அய்யங்கார், கோவை வேளாண்மைக் கல்லூரியில் பணியாற்றும் தாவரவியல் விரிவுரையாளர் ராவ்பகதூர் ரங்காச்சாரியார் ஆகிய இருவருக்கு மட்டும் அரசு பயணப்படி கொடுத்தால் அவர்களையும் இக்குழுவில் இணைத்துக் கொள்ள வாய்ப்புண்டு”

எனவும் அப்பரிந்துரையில் எழுதியிருந்தார்.

கலைச்சொல்லாக்கக் குழுவைக்கொண்டு தயாரிக்கப்படும் பட்டியலை கல்விநிலையத் தலைவர்களுக்கு அனுப்பி, மீண்டும் இப்பட்டியலைத் திருத்தி வெளியிடவும் எனப் பரிந்துரை செய்திருந்தார். இத்திட்டப்படி தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய மொழிகளுக்கு மட்டுமே குழுக்களை நியமிக்கலாம் எனவும், உருது பள்ளிகளுக்கு ஐதராபாத்தில் உள்ள உஸ்மானியப் பல்கலைக் கழகத்திடமிருந்து கலைச்சொற்களைப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் கிரிவ் தம் திட்டத்தில் குறிப்பிட்டிருந்தார்.

**கலைச் சொல்லாக்கக் குழு (1923) உறுப்பினர்கள்**

**(அ) கணிதம்**

*(1)* பி.வி.சிசு அய்யர், பேராசிரியர், மாநிலக் கல்லூரி.

*(2)* சின்னத்தம்பி பிள்ளை, பேராசிரியர், பச்சையப்பன் கல்லூரி.

*(3)* வி.ரகுநாத ஐயர், ஆசிரியர் கல்லூரி சைதாப்பேட்டை.

**(ஆ) வேதியியல், பௌதிகம்**

*(1)* அனந்தபத்மநாத ராவ், பேராசிரியர், மாநிலக் கல்லூரி, சென்னை. *(2)* கே.சீத்தாராமையா அறிவியல் உதவியாளர், கிறித்தவக் கல்லூரி.

**(இ) இயற்கை அறிவியல் (தாவர இயல், விலங்கியல், உடல் இயங்கியல், புவியியல்)**

*(1)* கே.ராமுன்னிமேனன், பதிவாளர், சென்னைப் பல்கலைக்கழகம் *(2)* நாராயணராவ், பேராசிரியர், மாநிலக் கல்லூரி. *(3)* டி.ஏகாம்பரம், ஆசிரியர் பள்ளி. சைதாப்பேட்டை. *(4)* டாக்டர் எம்.சி.கோமன்.

**(ஈ)வரலாறு, நிலவியல்**

*(1)* சி.பி.வெட்கட்டராம ஐயர், ஆசிரியர் கல்லூரி சைதாப்பேட்டை.

*(2)* பொதுவானது: *(1)* குப்புசாமி சாஸ்திரி, பேராசிரியர், மாநிலக் கல்லூரி, சென்னை *(2)* அனவர்த நாயகம் பிள்ளை, தமிழ் அகராதி குழு. *(3)* எல்.டி.சுவாமிக்கண்ணு பிள்ளை. ஐ.எஸ்.ஒ

(4) பிரநாத்தரதிரஹர அய்யர், ஐ.எஸ்.ஒ (5) பஞ்சாபகேச அய்யர், பி.எஸ்.உயர்நிலைப் பள்ளி. மயிலாப்பூர் (6) அப்துற்றஹிம் சாகேப், துணை இயக்குனர், பொது அறிவுறுத்தல், சென்னை. (7) ஆர்.டபிள்யூ. ரோஸ், முதல்வர் அறிவுறுத்தல், சென்னை. (8) பி.வி.குறுவில்லா, அரசு மலையாளம் மொழிபெயர்ப்பாளர். (9) பி.சோமசுந்திர ராவ், அரசு தெலுங்கு மொழிபெயர்ப்பாளர். (10) கே.ஏ.வீரராகவாச்சாரியார், மாக்மில்லன் கம்பெனி. (11) டபிள்யூ. துரைசாமி அய்யர், லாங்மேன்ஸ் கீரீன் அண்ட் கோ. (12) கே.வி.லெஷ்மணராவ் பந்துலு, தலைமை ஆசிரியர், தெலுங்கு கலைக் களஞ்சியம், எக்மோர்.

**அரசு ஆணை**

கிரிவின் திட்டத்தை ஆராய்ந்த அரசு அவர் அளித்த அறிஞர்களின் பட்டியலையே ஏற்றுக்கொண்டு வட்டாரமொழிகளில் அறிவியல் கலைச்சொல்லாக்கக் குழுவை அமைக்க ஆணை வெளியிட்டது. அந்த ஆணை வருமாறு.

> "பள்ளிக்கல்வி இயக்குநர் (Director of Public Instruction) அனுப்பிய திட்டத்தின்படி சென்னை மாகாணத்தில் முக்கிய நான்கு வட்டார மொழிகளில் ஆதாரபூர்வமான கலைச்சொற்களைத் தயாரிக்க குழு ஒன்றை அரசு நிறுவுகிறது."

**குழுவின் கூட்டங்கள்**

குழுவின் முதல் கூட்டம் நடப்பதற்கு முன்பாகவே 23.05.1923ஆம் நாள் 'குழு உறுப்பினர்களில் ஒருவரான பி.சோமசுந்தரராவ்காருவுக்குப் பதிலாக சி.பானுமூர்த்திகாரு நியமிக்கப்பட்டார்'. 'குழு உறுப்பினரான கே.வி.லக்ஷ்மணராவ் பந்துலுவுக்குப் பதிலாக வெங்கடசுப்பையாகாரு நியமிக்கப்பட்டார்'. குழு உறுப்பினர் 'வி.ரகுநாத அய்யருக்கு பதிலாக எஸ்.பாலகிருஷ்ண அய்யர் நியமனம் செய்யப்பட்டார்.'

கலைச்சொல்லாக்கக் குழுவின் முதல் கூட்டம் 01.09.1923ஆம் நாள் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கலந்துகொண்ட புதிய உறுப்பினர்கள் குழுவில் உறுப்பினர்களாகத் தொடர்ந்து செயல்பட இசைவு தெரிவித்துள்ளனர். இக்கூட்டத்தில் பாலகிருஷ்ண அய்யர், வெங்கட சுப்பையாகாரு ஆகியோரின் நியமனங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

இரண்டாவது கூட்டம் நடைபெறுவதற்கு முன்பாக '15.10.1923இல் பள்ளிக் கல்வி இயக்குநர் பா.வே.மாணிக்கநாயக்கரைப் புதிய உறுப்பினராகச் சேர்த்துக்கொள்ள கிரீவ்அரசுக்குக் கடிதம் எழுதியுள்ளார்'. மேலும் குழுவில் இடம் பெற்றிருந்த சட்டக் கல்லூரிப் பேராசிரியர் ஏ. பஞ்சாபகேச அய்யருக்குப் பதிலாக கா. சுப்பிரமணியப்பிள்ளையைச் சேர்த்துக் கொள்ள அவர் பரிந்துரை செய்துள்ளார். இந்நிலையில் 'பத்தொன்பது உறுப்பினர்களை நியமனம் செய்து அரசு ஆணை வெளியிட்டுள்ளது.'

> "1932இல் சென்னை அரசாங்கம் கலைச்சொல் குழு ஒன்றை அமைத்தது. இக்குழு Chemistry, Physics, Mathematics, Natural Science, Physiology and Hygiene, Geography, History, Economics, Administration, Politics & Civil commerce ஆகிய துறைகளுக்கான ஏறத்தாழ 7400 கலைச்சொற்களை வெளியிட்டது."

குழுவினர் உருவாக்கிய கலைச்சொல் பட்டியல்கள் வெளியிடப்பட்ட ஆண்டுகள் பின்வருமாறு.

| கலைச்சொல் பட்டியல் தலைப்பு | ஆண்டு |
|---|---|
| புவியியல் | 1932 |
| வணிகவியல் | 1933 |
| இயற்கை அறிவியல் | 1933 |
| வரலாறு, பொருளாதாரம் | 1932 |
| அரசியல் | 1932 |
| வேதியியல் | 1932 |
| இயற்பியல் | 1932 |

1932இல் குழுக்கள் அமைக்கப்பட்டு அதே ஆண்டில் கலைச்சொல் பட்டியல்கள் வெளிவந்திருக்க வாய்ப்பில்லை.

1930ஆம் ஆண்டில் நடைபெற்ற இம்பீரியல் சட்டமன்றக்கூட்டத்தில் வட்டாரமொழிகளில் கலைச்சொற்களை உருவாக்கும் பணி தனியார் குழுக்களுக்குத் தரப்படுமா என உறுப்பினர் பாலசுப்பிரமணிய முதலியாரும், கே. கோடி ரெட்டியும் கேள்வி எழுப்பினர். அதற்கு சி. கோபாலமேனன்,

> "அரசு இதுபோன்ற குழு ஒன்றை அமைத்துள்ளதையும், அக்குழுவின் மலையாளக் கலைச்சொற்களை ஆக்கும் பொறுப்பு தனக்கு வழங்கப் பட்டிருப்பதாகவும் கடினமானதாகையால் இது குறித்த தகவல்களைப் பெற புலமையுடையவர்களுக்கு அனுப்பியுள்ளதாகவும்"

குறிப்பிட்டார்.

மேலும் அவர்கள் கேள்விகளுக்கு அன்றைய முதல்வர் சுப்பராயன் பதிலளித்துப் பேசுகையில்,

> "கோபாலமேனன் குறிப்பிட்ட கலைச்சொல்லாக்கக் குழுவைப்பற்றி அறிவேன். அக்குழுவின் செயலராக இருக்கும் கிருஷ்ணராவ் போன்ஸ்லே எனக்கு நண்பர். ஆகையால் அக்குழுவின் செயல்களைப் பற்றி நான் அறிவேன் என்றார். இக்குழு அரசுக்குத் தங்களின் கோரிக்கைகளை முன் வைத்தால், மதிப்புமிக்க செயலைச் செய்துவரும் அவர்களின் விருப்பங்கள் நிறைவேற்றப்படும்"

என்றார்.

இக்குழு அளித்த கலைச்சொல் பட்டியல்கள் பற்றி குறிப்பு எழுதிய அதிகாரி,

"திரு. சி. கோபாலமேனனால் சுட்டிக்காட்டப்பட்ட குழு பொதுக்கல்வித்துறை இயக்குநர் (Director of Public Instructions) ஆணையின்படி *(1923)* வட்டாரமொழிகளில் கலைச்சொற்களின் அதிகாரபூர்வப் பட்டியலைத் தொகுக்க அமைக்கப்பட்ட குழுவேயாகும். அண்மையில் அக்குழு தொகுத்தளித்த தொடக்கநிலைப் பட்டியலை D.P.L அரசுக்கு அனுப்பியுள்ளது. அரசாங்க மொழிபெயர்ப்பாளர்களால் சரிபார்க்க இப்பட்டியல்கள் அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளன *(1930)*."

என எழுதியுள்ளார். சட்டமன்றத்தில் அன்றைய முதல்வரின் பதில், பிற உறுப்பினர்களின் பேச்சுக்கள், அதிகாரியின் குறிப்பு ஆகியவை 1923ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட குழு 1930 வரை தொடர்ந்து காலச்சுணக்கத்துடன் செயல்பட்டுள்ளதை உறுதி செய்கின்றன.

1932இல் அரசு வெளியிட்ட கலைச்சொற்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| ஆங்கிலம் | செ.மா.அ.பட்டியல் (1932) | த.ப.க.கலைச்சொற்கள் (1997) |
|---|---|---|
| Astigmatism | அசமதிருஷ்டி | உருப்பிறழ்ச்சி |
| Centre of gravity | குருத்வ கேந்திரம் | ஈர்ப்பு மையம் |
| Dynamo | மின்சார ஜனனி | மின்னாக்கி |
| Fluid | பிரவாஷி | பாய்மம் |
| Incident ray | பதனரேகை | படுகதிர் |
| Temperature | உஷ்ண தீக்ஷ்ணியம் | வெப்ப நிலை |
| Vibration | லோலம் | அதிர்வு |

**அரசு கலைச்சொல் பட்டியல் எதிர்ப்பு**

1932இல் வெளியிடப்பட்ட அரசாங்கக் கலைச்சொல் பட்டியலில் பெரும்பாலும் சமஸ்கிருதப் பெயர்களும், ஆங்கிலப் பெயர்களும் இடம்பெற்றிருந்தன. ஆதலால் இப்பட்டியலுக்கு ஆசிரியர்களிடம் போதிய வரவேற்பு இல்லை. இது பற்றி சைதாப்பேட்டை ஆசிரியர் கல்லூரி முதல்வர் கூறியுள்ள கருத்து வருமாறு:

> "அரசாங்கம் கலைச்சொற் பட்டியல் ஒன்றை வெளியிட்டுள்ளது. இதிலுள்ள சொற்கள் நீளமானதாகவும் சமஸ்கிருதச் சொற்களாகவும் உள்ளதால் எளிமையாக பயன்படுத்த இயலவில்லை."

ஆக வட்டார மொழிகளில் அறிவியல் பாடங்களை நடத்துவதற்காக உருவாக்கப்பட்ட கலைச்சொல்லாக்கப் பட்டியல், விமர்சனங்களைச் சந்தித்ததே தவிர அப்பட்டியலால் வேறு எந்தப் பயனும் ஏற்படவில்லை என்பதை அறியமுடிகிறது.

●

கட்டுரையாளர், எழுத்தாளர், சென்னை
டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழக
சிறப்புநிலைப் பேராசிரியர்.

**என்.சி.பி.எச் சிறுநூல் வரிசையில்...**




₹ 20/-

**இந்திய அரசமைப்பு அவையில்**

**அண்ணல் பி.ஆர்.அம்பேத்கர் ஆற்றிய இறுதி உரை**

(நவம்பர் 25, 1949)

தமிழாக்கம்

**எஸ்.வி.ராஜதுரை**

இந்திய அரசமைப்புச் சட்டத்தைக் காப்பாற்றவேண்டும்
என்பதுதான் நம் முன்னாலிருக்கிற சவால்.
அதற்கு புரட்சியாளர் அம்பேத்கரின் இந்த உரை
நமக்கு ஒரு தெளிவைக் கொடுக்கும்
என்று நான் நம்புகிறேன்.
இதை அனைவரும் வாங்கிப் படிக்கவேண்டும்...

**- தொல்.திருமாவளவன்**
பாராளுமன்ற உறுப்பினர்

கட்டுரை



# வீணாதி வீணன் கதை

அ.கா.பெருமாள்

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்பு திருநெல்வேலி மாவட்டம் வள்ளியூர் திருக்குறுங்குடி சாலையில் (பழைய பெயர் ராணி மங்கம்மாள் சாலை) இருக்கும் தனியார் தோட்டம் ஒன்றின் உள்பகுதியில் இருக்கும் குகையில் உள்ள வட்டெழுத்து கல்வெட்டைத் தேடி நானும் செந்தீ நடராசனும் சென்றபோது வீணாதி வீணனைப் பற்றிய புதிய செய்திகளைச் சேகரித்தேன்... வீணாதி வீணனின் சிற்பத்தைத் தற்செயலாகப் பார்த்தபோதுதான் மேலும் செய்திகளைத் தேட வேண்டும் என்ற ஆசை வந்தது

வள்ளியூர் சொக்கநாதர் கோவில் தெருவில் உள்ள அறநிலையப் பாதுகாப்புத் துறைக்கு உட்பட்ட சொக்கநாதர் கோவில் வளாகத்தில் 30களின் ஆரம்பத்தில் வீணாதி வீணனுக்கு வழிபாடு இருந்திருக்கிறது. 1933 இல் இந்தக் கோவில் புனரமைக்கப்பட்டபோது ஏதோ காரணத்தால் வீணாதி வீணனின் சிற்பத்தைக் கோவில் கிணற்றில் யாரோ போட்டு விட்டாராம். எண்பதுகளின் இறுதியில் கிணறு தூர் வாங்கப்பட்டபோது இந்தச் சிலை கிடைத்தது. அக்கோவிலில் துணைத் தெய்வமாக வீணாதி வீணன் இருக்க வேண்டாம் என்று முடிவு கட்டியதால் இந்த சிற்பத்தைக் கோவில் வளாகத்தில் ஒதுக்குப்புறமாக வைத்திருக்கின்றார்கள்.

வீணாதி வீணனின் இந்தச் சிற்பம் 70 சென்டிமீட்டர் உயரமுடையது. நின்ற கோலம், முகத்தில் முறுக்கிய மீசை, மார்பில் முத்துச்சரம்; வீரனுக்குரிய சன்ன வீரம், இடுப்பில் குத்துவாள், கால் சட்டை; காலில் கழல்; இந்தச் சிற்பத்தை 2010 இல் நான் பார்த்தபோது சிதைந்து போய் இருந்தது. வீணாதி வீணனின் ஜாதி அடையாளம் அவனைப் பற்றிய கதைகள் எல்லாம் அவனது வழிபாட்டிற்கு எதிர்ப்பு என்று கூறினார் ஒருவர்.

வீணாதி வீணன் நாட்டார் தெய்வமாக வேறு இடங்களில் வழிபடப்படுகிறான். அவனுக்கு மரியாதை இருந்தது என்பதை 90களில் ஆதாரபூர்வமாக கண்டுபிடித்தேன். பொதுவாக ஒரு நாட்டார் தெய்வம் கருவறையிலோ கோயில் வளாகத்திலோ சிலையாக நின்று கோவில் கொண்டு வாரம் ஒரு முறையோ மாதம் ஒரு முறையோ வழிபாடு பெற்றிருந்தால் அதைப் பற்றிய கதைகளும் செய்திகளும் தொடர்ந்து வரும். சில தெய்வங்களுக்கு விழாக் காலங்களில் (அது ஓர் ஆண்டோ மூன்று ஆண்டுகளோ 12 ஆண்டுகளோ இருக்கலாம்) பூடம் போட்டு வழிபாடு செய்வதாக இருந்தால் அது பற்றிய முழுமையான வரலாற்றையோ சடங்கு முறைகளையோ தோற்றச்

செய்திகளையோ அறிவது சிரமமான காரியம். அப்படி வழிபாடு இருந்தால் அந்தத் தெய்வம் வாழும். வீணாதி வீணனின் வழிபாடு பரவலாக இல்லாததால் அவனது கதை அறியப்படாமல் போயிற்று.

தென் மாவட்டங்களில் குலசேகரத் தம்பிரான் கோவில்களில் விழாக் காலங்களில் வீணாதி வீணன் துணை தெய்வமாக வழிபாடு பெறுகிறான். வீணாதி வீணன் கதைப் பாடலை முதலில் பதிப்பித்த (1967) நா. வானமாமலை இவரது வழிபாடு பற்றி விரிவாக விவரிக்கவில்லை. அவரே மதுரை பல்கலைக்கழகம் வழி ஐவர் ராசாக்கள் கதையை வெளியிட்டபோது (1974) வீணாதி வீணன் கதையை பின் இணைப்பாக சேர்த்திருக்கிறார். இந்த நூலில் "வீணாதி வீரன் கதை வள்ளியூர் பகுதியில் பரவியுள்ளது. இது உண்மை நிகழ்ச்சி என்பதை புலப்படுத்த சில சான்றுகள் அகப்பட்டு உள்ளன. அதனால் இக்கதைப் பாடல் ஐவர் ராசாக்கள் கதைப் பிரதிகளில் காணப்படவில்லை. வள்ளியூரில் கிடைத்த ஐவர் ராசா கதையில் மட்டும்தான் வீணாதி வீணன் கதை காணப்படுகிறது" என்கிறார்.

ஐவர் ராசாக்கள் கதையை விரிவாக ஆராய்ந்த பேராசிரியர் வானமாமலை வீணாதி வீணன் கதை மக்கள் கதையுடன் தொடர்புடையது என்ற முடிவுடன் தான் இதைப் பற்றிய கருத்துக்களை முன் வைக்கிறார். குலசேகரத் தம்பிரானின், காலம் கிபி 16ஆம் நூற்றாண்டு என்று நா.வா ஊகிக்கிறார். அப்படியானால் வீணாதி வீணனும் 16 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவன் என்று கொள்ளலாம்.

ஆனந்த விகடனின் துணை இதழான சக்தி விகடனில் ஜனங்களின் சாமிகளின் கதை என்னும் தலைப்பில் சில கதைகளைத் தொடராக எழுதிய போது (2017) வீணாதி வீணன் கதை பற்றிய செய்திகளை மீண்டும் சேகரித்தேன். முக்கியமாக கன்னியாகுமரி பழைய திருநெல்வேலி மாவட்டங்களில் குலசேகர பாண்டியனுக்கு வழிபாடு உள்ளது என்பது தெரிந்தது. இந்தக் கோவில்களில் வீணாதி வீணன் துணைத் தெய்வமாக வழிபடப்படுகிறான் என்பதையும் அறிந்தேன்.

நாகர்கோவிலில் கலைநகர் பகுதியில் குலசேகரத் தம்பிரான் கோவில் விழாவில் இப்போதும் வீணாதி வீணன் கதையை வில்லிசை நிகழ்வில் பாடுகிறார்கள் (நான் வில்லிசைக் கலைஞர் தங்கமணியின், நிகழ்ச்சியைப் பதிவு செய்தேன்). கோவில் விழாவில் வீணனுக்கு வழிபாடு நடக்கிறது. 50களில் இந்த தெய்வத்திற்காக சாமி ஆடவும் செய்தார்கள். அப்போது கொடுக்கல் வாங்கல், நிலவரி கட்டுதல் தொடர்பான பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காக வீணாதி வீணனிடம் மக்கள் நேர்ச்சையும் செய்திருக்கிறார்கள்.

கன்னியாகுமரி மாவட்டம், மேலாங்கோடு ஊர் இசக்கியம்மன் கோவிலில் குலசேகரத் தம்பிரானுக்கும் வடிவீச்சு அம்மனுக்கும் வழிபாடு உண்டு. கோவில் வளாகத்தில் வீணாதி வீணனுக்கு விழாக் காலங்களில் பூடம் போட்டு வழிபாடு செய்த வழக்கம் இருந்திருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் கொட்டாரம், அச்சன்குளம், கட்டிமான்கோடு, மேலாங்கோடு, வெள்ளமடம் என சில இடங்களில் குலசேகரத் தம்பிரானுக்கு கோவில் உண்டு. இந்த ஊர் கோவில்களில் வீணாதி வீணன் துணைதெய்வமாக இருக்கின்றான். இங்கு விழாக் காலங்களில் ஐவர் ராசாக்கள் கதை பாடப்படும் வழக்கமும் உண்டு.

குலசேகர பாண்டியனுக்கும் குமரி மாவட்டப், பகுதிக்கும் உள்ள தொடர்புக்குரிய காரணத்தை எண்பதுகளில் பொத்தையடி (மருந்துவாழ் மலை அடிவாரம்,) பி.ஆர்.நாடார் சொன்னார். அவர், குலசேகர பாண்டியனின் மனைவி நாஞ்சில் நாட்டை சார்ந்தவர். பெயர் உலகம் முழுவதுடையாள் இவள் நாடார் சமூகத்தினர் என்பது குறித்த வாய்மொழிக் கதைகள் உண்டு என்று சொன்னார். இந்தக் காரணத்தை ஐவர் ராசாக்கள் கதைப் பதிப்பில் வானமாமலையும் சொல்லுகிறார். கன்னியாகுமரி மாவட்டத்தில் குலசேகர தம்பிரானுக்கு கோவில் உள்ள இடங்களில் இந்தச் செய்தி சொல்லப்படவில்லை. ஆனால் குலசேகரப் பாண்டியனின் வம்சாவளி வாரிசுகள் நாங்கள் என்று இவனை வழிபடுகின்றவர்கள் சொல்லுகிறார்கள். வீணாதி வீணனுக்கும் இங்கு வழிபாடு இருப்பதன் காரணமே குலசேகரனுடன் கொண்டிருந்த நெருக்கம் என்று சொல்லலாம்.

ஐவர் ராசாக்கள் கதை தொடர்பாக 15க்கு மேற்பட்ட கதைப் பாடல்கள் உள்ளன. இவற்றில் வாய்மொழி வடிவில் ஒன்றும், ஏட்டு வடிவில் ஏழும் கையெழுத்து வடிவில் இரண்டும் பிற அச்சு வடிவிலும் உள்ளன. இக்கதைகளின் பெயர்கள் பின்வருமாறு;

**ஐவர் ராசாக்கள் கதை (1974),**
**நா.வானமாமலை பதிப்பு**

வீணாகிவீணன் கதை (1964)"
கன்னடியன் போர் (1987) நடராசன்
முத்துப்பிள்ளை கதை (1962)
மன்னன் மதிப்பெண் கதை (2017) ராம்
(மீனவனுக்கு ஒரு கோயில்)
இடைச்சி செல்லி கதை (ஏடு)
குலசேகர தம்புரான் கதை (ஏடு)
அஞ்சு முடி மன்னர் கதைலி (ஏடு)
வடுகச்சி ஏசல் (ஏடு)
உலகம் முழுவதுடையாள் கதை (ஏடு)
பொன்னுருவி தவநிலை (ஏடு)
மாரியம்மன் கதை ஏடு

வடுகச்சி அம்மன் கதை (கை எ பி)

மோம்புரி அம்மன் கதை (கை. எ பி)

வெட்டும் பெருமாள் கதை (வாய்மொழி)

குலசேகர பாண்டியன் மதுரையில் ஆட்சி செய்த போது வீணாதி வீணன் வள்ளியூர் கோட்டையைத் தன் அதிகாரத்தில் வைத்திருந்தான். பின்னர் மன்னரின் உத்திரவால் அதே கோட்டையில் மந்திரி ஆகிவிட்டான். இதனால்தான் ஐவர் ராசாக்கள் கதையின் ஒரு பகுதியாக வீணாதி வீணன் கதையைக் கொள்ளுகிறார் வானவ மலை.

பேராசிரியர் வானமாமலை பதிப்பித்த வீணாதி வீணன் கதை நூலிலும் (1967) ஐவர் ராசாக்கள் கதை நூலின் பின்னிணைப்பிலும் (1974) உள்ள வீணாதி வீணன் கதை பாடலில் 906 வரிகள் உள்ளன நாகர்கோவில் கலைநகர் குலசேகரத்தம்புரான் கோவிலில் உள்ள கையெழுத்துப் படியில் 1013 வரிகள் உள்ளன.

வானமாமலை பதிப்பில் உள்ள வீணாதி வீணன் கதைப்பாடல் பிற கதைப்பாடல்களைப் போலவே கணபதி காப்புடன் தொடங்குகிறது. இந்த நூலின் ஆசிரியர் பெயர் இதில் குறிப்பிடப்படவில்லை. ஆனால் ஆசிரியர் தன் குருவாக நாஞ்சில் நாட்டு புதுவையூர் சுப்பிரமணியன் மகாராசன் பெயரை குறிப்பிடுகிறார். இதனால் இந்தக் கதைப் பாடல் உருவாக்கத்திற்கும் தென் திருவிதாங்கூருக்கும் தொடர்பு இருக்கிறது என்று தெரிகிறது. கன்னியாகுமரி மாவட்டம் ராஜாக்கமங்கலம் வில்லிசை புலவர் சுயம்புராசன் என்பவரின் கையில் உள்ள ஏட்டுப்பிரதியில் இது 1810 ல் பதிக்கப்பட்ட குறிப்பு உள்ளது. இதனால் இப்பகுதியில் மூலஏடுகள் வேறு இப்பகுதியில் இருந்திருக்கலாம் என்று ஊகிக்கலாம்.

வானமலையின் ஐவர் ராசாக்கள் கதைப் பதிப்பிலும் நாஞ்சில் நாட்டில் உள்ள குலசேகரத் தம்பிரான் கதையின் கையெழுத்து பிரதிகளிலும் மூன்று முக நாச்சியார் என்னும் பெண் தெய்வம் குறிப்பிடப்படுகிறாள். இவள் மூன்று முகம் கொண்டாள் என்று பரவலாக அறியப்பட்ட தெய்வமே. இவளுக்கு தென்பாண்டி பகுதியில் வழிபாடு உண்டு. நாஞ்சில் நாட்டு தோவாளை வட்டம் தாழக்குடி ஊரில் மோம்புரி அம்மனுக்கு கோவில் உள்ளது. இதற்கு என்று ஒரு கதைப்பாடலும் உள்ளது. இப்பாடல் கையெழுத்து வடிவில் இன்றும் பாதுகாக்கப்படுகிறது. இக் கோவிலின் கொடைவிழாவில் இக்கதை பாடப்படுகிறது.

தாழக்குடியில் மோம்புரி அம்மன் கோவில் உருவானதற்கு வாய்மொழியாக ஒரு கதை வழங்குகிறது. இந்த ஊரில் வாழ்ந்த தாணு பிள்ளை கரையாளர் என்பவர் 100 பசு மாடுகளை வளர்த்து வந்தார். அந்த பசுக்கள் தாடக மலைப் பகுதியிலே இருந்தன.

ஒருமுறை வள்ளியூரில் இருந்த மறவர்கள் கரையாளரின் பசுக்களை திருடிக் கொண்டு சென்றுவிட்டார்கள். இதை அறிந்த தாணுபிள்ளை கரையாளர் உறவினர்களோடு பசுக்கள் இருக்கும் இடத்தை அடைந்தார். அந்தப் பசுக்களை திருப்பிக் கொண்டு வந்தார். அப்போது வள்ளியூர் திருடர்கள் ஆயுதங்களோடு தாணு பிள்ளை கரையாளரின் ஆட்களை எதிர்த்தனர். இந்த சமயத்தில் மோம்புரிஅம்மன் கோவில் வாசல் திறந்தது. தாணுபிள்ளை அதன் உள்ளே தன் உறவினர்கள் பசுக்களுடன் நுழைந்துவிட்டார். கோவில் கதவு மூடிவிட்டது. மறவர்களுக்கு கண்களைத் திறக்க முடியவில்லை. தங்கள் வீட்டுக்குச் செல்வதற்கு கூட முடியாத நிலை.

அடுத்த நாள் காலை அம்மனின் கோவில் கதவு திறந்தது. தாணுபிள்ளைக் கரையாளர் தன் உறவினர்களுடன் பசுக்களை பற்றிக் கொண்டு தாழக்குடி வந்து விட்டார் அப்போது மூன்று முகம் உடையாள் தன் பரிவாரங்களுடன் தாழக்குடிக்கு வந்து விட்டாள். அவளுடன் குலசேகர தம்புரான் வேர்வை புத்திரன், பூதத்தான், பத்திரகாளி, வீணாதி வீணன் ஆகிய தெய்வங்களும் வந்தன. எண்ணிறந்த பேய் படையும் 21 தெய்வங்களும் கூடவே வந்தன. இவர்களுக்கெல்லாம் தனி கோவில் எடுத்தார் பிள்ளை.

மோம்புரி அம்மன் கோவிலில் உள்ள கல்வெட்டு மலையாள ஆண்டு 511 மாசி 9ஆம் தேதி பணி நடந்ததாகக் குறிப்பிடுகிறது. இதன்படி கிபி 1336 ஆண்டு ஆகிறது. இந்த கோவிலைக் கட்டியவர்கள் சிலரின் பெயர்களும் அர்த்தமண்டபச் சுவர் கல்வெட்டில் உள்ளது. மோம்புரி அம்மன் வில்லுப்பாட்டின் பின்னிணைப்பாக வீணாதி வீணன் கதை உள்ளது. இந்தக் கதையின் காப்பு பாடல்

நாணா வண்ணம் தொழில் பூண்டு
　　நகையே புரிந்து வடியுண்டு
வாழ்நாள் மயங்கி தள்ளாடி
　　மறையோர் தெருவதிலே இலங்குண்டு
கோணா முதல் கார் எடுக்க ஒன்னாக பின்
　　குடத்துக்காசு உடனே எடுப்பித்த
வீணாதி வீரன் கதை பாட
　　வேழமுகத்தவன் காப்பு தாமே

தாழக்குடி மோம்புரி அம்மன் கோவிலில் கார்த்திகை மாதம் விழாவில் வீணாதி வீணன் கதையை 50களில் கூட பாடினார்கள். இங்கு வீணாதி வீணன் கதை ஏடு தனியாகவும் இருந்தது. இங்கு உள்ள வீணாதி வீணன் கதைப்பாடலில் திருவிதாங்கூர் அரசியான கவுரி லட்சுமி பாய் (1810 - 1815) திருவிதாங்கூரின் கர்னல் மன்றோ (1810 - 1819) ஆகிய இருவரும் குறிப்பிடப்படுகிறார்கள். இந்த வில்லுப்பாட்டு 19 ஆம் நூற்றாண்டில் வழக்கில் இருந்திருக்கிறது என்றும் வீணாதி வீணன் கதையும் இதே காலகட்டத்தில் பாடப்பட்டு இருக்கிறது என்றும் தெரிகிறது.

மோம்புரி அம்மன் கதைப் பாடலின் ஏட்டுப் பிரதியை 20ஆம் நூற்றாண்டு ஆரம்பத்தில் கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை கண்டெடுத்திருக்கிறார். இந்த ஏட்டின் அடிப்படையில் *Tradition from Valliyur"* என்ற கட்டுரையை *Kerala Society papers* இதழில் *(series 6 1930 P316 - 318 )* எழுதி இருக்கிறார். இந்தக் கட்டுரையில் ஐவர் ராசாக்கள் கதையைச் சுருக்கமாக தருகிறார்.

திருநெல்வேலி மாவட்டம் பணகுடி ஊருக்கு வட மேற்கு 12 கல் தொலைவிலுள்ள மகேந்திரகிரி மலை அடிவாரத்தில் புதுமையில் லட்சுமி அம்மன் கோவில் உள்ளது. இந்தக் கோவிலை குலசேகர பாண்டியன் வழிபட்டான் என்று கூறுகின்றனர் இந்தக் கோவில் தொடர்பான வில்லுப்பாட்டில் பின்னனிணைப்பாக மூன்று முகம் கொண்டாள் கதை வருகிறது. இது ஐவர் ராசாக்கள் கதையின் சுருக்கம் தான். இந்தச் சுருக்கத்தில் வீணாதி வீணன் கதை பேசப்படுகிறது.

மூன்று முகம் கொண்ட அம்மன் வழிபடப்படும் இடங்களில் குலசேகரத் தம்புரான் வடுகச்சி அம்மன் வீணாதி வீணன் ஆகியோர் துணை தெய்வமாக உள்ளனர். திருநெல்வேலி மாவட்டம் வள்ளியூர், கோட்டையடி, பாம்பன் குளம், நம்பி பத்து, வடலிவிளை ஆகிய இடங்களில் மூன்று முகம் கொண்டாளுக்கு கோவில் உள்ளது.

இதே மாவட்டம் களக்காடு சப்த கன்னியர் கோவில் வடுகச்சி மதில், சீனி முத்தம்மன் (வடுகச்சி அம்மன்) குதிரை மொழி, தேரி குடியிருப்பு, கருக்குவேல் அய்யனார் கோவில், தாண்டவன் காடு ஆதிநாராயண சுவாமி கோவில், ஞானியார் குடியிருப்பு ஸ்ரீ பரமசிவன் கோவில், சிறு நாடார் குடியிருப்பு, பெரிய வரம் என்னும் கிராமங்களிலும் உள்ள நாட்டார் கோவில்களிலும் பாளையங் கோட்டை ஜெயந்தி மங்கலம் கிராமத்திலும் குலசேகர ராஜாவுக்கு தனி கோவில் உள்ளது. இந்தக் கோவில்கள் சிலவற்றில் வீணாதி வீணனுக்கு வழிபாடு உள்ளது.

தூத்துக்குடி மாவட்டம் தண்டப்பத்து, எள்ளு விளை என சில கிராமங்களிலும் குலசேகரனுக்கு வழிபாடு உள்ளது. இங்கும் வீணாதி வீணன் துணை தெய்வமாக இருக்கிறான்.

பரம்பரையாக வசதியுடன் வாழ்ந்த வீணாதி வீணன் பெற்றோரை இழந்தபின் உறவினரால் துரத்தப்பட்டான். வள்ளியூருக்கு பிழைக்கச் சென்றான். அங்கே உழைத்து வாழ முடியாத நிலை ஏற்பட்டது. பின்பு மக்களை பயமுறுத்தி ஏமாத்தி பொருள் சம்பாதித்தான். மதுரை பாண்டியன் இதை அறிந்து வீணாதி வீணனை விசாரித்தான். உண்மையை அறிந்த பாண்டியன் வீணாதி வீணனை வள்ளியூரின் மந்திரி ஆக்கினான். பேராசிரியர் வானமாமலை கணக்குப் படி குலசேகரன் காலமே (கி.பி 16 ஆம் நூற்) வீணாதி வீணனின் காலம்.

ஐவர் ராசாக்கள் கதையில் வரும் குலசேகரன் பாண்டிய மரபினன். இவரது மந்திரியாக இருந்த வீணாதி வீணனின் இயற்பெயர் தெரியாது. இவனுடைய கதை குலசேகரனின் கதையுடன் தொடர்புடையது என்பதற்கு சில காரணங்களைச் சொல்ல முடியும்

குலசேகரன் நாட்டார் தெய்வமாக வழிபடப்படும் கோவில்களில் பெரும்பாலும் வீணாதி வீணன் துணை தெய்வமாக இருக்கிறான். குலசேகரன் தொடர்பான வில்லிசைப் பாடல்கள் சிலவற்றின் பின்னிணைப்பிலும் குலசேகரன் வழிபட்ட மூன்று முகமுடையாள் கதைப் பாடலின் பின்னிணைப்பிலும் வீணாதி வீணன் கதை உள்ளது.

கன்னியாகுமரி மாவட்டம் தாழக்குடி ஊர் மோம்புரி அம்மன் கோவில் வில்லுப் பாட்டில் வீணாதி வீணன் கதை பாடப்படுகிறது. இந்தக் கதையில் ஐவர் ராசாக்களின் கதையும் சுருக்கமாக சொல்லப்படுகிறது. இக்கதையில் வீணாதி வீணன் தெய்வமாகவே குறிப்பிடப்படுகிறான். வள்ளியூர் கோட்டையடி பகுதியிலும் சுற்று வட்டார இடங்களிலும் வீணாதி வீணனைப் பற்றிய செய்திகள் கிடைக்கின்றன. இவை குலசேகர பாண்டியனுடன் தொடர்புடையன.

வீணாதி வீணன் கதைப்பாடலின் படி அவன் தேவேந்திரகுல வேளாளரின் உள் பிரிவினரான கங்கை குல வேளாளர் வம்சத்தில் வந்தவன். இவனது சொந்த ஊர் பணகுடியின் அருகே உள்ள வேப்பலாம் குளம் கதைப் பாடல் இந்த ஊரை வேம்பனூர் என்கிறது. இந்த ஊரில் இப்போதும் தேவேந்திரகுல வேளாளர் சமூகத்தினர் வாழ்கின்றனர். இவர்களிடம் வீணாதி வீணனைப் பற்றிய செய்திகளை எண்பதுகளிலும் கேட்க முடிந்தது. நான் சேகரித்த இன்னொரு தகவலின் படி வீணாதி வீணன் பாண்டி நாட்டு வாணாதிராயன் பரம்பரையைச் சார்ந்தவன்.

வீணாதி வீரன் வள்ளியூரில் சொக்கநாதர் கோவில் தெருவில் உள்ள சொக்கநாதர் கோயிலையும் இதே ஊரில் உள்ள மீனாட்சி சுந்தரேஸ்வரர் தெய்வ பாண்டிய சாமி கோவிலையும் கட்டினான் என்று ஒரு செய்தி உண்டு. இந்தக் கோவில்களை இவனே பராமரித்தான் என்றும் சொல்லுகின்றனர். இச்செய்தியை இப்போதும் கேட்க முடியும்.

வள்ளியூர் சொக்கநாதர் கோவில் இப்போது அறநிலைய பாதுகாப்புத் துறையின் கீழ் உள்ளது. இங்கே சொக்கநாதர்க்கும் மீனாட்சிக்கும் தனித்தனியே சன்னதி உள்ளது. சொக்கநாதர் கோவில் கருவறை அர்த்தமண்டபம் முகமண்டபம் என அமைந்தது. மீனாட்சி கோவிலும் இது போன்ற அமைப்புடையது. மீனாட்சி கோவில் அர்த்தமண்டபம் முன்பு உள்ள மண்டபத்தில் சில சிற்பங்கள் உள்ளன.

இந்தக் கோவிலில் உள்ள கல்வெட்டின் படி இது பன்னிரண்டாம் நூற்றாண்டினது. ‘‘அரண்மனைத்

தெருவிலும் அதிகாரிகள் வாழ்ந்த தெருவிலும் செல்கின்ற சாதாரண மக்கள் இரண்டு கைகளையும் வீசிக்கொண்டே நடந்தால் அவர்களிடம் அபராத தொகை வசூலிக்கப்பட்டதாம். இந்த அபராதத் தொகை கைவீசு பணம் எனப்பட்டது. அந்தத் தொகையால் இந்த கோவில் பராமரிக்கப்பட்டது'' என்று செய்தி வழங்குகிறது.

வள்ளியூரில் உள்ள தெய்வபாண்டியன் கோவிலில் சிவன் அம்மன் பூதத்தானுக்கு தனி கருவறை உள்ளது. இங்கே மகிஷாசுரவதனி உட்பட சில பரிவார தெய்வங்கள் உள்ளன. உண்மையில் இந்தக்கோவிலையே வீணாதி வீரன் கட்டினான் என்று சொல்லுகின்றனர். இக்கோவிலில் உள்ள பாம்பு புற்றருகே முனிவர் ஒருவர் குடியிருந்ததாகவும் அவரே வீணாதி வீணனின் குரு என்றும் வழங்கும் செய்தியை எண்பதுகளில் கூட கேட்டேன்.

வீணாதி வீணன் இக்கோவிலுக்கு தினமும் வந்து வழிபடுவது வழக்கம் என்றும் இங்கே அவனது சிற்பம் இருந்தது என்றும் கூறுகின்றனர். இப்போது இந்தக் கோவில் ஸ்ரீ வத்ஸ கோத்திர பிராமணர்களின் நிர்வாகத்தில் உள்ளது. இவர்கள் 140 குடும்பத்தினர் என்றும் வெளியூரில் வாழ்கின்றனர் என்றும் சொல்லுகின்றனர்.

வீணாதி வீணனின் கதைப்பாடலின் படி பாண்டியன் அவனைப் பிடித்து விசாரித்த போது வீணாதி வீணன் தன் சொத்துக்களை அரசரிடம் கொடுத்து விடுவதாகவும் தனக்கு தண்டனை தரும்படி கேட்டுக் கொண்டதாகவும் அரசன் வீணாதி வீணனை மந்திரியாக ஆக்கியதாகவும் ஆன செய்திகள் உள்ளன. இவரைப் பற்றிய வாய்மொழிச் செய்திகள் இவனை நல்ல நிர்வாகியாக நேர்மையான மந்திரியாக வாழ்ந்தவன் என்று கூறுகின்றன.

நாஞ்சில் நாட்டு ராஜாக்கமங்கலம் சுயம்பு ராஜன் கையில் இருந்த வீணாதி வீணன் கதைப் பாடல் வானமாமலை பதிப்பில் இருந்து சற்று வேறுபட்டது. சுயம்பு ராஜன் ஏட்டில் பாண்டியனிடம் வீணாதி வீணன் தான் ஏன் மக்களை ஏமாற்றினேன் என்று கூறும் பகுதி விரிவாக வருகிறது. அதில் உண்மையாக உழைத்து சம்பாதிக்க வேண்டும் என்ற எண்ணமுடையவர்களை அரசு அதிகாரிகள் ஒத்துக் கொள்ள மாட்டார்கள். ஆகவேதான் ஒருவன் ஏமாற்றுக்காரனாக மாறுகிறான் என்ற செய்தி வெளிப்படையாகவே பேசப்படுகிறது.

வீணாதி வீணன் கதைப் பாடல் கூறும் கதை பின்வருமாறு.

வேம்பனூர் என்ற ஊரில் வேளாளர் ஜாதியில் அத்தி குட்டி என்ற செல்வந்தர் இருந்தார் அவரது மனைவி பூமாலை இவர்கள் தவமிருந்து ஒரு ஆண் குழந்தை பெற்றனர். சிறுவயதில் பெற்றோரை இழந்தான். உறவினர்களால் வளர்க்கப்பட்டான். பெரியவன் ஆனதும் தந்தையின் எல்லா சொத்துக்கும் உரிமை கொண்டாடினான். இதனால் அவனது உறவினர்கள் அவனை ஊரை விட்டு விரட்டி விட்டார்கள்.

இவன் சொந்த ஊரிலிருந்து வள்ளியூருக்கு வந்தான். வழியில் பசிக்காக யாசகம் பெற்று நாளைக் கடத்தினான். வள்ளியூரில் ஆண்டியை போல் அலைந்தான். அவனுக்கு பிச்சை எடுக்க விருப்பமில்லை. சலவைத் தொழிலாளி ஒருவரிடம் "ஐயா நான் பட்டினி கிடக்கிறேன் உன் ஜாதிக்கு நான் மாறி விடுகிறேன் வேலை கொடுப்பாயா" என்று கேட்டான். அவன் "இளைஞனே நீ சமர்த்தனாய் உயர்ந்த நிலைக்கு நீ வருவாய். உன்னை என் ஜாதியில் சேர்த்துக் கொண்டால் எனக்கு பழி வந்துவிடும்'' என்று சொல்லி அவனைத் திருப்பிவிட்டான்.

அவன் வள்ளியூர் வீதி வழி போனான். பசி வாட்டியது. வேறு வழி இல்லை. பிச்சை கேட்டான். ஆனால் மக்களோ அவனை ஓட ஓட விரட்டினார்கள். தடியனே போ வேலை செய் என்றார்கள். ஒரு பெண், வீணாதி வீணனே என்று சொல்லி அவனைப் பரிகசித்தாள். வீணனுக்கு புத்தி உரைத்தது. காட்டுக்குச் சென்று காய்கறிகள் பறித்து விற்றுப் பிழைக்கலாம் என்ற யோசனை வந்தது.

வீணாதி வீணன் காட்டுக்குச் சென்றான். பசுமையான கீரைகளையும் பழங்களையும் பறித்து தின்றான். தண்ணீர் குடித்தான். கொஞ்சம் தெம்பு வந்தது. முருங்கைக்காய், சுண்டைக்காய் என சில காய் கறிகளைப் பறித்துக் கொண்டான். வள்ளியூர் கோட்டை வாசலுக்கு வந்தான். அங்கு நின்ற காவலர்கள் அவனிடம் இரண்டு முருங்கைக் காய்களை எடுத்துக் கொண்டனர். அவன் வீதி வழி காய்கறிகளை கூவி விற்ற போது ஆயம் வசூலிப்பவன் வந்தான். வீணனிடம் கேட்காமலே ஆயத்திற்காக என்று சொல்லிவிட்டு காய்களை எடுத்துக் கொண்டான்.

அவன் அடுத்த தெருவிற்கு வந்தான். காய்கறிகள் வேண்டுமா எனக் கேட்டான். ஒரு பெண் வந்தாள். அவனிடம் கேட்காமலே நிறைய காய்கறிகளை எடுத்துக் கொண்டாள். அவன் அவளிடம் அம்மா உன் விருப்பப்படி காசு கொடு என்றான். அவள் நான் இந்த நகரத்தின் தலைவனின் வீட்டு சமையல்காரி என்றாள். அவனோ யாராய் இருந்தாலும் சரி காசு தந்து விட்டு போ, எனக்கு வயிறு இருக்கிறது என்றான். அவ்வளவுதான் அவள் "ஐயோ இவன் என் மார்பை பிடித்து விட்டானே'' என்று சப்தமிட்டாள்.

அந்தப் பெண்ணின் குரல் கேட்டு ஓடி வந்த சிலர் அவனை அடித்தார்கள். ஓடு இங்கிருந்து என்று எச்சரித்தார்கள். அவனுக்கு மீண்டும் பிச்சை எடுக்க விருப்பமில்லை. காட்டிலே சென்று விறகை வெட்டி விற்றுப் பிழைக்கலாம் என்று நினைத்தான். மலைக்குச் சென்றான். காட்டுப் பழங்களையும் காய்களையும் தின்று பசி ஆறினான். இற்று பட்டுப் போன விறகுகளை சேகரித்து வள்ளியூர் கோட்டைக்கு சுமந்து வந்தான்.

கோட்டையின் முன்னே நின்ற கோட்டை காவலன் "காட்டு விறகு உனக்கா சொந்தம் விறகை விற்றால் கொஞ்சம் தொகை எனக்குத் தர வேண்டும்" என்றான். இவனோ விறகு விற்கவே இல்லையே எப்படி தர முடியும் என்று கேட்டான். காவலன் சரி அப்படியானால் கொஞ்சம் விறகை இங்கே போடு என்றான். அவன் காவலனுக்கு கொஞ்சம் விறகைச் கொடுத்தான்.

வீணாதி வீணன் வீதி வழியே விறகை சுமந்து கொண்டு வந்தான். விறகு வேண்டுமா என்று கூவினான். நடுத்தரப் பெண் ஒருத்தி விறகுக்காரா என்னுடன் வா என்றாள். அவன் போனான். விறகு முழுவதையும் என் பின் கட்டிலே போடு என்றாள். போட்டான். அவளிடம் வந்தான். அம்மா விறகுக்கு காசு என்றான். அவனோ நான் இந்த நகரத்து நீதிபதியின் மனைவி என்னிடம் காசு கேட்கிறாயா என்றாள். அவளோ எனக்குப் பசி அம்மா. அதனால் கேட்கிறேன் என்றான். அவள் சப்தமிட்டு ஊரைக் கூட்டினாள். இவன் என்னை அவமானப்படுத்திப் பேசுகிறான் என்றாள். பொதுமக்கள் அவனைப் பிடித்து கட்டி வைத்து அடித்தார்கள்.

வீணாதி வீணன் மனம் நொந்து போனான். மீண்டும் காட்டுக்குச் சென்றான். பழங்களைத் தின்றான். ஊரின் எல்லைப் புறம் வந்தான். ஒரு ஓலை வீட்டுத் திண்ணையிலே அமர்ந்தான். புலம்பினான். புலம்பிக் கொண்டே இருந்தான். அந்த வீட்டிலிருந்து ஒரு முதிய பெண் வெளியே வந்தாள். அவனிடம் யாரப்பா நீ இப்படி புலம்புகிறாய் என்று கேட்டாள். அவன் அவளிடம் தன் வரலாற்றை சொன்னான். முதிய பெண் அவனுக்கு வயிறு நிறைய பழைய சாதம் போட்டாள். அவன் முழுவதையும் தின்றான். அவனுக்கு தெம்பு வந்தது.

அவன் காட்டுக்கும் போனான். விறகு வெட்டினான். கிழவியின் வீட்டிற்கு பின்பகுதியில் இருந்த இடத்தில் கொண்டு விறகைப் போட்டான். அம்மா நீ இதை எடுத்துக்கொள். எனக்கு நீ ஒரு நேரம் பழைய சாதம் தந்தால் போதும் என்றான். அவள் அவனுக்கு சாப்பாடு கொடுத்தாள். ஆடை கொடுத்தாள். அவனுக்கு தெம்பு வந்தது. நம்பிக்கையும் வந்தது. தன் ஆண்டிக் கோலத்தை மாற்றிக் கொண்டான்.

வீணாதி வீணன் காட்டு மரத்திலிருந்து நீண்ட தடியைத் தயார் செய்து கொண்டான். கொல்லனைப் பார்த்து அதற்குப் பூண் கட்டிக் கொண்டான். கிழவி அவனுக்கு தன் மகனின் ஆடையை கொடுத்தாள். இப்போது அவன் கம்பீரமாக இருந்தான். வள்ளியூர் தெருவழி வந்தான். மக்களை வழி மறித்தான். குலசேகர பாண்டியனின் தாயாதி நான் சுங்கத் தீர்வை வாங்கும் படி அதிகாரம் எனக்கு கொடுத்திருக்கிறான் என்றான்.

ஒரு நாள் அவன் கிணத்தங்கரையில் தண்ணீர் முகுந்த பெண்களிடம் குடக்காசு வேண்டும் என்று கேட்டான். ஒருத்தி தண்ணீருக்கு வரியா என்ன அநியாயம் இது என்று கேட்டாள். எல்லாப் பெண்களும் ஊர்த் தலைவனிடம் முறையிட்டனர். அந்த தலைவன் வீணாதி வீணனை விசாரித்தான். வீணனோ நான் அரசரிடம் சலுகை பெற்றவன். உறவினன். ஆனால் இந்த ஆயத்தில் உனக்குப் பங்கு தருகிறேன். பெற்றுக் கொண்டு பேசாமல் போ என்றான். ஊர்த் தலைவனும் சரி என்றான். இதன் பிறகு வீணாதி வீணன் வள்ளியூரில் தலை நிமிர்ந்து நடந்தான்.

வீணாதி வீரனின் பெயர் மக்களிடம் பயத்தை உருவாக்கியது. திருமணம், பிறப்பு, இறப்பு என எல்லா நிகழ்ச்சிகளிலும் தனக்கு வரி தர வேண்டும் என்றான். வீணன் பெரும் பணக்காரனான். தனக்கென்று அரண்மனை கட்டிக் கொண்டான். காவலுக்காக வீரர்களை வைத்துக் கொண்டான். அடியாட்களை வைத்துக் கொண்டான்.

ஒருமுறை மதுரை குலசேகர பாண்டியன் வள்ளியூருக்கு வந்தான். அநியாயமாய் வரி பிடிக்கும் வீணாதி வீணனைப் பற்றி கேள்விப்பட்டான். அவனைப் பிடித்து வருவதற்கு தன் படை வீரர்களை அனுப்பினான். வீரர்கள் வீணனை அரசன் முன்னே கொண்டு வந்து நிறுத்தினர். அரசன் உன்னை இப்படியாக வரிக்கு வரி பிடிக்கும்படி யார் பணித்தார்கள் என்று கேட்டான்.

வீணாதி வீணன் "அரசனே என்னை யாரும் அப்படிச் சொல்லவில்லை. நான் இந்த ஊருக்கு அனாதையாக வந்தேன். பிச்சை எடுத்தேன். அவமானப்பட்டேன். உழைத்து தொழில் செய்ய முயற்சி செய்தேன். உன் அதிகாரிகள், காவலர்கள் என்னை தொழில் செய்ய விடவில்லை. வேறு வழியில்லை. ஏமாற்றிப் பிழைத்தேன். அதிகாரிகளுக்கு பங்கு கொடுத்தேன். நிறைய சம்பாதித்தேன். உன் நாட்டில் வாழ்வதற்கு இதுதான் நல்ல வழி என்று கண்டுபிடித்தேன்.

அரசே இப்போது நான் செல்வந்தன். என்னிடம் நிறைய பணம் இருக்கிறது. என்னை முதலில் பாதுகாத்த கிழவிக்கு உதவி செய்தேன். நான் சம்பாதித்த செல்வத்தை எல்லாம் உன்னிடம் ஒப்படைத்து விடுகிறேன். எனக்கு தண்டனை கொடுத்துவிடு என்றான்.

அரசன் அவன் சொன்னதை எல்லாம் பொறுமையாகக் கேட்டான் "வீணனே இன்று முதல் நீ என் மந்திரி. இந்த வள்ளியூருக்குத் தலைவன் உன் சொத்துக்களை நீயே வைத்துக்கொள்" என்றான். வீணன் பாண்டிய அரசரிடம் பல ஆண்டுகள் பணி செய்தான். வயதாகி இறந்த பின்னர் மூன்று முகம் கொண்டவளிடம் வரம் வாங்கிக் கொண்டு தெய்வமானான்.

●

கட்டுரையாளர், ஓய்வுபெற்ற பேராசிரியர். நாட்டார் வழக்காற்றியல் மற்றும் சமூகப் பண்பாட்டு ஆய்வாளர்.

# நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் புதிய வெளியீடுகள்




₹ 90/-




₹ 165/-




₹ 240/-




₹ 180/-

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**

41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.

☎: 044-26251968, 26258410, 48601884 Email: info@ncbh.in | www.ncbhpublisher.in





14.03.2023 அன்று பழனியில் நேசனல் புக் டிரஸ்ட் இந்தியா, திண்டுக்கல் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், பழனி ரோட்டரி சங்கம் இணைந்து நடத்திய 37வது தேசிய புத்தகக் கண்காட்சியினை திரு. N. பாஸ்கரன் (ஸ்ரீ கந்தவிலாஸ் பழனி) அவர்கள் திறந்து வைத்தார். இதில் Rtn.. நாகநவீன் (பழனி ரோட்டரி சங்கம்); *S*. தினேஷ் குமார் (பழனி வழக்கறிஞர் சங்கம்);, Rtn. திலக் (பழனி ரோட்டரி சங்கம்), T. பிரசாந்த் (தமிழக காவல்துறை), சி.வாசுகி (தமிழ்த்துறை தலைவர், *APA* மகளிர் கல்லூரி பழனி), மீனா சுந்தர் (தமிழ்துறை *APA* கலை மற்றும் பண்பாட்டு கல்லூரி பழனி), *Rtn*. பிரேம்நாத் (சேர்மன் பழனி ரோட்டரி சங்கம்), *PRD.* ரவி (வழக்கறிஞர், பழனி), கார்த்திகேயன் (*Treasurar* பழனி ரோட்டரி சங்கம்) மற்றும் என்சிபிஎச் திண்டுக்கல் மேலாளர் பண்டரிநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



28.03.2023 அன்று சாத்தூரில் மதுரை நியூ செஞ்சுரி புத்தக நிறுவனமும் எஸ்.ஆர்.என்.எம். கல்லூரி நிர்வாகமும் இணைந்து நடத்திய புத்தகக் கண்காட்சியை கல்லூரி முதல்வர் கணேஷ் ராம் திறந்து வைத்தார்.

கட்டுரை

# ஒரு குறள் இரு குரல்கள்




**சச்சிதானந்தன் சுகிர்தராஜா**

திருக்குறள், திருவள்ளுவர் பற்றிப் பேசும் போது மிகையான உரிச்சொற்களில் எழுதவேண்டும் என்று எழுதப்படாத விதியிருக்கிறது. அத்துடன் மேல்நாட்டினரின் ஒப்புகை இருந்தால் இன்னும் நலம். எடுத்துக்காட்டாக இரண்டைத் தருகிறேன். திருவள்ளுவர் ‘வார்த்தைகளின் வாத்தி’, ‘அங்கீகாரம் பெற்ற படைப்பாளிகளில் தெய்வீகமான இளவரசர்’. இவற்றைச் சொன்னவர் திருவாசகம் புகழ் ஜி.யூ. போப். இந்தக் கும்பிடும் மனப்பான்மை இல்லாமல் இரண்டு திருக்குறள் ஆங்கில திருப்புதல்கள் வந்திருக்கின்றன. வழமையை மீறி ஆங்கில விற்பன்னர்கள் அல்ல இரண்டு தமிழர்கள் மொழிபெயர்த்து இருக்கிறார்கள். ஒருவர் கவிஞர், புனைகதை எழுத்தாளர், மொழிபெயர்ப்பாளர் மற்றும் சமூகச் செயற்பாட்டாளர் மீனா கந்தசாமி, மற்றையவர் இளைப்பறிய கல்வியளாளர், ஆங்கிலப் பேராசிரியர் ச. தில்லைநாயகம் மீனா கந்தசாமியின் அட்டகாசமான அதே வேளையில் மரபுவாதிகளின் அமைதியை அல்லாட வைக்கும் திருப்புதலும் தில்லைநாயகத்தின் வாசகத் தோழமையான மொழிபெயர்ப்பும், சில மாத இடைவெளியில் வெளிவந்தவை.

திருக்குறளுக்கு நூற்றுக்கணக்கான ஆண் மொழிபெயர்ப்புகள், உரைகள் வெளியிடப்பட்டிருந்தாலும், மீனா கந்தசாமி தான் முதல் பெண் மொழிபெயர்ப்பாளரோ அல்லது உரை ஆசிரியரோ அல்ல. 20ஆம் நூற்றாண்டில் மருங்காபுரியின் (ஏதோ சாண்டில்யனின் சரித்திர நாவல்களில் வரும் ஊர் அல்ல திருச்சினாப்பள்ளி ஜில்லா குளித்தலை தாலுக்காவிலிருக்கும் பட்டணம்) பெண் ஜமீன்தாரணியாக இருந்த கே.எஸ்.வி.லட்சுமி அம்மாள் முதல் பெண் உரையாசிரியர். இவர் விளக்கம் எழுதிய ”திருக்குறள் தீபாலங்காரம்’’ 1929 இல் வெளிவந்தது. இவர் இந்துப் புராணங்களிலிருந்து அவருடைய காலத்துப் பாஷையில் சொன்னால் உபமான உபமேயமாக் கொண்டு குறளுக்கு வியக்கியானம் எழுதினார். மீனா கந்தசாமிக்கு முன் இரண்டு பெண்கள் குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்திருக்கிறார்கள். ஜோதிர்லதா கிரிஜாவும் வைதேஹி ஹெர்பர்ட்டும் முந்தைய உதாரணங்கள் என்று கேள்விப்பட்டேன். என் பார்வைக்கு இவை இரண்டும் கிட்டவில்லை.

இன்னுமொன்று. மீனா கந்தசாமியின் நூல் அட்டையில் திருவள்ளுவரின் பெயரோ அல்லது இந்த நூலின் பொருளடக்கம் திருக்குறளிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது என்ற தகவலோ இல்லை. அவரின் பெயர்தான் சினிமா சுவரொட்டியில்

நடிகர்களின் பெயர்களை பெரிய எழுத்துரு வடிவில் போடுவதுபோல இவரின் பெயர் காணப்படுகிறது. தெலுங்கு கவிஞராக முத்துப்பழனியின் (1730-1790) ‘ராதிகா சாந்தவனம்’ சித்தரித்த பெண்ணுடலின் தவிப்புகள், உணர்வுகள், இச்சைகளை மட்டும் தொகுத்து ‘தரம் கெட்டவர்’ என்று தலைப்பிட்டு முத்துப்பழனியின் பெயரில்லாமலே ஆணாதிக்கப் பார்வையில் ஒரு ஆண் அவரின் பெயரில் நூலைவெளியிட்டிருந்தால் இந்த வெளியீடு எப்படியான ஆட்சேபனைகள் உருவாக்கியிருக்கும் என்று யோசித்துப் பாருங்கள்.

குறளின் எளிய நேர்த்தியை உண்மையாகப் பாதுகாக்கும் ஆங்கில மொழிபெயர்ப்புகள் அரிதானவை. முன்னைய குறள் மொழிபெயர்ப்புகள் பல பழைய பாணியிலான ஆங்கில மொழியைப் பின்பற்றுவதன் மூலம் கவிதை விளைவுகளைப் பிரதிபலிக்க முயல்கின்றன. ஆனால் தில்லைநாயகம் முழு குறளையும் எளிய ஆங்கிலத்தில் தந்திருக்கிறார். குறளின் ஒவ்வொரு வார்த்தையின் அர்த்தத்தையும் முடிந்தவரை பரவலாகவும் ஆழமாகவும் வாசித்து, அவற்றை வாசகரின் வாழ்க்கைக்கு நெருக்கமாகவும் பொருத்தமானதாகவும் ஆக்கியிருக்கிறார். இதனால் தில்லைநாயகம் மூலப் பிரதியின் வரம்புகளுக்கு மேல் உயர முடிகிறது.

மீனா கந்தசாமியின் கவனம் திருக்குறளின் மூன்றாவது பகுதியான காதலையும் அன்பையும் மையமாகக் கொண்டுள்ள காமத்துப்பால் மட்டுமே. இவர் இட்ட தலைப்பு ’ஆசையின் புத்தகம் (’The Book Of Desire). காமத்துப்பால் வரலாற்று ரீதியாக மிக அதிகமாக தணிக்கை செய்யப்பட்ட பகுதி. கலாச்சார நிராகரிப்பு நவீன தாராளவாதிகளின் சாத்தானிய வேலை அல்ல. அந்த நாட்களிலேயே இருந்திருக்கிறது. முதல் தணிக்கையாளர்களில் ஒருவர் வீரமாமுனிவர். காம விஷயங்களில் அகஸ்டியனின் பாலியல் பள்ளியைச் சேர்ந்தவர். 1100 வது குறள் அதுவும் மூலத்திற்குச் சம்பந்தமில்லாத கலைஞரின் இன்றைய அதிகப்படியாக அலங்கரிக்கப்பட்ட விளக்கவுரை இயேசு சபை துறவியை அவருடைய கல்லறையில் புரளச்செய்யும். கலைஞர் கருணாநிதியின் வரிகள்: ’மாம்பழ மேனியில் அழகிய அணிகலன்கள் பூண்ட மங்கையிடம் இன்பம் நுகரும் போதெல்லாம் ஏற்படும் காதலானது, இதுவரை அறியாதவற்றைப் புதிதுபுதிதாக அறிவதுபோல் இருக்கிறது.’ மாம்பழ மேனி குறளில் இல்லை.

மீனா கந்தசாமி பெண்ணாக எழுதுகிறார். தில்லைநாயகம் பெண்சார்பாக எழுதுகிறார். தீவிர பெண்ணியவாதிகள் ஒரு ஆணின் உரையை mansplaining என்று குற்றம் சொல்லக்கூடும். இச்சொற்கூற்றை Rebecca Solnit, த கார்டியன் பத்திரிகையின் பத்தியாளர் உருவாக்கினார். ஆண்கள் தங்களுக்குத்தான் எல்லாம் தெரிந்ததுபோல் பெண்கள் மந்தமானவர்கள் என்று நினைத்து விளக்கம் தருவதைத்தான் இந்த பதம் குறித்துக்காட்டுகிறது. இதை விளக்க ஒரு கேவலமான உதாரணம்: நீண்ட கால கிரிக்கட் ரசிகைக்கு lbw விதிகள் பற்றி ஆண் இவள் ஏதோ ஒரு சோப்ளாங்கி போல் குழந்தைத்தனமாக விளங்கவைப்பது.

மீனா கந்தசாமியின் திருப்புதல் மொழிபெயர்ப்பை ஒரு தலையீடு, ஒரு கட்டாய அவசியமாகப் பார்க்கிறது. தில்லைநாயகத்தின் பிரதி நவீன பண்பாட்டுத் தேவைகளுக்கு உரையைச் சீர்திருத்துகை செய்கிறது. மீனா கந்தசாமியின் எழுத்தில் ஒரு கடுமையான பெண்ணிய அரசியல் மற்றும் அழகியல் நிலைப்பாடு தெரிகிறது. அவரின் வெளிப்படையான, உரைநடையில் காலனித்துவ நீக்கத்தின் அவசரமும் தெரிகிறது. மீனா கந்தசாமியின் திருப்புதல் பெண்களின் வரலாற்று அழிப்புகளை நீக்குகிறது, இந்து தேசியவாதத்தையும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தையும் சமாளித்து, மொழியின் அழகையும் காமத்தையும் உயிர்ப்புத்தன்மையின் வெளிப்பாடாக மீட்டெடுக்கிறது.

பெண்ணியப் பதிப்பை உருவாக்கும் முயற்சியில், ஆங்கில மொழிபெயர்ப்பில் காணப்படும் ’கணவன்’ ’மனைவி’ என்ற வார்த்தைகளைத் தவிர்க்க முடிவெடுத்தேன் என்று முன்னுரையில் மீனா கந்தசாமி எழுதுகிறார். இந்த வார்தைகள் இந்த காதல் உரையில் சமகாலப் பொருள் கொண்ட சமூகப் பழக்கவழக்கங்களை சுமக்கவைக்கிறது. இந்தக் கருத்துக்கள் வள்ளுவரின் காலத்திற்குப் பொருந்தாதவை. அதற்கு பதிலாக நான் ஆணும் பெண்ணும் மற்றும் முடிந்த போதெல்லாம் பாலின நடுநிலை சொல்லான காதலரைப் பயன்படுத்தினேன் என்று கூறுகிறார். ஈன்றபொழுதின் பெரிதுஉவக்கும் தன் மகனை’ என்ற வரிகளுக்கு ‘ஒரு தாய் பிள்ளைகளைப் பெற்றபோது’ என்று தில்லைநாயகம் தெளிவுபடுத்துவது இன்றைய பாலுணர்வுத் தேவைகளுக்கு ஒரு பூரணமான எடுத்துக்காட்டு.


காமம் வரும் இடங்களில் மீனா கந்தசாமியின் திருப்புதலில் ஒரு பச்சையான நேரடித்தன்மை உண்டு. தில்லைநாயகத்தில் ஒரு விலகல் தன்மையும் மத்தியதர வர்க்கத்தின் தூய்மைத்தன்மையும் காணப்படுகிறது.

மீனா கந்தசாமி காமத்துப்பாலை தனித்து நிற்கும் பிரதியாகப் பார்க்கிறார். இது சிலப்பதிகாரத்தின் மையக் கதையம்சம் மதுரைக்காண்டத்திலும் மற்றும் புதிய ஏற்பாட்டில் பவுலின் நிருபங்களைத் தனித்து

பிரிப்பது போன்றது. இந்த மாதிரியான திடுக்கிடும் வெளிப்பாடுகள் பாரம்பரியவாதிகளின் இதயத் துடிப்பு நிறுத்தத்தைத் துரிதப்படுத்தும்.

இவர் செய்த இன்னுமொரு பதிப்பித்தல் மாற்றம் இரண்டு அடிகள் கொண்ட குறள் வரிகளை ஆங்கிலத்தில் நாலுவரி வசனத்தில் சொன்னது. இது பதினான்கு வரிகள் கொண்ட செக்ஸ்பிரியரின் ஈரேழ்வரிப்பாவை 28 வரிகளில் எழுதுவது போன்றது. குறளில் கவர்ச்சியும் வலுவும் அதன் சுருக்கத்திலும் வரிகளின் கஞ்சத்தனத்தில்தான் இருக்கிறது. கந்தசாமியின் இந்த நீடித்தல் வள்ளுவரின் காதல் வாழ்வு தரும் மகிழ்ச்சியை மழுங்கடிக்கிறது.

ஆண் பெண் இருபாலரும் காதலர்களின் ஏக்கங்களை மறுபரிசீலனை செய்வதில், கந்தசாமி தமிழ்ப் பெண்ணை பல நூற்றாண்டுகளின் ஆண் நியமன பார்வையில் இருந்து மீட்டு, அவளுக்கு என்று உரையையும் மற்றும் வசன அதிகாரங்களையும் வழங்குகிறார். கந்தசாமியிண் கைகளில், ஆசை என்பது ஒருவித சௌக்கிய தப்பு, அதீத உடயிலான முழுநிறை ஒப்புக்கொடுப்பு. ஒருவிதத்தில் சரணாகதியாக மாறுகிறது; மீனா கந்தசாமி திருக்குறளின் பழங்கால காதலர்களுக்கு ஒரு வீரிய சக்தியை ஈர்க்கிறார்.




அதே நேரத்தில் மீனா கந்தசாமியின் மொழிபெயர்ப்பில் பெண்ணின் உடல் ஒரு இன்பப் பொருளாகக் கருதப்படும் விதமாக கட்டமைக்கப்பட்டிருக்கிறது. பெண் ஆசைப் பொருள் வர்ணிப்பு எதிர்ப்பை வாழ் நாள் வேலையாக கொண்டவர். இப்போது, பெண்ணை ஆசைப் பொருளாக மறுவடிவம் செய்துள்ளார். உதாரணத்திற்கு 1101 குறளை எடுத்துக்கொள்ளுங்கள்:

*To look, to hear, to taste,*

*to smell, to touch:*

*all my five senses enjoy*

*the presence of this bangled beauty.*

இது மீனா கந்தசாமியின் திருப்புதல். இங்கு, ஆணின் புலன்கள் ஒரு பெண்ணை ரசிக்கின்றன என்பதே இதன் உட்பொருள். அதே இந்தக் குறளை திலைநாயகம் இப்படி வழங்கியிருக்கிறார்: *All five sensual pleasures of seeing, listening, tasting, smelling and touching are combined well in this maiden wearing shining braclet.* இங்கே ஒரு ஆண் பெண்னை அனுபவிப்பை விட ஆண்-பெண் இருவரின் புணர்ச்சி ஐக்கியத்தைக் குறிக்கிறது. அது மட்டுமல்ல தில்லைநாயகம் மூலப்பிரதியில் வைத்திருக்கும் நேசமும், அவரின் திருப்புதலில் நேரிடையான பார்வையும், நேர்மையும் தெரிகிறது.

பிறப்பு அடிப்படையிலான சமத்துவமின்மை என்ற கருத்தை நிலைநிறுத்துகிற பிராமனிய சமஸ்கிருத நூல்களுக்கு திருக்குறள் எதிரான எழுத்தாக மீனா கந்தசாமி வாதாடுகிறார், நீருப்பிக்கிறார். அதுமட்டுமல்ல பெண் ஆசையைக் கொண்டாடுவதன் மூலம் வள்ளுவரின் பிரதி சமஸ்கிருத நூல்களுக்கு எதிராகவும் செயல்படுகிறது. ஆணாதிக்க பெண் விரோதிய களைகளையெடுப்பதுதான் என் வேலை என்கிறார் மீனா கந்தசாமி. தில்லைநாயகத்தின் எண்ணமும் இதுதான். ஆனால் அவரின் முயற்சியில் கொஞ்சம் தயக்கம் இருக்கிறது.

கந்தசாமி, அவருடைய திருப்புதலில் ஒரு ஆக்கிரமிப் புத்தனமான துணிச்சல் காணப்படுகிறது. அவருடைய மொழி பெயர்ப்பை நாளிதுவரைக்கும் கொண்டுவந்திருக்கிறார். சமீப பாலின அடையாளங்கள், தேவைகளுக்குத் திருவள்ளுவரை ஒத்துப்போக வைக்கிறார். இச் செய்கை வீரமாமுனிவர் கல்லறையில் இன்னும் உருளச் செய்யும். பண்டைய நூல்கள் எல்லாம் ஆதிக்க பாலீர்ப்பு வழமையை (Heteronormativity) யின் பின்புலத்தில்தான் எழுதப்பட்டவை. திருக்குறள் மட்டுமல்ல எல்லா மறைகளும் இந்த எண்ணயியலைப் பிரதிபலிக்கின்றன. கிறிஸ்தவ திருமறையில் இது தெளிவாக உண்டு. ஆதியில் கடவுள் மனிதரை ஆணும் பெண்ணுமாகப் படைத்தார் என்ற வாசகம் பாலின ஈர்மறைக்கு அப்பாற்பட்டவர்களுக்குச் (Nonbinary) சுகம் தரும் செய்தி அல்ல. கந்தசாமி இன்றைய பாலியல் புகார்களுக்கான தடயங்கள் குறளில் இருப்பதாக உணர்கிறார். பெண்நிறைந்த நீர்மை பெரிது என்ற குறளின் அடிகளுக்கு ஆண் விரிவுரையாளர்கள் நீர்மையை இயல்புநிலையான பெண்ணின் உள்ளார்ந்த அத்யாவசியமான குணங்களாக அவர்களுடைய உரையில் புகுத்திவிடுகிறார்கள். ஆனால் கந்தசாமி நீர்மையை அதன் சொற்பிறப்பை ஆராய்ந்து, நீருடன் இணைந்து, நீர்த்தன்மையுள்ள கெட்டிமையற்ற, உறுதித்தன்மையற்றது என்று விளக்கம் தருகிறார். இந்த வியாக்கியானம் கொஞ்சம் இட்டுக்கட்டப்பட்ட, முன்னமே தீர்மானிக்கப்பட்ட

வாசிப்புப் போல் தெரிகிறது. இது பாலுணர்வு பண்புகளை உரிமைகோரக்கூடிய ஒன்றாகப் பார்க்கிறது. மீனா கந்தசாமியின் வாசிப்பில் பாலின வெளிப்பாடு ஏற்கனவே நிர்னயிக்கப்பட்ட அல்லது திடமாக்கப்பட்டதாகக் கணக்கிடுகை செய்வதில்லை.

மீனா கந்தசாமியின் முன்னுரையில் அதிகம் முன் நிறுத்தப்பட்டவர் பெரியார். அதே வேளையில் அதிக தூரம் வைக்கப்பட்டவர் பரிமேலழகர். அவர் பிராமண சமூக ஒழுக்கங்களின் பல கருத்துக்களை அவரின் உரையில் செருக்கியுள்ளார். ஆனால் அவர் ஆணாதிக்கக் கண்ணோட்டம் வளர உதவியதை ஒருவரும் தனிப்படுத்தி ஆண் விமசகர்கள் அவரை குற்றம் காணவில்லை என்று மீனா கந்தசாமி கண்டிக்கிறார்.

மீனா கந்தசாமி குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்டவர். பார்க்க அவரின் *When I Hit You Or, A Portrait of the Writer as a Young Wife, Atlantic Books, 2017.* மனப்பொருத்தம் இல்லாதவரோடு சேர்ந்து வாழும் வாழ்வு நச்சுத்தன்மையானது என்பதை உடன்பாடு இல்லாதவர் வாழ்க்கை ஒரு குடிசையிற் பாம்போடு உடன்வாழ்ந்தாற் போன்றது என்ற குறளில் தன் வாழ்கையின் அடையாளங்களைக் காண்கிறார், ஆறுதலும் அடைகிறார்: உடம்பாடு இலாதவர் வாழ்க்கை குடங்கருள் பாம்போடு உடனுறைந் தற்று (குறள் 890). திருமனங்கள் என்றும் நிரந்தரமானவை என்ற சனாதன தர்மக் கொள்கைக்கு திருக்குறள் முற்றிலும் மாறுபட்டது என்கிறார்.

ஆனால் குறள் ஒரு ஆட்சார்பற்ற (impersonal) படைப்பு. வள்ளுவரின் தனிப்பட்ட உணர்வுகளைப் பற்றிக் குறளில் இல்லை. அடிப்படையில் அதன் பகட்டான சொல் உணர்ச்சி தமிழ் செவ்வியல் இலக்கிய மரபின் அகம் அல்லது அகம் பற்றிய வடிவமைப்புடன் பொருந்துதிறது, பொதிந்திருக்கிறது.

தில்லைநாயகத்தின் கையில் திருக்குறளை நேரிய பொருளோடும் வாசக நட்புடைய பிரதியாகத் தெரிகிறது. மீனா கந்தசாமியின் வாசிப்பில் அவருடைய கருத்துநிலைதான் அதிக அதிகாரம் செய்கிறது.

விக்டோரியன் ஒழுக்கம், பிராமண ஆணாதிக்கம், ஆண்-பெண் மதிப்பு முறை பற்றிய கடுமையான கருத்து ஆகியவை மொழிபெயர்ப்பாளர்களை ஊறவைத்துள்ளன நிலையில் மீனா கந்தசாமியின் மொழிபெயர்ப்பு தனித்து நிற்கிறது. மனைவியின் சொற்படி நடப்பவர் பயனடைய மாற்றர் என்ற பொதுவான உரைமாற்றி இல்லறத்தில் அளவுமீறி ஈடுபடுவோர் புகழ்பெறார் போன்ற தில்லைநாயகத்தின் திருத்திய கருத்துரைகள் பெண்ணின் கௌரவத்தை, மாட்சியைக் காக்கவைக்கிறது.

திருமறைகளின் சிறப்புத்தன்மைகளில் ஒன்று அவற்றில் பொதிந்திருக்கும் சில சொற்தொடர்களை கிடைக்கும் ஒவ்வொரு வாய்ப்பிலும் மேற்கோள் காட்ட முடிகிறது. அதன் இயற்கையான சொந்தத் தொகுதியையும் மீறி பொது பேச்சுவழக்கில் மிக இயல்பாகக் கலந்துவிடுகிறது. தெளிவான சான்றுகள்: 'தந்தை மகற்குஆற்றும்' 'குழல் இனிது யாழி இனிது' 'அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாழ்' இது கிறிஸ்தவ திருமறைக்கும் உண்டு. 'குருடனுக்குக் குருடன் வழிகாட்டல்' 'உங்கள் முத்துகளைப் பன்றிகள் முன் போடாதேயுங்கள்'; 'சூரியனுக்குக் கீழே நூதனமானது ஒன்றுமில்லை'. 'பாலும் தேனும் ஓடுகிற தேசம்'.

திருமறைகளின் இன்னுமொரு வசதி நடப்புச்செய்திகளுக்கு ஏற்றவாறு வசனங்கங்களைத் தேர்ந்தேடுக்கலாம். உங்கள் பக்கத்தை நியாயப்படுத்தலாம். காலனிய நாட்களில் ஆங்கிலேயர் சீங்கப்பூரில் அபின் வியாபாரத்தில் ஈடுபட்டபோது அதற்கு தெய்வீக அனுமதியும் அங்கீகாரமும் பெற புதிய ஏற்பாட்டில் உள்ள இயேசுவின் வாசங்களைப் பாவித்தார்கள்: 'நேர்மையற்ற செல்வத்தைக்கொண்டு உங்களுக்கு நண்பர்களைத் தேடிக்கொள்ளுங்கள்.' கிழக்கிந்தியக் கம்பனி ஆட்சியில் சென்னை மாவட்ட ஆட்சியராகப் பணியாற்றிய பிரான்சிஸ் வைட் எல்லிஸ் (*Francis Whyte Ellis*) 1818-இல் சென்னையில் கடும் தண்ணீர்ப் பஞ்சம் ஏற்பட்டபோது 27 கிணறுகளைத் தோண்டிக் கல்வெட்டும் பதித்தார். அவரின் செய்கைக்கு மேற்கொள் காட்டிய குறள் 'புனலும் வாய்ந்த மலையும் வருபுனலும் வல்லரணும் நாட்டிற்கு உறுப்பு.'

திருக்குறள் எல்லாராலும் பெரிய அளவில் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. ஆறுமுக நாவலர் பரிமேலழகரின் திருக்குறளைப் பதிப்பித்தது உண்மை. அவருக்குப் பெரிதாகப்பட்டது ஒரு பிராமணரின் உரை. ஒரு நெசவாளரின் பிரதி அல்ல. செட்டியார் பெண்ணான கண்ணகியை ஏற்க மறுத்தவர், ஒரு நெசவாளரின் கருத்துக்களை அவர் ஒத்துக்கொள்வது கௌத்தம் ஆதானி, கார்ல் மார்க்சின் மூலதனந்தான் நான் படுக்கையில் வாசிக்கும் நூல் என்று சொல்வது போன்றது. சைவதூஷனபரிகார விக்கியாபனத்தில் நாவலர் பட்டியலிட்ட திருமறைகளில் திருக்குறள் இல்லை. திருஞானசம்பந்தமூர்த்தி முதலிய நாலு சமயக்குரவர்களினால் அருளிச்செய்த தேவாரம், திருவாசகம் என்னும் திராவிட வேதங்கள், மெய்கண்ட தேவர் முதலிய சிவானுபுத்திமான்களினால் அருளிச்செய்யப்பட்ட சிவஞானபோதம், சிவஞானசித்தியார் நூல்களிலே திரவிட சித்தாந்தாங்கள் உளாவாம் என்று நாவலர் எழுதுகிறார். கவனிக்க: திராவிட வேதங்கள், திராவிட சித்தாந்தாங்கள் நாவலருடைய வார்த்தைகள். அவர்

மேற்சொன்ன இந்த நூல்களில்தான் நாவலரின் கணக்குப்படி சற்சமயலக்ஷாணங்கள் குறைவற அமைந்திருக்கின்றன. குறளை நாவலர் தள்ளி வைத்திருப்பதற்கு வள்ளுவர் சைவ ஆகம மரபுகள், சைவ கோயில்களில் நிகழும் ஆகமச் சடங்குகள், கிரிகைகள் பற்றி அவருடைய எழுத்தாணிக்கு வேலை கொடுக்காமலிருந்தது காரணமாகவிருக்கலாம். அத்துடன் இன்னுமொரு காரணம் திருவள்ளுவரின் சமயசார்பற்றத்தன்மை..

இதையும் சொல்லிவிடுகிறேன். நாவலர் குறளைப் பதிப்பிக்கும் முன்னமே இலங்கையில் புழக்கத்தில் இருந்திருக்கிறது. இது பற்றி *Fernao de Queyroz's The Temporal and Spiritual Conquest of Ceylon* இல். காணலாம். 16 ஆம் நூற்றாண்டில் கோட்டையில் நடந்த மத விவாதத்தில் பிரான்சிஸ்கன் சபை மதபரப்பாளர் *Fra Joam de Villa Conde* புவநேகபாஹுவின் அரசவையில் அவர் போதித்த கோட்பாடுகளுக்கு ஆதரவாக திருக்குறளில் இல்லாததை மேற்கோள் காட்டினார்: "நீங்கள் தீங்கிழைக்கும் வகையில் மறைத்து வைத்திருக்கும், வள்ளுவரால் இயற்றப்பட்ட நூலைப் படியுங்கள், நீங்கள் திரித்துவத்தின் ஒன்றியத்தைக் காண்பீர்கள். மகனின் அவதாரம், மனித வீழ்ச்சிக்குக் காரணம், அவர்களது தவறுகள் மற்றும் துயரங்களுக்கான தீர்வு மற்றும் இறுதி மீட்பு பற்றி அறிந்துகொள்வீர்கள்' என்று முழங்கினார். இந்த முழக்கம் ஒரு ஆதாரமற்ற பிரசாரம். குறளில் திருத்துவம் பற்றியே அல்லது மனித அவதாரம், மனித மீட்பு பற்றி எந்த விஞ்ஞான திறன் கொண்ட தொலைநோக்கிக் கருவி வைத்துப் பார்தாலும் கிடைக்காது.

திருவள்ளுவர் அடிப்படையில் ஒரு பழமைவாத குறிப்பிட்ட மதப்பிரிவு தொடர்பற்ற சிந்தனையாளர். அவரது காலத்தை விட வள்ளுவர் முற்போக்கான கருத்துக்களைச் சொன்னாலும் அவர் காலத்து விளைபொருள். திருவள்ளுவரின் அரசியல் (அரசாங்கம்) ஜனநாயகத்தை அடிப்படையாகக் கொண்டது அல்ல,. மன்னர் ஆட்சிபற்றி திருக்குறளில் நிறைய உண்டு, திருவள்ளுவரின் உலகம் தனிப்பட்ட விசுவாசத்தை அடித்தளமாகக் கொண்ட நிலப்பிரபுத்துவ ஒழுங்கை பிரதிபலிக்கிறது. குறளில் விதவையின் அவமானகரமான வாழ்க்கை பற்றி அனுதாபமோ அல்லது குறிப்போ காணப்படவில்லை. இந்தியாவின் மிக மோசமான சமூகக் கறையாகக் கருதப்படும் உடன்கட்டை பழக்கத்தை ஒழுக்கமுறை போதிப்பவர் எங்கேயும் கண்டிக்கவில்லை. அவர் அவருக்கு விதிக்கப்பட்ட கடமையை நிறைவேற்றுவதன் மூலந்தான் வாழ்க்கை வாழ்வில் உய்வடையலாம்.

வள்ளுவருக்குப் பிச்சையிடுதல்தான் வறுமைக்கான தீர்வாக அமைந்தது. செல்வத்தை மறுபகிர்வு செய்வது அல்ல. ஆனால் மக்களை பிச்சை எடுக்கக் கட்டாயப்படுத்தியதற்காக படைப்பாளியை சபிக்கவும் செய்தார் 'இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்துகெடுக உலகியற்றி யான் (குறள் 1062). கணவன்மார்கள் தங்கள் மனைவிகளை விட்டுவிட்டு பாலியல் பணியாளர்களுடன் பழகுவதை அங்கீகரித்த சமூக மரபுகளை அவர் ஏற்றுக்கொண்டார். என்னதான் பிரதியைத் துப்பரவு படுத்தினாலும், மாற்று வாசிப்புச்செய்தாலும் அதிகாரங்கள் 91 (பெண்வழிசேரல்) 92 (வரைவின் மகளிர்) பெண்கள் பற்றிய வள்ளுவரின் தந்தைவழிப் பார்வையை மீட்கமுடியாதவை. ஒருபாலீர்ப்புடைய பெண்ணும் இனப் பிரச்சனைகள், பெண்ணியம் பற்றிய உணர்ச்சிமிக்க எழுத்தாளருமான *Audre Lorde* இன் ஆத்திரமூட்டும் அறிவுறுத்தலும் நினைவுக்கு வருகிறது: 'ஆண்டைகையின் தளபாடங்கள் ஆண்டகையின் வீட்டை தரைமட்டமாக்காது.'

எல்லாத் திருமறைகள் போல் திருக்குறளிலும் முரண்பாடுகள் உண்டு. அறங்களுக்குள் முதன்மை கொல்லாமை போதித்தவரே கொடியவர்களுக்கு மரண தண்டனை கொடுத்தல் பற்றிச் சொன்னார். அவரது பணியின் ஒட்டுமொத்த நிலைப்பாடு அகிம்சையாகும். அவர் போதித்தது பொதுவான அறிவுறுத்தல்கள்தான். நடைமுறை பரிந்துரைகள் இல்லை.

வள்ளுவர் பல்வேறு கோணங்களில் சித்தரிக்கப்பட்டிருக்கிறார். வைத்தியராக( டி. தாரணி), சட்டவல்லுனராக (மு.ராஜேந்திரன்), பொருளாதார விற்பன்னராக (கீர்த்தி ஷைலேஷ்) மறுவடிவமைபுச் செய்யப்பட்டிருக்கிறார். எல்லோரும் திருக்குறளுக்கு உரை எழுதிவிட்டார்கள். தமிழ்நாட்டு ஆளுநர் ரவி தவிர. தமிழ் வரலாறு, பண்பாட்டைக் கோணல்மாணலாகப் பார்க்கும் இவர் குறளில் காணப்படும் மன்னர் என்பதை ஆளுநர் என்று வாசித்து தன்னை அதனுடன் அடையாளப்படுத்தினாலும் ஆச்சரியம் இல்லை.. ஆளுனர் ரவி தலைப்புக்காக தேடி அலையவேண்டியதில்லை. இதோ ஒன்று: 'வள்ளுவரின் பார்வையில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகளை துன்புறுத்துதல் மற்றும் சீர்குலைத்தல்'.

திருக்குறளுக்குக் கொடுக்கும் அர்த்தம் காலத்திற்கும், அரசியல், சமூக, மத தேவைகளுக்காக மாறிக்கொண்டே இருந்திருக்கிறது, மாறிக்கொண்டே இருக்கும். இந்த வியாக்கியானங்களில் திருக்குறளைப் பற்றித் தமிழ் சினிமா வில்லன்களின் பாஷையில் ஒரு மண்ணும் அறியப்போவதில்லை. இந்த வியாக்கியானங்கள் செய்கிறவர்கள் என்ன மாதிரியான ஆட்கள், அவர்களுடைய கருத்தியல் பின்னணி என்பதைத்தான் அறியமுடிகிறது. பரிமேலழகர் உரையில் அவரின் வைஷ்னவ பிராமண

சித்தாந்தம்தான் தெரிக்கிறது. வரதராசனில் மனிதநேய பாரம்பரியம் இடையிடையே தூவிக்கிடக்கிறது. புலவர் குழந்தையில் திராவிட எண்ணங்களின் தடயங்களைப் பார்க்கலாம். அம்பாள் எந்த காலத்தில் பேசினாள் என்பது போல் திருக்குறள் கூகுள் அலக்சா போல் பேசுவதில்லை, வாசகர்கள்தான் பிரதியைப் பேசவைக்கிறார்கள், பொருள் கொடுக்கிறார்கள், கால தேவைகளுக்குப் பொருத்தமானதாக ஆக்குகிறார்கள். திருக்குறள் பற்றிய பொழிப்புரைகள் திருக்குறளைப் பற்றியது அல்ல. விமர்சிப்பவர்கள் பற்றியது. அவர்களின் வியாக்கியானங்கள் அவர் யார் என்பதை உங்களுக்குச் சொல்லும் விவரிப்பு. இது அனைத்து புனித நூல்களுக்கும் சமமான உண்மை.

இதையும் சொல்லியாகவேண்டும். உண்மையில் திருக்குறள் பற்றிய விளக்கங்கள் சலவைத் திரவக விளம்பரங்களில் வருவது போல் பளிச்சான, முற்றிலும் புதிய உரைகள் அல்ல. பழைய உரைகளின் பின்பற்றல் அல்லது சீர்திருத்தப்பட்ட நகல்கள். பெரும்பாலானவை நடப்புமுறை முற்போக்கான யோசனைகளை பூர்த்தி செய்யும் வகையில் பரிமேலழகரின் குறிப்புகளைச் சுத்தப்படுத்தியதும் பொருத்த வைத்ததும்தான். ஒருவிதத்தில் இவை பரிமேலழர் பற்றிய மீள் பார்வை. ஏன் இந்த உரைகள் பரிமேலழரின் மறுசுழற்சி என்றும் எடுத்துக்கொள்ளலாம். பரிமேலழகரை மறுபயன்பாடு செய்வதில் ஒரு பிரச்சனை என்னவென்றால் மூலப்பிரதியில் இல்லாதது உரையில் புகுந்துவிடுகிறது. அது ஏனோ அசலில் இருப்பதைப் போல் ஒரு மருட்சியை எற்படுத்துகிறது. நான் மேலே சொல்லிய கலைஞரின் மாம்பழ வர்ணனை இதற்கு முக்கிய முன்சான்று.

திருக்குறள் மட்டும் அல்ல பொதுவாகத் தமிழ் செவ்விலக்கியங்கள் வரலாற்று விமர்சனத்திற்கு *(historical critcism)* உட்படுத்தப்படுவதில்லை. பிரதியின் அழகியல் மற்றும் தார்மீக மதிப்பை நாங்கள் பாராட்டுகிறோம், பறைசாற்றுகிறோம். திருக்குறளை நாம் பிரதியின் அளவில் படிக்கிறோம். பிரதிக்குப் பின் சென்று திருக்குறள் ஒரு பிரதியா அல்லது பல பிரதிகள் கொண்டதா, ஒரே இருக்கையில் எழுதப்பட்டதா? பல ஆண்டுகளாக உருவாக்கப்பட்டதா? ஆசிரியர் ஒருவரா அல்லது பலரா என்று சரித்திரம் சம்பந்தப்பட்ட கேள்விகள் கேட்பதில்லை. விவிலியப் புத்தகங்களுக்கு நேர்ந்த கடுமையான பிரதியை வெட்டிச்சோதித்தல் தமிழ்ச் செம்மொழிப் புத்தகங்களுக்கு ஏற்படவில்லை. எபிரேய திருமறையின் முதல் ஐந்து நூல்களும் மோசேயினால் எழுதப்பட்ட கருத்து மாறி இவைகளுக்குப் பின்னால். நாலுக்கு மேலான ஆசிரியர்கள் இருக்கிறார்கள் என்ற எண்ணம் பரவலாக இருக்கிறது. ஐந்து புத்தகங்களின் காலவரிசை பொதுவாக கிமு 4,000 முதல் கிமு 1,500 வரை இருக்கும். நமது கவனமெல்லாம் வாக்கிய உறுப்பாராய்வு *(textual analysis)* செய்வதில்தான் இருக்கிறது. பிரதியின் வரலாற்றுப் பின்னணியைப் பகுப்பாய்வு செய்வதில்லை. சரித்திர கேள்வி கேட்டவர்களின் அபூர்வமானவர் வ.உ.சி. திருக்குறளின் முதல் மூன்று அதிகாரங்களில் காணப்படும் அமைப்பு, பொருள் வைத்து இவை பின் இடைச் செருகல்களே என்று சொல்லிவிட்டார்.

திருக்குறள் உரையாசிரியர்கள் ஒருவரும் வள்ளுவரின் மூலப் பிரதியில் கைவைப்பதில்லை. அர்வமும் இல்லை. கிறிஸ்தவ திருமறைத் திருப்பாளர்களும் மூல ஏபிரேய, கிரேக்க மொழியில் உள்ள வேதவாக்கியங்களிருக்கும் பாரபட்சமான ஆண் பாலின வார்த்தைகளைத் தொடுவதில்லை. மொழிபெயர்க்கப்பட்ட திருப்புதல்களில் பொதிந்து இருக்கும் பால் வகை சொல்வேறுபாடுகளைத்தான் துப்பரவுபடுத்துகிறார்கள். மலைப் பிரசங்கத்தில் வரும் 'பாக்கியவான்கள்' என்று பல பழைய திருப்புதல்களில் காணப்படும் ஆண் பாலினத்தை வலியுறுத்தும் சொல்லை மாற்றி 'பேறுபெற்றோர்' என்று சமீபத்தில் வெளிவந்த பொது மொழிபெயர்ப்பு திருவிவிலியத்தில் வேத மொழிபெயர்ப்பாளர்கள் பாலின நடுநிலையான பொருளைத் தந்திருக்கிறார்கள்.

கடைசியாக இதையும் சொல்லி இந்த வியாசத்திலிருந்து விடைபெறுகிறேன். ஏபிரேய ஞானி சொன்ன பழைய பொன்மொழியை மூலத்துக்கு விசுவாசமில்லாத மொழிபெயர்ப்பில் தருகிறேன்: 'பிள்ளாய், அநேக புஸ்தகங்களை உண்டுபண்ணுகிறதற்கு முடிவில்லை'. இன்று அவர் இருந்திருந்தால் இதை அநேக உரைகள் உருவாக்குவத்திற்கு முடிவே இல்லை என்று மாற்றி எழுதிப்பார். அவரின் அடுத்த வரி அதிக படிப்பு உடலுக்கு இளைப்பு என்பது எழுதுகிறவர்களுக்கும் வாசிப்பவர்களுக்கும் புகைப்பிடித்தல், மது அருந்துதல் விளம்பரங்களில் வரும் அறிவுப்பு போல் ஒரு பயமுறுத்துதல், எச்சரிகை போல் இருக்கிறது.

*(நன்றி: காலச்சுவடு மார்ச் 2023. இது வெறுமனே மறு பதிப்பு அல்ல.. புதிய தகவல்களுடன் விரிவாக்கப்பட்டது)*

●

(கட்டுரையாளர், எழுத்தாளர், இலங்கைத் தமிழரான இவர் இங்கிலாந்தின் பர்மிங்காம் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெற்று அங்கேயே பேராசிரியராகப் பணியாற்றியவர். இவரது நூல்கள் ஆக்ஸ்போர்ட், கேம்பிரிட்ஜ், ஹார்டுவேர்டு பல்கலைக் கழகங்களின் வெளியீடுகளாக வந்துள்ளன. தமிழ், ஆங்கிலம், ஜெர்மன், ஸ்பானிஷ், இத்தாலியன், கொரியன், மலேயன், சீன மொழிகளிலும் இவரது நூல்கள் வெளிவந்துள்ளன.)

கட்டுரை

# எது இனிய இல்லறம்?



பாவண்ணன்

தமிழில் நாவல்கள் உருவாகத் தொடங்கிய காலத்திலிருந்தே இல்லற வாழ்வின் சிக்கல்கள் ஒரு பேசுபொருளாக மாறிவிட்டது. பிரதாப முதலியாரும் ஞானாம்பாளும் திருமணம் செய்துகொண்டதையும் சிக்கலில் சிக்கிக்கொண்டதையும் பிறகு மீண்டு வந்து இணைந்து வாழ்வாங்கு வாழ்ந்த கதையோடுதான் தமிழின் முதல் நாவலான பிரதாப முதலியார் சரித்திரம் அமைந்திருக்கிறது. இல்லற வாழ்க்கையைக் களமாகக் கொண்ட பல நாவல்கள், சிக்கல்கள், துன்பங்கள், இறுதியில் இணைந்து நிம்மதியை நாடுதல் என்னும் மூன்று புள்ளிகளுக்கு இடையிலான உலகத்திற்குள்ளேயே உலவிவந்தன. இருபதாம் நூற்றாண்டின் இறுதிக்காலம் வரைக்கும் இதுதான் நிலைமை. புத்தாயிரத்தாண்டில் நிலைமை சற்றே மாறத் தொடங்கியது.

பெருமாள் முருகன் எழுதிய கங்கணம் என்னும் நாவல் 2007ஆம் ஆண்டில் வெளிவந்தது. விவசாயக்குடும்பத்தைச் சேர்ந்த பள்ளிப்படிப்பு மட்டுமே படித்துமுடித்த இளைஞனொருவனுக்கு ஆண்டுக்கணக்கில் திருமண வாய்ப்புகள் தள்ளித்தள்ளிப் போகும் தருணங்களை அந்த நாவல் அவலச்சுவையுடன் காட்சிப்படுத்தியிருந்தது. திருமணம் என்னும் குடும்பநிகழ்ச்சி

தமிழ்ச்சமூகத்தில் திடீரென சிக்கல்நிறைந்ததாகவும் எளிதில் தீர்மானிக்கமுடியாத ஒன்றாகவும் மாறிவிட்டதை உணர்த்தும் முதல் படைப்பாக அது விளங்கியது. 2018ஆம் ஆண்டில் வெளிவந்த எம்.கோபாலகிருஷ்ணனின் மனைமாட்சி என்னும் நாவல் திருமணம் புரிந்துகொண்ட தம்பதியினர் சேர்ந்து வாழ முடியாதபடி எதிர்கொள்ளும் நெருக்கடிகளையே களமாகக் கொண்டு கட்டமைக்கப்பட்டிருந்தது. குடும்பம் என்னும் அமைப்பு மெல்ல மெல்ல ஏவுகணைக்கூடமாக மாறிவிட்ட அவலத்தையும் இனிய இல்லறத்துக்கு வழியில்லாத வகையில் சமூக அமைப்பில் ஏற்பட்டிருக்கும் மாற்றங்களின் சுவட்டையும் அடையாளப்படுத்தும் படைப்பாக அது விளங்கியது.

கருத்தொருமித்து காதலோடு வாழ்வது என்பது இன்றைய நவீன சமூக அமைப்பில் மிகப்பெரிய சவாலாக மாறிவிட்டது. கருத்தொருமித்தவர்களிடையில் காதல் இல்லை. அரும்பும் காதலும் அதிக காலம் நிலைத்திருப்பதில்லை. காதல் இருப்பவர்களிடையில் கருத்தொற்றுமை உருவாக வழியில்லாமல் இருக்கிறது.இன்றைய இளந்தலைமுறையினர் தினந்தினமும் சந்திக்கும் மிகப்பெரிய எரியும் பிரச்சினையாக இது மாறியுள்ளது. தனித்தனி தீவாக ஒவ்வொருவரும் மாறிவிடும் காலம் வெகுதொலைவில் இல்லை என்னும் அச்சம் எல்லோரிடமும் குடியிருக்கிறது. அந்த அச்சத்தின் விளைவாகவே இந்தப் பிரச்சினையை முன்வைத்து நாவல்களை நாவலாசிரியர்கள் எழுதுகிறார்களோ என்று நினைக்கத் தோன்றுகிறது.

இப்படிப்பட்ட பிரச்சினை தமிழ்நாட்டில் அல்லது இந்தியாவில் மட்டுமே நிலவுவதாக ஒருசிலருக்குத் தோன்றலாம்.இன்னும் சிலர் இவையனைத்தும் நம் நாட்டில் நவீன கல்வியைப் பெற்று வேலை வாய்ப்பில் வெற்றி பெற்ற புதிய தலைமுறையினரின் பிரச்சினை என்றும் நினைக்கக்கூடும். அதில் துளியும் உண்மையில்லை. இன்றைய தேதியில் இல்லற வாழ்க்கை என்பது உலகளாவிய பிரச்சினையாக மாறியிருக்கிறது. எது இனிய இல்லறம் என்பது வகுத்துக்கொள்வதற்கு இயலாத ஒன்றாக உள்ளது. இல்லறம் என்பது மிகப்பெரிய பொறுப்பு.ஆனால் அதைச் சுமையென கருதும் மனநிலை எல்லோரையும் ஆட்டிப் படைக்கிறது. ‘அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை அஃதும் பிறன்பழிப்பதில்லாயின் நன்று’ என இன்று ஒருவரிடமும் சொல்லமுடியாது.

எது இனிய இல்லறம் என்று வரையறுக்கமுடியாத தடுமாற்றத்தை லியோ தல்ஸ்தோய் எழுதிய அன்னா கரினினா நாவலிலேயே நாம் காணமுடியும். கூடுதலான வயது வித்தியாசம் கொண்ட தன் கணவனோடும் அன்னாவால் வாழ முடியவில்லை. தன் மனம் கவர்ந்த காதலனோடும் அன்னாவால் வாழ முடியவில்லை. எது இனிய இல்லறம் என்பதை அவளால் தீர்மானிக்கமுடியவில்லை. எப்போதும் அவள் இரு விளிம்புகளுக்கிடையில் ஊசலாடிக்கொண்டிருக்கிறாள். அந்த ஊசலாட்டமே அவள் உயிரைப் பலி வாங்கிவிடுகிறது. தமிழ்ச்சூழலில் மொழிபெயர்ப்புக்கென ஒரு மதிப்பும் பெருமையும் நிலவிய காலகட்டத்திலேயே இந்த நாவல் தமிழில் மொழியாக்கம் செய்யப்பட்டு விட்டது.

இடையில் ஏற்பட்ட அரைநூற்றாண்டு கால தேக்கத்துக்குப் பிறகு மொழிபெயர்ப்புச் சூழலில் மீண்டுமொரு எழுச்சி உருவாகியிருக்கிறது. துருக்கி, அரபி, பிரெஞ்சு என பல மொழிகளிலிருந்தும் நாவல்கள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு வெளிவந்தபடி இருக்கின்றன. சமகாலத்திய நாவல்களின் பேசுபொருள் என்ன என்பதை ஓரளவுக்கேனும் இன்று நம்மால் ஊகித்துக்கொள்ள முடிகிறது. பிரெஞ்சு மொழியைத் தாய்மொழியாகக் கொள்ளாத பிரெஞ்சு எழுத்தாளரான (வட ஆப்பிரிக்காவில் அரபு மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்) தஹர் பென் ஜெலூனின் ’இல்லறவாசிகள்’ என்னும் நாவலை, தொடர்ச்சியாக பிரெஞ்சிலிருந்து தமிழில் மொழிபெயர்க்கும் வெங்கட சுப்புராய நாயகர் தமிழில் மொழிபெயர்த்திருக்கிறார். இந்த நாவலும் அன்னா கரினினாவைப்போலவே எது இனிய இல்லறம் என முடிவெடுக்க முடியாத தடுமாற்றத்தையே களமாகக் கொண்டிருக்கிறது. தல்ஸ்தோய் தலைமுறையிலிருந்து தஹர் பென் ஜெலூன் வரைக்கும் இந்தத் தடுமாற்றத்தை வெவ்வேறு காலகட்டப் பின்னணியோடு இலக்கியப்படைப்புகளாக முன்வைத்த எழுத்தாளர்கள் பலர்.


அன்னா கரினினா நாவலில் எழுத்தாளர் தல்ஸ்தோய் எந்த இடத்திலும் பாத்திரத்தின் மீது ஒரு சந்தேகத்தை உருவாக்கவில்லை. விருப்பத்தைச் சொல்லும்போதும் சரி, எரிச்சலையும் கோபத்தையும் வெளிப்படுத்தும்போதும் சரி, சந்தேகத்துக்கு இடமில்லாத வகையிலேயே நம்மை உணரச் செய்கிறார். ஆனால் தஹர் பென் ஜெலூன் தன் நாவலில் அப்படி ஒரு சாதகமான நிலைபாட்டை எடுக்கவில்லை.பாத்திரங்களின் உரையாடல்களையும் எண்ணங்களையும் தொகுத்து முன்வைக்கும்போது, அது அவரவர் தரப்புகளென வரிசைப்படுத்திவிட்டு நிறுத்திவிடுகிறார். நீதிமன்றத்தில் சாட்சிக்கூண்டில் நிற்பவர்களின் உரைகளைப் பதிவு செய்து தொகுப்பதுபோல தொகுத்துக்கொண்டே செல்கிறார். எதையும் உண்மை என்றோ, உண்மையில்லை என்றோ வகுத்துச் சொல்லாமல் தொகுத்து முன்வைக்கும் வேலையை மட்டுமே செய்கிறார். இதனால் இருவிதமான வாக்குமூலங்களின் தொகுப்பு

போன்ற தோற்றத்தை நாவல் அடைந்துவிடுகிறது. இருபது ஆண்டுகளுக்கும் மேலாக ஒன்றாக இணைந்து வாழ்ந்தவர்கள் இப்படித்தான் வாழ்ந்தார்களா, இதுதான் இல்லறமா என்னும் கேள்வியை ஒரு வாசகன் தனக்குள் கேட்டபடியே இந்த வாக்குமூலங்களின் நகல்களைப் படிக்கும் நிலைக்கு ஆளாகிறான்.

முப்பத்தெட்டு வயதுள்ள ஓவியன் ஒருவனுக்கும் இருபத்துநான்கு வயதுள்ள ஓர் இளம்பெண்ணுக்கும் திருமணம் நிகழ்கிறது. ஓவியன் மேல்தட்டைச் சேர்ந்தவன். செல்வச் செழிப்பானவன். நகர வாழ்க்கைக்குப் பழகியவன். கலைஞன் என்னும் புகழ்வளையத்தில் இருப்பவன். அவனுடைய ஓவியங்கள் நல்ல சந்தைமதிப்பு கொண்டவை. ஆனால் அவன் மனைவியோ பழங்குடியினத்தைச் சேர்ந்தவள். வறுமை இல்லை என்றபோதும் அடித்தட்டைச் சேர்ந்தவள். கல்வி கற்கவேண்டும் என்பதற்காக பல இடங்களில் பல குடும்பங்களில் தங்கி, பலருடைய ஆதரவைப் பெற்று படிப்பில் தேறியவள். ஓவியக்கலையைப் பற்றி அவளிடம் உயர்வான எண்ணமும் இல்லை. தாழ்வான எண்ணமும் இல்லை.

ஒரு நல்ல வாழ்க்கை தனக்குக் கிடைக்கப்போகிறது என்கிற எண்ணமே அவளை அந்தத் திருமணத்துக்கு உடன்படச் செய்கிறது. கள்ளமற்ற ஓர் இளம்பெண்ணின் துணை தனக்குக் கிடைக்கப்போகிறது என்கிற எண்ணமே அவனை அந்தத் திருமணத்துக்கு உடன்படச் செய்கிறது. காலம் செல்லச்செல்ல இருவருடைய கனவுகளும் நொறுங்கிவிடுகின்றன. ஒருவரைக் கண்டால் இன்னொருவருக்குப் பிடிக்காமல் போய்விடுகிறது. நகரவாழ்வில் மிகவும் இயல்பாக நிகழும் பிறழ் உறவுகளை அவளால் ஏற்றுக்கொள்ளவே முடியவில்லை. இரண்டு குழந்தைகள் பிறந்த பிறகும் அவர்களிடையிலான புரிதலில் எந்த இணக்கமும் உருவாகவில்லை. இருபதாண்டு காலம் இணைந்து வாழ்ந்தாலும் அவர்கள் வாழ்வில் இனிமை இல்லை.

இப்படிப்பட்ட சூழலில் அவன் பக்கவாத நோயால் படுத்த படுக்கையாகிவிடுகிறான். செயலிழந்த பகுதிகள் இடைவிடாத மருத்துவத்தாலும் உதவியாளர்களின் கவனிப்பாலும் கொஞ்சம் கொஞ்சமாகச் செயல்படத் தொடங்குகின்றன. விரல்களையும் கையையும் அசைக்கும் நிலைக்கு வந்ததும் மீண்டும் ஓவியம் தீட்டுகிறான். வீட்டுக்கே செல்லாமல் ஓவியக்கூடத்திலேயே தங்கிவிடுகிறான். அவன் மீது சந்தேகம் கொள்ளும் அவன் மனைவி அடிக்கடி கூடத்துக்கு வந்து சோதனை செய்துவிட்டுச் செல்கிறாள். அவனைச் சுற்றியிருக்கும் அனைவரையும் அவள் சந்தேகக்கண் கொண்டு பார்க்கிறாள்.




இப்படிப்பட்ட சூழலில் ஓவியன் தன் மனைவியை விவாகரத்து செய்ய விரும்புகிறான். அதற்கான காரணங்களையும் தன்னுடைய முடிவுக்கான பின்னணியையும் விரிவாகப் பதிவு செய்து வழக்கறிஞருக்கு அனுப்பிவைக்க நினைக்கிறான். ஆனால் தன் நேர்க்கூற்றாக பதிவு செய்யாமல் யாரோ ஒருவருடைய வாழ்க்கை வரலாற்றையும் வழக்கின் கோணத்தையும் முன்வைப்பதுபோல முன்வைக்கிறான். மேலோட்டமாக படிப்பவர்களுக்கு யாரோ ஒருவருடைய கதை என்ற எண்ணமே முதலில் எழும். அந்த எண்ணத்துக்கு வலுவூட்டும் வகையிலேயே தன் மொத்த ஆவணத்துக்கும் 'பெண்களை அதிகமாக நேசித்தவன்' என்னும் தலைப்பைச் சூட்டியிருக்கிறான்.

ஒரு குறிப்பிட்ட அத்தியாயத்தில் தன் மனைவியை விவாகரத்து செய்வதற்கு முப்பத்தெட்டு காரணங்களை வரிசைப்படுத்தி எழுதிவைத்திருக்கிறான் அவன். அந்தப் பட்டியலைப் படிப்பதற்கே அதிர்ச்சியாக இருக்கிறது. குற்றம் சுமத்தும் எண்ணம் ஒரு நெஞ்சில் புகுந்ததுமே, அதன் பார்வையில் படும் ஒவ்வொன்றும் எப்படி குற்றமாக மாறிப் போகிறது என்பதை உணரமுடிகிறது. காதல் என்பது ஒரு முடிவான கருத்தோ, ஒரு விருப்பமோ அல்ல என்றும் அது எப்படி வருமோ அதேபோல அது நம்மைவிட்டு விலகியும் சென்றுவிடும் என்றும் தனக்கு உகந்த வகையில் ஒரு கருத்தை உருவாக்கி அனைவரையும் நம்பவைக்க முயற்சி செய்கிறான்.

ஓவியனின் திட்டத்தை முதலில் மறைமுகமாகவும் பிறகு நேரிடையாகவும் அறிந்துகொள்ளும் அவன் மனைவிக்கும் அவனோடு வாழ விருப்பமில்லை. அவனுடைய பிழையான உறவுகளிலிருந்து அவனை விலக்கியெடுத்து எல்லாவற்றையும் சரிப்படுத்திவிட முடியும் என்றுதான் அவள் முதலில் முயற்சி செய்கிறாள். குழந்தைப் பருவத்திலிருந்தே பலவித துன்பங்களையும் தடைகளையும் தன் மன உறுதியால் கடந்து வந்தவளுக்கு, திருமண உறவில் ஏற்பட்டிருக்கும் தடையையும் கடந்து எல்லாவற்றையும் சரிப்படுத்திவிட முடியும் என்னும் எண்ணம் ஏற்படுகிறது. ஆனால் எண்ணற்ற தந்திரங்கள் வழியாக தனக்கு விருப்பமான விதத்திலேயே வாழ விரும்பும் அவனுடைய சுயநலத்தை அவள் வெகுவிரைவில் புரிந்துகொள்கிறாள். அவள் முயற்சிகள் பயனின்றி வீணாகின்றன. அதனால் வெகுண்டெழுந்து அவனை சொற்களால் வதைக்கிறாள். அவனுடைய முகத்திரையைக் கிழித்து அம்பலப்படுத்துகிறாள். எண்ணற்ற நெருக்கடிகளைக் கொடுக்கிறாள். அமைதியைக் குலைக்கிறாள். அவனுக்குத் தெரியாமல் அவன் எழுதி வைத்திருக்கும் ஆவணத்தை எடுத்துவந்து படிக்கிறாள். அவனுடைய உள்ளக்கிடக்கையைப் புரிந்துகொண்டதுபோல, தன் வாக்குமூலத்தையும் தனியாக எழுதிவைக்கிறாள்.

அவனைப்போல சுயசரிதை பாவனை ஏதுமின்றி, நேர்க்கூற்றாகவே அனைத்தையும் எழுதி வைக்கிறாள் அவள். ஒரு குறிப்பிட்ட அத்தியாயத்தில் கணவனிடமிருந்து ஏன் விவாகரத்து வேண்டும் என்பதற்கு அவளும் முப்பதுக்கும் மேற்பட்ட காரணங்களை தனியாகப் பட்டியலிடுகிறாள். சட்டத்தின் உதவியோடு தன்னை ஒரு ஈயை விரட்டி அப்புறப்படுத்துவதுபோல அப்புறப்படுத்திவிட முடியாது என்பதை அவனுக்கு உணர்த்தும் வகையில் ஒரு பழங்குடியினப்பெண்ணுக்கே உரிய உறுதியோடு அவன் நினைத்துப் பார்க்கமுடியாத அளவுக்கு பல மடங்கு இழப்பீட்டுத்தொகையைக் கேட்கிறாள். தன் பிள்ளைகளின் எதிர்காலத்துக்கு அந்தத் தொகை தேவைப்படும் என்று அவள் நினைக்கிறாள். அவன் அந்தத் தொகையைக் கொடுக்கவும் தயாராக இருக்கிறான் என்பதை அறிந்து கொண்டதும் அவள் சற்றே யோசனையில் மூழ்கிவிடுகிறாள்.

ஆழ்ந்த பரிசீலனைக்குப் பிறகு, விவாகரத்து விஷயத்தை கைவிட்டு, அவனோடு சேர்ந்து இருக்கும் முடிவைப்பற்றி யோசிக்கிறாள். அவனுக்கு எல்லா வகையிலும் துணையாக இருந்து அவனை எப்போதும் தன் கண்காணிப்பு வளையத்திலேயே வைத்துக்கொள்ள நினைக்கிறாள். சேர்ந்து வாழ்வதையே ஒரு புதுவிதமான தண்டனையாக மாற்றி அவனுக்கு அளிக்கவேண்டும் என அவள் நினைக்கிறாள். இழப்பீடு கொடுத்துவிட்டு ஒரு உறவுச்சிக்கலை நேர்செய்துவிடலாம் என்னும் அவனுடைய கணக்கை தப்புக்கணக்காக மாற்ற நினைக்கிறாள்.

இப்படிப்பட்ட இருவித வாக்குமூலங்கள் மட்டுமே இந்த நாவலின் உள்ளடக்கமாக இருக்கிறது. இந்த வாக்குமூலங்களைப் படிக்கும் ஒவ்வொரு வாசகனுக்கும் அவற்றை மதிப்பிட்டு தீர்ப்புரைக்கும் பொறுப்பு தானாகவே ஏற்பட்டுவிடுகிறது. கசப்பான இல்லறத்தை இனிய இல்லறமாக மாற்றக்கூடிய ரகசியத்தை அல்லது வழிமுறையை வாசகனே கண்டுரைக்கவேண்டும். சேர்ந்து வாழ்வதையே ஒரு தண்டனையாக வழங்க இருப்பதாக அவள் தன் வாக்குமூலத்தில் பதிவு செய்த பிறகு விவாகரத்து என்னும் பேச்சுக்கே இடமில்லாமல் போய்விடுகிறது. ஆயினும் யார் பக்கம் நியாயமிருக்கிறது என்னும் கேள்விக்கு வாசகன் பதிலைத் தேடவேண்டியிருக்கிறது.

ஒரு வாசகனாக, இரு வாக்குமூலங்களையும் ஒன்றுக்கு இரண்டு முறையாகப் படித்துவிட்டேன். உடனடியாக ஒரு முடிவுக்கும் வரமுடியவில்லை. ஆனால், இங்கொரு காட்சியையும் அங்கொரு காட்சியையும் இணைத்தும் பிரித்தும் அலசிக்கொண்டு செல்லும் போக்கில் என்னால் சில உண்மைகளைக் கண்டுணர முடிந்தது. அதை முன்வைத்து இனிய இல்லறம் பற்றி ஜெலூன் வரையறுக்க நினைக்கும் புள்ளி வரைக்கும் செல்லமுடிந்தது.

இரு வாக்குமூலங்களும் தொடங்கும் முன்பாக நாவலில் ஒரு காட்சி இடம்பெற்றிருக்கிறது. அக்காட்சியில் ஒருவர் தன்னைச் சுற்றிச்சுற்றி வந்து மொய்க்கிற ஒரு ஈயை அருவருப்புடன் விரட்டியடிக்கிறார். மனத்தில் காதலில்லாத கணவனும் மனைவியும் ஒருவரையொருவர் வெறுத்து உதறிவிட முயற்சி செய்வதையே அக்காட்சியின் உட்பொருளாக எடுத்துக்கொள்ளலாம். வாக்குமூலத்தை எழுதுவதற்கு முன்னால் அதை ஒரு முன்னோட்டமாகவும் எடுத்துக்கொள்ளலாம். அந்த வெறுப்பில் உண்மை வெளிப்படுகிறது. ஆனால் அந்த உண்மை, அதைத் தொடர்ந்து கூறப்பட்ட வாக்குமூலத்தில் இல்லை. அதில் இருப்பதெல்லாம் அரைகுறை உண்மைகள். அல்லது திரிக்கப்பட்ட உண்மைகள்.

ஓவியன் தன் வாக்குமூலத்தை ஒரு புனைகதையைப்போல எழுதி வைத்திருப்பதே ஒரு தப்பித்தல் முயற்சிதானோ என்று நினைக்கத் தோன்றுகிறது. எல்லாவற்றுக்கும் மேலாக அவன் தன் வாக்குமூலத்துக்கு வைத்திருக்கும் தலைப்பே, அவன் கூற்றில் உண்மையில்லை என்பதற்கு ஒரு பெரிய சாட்சியாகும். *THE MAN WHO LOVED WOMEN* என்னும் பிரெஞ்சுத் திரைப்படத்தின் தலைப்பையே அந்த ஓவியன் தன் வாக்குமூலத்துக்கு தலைப்பாக வைத்திருக்கிறான்.

அத்தலைப்பு, அந்த ஓவியன் தன்னை ஏதோ ஒரு வகையில் அத்திரைப்படத்தின் கதாநாயகனுக்கு நிகரானவனாக நினைத்துக்கொள்கிறான் என்று ஊகிக்க இடமளிக்கிறது. அது பிரெஞ்சு மொழியின் புது அலை இயக்குநரான த்ரூஃபோ இயக்கிய படம். எவ்விதமான குடும்பப்பொறுப்பையோ, சமூகப்பொறுப்பையோ ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லாத ஒருவன் அவன். கண்ணில் தென்படும் பெண்கள் பின்னால் தொடர்ந்து சென்று அவர்களிடம் பேசி, அவர்களை தன் வலையில் விழவைத்து, வாய்ப்பு கிடைத்தால் அவளோடு ஒரு பொழுதை இன்பமாகக் கழித்துவிட்டு திரும்பிவிடும் தன்மையுள்ளவன் அவன். அவனைப் பொறுத்தவரையில் எந்த உறவுக்கும் பொருளில்லை. எந்த உறவுக்கும் அவன் கட்டுப்பட்டவனல்லன். எந்த உறவிலும் அவன் நம்பிக்கை கொண்டவனும் அல்லன். பெண்களை நேசிப்பதையும் அவர்கள் பின்னால் சுற்றுவதையும் ஒரு பொழுதுபோக்காகக் கொண்டவன் அவன். அவனை ஒரு முன்மாதிரியாக நினைத்துக்கொள்பவனாக அந்த ஓவியன் இருக்கக்கூடும் என்பதையே அந்தத் தலைப்பு உணர்த்துகிறது. அந்த வாக்குமூலத்தில் அவனே எடுத்துரைக்கிற பல பெண் நட்புகளும் உறவுகளும் அதையே உறுதிப்படுத்துகிறது. அவன் தன்னையறியாமலேயே தன் வாக்குமூலத்துக்குச் சூட்டிய தலைப்பு அவனுடைய ஆழ்மன விருப்பத்தைக் காட்டிக் கொடுத்துவிடுகிறது. எல்லாப் பெண்களிடமிருந்தும் தொடர்ச்சியாக தப்பித்து வந்தவனால், திருமணம் என்னும் உறவின் காரணமாக அந்த நாட்டுப்புறப் பெண்ணிடமிருந்து தப்பிக்க வழி தெரியவில்லை. தப்பிக்கும் தந்திரமாகவே அவன் அந்த விவாகரத்து கோரிக்கையைப் பயன்படுத்திக்கொள்கிறான் என்று கருத இடமிருக்கிறது.

பெண்களை அதிகமாக நேசித்தவனுக்கு ஓர் எதிர்வினை என்னும் தலைப்பில் எழுதிவைக்கப்பட்ட அவளுடைய வாக்குமூலத்திலும் முழு உண்மை வெளிப்படுவதாகத் தோன்றவில்லை. தனக்குச் சாதகமான சிற்சில தருணங்களை மட்டுமே அவள் முன்வைக்கிறாள். ஓர் ஓவியனின் மனைவியாக வாழ்வதற்கு ஏற்ற வகையில் தன்னைத் தகுதிப்படுத்திக் கொள்ள அவள் எடுத்த முயற்சிகள் பற்றி எதையும் அவள் சொல்லவில்லை. தகுதிப்படுத்திக்கொள்ள வேண்டும் என்ற எண்ணமாவது அவளுக்கு இருந்ததா என்பது தெரியவில்லை. ஓவியனுக்கு விவாகரத்து வழங்க விரும்பவில்லை என்பதைத் தெரியப்படுத்திய பிறகு எந்த அலசலுக்கும் ஆய்வுக்கும் அவசியமில்லாமல் போய்விட்டது.

கண்முன்னாலேயே ஒரு வழக்கு உருவாகித் திரண்டு வந்து தானாகவே பின்வாங்கி கரைந்துபோய்விட்ட நிலையில், அந்த வாக்குமூலங்கள் மனத்தைத் தொந்தரவு செய்தபடி உள்ளன. கணவன் மனைவி உறவு ஏன் இப்படி சீர்குலைந்ததாக இருக்கிறது என்ற கேள்வி எழுகிறது. அவர்களுக்குப் புரிந்துகொள்ளும் வகையில் எடுத்துரைக்க, எது இனிய இல்லறம் என்பது ஒருவருக்கும் தெரியவில்லை. எது இனிய இல்லறம் என்று தெரியாமல் இருப்பதுதான் இந்த நூற்றாண்டின் மிகப்பெரிய பிரச்சினை. அந்த உண்மையைத்தான் தஹர் பென் ஜெலூன் வாக்குமூலங்களின் கதை முன்வைத்திருக்கிறது. மிக முக்கியமானதொரு நாவலை பிரெஞ்சு நாவல் வெளிவந்த ஒருசில ஆண்டுகளுக்குள்ளாகவே தமிழில் மொழிபெயர்த்திருக்கும் வெங்கட சுப்புராய நாயகருக்கு தமிழ் வாசக உலகம் கடமைப்பட்டிருக்கிறது. அவருடைய தெளிவான தமிழ்நடை மொழிபெயர்ப்புக்கு அழகு சேர்ப்பதாக உள்ளது.

●

(கட்டுரையாளர், எழுத்தாளர், மொழிபெயர்ப்பாளர்கள்)

## FORM - IV

Statement about ownership and other particulars about newspaper New Centuryin Ungal Noolagam to be published in the first issue every year after the last day March.

1. Place of Publication : Chennai

2. Periodicity of its Publication : Monthly

3. Printer's Name : A.Sivakumar
   Nationality : Indian
   Address : Pavai Printers (P) Ltd., 16(142), Jani Jhan khan Road, Royapettah, Chennai - 14.

4. Publisher's Name : Shanmugam Saravanan
   Nationality : Indian
   Address : New Century's Readers Sangam, 16 (142), Jani Jhan khan Road, Royapettah, Chennai - 14.

5. Editor's Name : T.Stalin Gunasekaran
   Nationality : Indian
   Address : 16 (142), Jani Jhan khan Road, Royapettah, Chennai - 14.

6. Names and addresses of individuals those who own the newspaper and partners or shareholders holding more than one percent of the total capital.

I, Shanmugam Saravanan, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

(Shanmugam Saravanan)

Signature of Publisher

## நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் நாகர்கோவில் கிளையின் சார்பாக நடைபெற்ற நிகழ்ச்சிகள்



27.02.2023 அன்று நியூ செஞ்சுரி புத்தக நிறுவன, நாகர்கோவில் கிளை, *COME TRUST* குலசேகரம்: *MGNIFY INSTUTE* குலசேகரம், *GREEN KANNIYKUMARI FOUNTATION* மற்றும் *OXFORD HIGHER SECONDARY SCHOOL* அழகிய மண்டபம் இணைந்து நடத்தும் மாபெரும் புத்தகக் கண்காட்சியை முஸ்லீம் கலை & அறிவியல் கல்லூரியின் துணை முதல்வர் *Dr.*முகம்மது சித்திக் அவர்கள் திறந்து வைத்தார். முதல் விற்பனையை *MAGNIFY INSTUTE* ஒருங்கிணைப்பாளர் திரு N.சச்சின் அவர்களும் இண்டாம் விற்பனையை COME அறக்கட்டளையின் ஒருங்கிணைப்பாளர். திரு.G.விஜிஸ் அவர்களும் துவக்கி வைத்தனர்.வாசிப்பின் அவசியம் குறித்து மாணவர்களிடம் COME அறக்கட்டளையின் இயக்குனர் கோட்டூர் மனோஜ் அவர்கள் உரை நிகழ்த்தினார்.




08.03.23 அன்று தக்கலை தேசிய புத்தகக் கண்காட்சி அரங்கில் நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம் மற்றும் இலக்கியப் பட்டறை தக்கலை இணைந்து நடத்திய மகளிர் தின விழா குமரி மாவட்டப் பெண் எழுத்தாளுமைகளின் கூடுகையாய் சிறப்பாக நடைபெற்றது. விழாவிற்கு கவிஞர் சிபி தலைமை தாங்கினார். குமரி ஆதவன் (நிறுவனர், இலக்கியப் பட்டறை) அவர்கள் வரவேற்புரை வழங்கினார். எழுத்துப் பயணம் குறித்து முனைவர் சுகிர்தா பஸ்மத், கவிஞர் சப்திகா. வழக்கறிஞர் ஜாக்குலின், குமரி ருத்ரா, பாரதி, நித்தியா மதி அழகு தமிழ், முனைவர் ஆன்சி மோள், பிஜி ஜாஸ்மின் பாமிலா, மேரி பபியோலா ஆகியோர் சிறப்பானதொரு உரை வழங்கினர். விழாவில் தக்கலை மா. பென்னி (தலைவர், இலக்கியப் பட்டறை) நாகர்கோவில் கிளையில் இருந்து ஜீன்சார்த்தர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கட்டுரை

# களம் காலியாக உள்ளது




 க. பழனித்துரை

இன்றைய சூழல் பலருக்கு பெரும் சாதனைக் காலமாகத் தெரிகிறது. அவர்கள் பார்ப்பது 6 வழிச்சாலைகளை, அவைகளில் பயணிக்கும் புதுவித மகிழுந்துகளை, ஆறுவழிச்சாலைகளில் செயல்படும் உணவு விடுதிகளை, திண்பண்டங்களை விற்கும் நிலையங்களை, பெருகிவரும் வானூர்தி நிலையங்களை, அங்கிருந்து பறக்கும் வானூர்திகளின் எண்ணிக்கைகளை, நகரங்களில் பெருகிவரும் பெரிய பெரிய பல்முனை அங்காடிகளை, உருவாகிவரும் பேருந்து நிலையங்களை, வானளாவிய கட்டிடங்களில் செயல்பட்டுவரும் பல்நோக்கு மருத்துவமனைகளை, கிராமங்களிலும் நகரங்களில் தனியார்களால் துவங்கப்படும் கல்லூரிகள், பள்ளிகள், அங்கு உருவாகிக் கொண்டிருக்கும் ஐயங்கார் ரொட்டிக் கடைகள். இவைகள் அனைத்தும் இந்தியா வளர்கிறது ஒளிர்கிறது, புதிய இந்தியா பிறக்கிறது என்று முழக்கமிடுவோருக்கு சாதகமாக இருக்கின்றன. இன்றும் பலருக்கு இன்றைய சூழல் நெருக்கடியாகத் தென்படுகிறது. காரணம் பெரும்பான்மை மக்களின் வாழ்க்கை இன்றைய நிலையிலும் சரி, எதிர்காலத்திலும் சரி கேள்விக்குறியாகவே தென்படுகிறது. ஒரு நாளைக்கு 2 டாலர் அளவுக்கு பணத்தை வைத்திருந்தவர்கள், 3 டாலர் அளவுக்கு உயர்ந்து விட்டார்கள், 100 மில்லியன் மக்கள் வறுமையிலிருந்து விடுபட்டு விட்டார்கள் எனக் கூறுகின்ற அரசுக்கு, பொருளாதார வீழ்ச்சி நடைபெறுகின்றபோது அப்படியே அந்த 100 மில்லியன் மக்களும் மீண்டும் வறுமைக்கு ஆட்பட்டு விடுவார்கள், இதுதான் இந்தியாவின் பெரும் சோகம் என்று உலக வங்கியில் பணிபுரிந்த பொருளாதார நிபுணர் சமீபத்தில் எழுதிய “இந்தியா உடைகிறது: அதைச் சரி செய்வது கடினம்” என்ற புத்தகத்தில் எழுதி உலகக் கவனத்தை ஈர்த்துள்ளார். இருந்தும் இருசாராரும் வேகமாக ஓடிக் கொண்டேயிருக்கின்றார்கள். அப்படி ஓடும் மனிதர்கள் தாங்கள் இப்படி ஓடிக் கொண்டிருப்பதால் கடைசி நிலையில் எங்கு செல்லப் போகிறோம் என்று எந்த உணர்வும் இன்றி ஓடுகின்றனர். ஒரு சிலர் பதவிகளை எப்படியாவது பிடித்துவிட வேண்டும், ஒரு சிலர் மிகப்பெரும் பணத்தை ஈட்டி வரலாறு படைக்க வேண்டும், பலர் எதாவது ஒருவகையில் புகழின் உச்சியை அடைய வேண்டும், பலருக்கு கண்ட இடத்திலெல்லாம் சொத்துக்கள் வாங்கிக்

குவித்துவிட வேண்டும், சிலருக்கு தங்கத்தின் மீது மோகம் கொண்டு தங்கக் கட்டிகளை வாங்கிக் குவித்து வாழ்கின்றனர். இன்னும் சிலர் விதவிதமான சொகுசுக் கார்கள் வாங்கி வலம் வந்து மகிழ்கின்றனர், பலர் மின்னணுச் சாதனங்கள் வாங்கி மகிழ்கின்றனர், பலர் மாளிகை போல் வீடு அமைய வேண்டும் என்று பெரும் மாளிகைகளை கிராமங்களில் கட்டி அழகு பார்த்துக் கொண்டுள்ளனர், இன்னும் சிலர் பெண்களின் மீது மோகம் கொண்டு, அவர்கள் ஒரு போகப் பொருள் அவர்களை ருசிக்க வேண்டும் என்று அலைகின்றனர், பலர் 24 மணி நேரமும் கையில் காசு கிடைக்கும்போதெல்லாம் தின்பண்ட விற்பனை நிலையங்களிலும், உணவு விடுதிகளிலும், மதுபானக் கடைகளிலும் தாங்கள் உருவாக்கிய பணத்தை செலவழித்து உடலை அழித்த வண்ணம் வாழ்கின்றனர். இந்தச் செயல்பாடுகள்தான் மக்கள் மத்தியில் வெளிச்சம் போட்டு ஊடகங்களால் காட்டப்படுகின்றன. இதை வைத்து ஒரு கதையாடல் உருவாக்கப்படுகின்றது.

இந்தியா மிக வேகமாக வளர்கிறது, உலகம் வியத்தகு வண்ணம் வளர்கிறது. பொருளாதாரத்தில், ஆண்டுதோறும் சாலைகள் போடுவதில், விமான நிலையங்களை விரிவாக்கம் செய்வதில், வெளிநாட்டு மூலதனத்தை ஈர்ப்பதில் நாம் தொடர்ந்து முன்னேறி வருகிறோம். உலகத்தில் நம் நாட்டின் மதிப்பு உயர்ந்து கொண்டே வருகிறது. ஆகாய விமானத்தில் பறப்போர் எண்ணிக்கை கூடுகிறது, கார்களில் பயணம் செய்வோர் எண்ணிக்கை கூடிவருகின்றது, இதன் விளைவாக ஆகாய விமான சேவையை விரிவாக்க புதிய விமானங்கள் ஒரே நேரத்தில் உலகம் வியக்கும் வண்ணம் அதிக எண்ணிக்கையில் விமானங்களை இந்தியா வாங்குகிறது. இந்தியாவில் எண்மப் பரிவர்த்தனை நடத்தை மக்களிடம் தொடர்ந்து கூடிவருகிறது, என்று கதையாடலை உருவாக்கி, இதைச் சீர்குலைக்க இந்தியாவின் மாண்புக்கு மாசு பூசும் விதத்தில் இந்தியாவைப் பற்றி குறை கூறாதீர்கள் என்ற விவாதத்தினை ஒரு பகுதியினர் முன்னெடுக்கின்றனர்.

இன்னொரு பகுதியினர் இதற்கு நேர் எதிர்மறையாக விவாதத்தினை முன் வைக்கின்றனர். இந்தியா இவ்வளவு மேம்பாடு அடையும்போது அதாவது 7% பொருளாதார வளர்ச்சி அடையும்போது 80 கோடி மக்களின் உணவுப் பாதுகாப்பை அரசாங்கத்தின் பொதுவினியோகத் திட்டத்தில் விலையில்லா உணவுப் பொருள் வழங்கி பாதுகாப்பதை அரசு அறிவிக்கையில் தெரிவிக்கிறது. 140 கோடி மக்களில் 80 கோடி மக்கள் தங்கள் உணவுப்பாதுகாப்பை தங்களால் உறுதி செய்து கொள்ள முடியவில்லை என்றால், இந்த மக்களால் தங்களின் ஆரோக்யப் பாதுகாப்பை எப்படி உறுதி செய்துகொள்வார்கள், அதேபோல் இவர்களால் எப்படி தங்களின் கல்விப் பாதுகாப்பை உறுதி செய்து கொள்வார்கள், அதேபோல் மருத்துவப் பாதுகாப்பை உறுதி செய்து கொள்வார்கள், இவர்கள் எப்படி தங்களின் வாழ்வாதாரப் பாதுகாப்பை உறுத செய்து கொள்வார்கள் என்பதுதான் கேள்வி. இவை அனைத்தையும் அரசுதான் செய்ய வேண்டும். நாடு சுதந்திரம் அடைந்தவுடன் அரசு அப்படியொரு உறுதிமொழியை மக்களுக்குத் தந்தது. ஆனால் அந்த உறுதிமொழியை அரசால் காப்பாற்ற முடியவில்லை. அதனைத் தொடர்ந்து தான் சந்தைப் பொருளாதாரம் பொருளாதார வளர்ச்சியைக் கொண்டு வந்து அதன் மூலம் சரி செய்வதாக உறுதியளித்து புதிய பொருளாதாரக் கொள்கை பிரகடனப்படுத்தப்பட்டது 1991இல். அடுத்த 30 ஆண்டு கால வளர்ச்சியையும் சமூக மேம்பாட்டையும் ஆய்வு செய்து பார்த்தபோது, எல்லையில்லா ஏற்றத்தாழ்வுகளை சமூகத்தில் ஏற்படுத்தியதும், இயற்கையைப் பாழ்படுத்தியதும் நிதர்சனமான உண்மைகளாக வெளிவந்தன. இவைகளை வைத்துக் கொண்டு அரசுக்கு ஆலோசனை வழங்கும் பொருளாதார வல்லுனர்கள் அரசும் தோற்றது, சந்தையும் தோற்றது, எனவே ஏழை மக்களின் வாழ்வைப் பாதுகாக்க, அவர்களால்தான் முடியும், அதற்கு அவர்களை தயார்படுத்த வேண்டும் என்று அறிவித்து விட்டனர்.

2019ம் ஆண்டில் இந்தியாவில் மத்திய அரசாங்கத்தால் வறுமை இல்லா இந்தியாவை உருவாக்க மிகப்பெரிய ஆய்வு செய்யப்பட்டது. அந்த ஆய்வு சில புள்ளி விபரங்களைக் கொண்டு வந்தது. இந்தியாவில் வாழும் 24.39 கோடி குடும்பங்களில் 17.91 கோடிக் குடும்பங்கள் கிராமப்புறங்களில் வாழ்கின்றன. இந்த ஒட்டு மொத்தக் குடும்பங்களில் 10.69 கோடி குடும்பங்கள் மிகவும் ஏழ்மையில் வாழ்கின்றனர். 5.37 கோடிக் குடும்பங்களுக்கு எந்தச் சொத்தும் கிடையாது. 51% மக்கள் ஒட்டு மொத்த மக்கள் தொகையில் கூலிவேலை செய்து பிழைப்பு நடத்துகின்றனர். 75% மக்கள் ரூ.5000க்கு குறைவாக மாத வருமானம் ஈட்டி வாழ்க்கை நடத்த வேண்டிய சூழலில் வாழ்கின்றனர். ஆகையால் 64% மக்கள் மானுட வாழ்க்கைக்குத் தேவையான அடிப்படை வசதிகள் அனைத்தும் பெற்று வாழ இயலாத சூழலில் வாழ்கின்றனர். கிராமங்களில் வாழும் மக்களில் இன்னும் 58% பேர் விவாசயத்தை வாழ்வாதாரமாகக் கொண்டு வாழ்க்கை நடத்துகின்றனர். இந்தப் பொருளாதாரம் வளர்கின்றபோது லட்சக் கணக்கில் விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டனர்.

இந்தியாவின் உண்மை நிலை அறிய ஆகாய விமானத்தை விட்டு தரையிறங்கி, தேசிய நெடுஞ் சாலைகளிலிருந்து, மாநில நெடுஞ்சாலைகளுக்கு வந்து, அங்கிருந்து ஊரக உள்ளாட்சிச் சாலைகளுக்குள் சென்று அங்கிருந்து வாகனங்கள் செல்லாத இடங்களில் வசிக்கும் மக்களைப் பார்க்க முயல வேண்டும். அங்கு சென்று மக்களின் வாழ்க்கை நிலையைப் பார்க்க வேண்டும். அப்படிப் பார்க்கும்போது நாம் பார்ப்பவர்கள் பிணம் எரிப்பவராக இருக்கலாம், தூய்மைப் பணியாளராக இருக்கலாம், வீடுகளில் வேலை செய்யும் பெண் பணியாளராக இருக்கலாம், தலைச் சுமையாக பொருள்களை கிராமங்களுக்கும்


நகரங்களுக்கும் கொண்டு சென்று விற்று வாழ்க்கை நடத்துபவராக இருக்கலாம், விவசாயக் கூலியாக இருக்கலாம், ஆடுகள் மேய்ப்பவராக இருக்கலாம், மாடுகள் மேய்ப்பவராக இருக்கலாம், குடிசைத் தொழில் செய்பவராக இருக்கலாம், வீதிகளில் கடை போட்டு வணிகம் செய்பவராக இருக்கலாம், காடுகளில் வசிக்கும் ஆதிவாசிகளாக இருக்கலாம், மீனவர்களாக இருக்கலாம், இவர்களின் வாழ்க்கை இந்தியாவில் மாநிலத்திற்கு மாநிலம் வேறுபட்டதாக இருக்கின்றது. இவர்களைப் பற்றிய ஆய்வு அறிக்கைகளைப் படித்த பின் நம்மால் எப்படி பெருமைப்பட்டுக் கொள்ள முடியும் என்று ஒரு கதையாடல் உருவாக்கப்பட்டு விவாதிக்கப்படுகிறது.

இந்த இரண்டாவது கதையாடல் முதல் கதையாடலுக்கு நேர் எதிர்மறையாக இருந்தாலும், அது உண்மை என்பதை யாராலும் மறுக்க இயலாது. காரணம் இவர்கள் தரும் புள்ளி விபரங்கள் அனைத்தும் அரசாங்கம் தந்தவைகள் என்பதையும் எவராலும் மறுக்க இயலாது. இந்த இரண்டு கதையாடலையும் ஆழ்ந்து உள்வாங்கிக் கொண்டவர்கள் கேட்கும் கேள்வி, 75 ஆண்டில் நம் அரசாங்கம் யாருக்காகச் செயல்பட்டது என்பது. அரசாங்கமும் சந்தையும் 60 கோடி மக்களின் வாழ்க்கையில் மேம்பாட்டை கொண்டு வந்துள்ளன என்பதை யாராலும் மறுக்க இயலாது. இந்தப் புள்ளி விவரம் எங்கேயிருந்து கிடைத்தது என்றால், 80 கோடி மக்கள் அரசின் உதவியில் உணவுப் பாதுகாப்பை ஏற்படுத்திக் கொண்டுள்ளனர் என்ற புள்ளி விவரத்தை வைத்து கணக்கிட்டதுதான் இந்த 60 கோடி மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்துள்ளது என்பது.

எப்படி இந்த 60 கோடி மக்களால் முன்னேற முடிந்தது? ஏன் 80 கோடி மக்களால் ஏழ்மையிலிருந்து வெளியேற முடியவில்லை? என்பது மிகப் பெரிய ஆய்வுக்கான கேள்வி. அதையும் அரசாங்கமே ஆய்வு செய்து பல காரணிகளை கண்டுபிடித்து வெளி-யிட்டது. அதில் ஒன்று அரசாங்கத்தில் திட்டங்களுக்கு குறைவில்லை. ஆனால் திட்டங்கள் பெருமளவு மக்கள் தேவைக்கானதாக உருவாக்கவில்லை, அடுத்து மக்களை திட்டத்தின் பயனாளிகளாகக் கருதி, அவர்களின் சுயமரியாதையைப் பறித்துவிட்டது அரசு இயந்திரம். ஆகையால் தான் சமீபத்திய மேம்பாட்டு அணுகுமுறைகளில் முக்கியமாக மக்களை அதிகாரப்படுத்துவதும், மக்களின் மேம்பாட்டை உரிமைகளாக்கித் தருவதும் மக்கள் பங்கேற்பை உறுதி செய்வதும் உத்திகளாகக் கொண்டு செயல்படுத்தப்படுகிறது. அத்துடன் மக்களின் சமூக அரசியல் பொறுப்புக்கள் நிறைய இருக்கின்றன என்பதையும் கவனப்படுத்தியுள்ளது அரசாங்கம்.

இந்த உத்திகளை மக்கள் பயன்படுத்த வேண்டும், குறிப்பாக ஏழ்மையில் வாழும் விளிம்புநிலை மக்கள். இதற்கு ஏதுவாக மக்களுக்குப் பக்கத்தில் ஒரு அரசாங்கத்தை உருவாக்கினர் 73வது, 74வது அரசியல் சாசனத் திருத்தச் சட்டங்களின் மூலம். எப்படி மைய மாநில அரசுகள் அதிகாரங்களை அரசியலமைப்பின் மூலம் பெற்று அரசாங்கமாக செயல்படுகின்றனவோ அதேபோல் உள்ளாட்சியும் அரசாங்கமாக அதிகாரங்களைப் பெற்று செயல்பட வேண்டும் என்பதற்காக. இந்த உள்ளாட்சி அரசாங்கத்திற்கு பொருளாதார மேம்பாடும் சமூக நீதியும்தான் முக்கியப் பொறுப்புக்களாக கொடுக்கப்பட்டுள்ளன. ஆனால் இன்றுவரை இந்த இரண்டையும் இந்த உள்ளாட்சிகளால் செய்ய முடியவும் இல்லை, முயலவும் இல்லை, அதற்காக சூழலையும் மத்திய மாநில அரசாங்கங்கள் உருவாக்கவும் இல்லை. இது ஒரு அரசாங்கம் என்பதைக்கூட இன்றுவரை நிலைநாட்ட இயலவில்லை. நேரடியாக மக்கள் பங்கேற்கும் ஒரு அரசாங்கத்தை மாநில அரசுகள் அதன் அதிகாரிகளை வைத்து ஆதிக்கம் செலுத்துகின்றன. இதைப்பார்த்து மத்திய அரசும் ஏதும் செய்யவில்லை, நீதிமன்றமும் கண்டு கொள்ளவில்லை. இவற்றையெல்லாம் கடந்து எந்த அரசியல் கட்சியும் இதை பொருட்டாக எடுத்துக் கொள்ளவுமில்லை. ஏழைகளும் தங்களுக்கு இதிலிருக்கும் வாய்ப்பை புரிந்து கொள்ளவில்லை. இந்தியாவில் இதைப்புரிந்துகொண்டு செயல்படுத்திய ஒரே மாநிலம் கேரளாதான்.

இந்தியா சுதந்திரம் அடைந்தது. ஆனால் இந்திய மக்களுக்கு சுதந்திரம் பற்றியும் போதிக்கவில்லை, சுதந்திரம் அடைந்த நாட்டில் உள்ள மக்கள் மக்களாட்சியில் எப்படி வாழ வேண்டும், என்னென்ன பொறுப்புக்கள், கடமைகள் அவர்களுக்கு இருக்கின்றன, எப்படி அடிமைச் சிந்தனையிலிருந்து சுதந்திர சிந்தனைக்கு வரவேண்டும் என்பதையெல்லாம் நம் மக்களுக்கு நாம் போதிக்கவில்லை. நாம் சுதந்திரம் அடைந்தபோது எழுதப்படிக்க தெரிந்தவர்களின் எண்ணிக்கை வெறும் 13% மட்டுமே. இந்தியாவிற்கு சூழல் சுதந்திரத்தை அந்த நாடு தயாராவதற்கு முன்பே கொண்டு வந்துவிட்டது என்பதை பலர் தங்களின் ஆய்வுகளிலே குறிப்பிடுகின்றனர். அதன் காரணமாகத்தான் காந்தி மக்கள் கல்விக்கான இயக்கம் வேண்டும் என்று மக்கள் கல்வி இயக்கத்தை உருவாக்க முனைந்தார். அந்த நேரத்தில் வினோபா பாவே ஒரு சிறிய நூலை "சுயராஜ்ய அறிவியல்" (Swaraj Sastra) என்ற தலைப்பில் எழுதி வெளியிட்டார். அந்த நூலுக்கு காந்தி ஒரு அறிமுக உரை எழுதி அந்தப் புத்தகத்தை அனைவரும் படிக்க வேண்டும் என வேண்டிக் கொண்டார். அடுத்து ராமகிருஷ்ண மடத்தில் விவேகாநந்தருக்குப் பிறகு இளைய விவேகானந்தராக உலகம் முழுவதும் வலம் வந்து ஆயிரக்கணக்கான



சொற்பொழிவுகளை அரசு அதிகாரிகள் மத்தியிலும், ஆசிரியர்கள் மத்தியிலும், மாணவர்கள் மத்தியிலும் உரைகளையாற்றியவர் சுவாமி ரங்கநானந்தா.

அவர் ஆற்றிய உரைகளில் நவீன இந்தியாவைக் கட்டமைக்க நம் ஆளுகை எப்படி இருக்க வேண்டும், நிர்வாகம் எப்படி இருக்க வேண்டும், நம் அரசியல் எப்படி இருக்க வேண்டும், நம் கல்வி எப்படி இருக்க வேண்டும், நம் ஆசிரியர்கள் எப்படிச் செயல்பட வேண்டும், நம் மாணவர்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டும், நம் சட்டமன்ற உறுப்பினர்கள். பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள். அரசியல்வாதிகள் அனைவரும் எப்படி செயல்பட வேண்டும் என்று பேசிய பேச்சுக்கள் அனைத்தும் பல புத்தகங்களாக வெளிவந்தன. அவைகள் அத்தனையிலும் ஒரு பொதுக்கருத்தை முன்வைத்துக் கொண்டேயிருந்தார்.

அதுதான் பொதுமக்களை எப்படிப் பொறுப்புமிக்க குடிமக்களாக ஆக்குவது என்பது. பொறுப்புமிக்க குடிமக்கள் உருவாக்கம் என்பது சாதாரணச் செயல்பாடு அல்ல அது ஒரு மகத்தான போராட்டப் பணி. இந்தப் பணி எல்லா இடங்களிலும் நடைபெற வேண்டும் என்பதை இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு இரண்டரை பத்தாண்டுகளுக்குப் பிறகு சுதந்திரம் அடைந்த தென்னாப்பிரிக்காவின் போராளி அதிபர் நெல்சன் மண்டேலா கூறினார். அவர் மிகத் தெளிவாக ஒரு கருத்தை முன் வைத்தார். இந்தியாவைப் பின் பற்றி பல நாடுகள் சுதந்திரம் அடைந்தன. அந்த நாடுகள் அனைத்தும் இந்தியாவைப் பின் பற்றி மக்களாட்சியை நடைமுறைப்படுத்தின. ஆனால் மிகக் குறுகிய காலத்திற்குள் சுதந்திரம் அடைந்த நாட்டில் மக்கள் அகதிகளாகிப் போனார்கள். காரணம் அடிமையாக வாழ்ந்த மக்களைத் தயார் செய்யாமல் எந்த நாடு மக்களாட்சிக்குள் செயல்படுகிறதோ அந்த நாட்டில் மக்களை வேறுவேறு வடிவங்களில் சுரண்டும் ஆதிக்கக் கும்பல்கள் ஆட்சியைப் பிடித்துக் கொள்ளும், நிர்வாகத்தைப் பிடித்துக் கொள்ளும், அரசியலைப் பிடித்துக் கொள்ளும். ஆகையால் சுதந்திரத்திற்கு எவ்வளவு தியாகம் செய்து சுதந்திரம் பெற்றோமோ அதைவிட ஒரு படி அதிகமாக தியாகம் செய்து போராடி மக்களை குடிமக்களாகத் தயார் செய்ய வேண்டும். அதுவும் ஒரு போராட்டமே. அந்தப் போராட்டம் நடத்தாமல் எல்லோருக்குமான ஒரு நாட்டை உருவாக்க முடியாது என்பதை ஆணித்தரமாக விளக்கினார். அத்துடன் நிற்கவில்லை அவர்.

தேவாலயங்களுக்குச் செல்லும் பாதிரியார்களுக்கும், கல்விக் கூடங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும் ஒரு வேண்டுகோள் வைத்தார். தென்னாப்பிரிக்காவிற்கான அரசியல் சாசனம் உருவாக்கப்பட்டு விட்டது. அது ஒரு புதிய ஏற்பாடு. அதனை மக்களுக்கு எடுத்துச் சென்று சாதாரண மனிதர்களுக்கு எவ்வளவு பாதுகாப்பை வழங்கும் அரசியல்சாசனமான ஆயுதத்தை எப்படி சாதாரண மனிதர்கள் பயன்படுத்தி தங்களை பாதுகாத்துக் கொள்ள முடியும் என்பதை விளக்கிட வேண்டும் என்று பணித்தார். ஆனால் இந்தியாவில் அரசியல்சாசனத்தை வழக்கறிர்களுக்கானதாக மாற்றி விட்டனர். காரணம், மக்களை அரசாங்கம் எப்படி பாவிக்க ஆரம்பித்து விட்டது என்றால் பாவப்பட்ட மனிதர்கள் இவர்களின் உணவு, கல்வி, வாழ்வாதாரம் அனைத்தையும் அரசுதான் வழங்க வேண்டும். எனவே அந்த உத்தரவாதத்தைத் தந்து அந்தப் பொறுப்புக்களை அரசு அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

அந்த அரசு அதிகாரிகள் நாம் சுதந்திர நாட்டில் குடிமக்களுக்குப் பணி செய்ய வந்த பணியாளர்கள் என்ற மனோபாவத்திற்கு வந்து செயல்படுவதைத் தவிர்த்து, தங்களைத் தங்களுக்கு மேல் இருக்கும் அரசு அதிகாரிகளுக்கு கடமைப்பட்டவர்களாக செயல்பட்டு மக்களை பயனாளிகள், தாங்கள் அளிக்கும் பயன்களுக்கு ஏங்கி நிற்கும் பயனாளிக் கூட்டமாக கருதிச் செயல்பட ஆரம்பித்து விட்டனர். காரணம் நம் நிர்வாக அமைப்பு வெள்ளைக்காரர்கள் நம் நாட்டைச் சுரண்டுவதற்கு கட்டமைத்த ஒன்றாகும். அந்த அமைப்பு முறையை மாற்றக் கூறி பல அறிக்கைகள் வெளியிட்டபோதும், நாட்டை வலுவாக்க, நாட்டின் ஒற்றுமையைப் பாதுகாக்க இந்த முறைதான் வேண்டும் என தொடர்ந்ததன் விளைவு மக்களுக்கு கடமைப்பட்டதாக இயங்க வேண்டிய நிர்வாக அமைப்பு, மேலதிகாரிகளுக்கும் அரசு இயந்திரத்திற்கும் கடமைப்பட்டதாகவே செயல்பட்டுக் கொண்டுள்ளது.

நம் அரசியல் என்பது இந்தியா சுதந்திரம் அடைந்த காலத்திலிருந்து இன்றுவரை கட்சி அரசியலாகவே வடிவமைக்கப்பட்டு கட்சிகளுக்குள் நடைபெறும் போட்டியாகச் செயல்பட்டு வந்ததின் விளைவு, நம் நாட்டில் மேம்பாட்டு அரசியலை முன்னெடுக்க முடியவில்லை. 1967 வரை ஒற்றைக் கட்சி ஆட்சி முறை இயங்கி வந்ததன் விளைவு அதன் மேல் விமர்சனத்தை வைத்து அரசியல் வடிவமைக்கப்பட்டு தேசியக் கட்சிகளும் மாநிலக் கட்சிகளும் என்ற முறைக்கு மாற்றப்பட்டு கட்சிகளின் தோல்விகளை மையப்படுத்தி அரசியலை நடத்தியதின் விளைவு மக்களை வாக்காளர்களுக்கு மேல் நம் அரசியல் கட்சிகளுக்கு உபயோகப்படுத்தத் தெரியவில்லை. பொதுமக்கள் குடிமக்களாகச் செயல்படும்போது, வாக்காளர் என்ற முறையில் வாக்குச் சுதந்திரத்தை, வாக்கு உரிமையை பொறுப்புடன் நிறைவேற்றுவது மட்டுமல்ல, அதைத் தாண்டி அரசைக் கண்காணித்துச் செயல்படுவதும், மக்கள் பிரதிநிதிகளை தங்களுக்கு பணியாற்றுகின்றார்களா என்பதை கவனித்துச் செயல்படுவதும், அரசு இயந்திரம் நியாயமான முறையில் செயல்படாதபோது அதை எதிர்த்து செயலாற்றி நெறிப்படுத்துவதும் குடிமக்கள் கடமையாகும். ஆனால் அதற்கான விழிப்புணர்வு மக்களிடம் இருந்தாலன்றி இதனைச் செய்ய இயலாது. நம் அரசியல் கட்சிகளோ, தங்கள் கட்சிக்காரர்களை குடிமக்களாகச் செயல்பட பழக்குவதற்குப் பதில் தங்கள் கட்சிக்கு ஊழியம் செய்து வாக்குச் சேகரிக்கும் இயந்திரங்களாக மாற்றி விட்டனர். இந்த மனோபாவம்

கொண்ட மக்களை மிக எளிதாக யார் வேண்டுமானாலும் சுரண்டலாம். அரசு இயந்திரம் செயல்படும், அது யாருக்காகச் செயல்படும் என்றால் அதன் இருப்புக்காகச் செயல்படும். அதைப் பயன்படுத்தும் முறைமை தெரிந்தவர்கள் அரசாங்கத்திற்குள் சென்று தங்களுக்குச் சாதகமாக அரசாங்கத்தை இயக்கக் கற்றுக் கொண்டு செயல்பட்டதன் விளைவு இந்தியர்களாகிய நாம் இந்தியர்களால் சுரண்டப்படும் அவமானத்தைத் தாங்கி வாழ்ந்து கொண்டுள்ளோம்.

இந்தச் சூழல் புரிந்த அறிந்த பொதுச் சிந்தனையாளர்கள் ஒரு கருத்தை மிக வலுவாக மக்கள் முன் வைக்கின்றனர். இனிமேல் ஏழைகள் வாழ்வில் ஏற்றம் பெறவேண்டுமானால் அவர்கள்தான் தங்களைத் தயார் செய்து கொள்ள வேண்டும். இனிமேல் அரசாங்கம் ஏழைகள்மேல் கரிசனம் கொண்டு செயல்படாது. அந்த மனோபாவத்தை அரசு இழந்து விட்டது. அரசு இயந்திரம் தான் செயல்படுவதற்கு சந்தையை நம்பி இருக்கின்றனர். அரசியல் கட்சிகளோ மக்களுக்குச் சேவை செய்து மக்களுடன் இணைந்திருப்பதற்குப் பதிலாக, மக்களுக்கு வெகுதூரத்திற்குச் சென்று தேர்தலுக்குத் தேர்தல் வாக்குகளைப் பெற சந்தையில் நிதி பெற்று செயல்படும் முகவர்களாக கட்சிக்காரர்கள் மாறிவிட்டனர். ஆகையால்தான் வாக்குகளைச் சந்தைப்படுத்தி அதிக ஏலத்தில் பெறுபவர்கள் வெற்றியைப் பெறுகின்றனர். வெற்றி பெற்றவர் தன் வெற்றிக்குப் பணம் தந்தவருக்கு சேவை செய்வாரா தனக்கு வாக்களித்தவருக்கு செயல்படுபவரா? ஐந்தாண்டுக்கு அவர் அந்தப் பதவியை குத்தகை எடுத்துள்ளார். அவ்வளவு தான்.

இந்த நேரத்தில் நாம் அறிவியல்பூர்வமாக இன்னொன்றையும் பார்க்க வேண்டும். மக்களின் மனோபாவம் என்ன? பொதுவாக மக்களாட்சி நடைபெறும் நாட்டில் அரசியல் கட்சிகளுக்கு சமூகத்தில் மிகப்பெரும் பங்கு உள்ளது. அதுதான் மக்களுக்கு அரசியல் கல்வி தருவது. அதுதான் சமூகத்தை மக்களாட்சிப்படுத்துவது. அதுதான் மக்களிடம் நேர்மையைப் போதிப்பது. இந்தப் பணியை ஒரு காலக்கட்டம் வரை அரசியல் கட்சிகள் செய்து வந்தன. ஆனால் ஊழல் மலிந்து அரசின் மூலம் பெரும் பணம் பார்க்க முடியும் என்ற நிலை வந்த பிறகு பணி ஆதிக்கம் உள்ளவர்கள் கட்சிகளுக்குள் அதும் பெரும்பாலும் ஆளும் கட்சியாக வளரும் கட்சிகளுக்குள் புகுந்து வாக்குகளைச் சந்தைப்படுத்தி விட்டனர்.

மக்களாட்சியில் மக்கள் அரசியல், வளர்ச்சி அரசியல், மேம்பாட்டு அரசியல் நடத்த வேண்டும் என்று எண்ணும் கட்சிகளால் களத்தில் நிற்க முடியவில்லை. களத்தில் இன்று கட்சி முகவர்கள் கையூட்டுப் பெற்று அரசுக்கும் மக்களுக்கும் இணைப்பாக இருப்போர், அரசியல் கட்சிகள் தருவதை மக்களுக்குக் கொண்டு தரும் முகவர்கள் களத்தில் செயல்படுகின்றனர். மக்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் களச் செயல்பாட்டாளர்கள் களத்தில் இல்லை. இடதுகளின் களச் செயல்பாடுகள் கூட நலிவடைய ஆரம்பித்துவிட்டது.

இந்தத் தேக்க நிலையை உடைக்க நாம் என்ன செய்வது என்று யோசிக்க வேண்டும். இந்தியா இன்றும் மக்களாட்சியில்தானே இயங்குகின்றது. தேர்தல் ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை வந்து செல்கின்றன அல்லவா? நம் நாட்டிற்கு அரசியல் சாசனம் இருக்கின்றது தானே? நம் நாட்டில் சுதந்திரமாக இயங்கும் அரசு அமைப்புகளும் இயங்கிக் கொண்டுதானே இருக்கின்றது. இருந்தும் ஏன் இந்த நிலை? என்பதுதான் கேள்வி.

இன்னும் ஒருபடி மேலே சென்று நம் மக்களாட்சி அமைப்புக்களைப் பற்றி மக்கள் கொண்டுள்ள கருத்துக்களையும் உள்வாங்கிக் கொண்டு நாம் நம்மை தயார்படுத்திக் கொள்ள வேண்டும். இந்திய மக்களின் கருத்துக்களை அவ்வப்போது ஆய்வு செய்யும் சி.எஸ்.டி.எஸ் *(CSDS)* என்ற நிறுவனம் சமீபத்தில் ஓர் ஆய்வு மேற்கொண்டது. அந்த ஆய்வு தெரிவிக்கும் மிக முக்கியமான செய்தி பொதுமக்கள் அரசு இயந்திரத்தின் மீது மிக வேகமாக நம்பிக்கை இழந்து வருகின்றனர் என்பதுதான். ஒரு காலத்தில் நீதித்துறை மீது நம்பிக்கை வைத்திருந்தனர், தேர்தல் ஆணையத்தின் மீது நம்பிக்கை வைத்திருந்தனர், உயர் அதிகார வர்க்கத்தின் மீது நம்பிக்கை வைத்திருந்தனர், தங்களால் ஒரு ஆட்சியை வீட்டுக்கு அனுப்ப முடியும் என்று நம்பிக்கை வைத்திருந்தனர். ஆனால் இன்று ராணுவத்தைத் தவிர வேறு எந்த அமைப்பின் மீதும் பெரும் நம்பிக்கை மக்களுக்கு இல்லை என்பதை அந்த ஆய்வு படம்பிடித்து காட்டி இருக்கிறது. இது நம் அரசுக்கும், அரசியல் கட்சிகளுக்கும் புரிகின்றதா என்பதுதான் நமக்குப் புலப்படவில்லை.

மேற்கூறிய கருத்துக்கள் அனைத்தையும் பல காலக்கட்டங்களில் கூறி வந்த செய்தி என்றாலும், நாம் எதாவது செய்தாக வேண்டும் என்று எண்ணும்போது புரிதலோடு களத்தில் இறங்கிச் செயல்படத் தேவையான புரிதலை ஏற்படுத்தத்தான் மேற்கூறிய அனைத்தும் விளக்கப்பட்டுள்ளன.

இன்று களம் காலியாக உள்ளது. களத்தைப் புரிந்து கொண்டு செயல்படும் இளைஞர்களின் கூட்டம் இன்று வலுக்கிறது. அவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவுதான். ஆனால் அவர்கள் படிக்கப்பட வேண்டியவர்கள், வாசிக்கப்பட வேண்டியவர்கள். அவர்கள்தான் இன்றைய குட்டி மகாத்மாக்கள், அவர்கள்தான் குட்டி விவேகாநந்தர்கள். அவர்கள் பின்பற்றப்பட வேண்டியவர்கள்.

இந்தியாவை மாற்ற இந்தக் கட்சியில் சேருகிறேன் என்று ஓடுவதை விட, எனக்குப் பக்கத்தில் வசிக்கும் மக்களின் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யப்

போகிறேன், எனக்குப் பக்கத்தில் வசிக்கும் குழந்தைகளின் கல்வி உரிமையை பாதுகாக்கப்போகிறேன், எனக்குப் பக்கத்தில் வசிக்கும் ஏழை எளிய குடும்பத்து பெண்களின் ஆரோக்யம் பேண பணி செய்யப் போகிறேன், எனக்கு அருகாமையில் வசிக்கும் மக்களின் வசிப்பிடத்தை வாழ்விடத்தை தூய்மை செய்யப் போகிறேன் எனக்குப் பக்கத்தில் வசிக்கும் விவசாயிகளுக்கு நஞ்சில்லா உணவை உருவாக்கும் புதிய முறை விவசாயத்தை அறிமுகம் செய்யப் போகிறேன், எனக்கு அருகாமையில் வசிக்கும் இளைஞர்களை ஒன்று திரட்டி கிராம நகர மேம்பாட்டுக்குச் செயல்படும் களச் செயல்பாட்டாளர்களாக தயார் செய்யப் போகிறேன், என் கிராமப் பஞ்சாயத்தில் கிராம சபையை வலுவாக்கப் பணி செய்யப் போகிறேன், என் நகரத்தில் ஏரியா சபையை இயங்க வைக்க மக்களைத் தயார் செய்யப் போகிறேன், எனக்கு அருகாமையில் வசிக்கும் படித்த இளைஞர்களுக்கு திறன் கூட்டி பணிக்குத் தயாராக்கப் போகிறேன், எனக்கு அருகாமையில் இருக்கும் ஊரணிகள், குட்டைகள், குளங்கள், ஏரிகள், கம்மாக்கள், ஓடைகள், வரத்துக்கால்வாய், போக்குக்கால்வாய் அனைத்தையும் எப்படி பராமரிக்க வேண்டும் என்பதை கிராம மக்களுக்கு கற்றுத் தரப் போகிறேன், எங்கள் ஊர் சத்துணவுக் கூடத்தில் தயாரிக்கும் சத்துணவை முறையாகத் தயாரிக்க உதவப் போகிறேன், பள்ளியில் படிக்கும் மாணவர்களுக்கு தூய்மை பற்றியும், துப்புரவு பற்றியும், உடல் நலம் பற்றியும், உணவு பற்றியும், குடிநீர் பற்றியும் விழிப்புணர்வை ஏற்படுத்தப் போகிறேன், என் ஊரில் உள்ள பொதுச் சொத்துக்களை பாதுகாக்க முதலில் அவைகளைக் கண்டுபிடித்து ஆக்கிரமிப்பில் இருந்தால் அவைகளை விடுவித்து பொதுச் சொத்துக்களைப் பாதுகாக்கப் போகிறேன், எங்கள் ஊரில் உள்ள அனைத்து அரசு நிறுவனங்களும் எங்கள் நிறுவனம், எங்களுக்கான நிறுவனம் என்பதை மக்களுக்கு உணர்த்தி அந்த நிறுவனச் செயல்பாடுகளில் பொதுமக்களை பங்கெடுக்கச் செய்வேன், பள்ளி மேலாண்மைக் குழுவை வலுப்படுத்தி பொதுப்பள்ளியை வலுவாக்கச் செயல்படுவேன் என்று கூறி களத்தில் செயல்படும் இளைஞர்களின் எண்ணிக்கையைக் கூட்ட வேண்டும்.


இந்தப் பணிகளைச் செய்ய மிகப் பெரிய ஆற்றலும், திறனும், செயலுக்கான ஊக்கமும், உத்வேகமும் இளைஞர்களுக்குத் தேவை. இந்தப் பணியை மேற்கொள்ள இன்று மிகப்பெரிய அளவில் திட்டமிட வேண்டும். காரணம், இதற்கான வாய்ப்பு என்பது உள்ளாட்சிகளில் உருவாக்கப்பட்டுள்ளது. அதில் செயல்பட மக்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்ற அவசியமில்லை. கிராமசபை உறுப்பினராக இருந்தாலே போதும் கிராமங்களுக்கு, நகரங்களுக்கு ஏரியா சபை உறுப்பினராக இருந்தாலே போதுமானது. மக்களுக்கு சட்டத்தின் மூலம் எண்ணிலடங்கா உரிமைகளை சட்டமாகத் தந்துள்ளனர். அவைகளை எப்படி கையிலெடுப்பது என்பதற்குத்தான் நம் இளைஞர்களுக்கு உத்திகள் கற்பிக்கப்படல் வேண்டும். ●

கட்டுரையாளர், காந்திகிராமிய பல்கலைக்கழக ராஜீவ் காந்தி பஞ்சாயத்துராஜ் ஆராய்ச்சி இருக்கைத் தலைவர் (ஓய்வு)




03.03.23 அன்று புதுதில்லியில் நடைபெற்ற உலக புத்தகக் கண்காட்சியில் நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின், 6 புதிய நூல்கள் அறிமுக விழா நடைபெற்றது. விழாவில் தில்லி ஜே.என்.யூ பல்கலைக்கழகப் பேராசிரியர் அறவேந்தன் அவர்களின் தலைமையில், தமிழாய்வாளர்கள் கமலக்கண்ணன், தமிழ் பரதன் ஆகியோர் முன்னிலையில் தமிழாய்வாளர்கள் அஜய்சுந்தர், தீபன், பூங்குழலி, பிரகலாதன், மணிகண்டன், வெற்றிச்செல்வி, ஆகியோர் நூல்களைப் பற்றிய அறிமுகஉரை நிகழ்த்தினர். விழாவில் நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் நாகர்கோவில் கிளை மேலாளர் இரா.மு.தனசேகரன் மற்றும் தலைமை அலுவலகத்திலிருந்து அருண்நாத் ஆகியோர் கலந்துகொண்டனர்.

நூல் அறிமுகம்



# புதிய நோக்கில் களப்பிரர் வரலாறு

சண்முக.ஞானசம்பந்தன்

வரலாறு எப்போதுமே சுவாரஸ்யமானது. அதன் மர்ம முடிச்சுகள் அவிழும் போது சுவை கூட்ட வல்லது. அந்த வகையில், வரலாற்று நூல் எதுவாயினும் மர்ம முடிச்சுகள் அவிழும் போக்கில் அது வாசகனை ஈர்க்க வல்லது. வரலாற்று நூல்களைப் படிப்பதில் ஒரே ஒரு சிக்கல், அதை எழுதியவரின் அகச் சார்பு நீக்கி அந்த நூலைப் படித்து உண்மையைத் தேர்ந்து தெளிவது தான். பெரும்பான்மையான வரலாற்று நூல்கள் ஆசிரியரின் அகச் சார்பிலிருந்து எழுந்தவை தான் எனலாம். ஒரு பொருளை அல்லது தலைப்பைத் தேர்வு செய்யும் போதே, அதைத் தேர்வு செய்வது தற்செயலாக நிகழ்வதில்லை. தனக்கு முன் கிடைத்த தரவுகள், உள்ளெழுந்த சுய ஆர்வம், வழிகாட்டல்கள் சார்ந்து தான் நூல்கள் எழுகின்றன. தனக்கு முன் எழுதப்பட்ட வரலாற்று நூல்களில் பெரும்பான்மையும் தனி நபர் சார்ந்தோ அல்லது இனஞ் சார்ந்தோ புகழை மிகைப்படுத்திடும் உள் நோக்கத்தில் எழுதப்பட்டவை தான் என்பது மார்க்ஸியர்களின் முடிவு.

அண்மைக்காலத்தில், இந்தியாவில் எழுதப்படும் வரலாற்று நூல்களில் புளுகுகளும், புனை சுருட்டுகளும், யூகங்களும், வன்மமும், அரசியல் உள் நோக்கமும் அப்பட்டமாக வெளித் தெரிகின்றன. உள்ளதை உள்ளபடி வாசகனுக்கு விளம்பி, அவனே மெய்ப்பொருளை எத்தன்மைத்தாயினும் எப்பொருளாயினும் கண்டு தேற வாய்ப்பு நல்கும் நூல்கள் மிக அரிது. அந்த வகையில் ஓர் அரிதான நூலாக, ஆ.பத்மாவதி அவர்கள் எழுதி, செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் சார்பில் வெளியிட்டிருக்கும் நூல், “புதிய நோக்கில் களப்பிரர் வரலாறு” என்ற இந்த நூலாகும்.

இந்த நூல், சுமார் இரு நூறு பக்கங்கள் கொண்டது. நல்ல வடிவமைப்பு; தரமான அட்டை; தாள்; அச்சு. அநேகமாக எழுத்துப்பிழைகளே இல்லாத நூல். 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் கொரோனா கால நெருக்கடிக்கு இடையிலும் வெளியாகியுள்ள இந்த நூலுக்கு, செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் இயக்குநர் பேராசிரியர் இரா. சந்திரசேகரன் நல்லதோர் அணிந்துரை வழங்கியிருக்கிறார். முன்னுரை, முடிவுரை, நூற் பட்டியல், சொல்லடைவு, அருஞ்சொல் விளக்கம், பின்னிணைப்பு தவிர 14 கட்டுரைகள் அடங்கிய நூல் இது.

இனி நூலுக்குள் நுழையும் முன் சில செய்திகளை வாசகர்களாகிய கவனத்தில் இருத்திக் கொள்வது நலம் என எண்ணுகிறேன்.

முதலாவது தமிழர்களுக்கு, இந்தியர்களுக்கு வரலாற்றைப் பதிவு செய்யும் உணர்வு மிகமிகக் குறைவு என்ற உண்மையை ஒப்புக் கொள்ள வேண்டும்.

இரண்டாவது நாம் பின்பற்றி வந்த அறுபதாண்டு சுழற்கணக்கு முறை: மேற்கில் கிறிஸ்தவம் ஒரு பொது ஆண்டுக் கணக்கு முறையை தொடக்கத்திலிருந்தே பெற்று வந்திருந்தமை வரலாற்றை நிரல்படுத்த மேற்கு உலகுக்கு வசதியாக இருந்தது. நமக்கு அந்த வாய்ப்பு அவர்களின் வருகை வரை அறவே இல்லை.

மூன்றாவது, நமக்குக் கிடைத்திருக்கும் பண்டைய இலக்கிய நூல்கள் அனைத்துமே தொகுப்பு நூல்கள் தாம். அதுவும் மதுரைப் பாண்டி நாட்டில் தான் தொகுக்கப்பட்டிருக்கின்றன. தொகுத்தவர்(கள்) ஒதுக்கி நீக்கி விட்டவை பாடல்களாகவும் அல்லது வரிகளாகவும் கூட இருந்திருக்கலாம் என்ற ஐயப்பாட்டோடு தான் அனைத்து நூல்களையுமே நாம் அணுக வேண்டியிருக்கிறது. தேவார, திவ்யப்பிரபந்தங்களுக்கும் இதே நிலைமை தான். நம்பியாண்டார் நம்பிக்கும் நாதமுனிகளுக்குமே முழு வெளிச்சம். ஆக தொகுத்தவர்(களின்) சார்பற்ற நேர்மையை நம்பித்தான் நாம் தொன்மை இலக்கியங்களைப் படிக்க வேண்டியிருக்கிறது. தமிழின் மீதான மொழி இனப் பெருமித உணர்ச்சியைத் தள்ளி விட்டு யோசித்தால் பதினெண் மேல்க் கணக்கு நூல்களில் கலித்தொகை, பரிபாடல், திருமுருகாற்றுப்படை, மதுரைக்காஞ்சி போன்றவை சங்க கால இலக்கிய நடையோடு ஒத்திசைவு கொண்டிருந்தாலும் அவை காலத்தில் மிகவும் பிற்பட்டவை என்ற ஐயப்பாட்டின் நேர்மையை நாம் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். யார் கண்டது? அவை களப்பிரர் காலம் என்று அழைக்கப்படும் காலத்தின் பிற்பகுதியில் கூட இயற்றப்பட்டவையாக இருக்கலாம். பதினெண் கீழ்க் கணக்கு நூல்களின் சம காலத்தவையாகவும் பிற்பட்டவையாகவும் கூட இருக்கலாம்.

நான்காவது, வடமேற்கு கைபர் போலன் கணவாய் வழியாக ஆரியர்கள் தொடங்கி நாதிர் ஷா வரை இந்தியத் துணைக் கண்டத்திற்குள் நுழையாத இனமே இல்லை; ஐரோப்பியர்கள் உட்பட; ஆப்பிரிக்கர்களைத் தவிர. ஆனால், இந்தியாவிற்குள் நிலை கொண்டிருந்தவர்கள் ஏன் பிற திசைகளை நோக்கி நகரவில்லை? தன் நிறைவுப் பெருமிதப் போதை கொண்ட சோம்பேறிகளா? இந்தியாவின் இந்த நிலைமையே தான் தமிழகத்திற்கும் பொருந்தும். கூட்டங் கூட்டமாக வந்து குடியேறிய வைதீகர்கள், கன்னடர்கள், கங்கர்கள்-சாளுக்கியர்கள் பிற்காலச் சோழர்கள், தெலுங்கர்கள், அராபியர்கள், போர்த்துகீசியர்கள் என்று பிற மொழி இனத்தவர் தமிழகத்திற்குள் வந்து நிலையாகக் குடி கொண்டு கலந்தும் விட்டார்கள். தமிழர்கள் இலங்கை, தென் கிழக்கு ஆசிய நாடுகள் எனப் பிற இடங்களுக்குப் புலம் பெயர்ந்தவர்கள் ஒரு சிலரே.

ஐந்தாவது, முற்காலச் சோழர்கள் மற்றும் பாண்டியர்களின் பெயர்கள் பெரும்பாலும் வடமொழிக் கலப்பற்ற தமிழ்ப் பெயர்களாகவே காணப்படுகின்றன. மாறாக பிற்காலச் சோழர்கள் மற்றும் பாண்டியர்களின் பெயர்கள் வடமொழிக் கலப்புப் பெயர்கள். இடையில் ஊடாக நாம் காண்பது களப்பிரர் காலமா அல்லது வைதீக எழுச்சி கொண்ட வடமொழிக் காலமா?

**இனி நூலுக்குள் நுழைவோம்.**

களப்பிரர் காலம், தமிழக வரலாற்றின் "இருண்ட காலமாக" அறிஞர்களால் கருதப் பெற்றது என தனது அணிந்துரையைத் தொடங்கியிருக்கிறார் பேராசிரியர். இரா.சந்திரசேகரன். இருண்ட காலம் என்று சாட்டுவோர்களில் இரு வகை உண்டு. அதிகம் ஆய்வுத் தரவுகள் நமக்குக் கிடைக்காததால் அதை இருண்ட காலம் என்று சொன்னால் அதை ஏற்றுக் கொள்வதில் நமக்கு ஒன்றும் ஆட்சேபம் இல்லை. ஆனால் வைதீகம் செல்வாக்கு இழந்திருந்த காலம் என்பதனால் களப்பிரர் காலம் இருண்ட காலம் என்ற வாதத்தை நம்மால் ஏற்றுக் கொள்ள இயலாது.

ஆசிரியர் ஆ.பத்மாவதி அவர்கள் தனது முன்னுரையில், "களப்பிரர் காலம் சங்க காலத்திற்குப் பின்னர் ஏறத்தாழ கி.பி.300 முதல் கி.பி.550 வரை நிலவியது எனலாம் எனத் தொடங்குகிறார். அனேகமாக, அனைத்து வரலாற்று ஆசிரியர்களின் ஏகோபித்த கருத்தும் இது தான்.

"களப்பிரர் குறித்து இதுவரை கிடைத்திருக்கின்ற சில இலக்கிய ஆதாரங்களையும் வரலாற்று, தமிழ் அறிஞர்களின் நூல்களையும் கருத்துக்களையும் பூலாங்குறிச்சிக் கல்வெட்டுக்களையும் செப்பேடுகளையும் அகழாய்வு அறிக்கைகளையும் இன்ன பிற தகவல்களையும் முதன்மை ஆதாரங்களாகக் கொண்டு இந்த ஆய்வு மேற்கொள்ளப் பெற்றது" எனவும்

"இவ்வாய்வில் புதிய முயற்சியாக சில அணுகுமுறைகள் மேற்கொள்ளப் பெற்றிருக்கின்றன. களப்பிரர் ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்து பின்னர் ஆட்சியமைத்த பல்லவர்-பாண்டியர்களின் கல்வெட்டுக்கள், செப்பேடுகளின் ஆதாரங்களை முதன்மையாகக் கொண்டு களப்பிரர் ஆட்சி எவ்வாறு அமைந்திருக்கும் என்பதை அறியும் முயற்சி மேற்கொள்ளப் பெற்றது. அம்முயற்சியின் வழியே, அவர்கள் அமைத்திருந்த ஊராட்சி, ஊரமைப்பு, சமயம், அரசியல் கொள்கை, பொருளாதாரம், படை, கூட்டணி ஆட்சி போன்ற முக்கிய அங்கங்கள் தொடர்பாகத் தெரிய வந்த உண்மைகள் ஆய்வுலகின் முன் வைக்கப் பெறுகின்றன" எனவும்

"1979 இல் தமிழ் நாடு அரசு தொல்லியல் துறையால் பொன்னமராவதி அருகே பூலாங்குறிச்சியில் கண்டுபிடிக்கப்பட்ட மூன்று கல்வெட்டுக்கள் களப்பிர மன்னர்களால் வெளியிடப்பட்ட கல்வெட்டுக்கள். ஆய்வறிஞர்கள் தற்போதும் முன்பும் எழுப்பிய ஐயங்களுக்கான பதில்கள் இக்கல்வெட்டில்

புதைந்து கிடக்கின்றன" எனவும் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார் ஆசிரியர்.

களப்பிரர் யார்? எந்நாட்டினர்? எச்சமயத்தினர்? எம்மொழி பேசுவோர் என்பன இக்கல்வெட்டுக்களில் இருந்து தெரிய வரும் என நம்பிக்கை கொள்கிறார் ஆசிரியர்.

களப்பிரர் என்பவர் பல தமிழர்களையும் சிறுபான்மை கருநாடகத்தினரையும் கொண்ட கூட்டணி என்றுரைக்கலாம் என எழுதியிருக்கிறார் ஆசிரியர். (இது சரியான சான்றுகள் இன்றி ஏற்றுக் கொள்ளத் தக்கதாக இல்லை). களப்பிரர் அருக சமயத்தினர் என பூலாங்குறிச்சிக் கல்வெட்டுகள் உறுதி செய்கின்றன. இது ஏற்புடையதே. களப்பிரர் ஆட்சி மொழியாகப் பயன்படுத்தியது தமிழ் மொழியே. (இதுவும் சரியான சான்றுகள் இன்றி ஏற்றுக் கொள்ளத் தக்கதன்று). களப்பிரர் நால்வகைப் படைகளும் கொண்டிருந்தனர். ஐம்பெருங்குழு என்னும் நிர்வாக அமைப்பு பற்றிக் களப்பிரர் காலத்தைய கரூர்க் கல்வெட்டு தெரிவிக்கின்றது என்றெல்லாம் எழுதுகிறார் ஆசிரியர்.

**இனி முதல் கட்டுரைக்கு வருவோம்.**

பௌத்த தேரர் எழுதிய 'வினய வினிச்சயம்' என்ற நூலும் பூலாங்குறிச்சிக் கல்வெட்டுகளும் மூல ஆதாரங்கள்; அந்நூல் கி.பி.ஐந்தாம் நூற்றாண்டுக் காலம் என்பதற்கு அந்த நூலிலேயே காலக்குறிப்பு உள்ளது எனக் குறிப்பிடுகிறார். பெரிய புராணத்தில் குறிப்பிடப்படுகின்ற மூர்த்தி நாயனார், கூற்றுவ நாயனார் இருவரும் களப்பிரர்; வேள்விக்குடிச் செப்பேடு, தளவாய்புரம் செப்பேடு, பல்லவர் செப்பேடுகள் முப்பது போன்றவையும் ஆதாரங்கள் தாம்.

"படை நான் குடன்று பஞ்சவற் றுரந்து
மதுரை வவ்விய கருநாடர் வேந்தன்
அருகர்ச் சார்ந்துநின் றான்பணி அடைப்ப"

என்று நால்வகைப் படைகளுடன் பஞ்சவராகிய பாண்டியரை அகற்றிவிட்டு மதுரையை வெற்றி கொண்ட கருநாடக வேந்தன் அருக மதத்தைச் சார்ந்திருந்த காரணத்தால் அரனாகிய சிவன் கோயில் வழிபாட்டை மறந்து விட்டான் என்று கல்லாடம் (57.12.14) கூறுகிறது.

சமண நூல் ஒன்று சிரவண பெலகொள என்னும் பிரதேசம் களபப்பு என்றழைக்கப்பட்டதாகக் கூறுகிறது. இந்தக் களபப்பு ராஜ்யம் மைசூர் நாட்டுக் கோலார் வரை பரவியிருந்ததால் அங்குள்ள நந்தி மலை களப்பிரரின் மலை என்று அழைக்கப்பட்டது. அங்கிருந்து வந்தவர்களே களப்பிரர்கள்.

யாப்பருங்கல விருத்தியுரையில் மேற்கோள் காட்டப்பட்ட களப்பிரர் பற்றிய வாழ்த்துப்பாக்களைக் களப்பிரர் பற்றி ஆய்வு செய்த அறிஞர்கள் இணைப்பாகக் கொடுத்திருக்கின்றனர். அப்பாடல்களில் களப்பாளன் விஷ்ணுவின் பக்தனாக உள்ளதையும் பூம்பிண்டி மரத்தின் கீழ் அமரும் அருகக் கடவுளிடம் பக்தி கொண்டிருந்ததையும் அச்சுதன் என்ற




புதியநோக்கில் களப்பிரர் வரலாறு | ஆ.பத்மாவதி
செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை.
விலை.ரூ.250/-

பெயரிலேயே பொதுவாகக் களப்பிர மன்னர்கள் அழைக்கப்பட்டிருப்பதையும் காண முடிகிறது.

இப்படி களப்பிரர் பற்றிய மூலச்சான்றுகளை எடுத்துரைக்கிறது முதல் கட்டுரை. இரண்டாம் கட்டுரை களப்பிரர் பற்றிய அறிஞர் கருத்துகளை எடுத்துச் சொல்கிறது. கே.ஜி.சங்கரன், நீலகண்ட சாஸ்திரி, மு.இராகவய்யங்கார், மயிலை சீனி.வேங்கடசாமி, கிருஷ்ணசாமி அய்யங்கார், அறிஞர் மு. அருணாசலம், க.ப.அறவாணன், பி.ஜி.எல்.சுவாமி, சி.மீனாட்சி, இரா.பன்னீர்செல்வம், மா.இராசமாணிக்கனார், கே.கே. பிள்ளை, பா.மாசிலாமணி, ந.சுப்பிரமணியன், கே.ஆர். வெங்கட்ராமன், வே.இ.செல்வம், பி.டி.ஸ்ரீனிவாச அய்யங்கார், டி.சி.சர்க்கார், இரா. நாகசாமி, நடன. காசிநாதன், பொற்கோ போன்ற அறிஞர்களின் கருத்துகளை உரியவாறு பொருந்த நிரல்படுத்திக் காட்டியிருக்கிறார் ஆசிரியர்.

மூன்றாம் கட்டுரை, "சங்ககால சமூகச் சூழலும் சங்க அரசுகளின் வீழ்ச்சியும்" என்ற பொருளிலானது.

"ஆரியர் தாக்கத்தை விரும்பாமல் சங்ககால அரசுக்கு உதவிக் கொண்டிருந்த தலைவர்கள் வணிகத்திற்கும் வணிகத்தை ஆதரிக்கும் மத நிறுவனங்களுக்கும் ஆதரவளித்து சங்க கால மன்னர்களின் ஆட்சி அகலவும் மாற்று அரசான களப்பிர அரசு ஏற்படவும் வழி செய்திருக்கின்றனர் என்பது தெரிகிறது என முடிக்கிறார் ஆசிரியர்.

களப்பிரர் கால அரசமைப்பு பற்றிய நான்காம் கட்டுரையில் ஐம்பெருங்குழு களப்பிரர் காலத்திலும்

அதன் பின்னரும் தொடர்ந்தும் இயங்கி வந்திருக்கின்றது என்று கரூர்க் கல்வெட்டு மற்றும் திருச்சிராப்பள்ளி நாகை நல்லூர்க் கல்வெட்டு மூலம் யூகிக்கிறார் ஆசிரியர். இந்த ஐம்பெருங்குழுவில் இடம் பெற்றிருந்தோர் அடியார்க்கு நல்லார் கூறும் அமைச்சர், புரோகிதர், சேனாபதியர், தூதுவர், சாரணர் என்போரா? அல்லது அரும்பதவுரையாசிரியர் குறிப்பிடும் மாசனம், பார்ப்பார், மருத்தர், வான் நிமித்தர், அமைச்சர் என்போரா? எனக் கேள்வி எழுப்புகிறார் ஆசிரியர்.

ஐந்தாம் கட்டுரையான "களப்பிரர் கால ஊரமைப்பும் சில நடைமுறைகளும்" (மங்கலங்களின் பங்களிப்பு) என்ற கட்டுரை சுவாரஸ்யமானது. சாதவாகனர்கள் தங்கள் ஆட்சியில் சில பகுதிகளுக்குச் சில ஆமாத்யர்களைப் பொறுப்பாளர்களாகக் கொண்டு நிர்வகித்தது என நூலாசிரியர் இக்கட்டுரையில் குறிப்பிட்டிருப்பது நம் கவனத்தை ஈர்க்கிறது. இதே நூலில், பக்கம் 158-159 இல், மாத்ரர், கடிகையார், மூலப்பிரகிருதி என்ற சக்தி வாய்ந்த அமைப்பினர் ராஜ கிருதகர்கள் என அழைக்கப்பட்டனர் என நூலாசிரியர் குறிப்பிட்டிருக்கிறார். மாத்ரர் என்பவர் மகாமாத்ரர் எனக் கூறப்படுகின்ற அமைச்சர் குழுவினர் ஆவர். கடிகையார் உயர் கல்வியாளர்கள் ஆவர். மூலப்பிரகிருதி படைத் தலைவர்கள் ஆவர் எனக் குறிப்பிடுகிறார்.

சிறுத்தொண்டராக பின்னர் அறியப்பட்ட பரஞ் சோதியை அறிமுகப்படுத்தும் போது "மாமாத்திரர்" என்று சேக்கிழார் குறிப்பிடுகிறார். திருவாதவூர் ஆமாத்தியர்களில் ஒருவர் தாம் மாணிக்கவாசகர். இருவரும் ஒரே குலத்தினர் என்பது பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தன் முடிவு. நோபெல் பரிசு பெற்ற அமர்த்தியா சென் இந்த மதிப்புரைக் கட்டுரையாசிரியரின் நினைவுக்கு வந்து செல்கிறார். எனினும், இந்த ஆமாத்தியர்கள் ஆரியர்களாத்தான் இருக்க வேண்டும் என யூகிக்க இடம் இருக்கிறது.

இக்கட்டுரையில் ஆய்வாளர் மங்கலம் என்ற சொல்லும் மங்கை என்ற சொல்லும் எப்படி மாறி மாறி வந்திருக்கின்றன என்று நிறுவுவது மிகவும் சுவாரஸ்யமான ஆய்வு எனலாம். புள்ள மங்கலம் – புள்ள மங்கை, விஜய மங்கலம்- விசய மங்கை, போதி மங்கலம் என்ற பூத மங்கலம் – போதி மங்கை என நிறுவுகிறார். இப்படி மங்கலம் என்று அழைக்கப்பட்ட ஊர்களின் நடுவில் பிடாரி போன்ற அம்மன் கோவில்கள் இருந்திருக்கின்றன என்றும் அந்த ஊர்கள் பின்னாளில் மங்கை என வழங்கப்பட்டிருக்கின்றன எனவும் குறிப்பிடுகிறார். பட்ட மங்கை இப்போது பட்ட மங்கலம் என்ற குரு ஸ்தலம் ஆக பாண்டி நாட்டில் திருப்பத்தூருக்கு அருகில் உள்ளது. மங்கலம் என்ற பெயரில் அழைக்கப்பட்ட மங்கை ஊர்கள் அனைத்தும் பௌத்தத் தலங்கள் என்கிறார் ஆய்வாளர். உத்தர கோச மங்கை என்ற பாண்டி நாட்டு திருவாசகத் தலம் நம் நினைவுக்கு வருகிறது. அங்கும் சிதிலமடைந்த நிலையில் பௌத்த விகாரம் இப்போதும் காணப்படுகிறது.

தந்திர வழிபாட்டு முறையைப் பின்பற்றுகிற வழிபாட்டு முறைகளில் குமரி பூஜை பின்பற்றப்பட்டது. பருவமடையாத கன்னிப்பெண்களைத் தெய்வமாகப் பாவித்து அவர்களுக்குள் இருக்கும் ஆக்க சக்தியைத் தாங்களும் பெற இப்பூஜை நடத்தப்பட்டது. பைரவ பத்மாவதி கல்பம், தைத்ரீய ஆரண்யகம், மகா நிர்வாண தந்த்ரம் போன்ற நூல்கள் இத்தகைய வழிபாடுகளைக் குறித்துக் குறிப்பிடுகின்றன. இது போன்ற மதச்சடங்குகளோடு போட்டி போட்டுக் கொண்டு வளர வேண்டிய சூழலில், அசங்கர் என்ற பௌத்தரால் கி.பி,3 ஆம் நூற்றாண்டளவில் மகாயான பௌத்த மதத்தில் யோகம் பின்பற்றப்பட்ட போது தாராதேவி வழிபாடும் புகுத்தப்பட்டிருக்கிறது. குமரி, கன்னி, மங்கை என்பதெல்லாம் பெண்களின் ஒரே பருவத்தைக் குறிக்கும் சொற்களாம்.

ஆட்சி மாற்றம் நடக்கும் போது தோற்ற அரசு ஆதரித்த மதத்தை எதிர்க்க, புதிய ஆட்சியினர் தாங்கள் ஆதரிக்கும் மதத்தின் உக்கிரமான கடவுள் வடிவங்களை அமைப்பது வழக்கம். (வைணவர்கள் நரசிம்ம வழிபாட்டைத் தொடங்குவர் – அழகர் கோயில் - தொ.பரமசிவம்) மங்கலம் என்றால் மகிழ்ச்சி- கொண்டாட்டம், போரில் வெற்றி போன்ற பொருள்களை சமஸ்கிருத ஆங்கில அகராதி தருகிறது. எனவே, வெற்றி பெற்று தாம் கைக் கொண்ட ஊர்களை முக்கிய அரசியல் தளங்களாகப் பயன்படுத்த நினைத்து மங்கலம் என்ற பெயருடன் ஊர் நடுவில் மங்கைக்கு கோட்டம் எழுப்பி வழிபட்டிருக்கின்றனர் எனலாம் என்கிறார் நூலாசிரியர்.

நேபாளத்தில் கிடைத்த சுவடி ஒன்று ஒட்டியாணம் என்ற ஊரிலுள்ள மங்கா கோஷ்டத்தில் வஜ்ரபாணியின் உருவம் இருந்ததைக் குறிப்பிடுகிறது என்ற தகவலை லோகேஷ் சந்திரா என்ற முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தமது கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

**கச்சி வளைக் கைச்சி காமக்கோட்டங் காவல்**
**மெச்சியினிதிருக்கும் மெய் சாத்தன் கைச்செண்டு**
**கம்பக் களிற்று கரிகாற் பெருவளத்தான்**
**செம்பொற் கிரி திரிந்த செண்டு**

சிலப்பதிகார உரையில் அடியார்க்கு நல்லாரின் இந்த மேற்கோள் பாடல் ஒன்று ஒப்பு நோக்கத்தக்கதாக உள்ளது.

மங்காகோஷ்டம் – காமக் கோட்டம்: வஜ்ரம் – செண்டு; வஜ்ரபாணி – சாத்தன்; ஒட்டியாணம் – காஞ்சி நகர்.

மங்கலம் என்ற சொல் வடமொழியில் கிராமம் என்று வழங்கப்பட்டிருக்கிறது. கூற்ற மங்கலம் – கால கிராமம் என மாறியிருப்பதை உதாரணமாகக் கொள்ளலாம். இந்தப் பின்புலத்தில் சாத்தமங்கலம் கல்வெட்டுக்கள் மற்றும் இராஜராஜன் கல்வெட்டுச் செய்திகளை இந்தக் கட்டுரையில் ஆய்வு செய்திருக்கிறார் நூலாசிரியர்.

நூலாசிரியர் ஆ.பத்மாவதி அவர்களின் முறையே 6 முதல் 12 வரையிலான களப்பிரர் கால

ஊராட்சி முறை, மங்கைக்கோட்டத்து மன்றங்கள், களப்பிரர் கால படைத்தளமும், நிர்வாக மையமும், களப்பிரரின் நிலவுடைமைக் கொள்கை, பாண்டியருக்கு ஆதரவளித்த தலைவர்கள், களப்பிரர் கால மொழி, எழுத்து, கலை, சமயம், களப்பிரர் கால நடுகற்கள் போன்றவை நேர்த்தியான நிரல் முறையில் ஆய்வு செய்யப்பட்டிருக்கின்றன. சங்க காலச் சான்றுகள் மற்றும் களப்பிரர் காலத்திற்குப் பிந்தைய பல்லவ அரசுக் காலச் சான்றுகளோடு ஒப்பிட்டு இடைக்கால களப்பிரர் காலம் இப்படி இருந்திருக்கலாம் என ஆசிரியர் திறம்பட யூகிக்கிறார்.

நிறைவாக, 13 மற்றும் 14 ஆம் கட்டுரைகளில் பாண்டிய பல்லவ அரசர்களின் வைதீக – சமண ஆதரவு மற்றும் களப்பிரர்களின் போராட்டமும் வெற்றியும் என்ற இரண்டு கட்டுரைகளின் சாரத்தை இணைத்துக் காண்போம். கடுங்கோன் முதல் ஆட்சி செய்த முற்காலப் பாண்டியர்களில் ஏழாம் மன்னன் மாறவர்மன் இராஜசிம்மன் (கி.பி 725-768) காலத்தில் வைணவக் கோயில்கள் மற்றும் சிவன் கோயில்கள் தோற்றுவிக்கப்பட்டன. கடுங்கோனும் கழுதூரில் சித்தி செய்த பாண்டியனும் அந்தணர்களுக்கு திருமங்கலம், சோமாசிகுறிச்சி போன்ற பிரம்ம தேயங்களை வழங்கினர். சேந்தன் செழியன் சிவனுக்கு குடைவரைக் கோயில் தோற்றுவித்தான். மாறவர்மன் அரிகேசரி ஹிரண்ய கர்ப்பம், துலாபாரம், பள்ளிச்சந்தம் அக்ரஹாரம் போன்ற செயல்களில் ஈடுபட்டான். ஜடிலவர்மன் பராந்தக நெடுஞ்சடையன் வேள்விக்குடிச் செப்பேட்டின் மூலம் பிரம்ம தேயத்தைப் புதுப்பித்தான். சின்னமனூர்ச் சிறிய செப்பேடு, வரகுண மங்கைச் செப்பேடுகளின் மூலம் பிரம்ம தேயங்கள் வழங்கியதும், நம்மாழ்வாரை ஆதரித்ததும் தெரிய வருகின்றன. பல்லவர்கள் அக்னிஷ்டோமம், அஸ்வமேதம், வாஜபேயம் போன்ற பல ஹோமங்கள் செய்துள்ளனர். கோசகஸ்ரம் போன்ற சடங்குகளையும் செய்துள்ளனர். (இன்றைக்கும் முன்னாள் திராவிட முதல்வர்கள் சத்ரு சம்ஹார யாகம் செய்வதை நாம் கண்கூடாகக் காண்கிறோமே).

களப்பிரர் ஆட்சியில் வைதீகர்களது பிரம்ம தேய நிலங்கள் இறக்கப்பட்டது போல வைதீக ஆதரவு அரசர்கள் ஆட்சியேற்ற பின்னர் பௌத்தப் பள்ளிச்சந்த நிலங்கள் இறக்கப்பட்டு சைவ, வைணவக் கோயில்களுக்கு அளிக்கப்பட்ட சம்பவங்கள் ஏராளமாக நடந்திருக்கின்றன. பின்னர் சமணமும் இத்தகைய பேரழிவுக்கு உட்படலாயிற்று. திண்டுக்கல், கரூர், கோவை பகுதிகள் சோழர், பாண்டியர், பல்லவர் நாடுகளின் புறப்பகுதியாகவே அமைந்திருந்ததால், களப்பிரர் ஆதரவுத் தலைவர்களும், மதங்களும் தங்கள் பிடி தளராமல், சுயேச்சையாக ஆட்சி செய்தும் வணிகம் செய்தும் வந்திருக்கின்றனர்.

வேள்விக்குடிச் செப்பேடு வேதியர் ஒருவருக்குப் பிரம்ம தேயமாகக் கொடுக்கப்பட்ட நிலம் பறிக்கப்பட்டது என்ற செய்தியைக் குறிப்பிடுகிறது. பின்னர், பல்லவர் பாண்டியர் செப்பேடுகளில் பிரம்ம தேயம் இறங்கல் மீட்கப்பட்டதாகக் கூறப்பட்டிருக்கிறது. சத்தியமங்கலம் அருகே இறங்கல் மீட்ட ராமன் நல்லூர் என்ற ஊர் இன்றும் காணப்படுகின்றது.

நிறைவாக நூலாசிரியரின் முடிவுரைக்கு வருகிறோம். இயற்கையுடன் இயைந்த வாழ்க்கை முறையையும், அறிவார்ந்த தத்துவ நோக்கங்களையும், விருந்தோம்பல் போன்ற சிறந்த பழக்க வழக்கங்களையும் அறம் செய்தல் வீடு பேற்றைத் தரும் என்ற நம்பிக்கையைப் பின்பற்றுவதிலும் மிகவும் தெளிவான சிந்தனையையுடைய தமிழ் வேந்தர்களை வைதீகர்கள் மூட நம்பிக்கைகளிலும் சடங்குகளில் ஈடுபட வைப்பதில் வெற்றி பெற்றனர். பிரம்ம தேயங்களும் தேவ தானங்களும் உள்ளூர் நிலவுடைமையாளர்களின் நலன்களுக்கு எதிராக அமைந்தன. அதனால் மூவேந்தர்கள் மெல்ல மெல்ல வலுவிழந்தனர்.

கருநாடகத்திலிருந்து வந்தேறிகளான போர்த்திறம் மிக்க வைதீக எதிர்ப்பு சமணப் பின்புலம் கொண்ட களப்பிரர்களுக்கு உள்ளூர் நிலவுடைமையாளர்கள் ஆதரவளித்தனர். ஐம்பெருங்குழு போன்ற குழுக்கள் அமைத்து சிறந்த படை திரட்டி முறையாக நாட்டை வழி நடத்திச் செல்வதற்கு தேவையான அனைத்து உள் கட்டமைப்பு வசதிகளையும் செய்து களப்பிரர்கள் ஆட்சியமைத்திருந்தனர். ஆறாம் நூற்றாண்டிற்குப் பின் நிலைமை தலை கீழாக மாறியது. பல்லவ, பாண்டிய சோழப் பேரரசுகள் தோன்றின. களப்பிரர்கள் தமிழ் மொழி, இலக்கணம், இலக்கியம், எழுத்து, கலைகள், பண்பாடு போன்றவற்றை அழித்தவர்கள் அல்லர்.

இங்கு ஃபிரடெரிக் எங்கெல்ஸ் குறிப்பிடும், "படைத்திறம் மிக்க இனக்குழு தன்னை விட நாகரிகத்தில் உயர்ந்த இனக்குழுவை வெற்றி கொண்டாலும், நாளடைவில் தோற்ற இனத்தின் நாகரிகம் வென்றவர்களை வெற்றி கொள்ளும்" என்ற ஒரு வாக்கியம் மதிப்புரையாளர் நினைவுக்கு வருகிறது. இதுவே களப்பிரர்களுக்கும் நிகழ்ந்திருக்க வாய்ப்பிருக்கிறது. அச்சுதக் களப்பாளன் ஒருவன் தனக்கு தில்லையில் முடிசூட்ட தில்லை வாழ் அந்தணர்களை அண்டி நின்றது அந்த வகை சார்ந்தது தான்.

குடைவரைக் கோயில்களுக்கு தமிழகத்தில் பல்லவர்களே வழிகாட்டிகள் எனக் கூறுவதுண்டு. ஆனால், பாண்டிய நாட்டு பிள்ளையார்பட்டி விநாயகர் மற்றும் அங்குள்ள கல்வெட்டு, விழுப்புரம் மாவட்டம் மேலைச்சேரி குடைவரைக் கோயில் போன்றவை களப்பிரர் காலத்தவை என்பது நினைவு கூரத் தக்கது. சங்க கால நடுகற்கள் மரபை களப்பிரரும் பின்பற்றியிருப்பதை ஈரெட்டி மலை மற்றும் தாமரைக்கரை கல்வெட்டுகள் மூலம் அறிகிறோம்.

களப்பிர மன்னர்களில் ஒரு பிரிவினர் தோல்வியைத் தழுவிய பின்னரும் வென்ற மன்னர்களுடன் போரிட்டுக் கொண்டே வந்துள்ளனர். சில பகுதிகளில் சுயாட்சியுடன் தங்கள் ஆதிக்கத்தை வலியுறுத்தி வந்துள்ளனர். கி.பி.10 ஆம் நூற்றாண்டு வரை

வணிகர்கள் ஆதரவுடன் நீடித்து வந்தனர். களப்பிரர் கால ஊர்ப் பெயர்களை மாற்றினாலும், பல்லவர்களும் பாண்டியரும் களப்பிரர் உள்ளடக்கத்தை உள்வாங்கிக் கொண்டு ஆட்சிமுறையை தங்கள் கொள்கைக்கு ஏற்றாற் போல் மாற்றியமைத்திருக்கின்றனர்.

சங்ககாலத் தமிழர்களின் வாழ்க்கை முறையையும் அரசியல் சமூகம் பொருளாதாரம், பண்பாடு தொடர்பான முக்கியக் கூறுகளையும் உள்ளடக்கிக் கொண்டு தான் களப்பிரர் ஆட்சி அமைந்திருக்கிறது. களப்பிரர் ஆட்சியில் பங்கு பெற்றிருந்த சிற்றரசர்கள் வைதீகக் கலாச்சாரத்தை பின்னாளில் ஏற்று பாண்டிய பல்லவராட்சி அமைய உதவியதோடு புதிய பண்பாட்டையும் நம்பிக்கைகளையும் உருவாக்கி வளர்த்தெடுத்தனர்.

தமிழ்- தமிழர் – தமிழ் நாடு என்பதை களப்பிரர் போற்றி வளர்த்து முன்னெடுத்துச் சென்றவர்கள் என்பதை மறுக்க இயலாது.

இந்த நூலுக்குப் பின்னால் மேற்கோள்கள் எடுத்தாளப்பட்ட நூற் பட்டியல் மிக நீண்டதாக அமைகிறது. இதுவே நூலாசிரியரின் விரிந்த கல்வியறிவினை பாராட்டும் வண்ணம் சுட்டி நிற்கிறது. அதனைத் தொடர்ந்து சொல்லடைவு வழங்கப்பட்டிருக்கிறது. அருஞ்சொல் விளக்கம், பின்னிணைப்புகளாக கல்வெட்டுப் படங்கள், குறிப்புகள் எழுத தனித் தாள்கள் என இந்த நூல் எப்படி ஓர் ஆய்வு நூல் அமைக்கப்பட வேண்டும் என்பதற்கு முன்னுதாரணமாக அமைந்திருக்கிறது.

ஆய்வாளர் மிகவும் பாராட்டிற்குரியவர். அகச்சார்பற்ற அவர் தம் நேர்மை வியப்புக்குரியது. எனினும், சில கருதுகோள்கள் ஏற்புடையன அல்ல. களப்பிரர் பெரும்பான்மையும் தமிழர்கள் என்பது நிறுவப்படவில்லை எனவே எண்ணுகிறேன். விரிந்த நோக்கில் திராவிடர்கள் என ஏற்கலாம். ஆனால், தமிழ்நாட்டின் சில பகுதிகளை ஆட்சி செய்ய நேர்ந்த போது மொழி விரோதப் போக்கு இல்லாதவர்களாய் இருந்திருக்கிறார்கள் எனக் கருதலாம். வைதீகர்கள் முன் வைத்த வடமொழி மேலாதிக்க உணர்வு இவர்களிடம் இல்லை என்பது தெளிவு. உள்ளூர் தமிழ் நிலவுடைமையாளர்களிடம் இணக்கம் காட்டி இருக்கலாம். கொள்வன கொடுப்பன நேர்ந்திருக்கலாம் என்பதால் அவர்கள் பெரும்பான்மையும் தமிழர்கள் என்ற முடிவை நோக்கி நகர்வது விருப்பத்தின் பாற்பட்டதாக மட்டுமே அமையும்.

மார்க்ஸ் குறிப்பிட்டதைப் போல, சுயச்சார்புடைய உலக வெளிச்சம் தன் மீது படராத கிராமிய சமூக அமைப்பு அப்போதே தமிழகத்தில் நிலை பெற்றிருந்திருக்கலாம். மேலே ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்தவர்கள் இந்த அமைப்புகளுக்கு இடையூறு விளைவிக்கவில்லை. சாமர்த்தியமான சமரசத்தால் தங்கள் நோக்கங்களை நிறைவேற்றிக் கொண்டனர் என யூகிக்கலாம்.

களப்பிரர்கள் பௌத்தர்கள் என நூலின் இறுதிப்பகுதியில் நூலாசிரியர் முடிவுக்கு வருவதும் தெளிவற்றதாகவே அமைகிறது. வைதீகத்தோடான சமரச நெகிழ்வுப் போக்கு சமணத்தை விட பௌத்தத்திலேயே காண்கிறோம். மகாயானம் வைதீகக் கலப்புடைய பௌத்தம். இறை வழிபாட்டில் உயிர்ப்பலி என்பதை சங்க இலக்கியங்களிலேயே நாம் காண்கிறோம். சமணம் உயிர்ப்பலியையும் புலால் மறுப்பையும் உறுதியாக மறுத்து வந்திருக்கிறது. பௌத்தம்: “கொன்றால் பாவம்; தின்றால் போச்சு” என சமரசம் பூண்ட மதமாகும். அண்ணல் அம்பேத்கர் சமணத்தை விட்டு விட்டு பௌத்தத்திற்கு தன் தொண்டர்களோடு மதம் மாறுவதற்கு ஏதுவாக அதுவே அமைந்தது. எனவே, பௌத்தம் ஓரளவு வெகு மக்களுக்கு அணுக்கமானது. சமணம் தூரமானது. தவிரவும், பௌத்தத்தில் பிக்குணிகளுக்கு இடமுண்டு. சமணம் பெண்கள் அடுத்து ஆண்களாகப் பிறந்தால் மட்டுமே வீடு பேறு கிடைக்கும் எனக் கூறிய சமயம். இதுவும் வெகு மக்களின் விருப்பத்திற்கு அன்னியமானது. கடுமையான தனித்திருத்த தவ வாழ்வை சமணம் போதித்தது. இல்லறத்தாரிடம் கலந்து கை ஏந்தி பிட்சை ஏற்கும் பிட்சுக்களை உடையது பௌத்தம். பௌத்தத்தில் திகம்பரர்கள் இல்லை என்பதால் ஊருக்குள் நுழைய ஏதுவாக இருந்தது. தவிரவும், சமணம் வினைக் கொள்கையில் மிக உறுதியானது. தேவ கதி, மனித கதி, விலங்கு கதி, அசுர கதி என மறு பிறப்புக் கொள்கையை வலியுறுத்தியது. அது வைதீகர்களுக்கு பிராமணர்கள் தேவ கதி இடத்தில் தாங்கள் இருப்பதாக கற்பிக்க வசதியாக இருந்தது. பௌத்தம் தாந்தீரிக முறையையும் யோக சாத்திரக் கருத்துக்களையும் கொண்டிருந்தது. இது வைதீகர்களில் சாக்தர்கள்/ அதர்வண வேதத்தினர்க்கு உடன் பாடானவையே. பௌத்தம் உருவ வழிபாட்டில் வைதீகர்களை விடவும் முன்னுக்கு நின்றது. கௌதம புத்தர் நின்றும் கிடந்தும் படுத்தும் கிடந்த விக்ரஹங்கள் வைணவத்திற்கு பௌத்த விகாரங்கள் மாற்றியமைக்க ஏதுவாக அமைந்தது. இன்றும் கூட புத்தரை மகாவிஷ்ணுவின் அவதாரமாக உட்கொள்ளும் முயற்சி தொடர்கிறது. மகாவீரரை அப்படிச் சொல்ல ஏதும் கிடைக்கவில்லை. எனவே, வைதீகர்களைப் பொருத்த மட்டில், சமணமே அவர்களுக்கு சமரசங் கொள்ள இயலா நேர் எதிரானது. களப்பிரர்கள் சமணர்கள் என்பதால் தான் வைதீகர்கள் ஆட்சி அதிகாரத்தை மன்னர்கள் மூலம் கைக்கொள்ள முற்பட்டனர் என்பதே சரியாக இருக்கும்.

எவ்வாறெனினும், நம் சிந்தனையைத் தூண்ட அமைந்த உருவத்திலும் உள்ளடக்கத்திலும் உயர்ந்த நூலை நமக்கு ஆக்கித் தந்திருக்கிற ஆசிரியர் ஆ. பத்மாவதி அவர்கள் மிகுந்த பாராட்டிற்குரியவர் எனலாம்.

●

(கட்டுரையாளர், இலக்கியத் திறனாய்வாளர்; மதுரை அகில இந்திய வானொலியின் ஓய்வுபெற்ற நிகழ்ச்சித் தயாரிப்பாளர்.)



கட்டுரை

# இனவெறியும் இலக்கிய சாட்சியும்

முனைவர் த. பாலுசாமி

பேரினவாத ஒடுக்குமுறைகளில் ஒன்றான, வெலிக்கடைச் சிறை படுகொலைச் சம்பவங்கள், தமிழர்களின் மீதான இனவெறித் தாக்குதல்கள், போராளி அமைப்புகளின் தொடர்பு, அரசப்படைகளின் கைது, சித்திரவதைப் படுத்துதல், சிறையிலிருந்து தப்புதல், காட்டிக்கொடுப்புகள், தண்டனைகள், சகோதரப் படுகொலைகள், சிறைவாழ்க்கை, பாலியல் வல்லுறவு, சமூகச்சிக்கல்கள், வர்க்கப்போராட்ட அரசியல், அரச - ஆதிக்கச் சக்திகளாகி மக்களைக் கொல்லும் இழிநிலை ஆகியன வெளிப்படுத்தும் நோக்கிலும், அவரது படைப்பாக்கத் திறன்களைப் பல்வேறு கோணங்களில் ஆராய்ந்து வெளிப்படுத்துவதும் இக்கட்டுரையின் ஆய்வுச் சுருக்கமாக அமைகிறது.

தமிழின் புனைவிலக்கிய உருவாக்க வரலாற்றில், நாவலின் வருகை இன்று புதிய பாய்ச்சலை நிகழ்த்திக் கொண்டிருக்கிறது. கதை சொல்வதும் கதையைக் கேட்பதும் மானுட வரலாற்றில் முக்கிய ஒரு நிகழ்வு என்பதன் தொடர்ச்சியாகவே இவற்றை அவதானிக்கலாம். சமகாலத் தமிழ் நாவல்கள், இன்று கோட்பாடுகள் சார்ந்தும் மற்றும் ஈழம், சிங்கப்பூர், பிரான்சு, கனடா, ஜெர்மன், மலேசியா என அயலகம் சார்ந்தும், புகலிடம், புலம்பெயர் எழுத்து எனப் பல்வேறு பரிமாணங்களின் மானுடவாழ்வை அழகியல் நேர்த்தியோடு பேசுகின்றன.

நாவல்கள் நாம் படிக்கின்ற போது நமக்குள் ஏற்படுகின்ற சலனங்கள் அசாத்தியமானவை. இவை வாழ்வு குறித்து வேறுபட்ட புரிதல்களைத் தருவதோடு வாழ்வை ஆழப்படுத்தவும் அகலப்படுத்தவும் செய்கிறது. மனித மனங்களைப் பயன் படுத்தும், சமூக அக்கறையை ஏற்படுத்துவதும் கலையினை மிளிரச் செய்வதுமான வேலைகளையும் செய்கின்றன. ஆக தமிழில் சமகால நாவல் இலக்கியங்கள் உலகின் செல்நெறிக்கேற்ப பல்வேறு தளங்களில் தம்மை வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றன. இவற்றுள் சமகாலத்தில் ஈழத்திலிருந்து வெளிவருகின்ற நாவல்கள் ஈழத்துப் போர்க் குரலோடு, புகலிடக் குரல்களையும் சித்தரிப்பதாய் ஈழத்தமிழ் மக்களின் விளிம்புநிலை வாழ்வைப் பேசுகிறது.

**வெலிக்கடைப் படுகொலை நிகழ்வு**

பல்லாண்டுக் காலமாகப் பலரின் கவனத்தையும் தன்பால் ஈர்த்தும், சர்வதேச ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்ததுமான பிரதேசம் வன்னியாகும். அந்நிய ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போராட்டத்திலும், உள்நாட்டில் இடம் பெற்ற இன ஒடுக்குமுறைக்கெதிரான போராட்டத்திலும் இறுதிவரை பங்குகொண்டு வன்மம், குரோதம், வெறுப்புகளோடும் காட்சியளிப்பது இப்பிரதேசமே. ஈழத்தமிழின் போராட்டமும், அதற்கெதிரான

சிங்களப் பேரினவாத இராணுவத்தின் அடக்கு முறையும் 1981 இல் தொடங்கி, 2009 முள்ளிவாய்க்கால் அழித்தொழிப்பு வரை நீண்ட வரலாற்றுப் பின்புல முடையன. அவ்வகையில் ஷோபாசக்தியின் 'ம்' நாவலில் காணப்படும் பேரினவாத ஒடுக்கு முறையின் விளைவுகளில் ஒன்றான, வெலிக்கடைப் படுகொலைச் சம்பவங்களையும், தமிழர்களின் மீதான இனவெறித் தக்குதல்களைச் சுட்டிக்காட்டும் அறிமுகக் கட்டுரையாக இக்கட்டுரை அமைகிறது.

தமிழீழ வரலாற்றில், 1950க்குப் பின்பான சூழலில், இயல்பான வாழ்க்கை முறை திரிந்து தமிழின அடக்குமுறை, அதனை எதிர்கொள்ளல் அல்லது போர் என்பதாக மாற்றம் பெற்றுவிடுகிறது. இந்தப் பின்னணியிலேதான் சமகால ஈழத்தமிழரின் நாவல்களின் தோற்றமும் பாடுபொருளும் அமைகிறது. அந்தோணிதாசன் என்ற இயற் பெயர் கொண்ட ஷோபாசக்தி, 1984 இல் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர். இயக்கம் தந்த கசப்பான அனுபவங்களால் 1986 இல் இயக்கத்திலிருந்து வெளியேறியவர். 1990களில் இந்திய ராணுவமும், விடுதலைப்புலிகளும் முட்டிக்கொண்ட சமயம் இலங்கை அரசு இவரைக் கைதுசெய்து சிறையில் அடைத்தது. இதன் பிரதியே 'ம்' நாவல்.

'ம்' நாவல் உண்மைச் சம்பவங்களும் புனைவும் கலந்த படைப்பு எனலாம். தனது மகளின் கர்ப்பத்திற்குக் காரணமான நேசகுமாரனின் கதையுடன் நாவல் தொடங்குகிறது. ஈழத்தில் போராளி அமைப்புகளுடன் தொடர்புபட்ட காரணங்களால் இலங்கை அரசப்படைகளினால் கைதுசெய்யப்பட்டு, சித்திரவதைப்படுதல், பின்னர் சிறையிலிருந்து தப்புதல், போராளிகளிடம் பிடிபடுதல் என்று தொடங்கிய கதை, இறுதியில் புகலிடத்தில் இன்னொரு இளைஞர் கூட்டத்தினரிடம் அகப்பட்டு சித்திரவதைப்படுதலோடு முற்றுப்பெறுகிறது.

இந்நாவலிலும் பேரினவாத ஒடுக்குமுறையின் விளைவுகளில் ஒன்றான வெலிக்கடைப் படுகொலைச் சம்பவங்களும், தமிழர்கள் மீதான இனவெறித் தாக்குதல்களும் விரிவாகப் பேசப்பட்டுள்ளன.

இதில் தொடக்க அம்சமே, நாவல் முழுக்க பரவியுள்ளது. நேசகுமாரன் இராணுவத்தினரிடம் கைது செய்யப்பட்டு சித்திரவதைப்படுதல், சிறிகாந்தமலர் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டு கொடூரமாகக் கொல்லப்படுதல், கலைச்செல்வன் தப்பியோடும் சந்தர்ப்பத்தில் பெற்றோர் முன்பாகவே சுட்டுக்கொல்லப்படுதல், பிடித்து வைக்கப்பட்டிருந்த சக போராளிகள் இன்னோரு போராளி அமைப்பில் கூட்டாகக் கொலைசெய்யப்படுதல் ஆகிய சம்பவத் திரட்டுக்கள் இந்நாவலில் பதிவாகியுள்ளன.




"விழாக் காலங்களில் தேவாலயத்தைச் சூழவும் தொங்கவிடப்படும் நிறங்கள் ஒளிரும் வெளிச்சக் கூடுகளைக் கடந்த நான்கு வருடங்களாகவே தமிழீழத்தின் சட்டம், ஒழுங்கு நீதி ஆகியன பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் சிறிலங்காவின் முப்படைகளிடமும் கையளிக்கப்பட்டதிலிருந்து சனங்கள் அவிந்துவிட்டிருந்தார்கள். அந்தத்தீவைச் சதாகாலமும் சுற்றித்திரியும் கடற்படைப் படகுகள் பெரும் வெளிச்சங்களைக் கண்டால் தீவுக்குள் நுழையக்கூடும் என அவர்கள் அச்சமுற்றிருந்தார்கள். ஒரு தெந்தெட்டான வெளிச்சத்தில்தான் மெசியா இன்று பிறக்கப் போகிறாள்" (2005:14).

ஈழத்தின் அரசியலையும், மக்கள் சமூகத்தின் உள்ளார்ந்த உளவியற் கூறுகளையும் இருவேறு தன்மைகளாகப் பிரித்துப் பார்க்கமுடியாது. இந்நாவல், ஆதிக்கத்துக்கெதிரான ஒரு போராட்டக் களத்தை முன்னிறுத்தி நிற்கவில்லை. மாறாக, ஆதிக்கத்தை தாங்கிக்கொள்ள முடியாத இயலாமையைப் பேசுகிறது. தான் உயிர் வாழ்வதற்காகத் தன் நண்பனை, எதிரியை, உறவுகளை இராணுவத்துக்குக் காட்டிக் கொடுத்து உயிர்வாழ முனையும் ஒருவனும் யார் தலை உருண்டாலென்ன தனது சுயநலத்துக்காக அனைத்தையும் வளைத்துப் போட முனையும் தந்தையும், தமிழ் மக்களின் வாழ்வியல், தனி ஈழம் ஒன்று உருவாகுமானால் அதில் சுதந்திரமானவொரு வாழ்வு கிடைக்கும் என்ற பெருவிருப்பால் மக்கள் தமது உடைமைகளை மட்டுமல்ல உடலையும் பங்களிக்கக் கூடச் செய்யும் அளவுக்குத் துணிந்த செயல்களை வியப்பாகக் காணுவதும், அதற்காகச் சிறை வாழ்க்கை, பாலியல் வல்லுறவு, சித்திரவதையென மனிதவதைக்குள்ளாகும் சமூகச்சிக்கலை மக்கள் எதிர்கொண்டேயாக வேண்டிய அரசியற் பொருளாதாரச் சூழலை உருவாக்கிய கட்சி அரசியலையும் நலனையும் இதனூடாகத் தோற்றம் பெற்ற ஆயுதக் குழுக்களின் வளர்ச்சியானது, பல்வேறுபட்ட அரச ஆதிக்கச் சக்திகளாகி மக்களைக் கொல்லும் இழிநிலையைச் சொல்லக்கூடிய ஒரு படைப்பாகிறது 'ம்.'

**பேரினவாத ஒடுக்குமுறை**

ஈழத்தமிழ் மக்களின் வதைகளைக் கற்பனைக்கெட்டாத வன்கொடுமைகளைச் செய்து முடித்த கொடூரங்கள் ஹிட்லரின் சர்வாதிகார ஆட்சி போலவே, இலங்கையில் சர்வாதிகாரத்தைப் பயன்படுத்திய அரசும், இராணுவமும் சிறையதிகாரிகளின் சர்வாதிகாரச் செயல்களும் இலங்கைத்

தமிழ் மக்களின் மீது, கட்டவிழ்த்து விடப்பட்ட காட்டுமிராண்டிகளின் கண்மூடித்தனமான செயல்களைச் செய்தார்கள். இவர்களது பார்வையில், இலங்கை அரசின் ஆட்சி அதிகாரத்தின் தலைமைக்காக எதையும் செய்யத் துணிந்தவர்களாக, சிறையதிகாரிகள் தயார்படுத்தப் பட்டுள்ளார்கள். இங்கு மனிதத்துவம் மண்ணில் கொலையும் குற்றுயிருமாகக் கிடைக்கிறது. 'ம்'அதை ஆழ்ந்த சோகத்தோடு சொல்ல முனைகிறது.

வெலிக்கடைச் சிறையில், வருத்தப்பட்டுச் சித்திரவதைகள் செய்து கொல்லப்பட்ட உயிர்களும், தாய் மண்ணிலேயே விலங்குகளைப் போல வேட்டையாடப்பட்ட உயிர்களும், தமிழ் பேசுவதால் மட்டும் தண்டனைக்கு உள்ளாகிக் கொல்லப்படுவதும் இந்தக் கொடூரங்களைக் கண்டு மனக்கொதிப்பு அடைந்த இளைய சமுதாயம், இனக்குழுக்களாக உருவம் பெற்று, இயக்கங்களாகப் பிரிந்து, தேசியப் பேரியக்கமாக இலங்கை மண்ணில், தன்னை நிலைநிறுத்திக் காட்டியது. இங்கு சிங்கள அரசும் விடுதலைப் புலிகள் இயக்கமும் முட்டி மோதிக்கொள்கின்றன. இந்த முரண்பாடுகள் தான் சிங்களப் பேரினவாத முதலாளித்துவத்துக்கும், சிறுபான்மை இனமாகக் கருதப்பட்ட ஈழத்தமிழ்ச் சமுதாயமானது, சிங்களவர்களுக்கு இணையாகத் தன்னைத் தகவமைத்துக் காட்டுவதும், தனிநாடு, தனிஈழம், தனிஆட்சி என்ற கொள்கை இலங்கை மக்களினங்களில் மிகப்பெரும் முரண்பாடாகத் தோற்றமுற்றன. இதுவே, இனப்படுகொலைச் செய்வதும் அதனூடாகத் தமிழ்மக்களை வருத்தும் இந்தக் கொடுமைகளுக்கு எதிராக, தமிழ்ச் சமூகத்தில் ஆயுதம் ஏந்திய குழுக்களாக வேறொரு வகையில் தோற்றம் பெறத் தொடங்கியது.

மனிதர்களைத் தினமும் வருத்துவதையும், அவர்களின் மனச் சிதைவுகளையும், தீராத சோகத்தையும், வேதனைகளையும், வடுக்களையும் சொல்வதற்கு ஷோபாசக்தி எடுதுக்கொண்ட களமாக, 'ம்' நாவல் இங்கு காட்சிப் படுத்தப் பட்டுள்ளது.

"நான் பதற்றத்துடன், எனது தொகுதியிலிருந்த மற்ற கைதிகளின் பெயர்களைக் கூவினேன். யாரும் எதையும் கேட்கும் நிதானிக்கும் சூழ்நிலையில் இல்லை. சீனா தன் நெற்றியை விரல்களால் கசக்கியவாறு விறுமனாக கால்களை அகல விரித்து நிற்கிறான். பக்கிரி கண்கள் குத்தி நிற்க, எங்கோயோ பார்க்கிறான். நான் மறுபடியும், ஜன்னலில் ஏறிப்பார்த்தபோது, B3 தொகுதியிலிருந்து கைதிகள் வெளியே பொதுக்கூடத்துக்கு இழுத்து வரப்பட்டு வெட்டப்படுகிறார்கள். சுரேஷ் மாஸ்டரின் தலையில் கண்டக் கோடாரி வெட்டு விழுகிறது. உதயசீலனும் சுதாகரனும் ஏற்கனவே கொல்லப்பட்டு, பொதுக்கூடத்துக்கு அவர்களின் உடல்கள் இழுத்து வரப்பட்டன. கொழும்பானை அவர் திமிரத்திமிர இழுத்து வந்து அவுடாவின் பிரேதத்தின் மீது தள்ளுகிறார். D3 தொகுதியிலிருந்து சிங்களக் கைதிகள் வெளியே ஓடிவந்தார்கள். அவர்களின் உடல்களிலிருந்தும் இரத்தம் வடிகிறது. மறுபடியும் உள்ளே ஓடுகிறார்கள். உள்ளேயிருப்பவர்கள் சிங்களக் கைதிகளை எதிர்த்துத் தாக்குகிறார்களா? இறுதியில் ஜெயவேவா கோசங்களுடன் ஆறு உடல்களை குற்றுயிரும் குலை உயிருமாக பொது மண்டபத்துக்கு இழுத்து வருகிறார்கள்". *(2005:81)*

இந்நாவலில், *1983* ஜூலை *25-27* ஆம் தேதிகளில் இலங்கை அரசாங்கம் வெலிக்கடை சிறையில் நடத்திய கொலை ஆவணமாக்க வேண்டும் என்ற நோக்கத்தில் இந்நாவலைப் படைத்துள்ளார். மற்றொரு புறத்தில், தமிழ்ப்போராளிகள் பற்றிய வீரம், தியாகம், இலட்சியம் போன்றவற்றையும் சித்தரிக்கின்றன. 'ம்' இலங்கைப் பேரினவாத அரசின் ஒடுக்குமுறையின் விளைவுகளில் ஒன்றான, வெலிக்கடைப் படுகொலைச் சம்பவங்களும், தமிழரின் மீதான இனவெறித் தாக்குதல்களும் விரிவாகப் பதிவாகியுள்ளன.

**முடிவுரை**

'ம்' நாவலூடாக விரிந்து வருகின்ற பாத்திரங்களோடு ஷோபாசக்தி அனுபவித்த, அறிந்தவை, பட்டவை, பார்த்தவை என்று தன் வாழ்வில் நிகழ்ந்த உண்மை நிகழ்வுகளை, தமது அனுபவங்களை நாவலில் குறியீடாக விரித்துக் கொள்கின்றன. மனிதவாழ்வு, அனுபவப்பட்ட வாழ்விலிருந்து தன்னை மீட்டுருவாக்கம் செய்து கொண்டே ஒருதிசை வழி நோக்கியவொரு பயணத்தைச் செய்கிறது. இதுவரை, ஈழத்தமிழர் அனுபவித்த துயரக் கொடுமையை, துன்பக்கொடுமையை வாழ்வியல் அழிவுகளை சமூகச்சிதறலை சமுதாயத்தின் உடைவைச் சொல்கின்ற ஒரு படைப்பாக அவர்கள் வாழ்ந்த - வாழும் வாழ்வை, அதன் நிசத் தன்மையோடு, குரூரம் படர்ந்த போர்க்கால வாழ்வை, தோழமையைத் துச்சமாகத் தரித்த கோழைத்தனத்தை, அதன் மொழியூடே மனித அழிவைச் சொல்லுகிறது 'ம்.' மனிதகோசமாகவும், போரின் களமாகவும் நம் கண்முன் விரிந்த படைப்பாகக் காட்சிப்படுத்துகிறது.

**துணைமைச் சான்றுகள்**


1. அருளர் - லங்காராணி, வெளியீட்டுக்குழு - ஈழப்புரட்சி அமைப்பு (EROS) யாழ்ப்பாணம், 1978.
2. உதயணன். எஸ்.ஏ - தெம்மாடுகள் - திருப்புமுனை வெளியீடு, மன்னார், 2009.
3. கந்தையா முருகதாசன் - செங்கைஆழியான் நாவல்கள், இலக்கியப் பேரவை வெளியீடு,2006.
4. சின்னத்துரை.மு - இலங்கைத் தமிழர்கள் வாழ்வில் சாதனைகளும் சோதனைகளும், குட்புக்ஸ் பப்ளிகெஷன், சென்னை,2014.
5. யோகராசா.செ - ஈழத்துத் தமிழ் நாவல் வளமும் வளர்ச்சியும், குமரன் புத்தக நிலையம், கொழும்பு, 2010
6. ஷோபாசக்தி - 'ம்' கருப்புப் பிரதிகள், சென்னை - 2005.


●


(கட்டுரையாளர், ஆய்வாளர்,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.)

# நெஸ்லிங் வெளியீடாக உலகப் புகழ்பெற்ற சிறார் கதைகள்

(ஒவ்வொன்றும் தலா ரூ.110)




























**நெஸ்லிங் புக்ஸ் பப்ளிஷிங் அன்ட் டிஸ்ட்ரிபியூட்டர்ஸ் (பி) லிட்.,**
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.
☎ 044 - 26251968, 26258410, 48601884 | www.ncbhpublisher.in | email: nestlingbooks@gmail.com

கட்டுரை

# உங்கள் குழந்தையின் எடை அதிகமாக உள்ளதா?



மருத்துவர் ப.வைத்திலிங்கம்

முப்பது ஆண்டுகளுக்கு முன் சத்துக் குறைபாடு காரணமாக, நோஞ்சான் குழந்தைகளும், சவலைக் குழந்தைகளும் பெருமளவில் இருந்த நிலை மாறி, குறைந்து வரும் நிலையில், தற்போது அதிகமான குழந்தைகள் அதிக எடை மற்றும் உடல் பருமன் பிரச்சினையால் அவதிப்படுகிறார்கள். பொருளாதாரத்தில் மேல்தட்டு மக்களிடம் அதிகமாகக் காணப்பட்டு வந்த உடல் பருமன் தற்போது நடுத்தர வர்க்கத்தினரையும், கீழ்தட்டு மக்களையும் விட்டு வைக்கவில்லை.

குழந்தைகளுக்கு உள்ள எடை என்பது அவர்களின் வயது மற்றும் பாலினம் பொறுத்து வேறுபடும். சிறு வயதில் எடை அதிகமாக உள்ள குழந்தை பின்னாளிலும் அதே அதிக எடையுடன்தான் வாழ வேண்டியுள்ளது. குழந்தைகள் அதிக எடை மற்றும் உடல் பருமனுடன் இருப்பதற்கு இரண்டு முக்கிய காரணங்கள்தான். முதல் வகை, அவர்களுக்கு உள்ள மரபணு மற்றும் பிறவிக் கோளாறுகள். இரண்டாவது வகை உணவுப்பழக்க மாற்றத்தால் உடலில் கொழுப்பு சேர்ந்து விடுவது. இந்தக் கட்டுரையில் நாம் இந்த இரண்டாவது வகையைப் பற்றிதான் பார்க்கப் போகிறோம்.

"வீட்டில் உள்ள துரித உணவுகளையும், எனர்ஜி பானங்களையும் குழந்தைகள் பார்க்கும்படி தூக்கிக் குப்பையில் போடுங்கள்."

**இன்றைய நிலை**

இன்றைய தினம் உலகம் முழுவதும் 80 கோடி மக்கள் அதிக எடை அல்லது உடல் பருமன் பிரச்சினையால் அவதிப்படுவதாகவும் அவர்களில் 40 லட்சம் பேர் ஆண்டுதோறும் உடல் பருமனால் வரும் பின் விளைவுகளால் இறப்பதாகவும் உலக சுகாதார நிறுவனத்தின் புள்ளி விபரம் சொல்லுகிறது. 5 முதல் 19 வயது வரையிலான குழந்தைகளில் 1975இல் 4 சதவீதம் பேர் அதிக எடை மற்றும் உடல் பருமனால் பாதித்திருந்த நிலையில் 2016இல் அதுவே 18 சதவீதமாக உயர்ந்தது. இன்றைய நிலை அதைவிடவும் பல மடங்கு இருக்கும். 2030இல் உலகம் முழுவதும் இருக்கும் உடல் பருமனான குழந்தைகளில் 10இல் ஒருவர் நம் இந்தியக் குழந்தையாக இருக்கும் என்று WHO கணிக்கிறது.

இந்த 21ஆம் நூற்றாண்டில் தொற்றுக் கிருமிகளால் வரும் வியாதிகள் குறைவாகவும், வாழ்வியல் நோய்கள் அதிகமாகவும் ஆகிவிட்டன. இந்த உடல் பருமன் என்னும் வாழ்வியல் பிரச்சினை அனைத்து வளர்ந்த நாடுகளிலும், வளரும் நாடுகளிலும் கடந்த 20-30 ஆண்டுகளாக மெல்லப் பரவி காலூன்றி விட்டது. உலகம் முழுக்கவும் பஞ்சம், பட்டினியால் இறப்பவர்களைக் காட்டிலும் உடல் பருமனின் பின்விளைவுகளால் இறப்பவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். அனைத்து வாழ்வியல் நோய்களுக்கும் அடிப்படை உடல் பருமன்தான்.

**அதிக உடல் எடையை எப்படித் தீர்மானிப்பது?**

ஒரு நபரின் உடலில் இயல்பை விட அதிகப்படியாகவும், தேவையற்றும் கொழுப்புச்சத்து சேர்ந்து அதனால் அவரின் ஆரோக்கியம் பாதிக்கப்படுமானால் அவர் அதிக எடை மற்றும் உடல் பருமன் பிரச்சினையில் உள்ளதாகக் கூறலாம். ஒருவர் உடல் பருமன் பற்றித் தெரிந்து கொள்ள அவரின் உயரம், எடை, மற்றும் இடைச் சுற்றளவு தெரிந்தால் அவர் இயல்பாக உள்ளாரா அல்லது அதிக எடையுடன் உள்ளாரா என்றும் எளிதில் கணக்கிட்டு விடலாம். எப்படிக் கணக்கிடுவது என்று பார்ப்போம்.

**உடல் நிறை குறியீட்டு எண் *(BODY MASS INDEX).***

சர்வதேச உடல் பருமன் பணிக்குழு *(INTERNATIONAL OBESITY TASK FORCE)* வின் பரிந்துரையின்படி ஒருவர் தன் உயரத்திற்கேற்ற எடையுடன் ஆரோக்கியமாக உள்ளாரா என்பதை அறிய முதலில் நாம் அவரின் 'உடல் நிறை குறியீட்டு எண்' (BMI) என்னவென்று கண்டுபிடிக்க வேண்டும். இதற்கு அவரின் எடையை (கிலோகிராமில்), உயரத்தின் (மீட்டரில்) ஸ்கொயரால் வகுத்தால் வரும் எண் அவரின் 'உடல் நிறை குறியீட்டு எண்' அல்லது BMI ஆகும்.

உலக சுகாதார நிறுவனத்தின் பரிந்துரையின்படி ஒருவருக்கு உடல் நிறை குறியீட்டு எண் 25 க்கு மேல் இருந்தால் 'அதிக எடை' என்றும் 30 க்கு மேல் இருந்தால் 'உடல் பருமன்' என்றும் கூறலாம். அதுவே அவருக்கு 18.5 லிருந்து 25 வரையிலும் இருக்கும்போது அவர் இயல்பான எடையும் உயரமும் இருப்பவராகக் கருதலாம். இந்தியர்கள் உள்பட அனைத்து ஆசியக் கண்டத்தவர்களுக்கும் அதிகமான கொழுப்பு வயிற்றுப் பகுதியில் சேருவதால், இவர்களுக்கான உடல் நிறை குறியீடு 23 க்கு மேல் 'அதிக எடை' என்றும் 28 க்கு மேல் ''உடல் பருமன்' என்றும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

**இடைச் சுற்றளவு *(WAIST CIRCUMFERENCE)***

ஒருவரின் இடைச் சுற்றளவை மட்டுமே கொண்டு அவர் பருமனாக உள்ளாரா இல்லையா என்றும் சொல்லி விடலாம். ஆண்களுக்கு இடைச் சுற்றளவு 102 செ.மீக்கு அதிகமாகவும், பெண்களுக்கு 88 செ.மீக்கு அதிகமாகவும் இருந்தால் அவர்கள் பருமனாக உள்ளவராகக் கருதலாம். பெரும்பாலானவர்களுக்கு உடலின் நடுப்பகுதி மட்டும் பருமனாவதால் கை, கால்கள் மெலிந்தும் வயிற்றுப் பகுதி பெருத்தும் காணப்படுகிறது. இதை 'இரண்டு தீக்குச்சிகளுக்கு மேலே இருக்கும் எலுமிச்சை' (LEMON ON MATCHSTICKS) போன்ற பருமன் என்கிறார்கள்.

**என்ன காரணங்களால் குழந்தைகள் பருமனாகி விடுகிறார்கள்?**

இன்றைய குழந்தைகளின் உணவுப் பழக்கத்தில் நிறைய மாற்றங்களைக் காண்கிறோம். மனிதனின் ஆரோக்கியத்திற்குத் தேவை சத்தான உணவு என்ற நிலைமை மாறி உணவுப் பழக்கமே மனிதர்களின் தகுதியின் அடையாளமாகவும் (STATUS SYMBOL) அவர்களின் வாழ்க்கை முறையை வெளிப்படுத்தும் பொருளாகவும் மாறிவிட்டது. உணவுப் பண்டங்கள் வணிகப்பொருளாகி, விளம்பரங்கள் மூலம் குழந்தைகளை இலக்காக்கி

இழுக்கும்போது குழந்தைகளும் அவர்களின் பெற்றோர்களும் அடிமையாகி விடுகிறார்கள். இங்கே சந்தைப்படுத்தப்படும் உணவுகளில் கலோரிகள் அதிகம். ஆனால் சத்துக்கள் குறைவு. ஆம் வெற்றுக் கலோரிகள்தான்!

நாம் உண்ணும் உணவு செரித்து, உடலுள் கிரகித்து அதன் எரிபொருள்கள் உடலின் வளர்சிதை மாற்றத்தில் பங்கெடுத்தது போக மீதி உள்ள கலோரிகள் கொழுப்பாக மாறி உடலில் தங்கி விடுகிறது. நாம் எடுத்துக்கொள்ளும் உணவின் கலோரிகளும் உடலின் அன்றாட எரிசக்தித் தேவையும் சமநிலையில் இருக்கும்போது கொழுப்பு சேருவதில்லை. தினம் தினம் தேவைக்கு அதிகமாகக் கொஞ்சம் கொஞ்சமாக அதிகப்படியான கலோரிகள் உள்ளே போகும்போது அது கொழுப்பாக மாறித் தங்கி விடுகிறது.

நவீன கால வாழ்வியல் மாற்றங்களினால் ஓடி விளையாடிய குழந்தைக்கு, உட்கார்ந்து கொண்டு வீடியோ கேமும் தொடு திரையும்தான் வாழ்க்கை என்றாகிவிட்டதால் உணவில் உள்ள எரிசக்திக்கு வேலையில்லாமல் கொழுப்பாக மாறி உடலில் சேர்கிறது. ஓடுவதும் நடப்பதும் குறைந்து இரண்டு, நான்கு சக்கர வாகனங்களில் பயணம் என்பதால் மேலும் கொழுப்பு சேரும் நிலைமை வந்து விடுகிறது.

**உடல் பருமனாக இருப்பதால் வரும் விளைவுகள்**

பதினைந்து வயதில் எடை அதிகமாகி உடல் பருமனால் அவதிப்படும் குழந்தைக்கு 30 வயது ஆகும்போது அனைத்து வாழ்வியல் நோய்களும் எட்டிப் பார்க்கின்றன. உடல் பருமனால் அவதிப்படும் குழந்தைகளுக்கு ஏற்படும் விளைவுகளை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். ஒன்று, உடனடி விளைவுகள். இரண்டு, நீண்ட கால மாற்றங்கள்.

**உடனடி விளைவுகள்.**

பள்ளி செல்லும் உடல் பருமனான குழந்தைகள், சக மாணவர்களின் கேலி, கிண்டலுக்கு ஆளாகி தன்னம்பிக்கை இழந்து படிப்பில் ஆர்வம் குறைந்து போகிறார்கள். தன் உடல் எடையைத் தாங்க முடியாமல் கைகால் வலி, மூட்டுவலி என உடல் உபாதைகள் வந்து விடுகின்றன. விளையாடுவதையும், படிகளில் ஏறுவதையும் தவிர்த்து வாழ ஆரம்பித்து விடுகிறார்கள். தூக்கமின்மை, குறட்டை, ஆஸ்துமா, மூச்சுத்திணறல் என ஒன்றன்பின் ஒன்றாகப் படையெடுக்கின்றன. இரத்தத்தில் உள்ள கொழுப்புச் சத்துக்களின் விகிதங்களும், சர்க்கரைச் சத்தின் விகிதமும் மாறிப் போய் சிறுவயதிலேயே சர்க்கரை வியாதிக்கும் இருதய வியாதிக்கும் வழிவிட வேண்டிய நிலைமைக்குத் தள்ளப் படுகிறார்கள்.

**நீண்டகால விளைவுகள்.**

உடல் பருமன் உடலில் உள்ள அனைத்து உறுப்புகளையும் பாதித்து விடுகிறது. சர்க்கரை வியாதி, இருதய நோய்கள், கல்லீரலில் கொழுப்பு சேருதல், இரத்த நாளங்களில் அடைப்பு, எலும்பு மூட்டு தேய்மானம், குழந்தையின்மை, மூச்சுத்திணறல், ஆஸ்துமா, தூக்கமின்மை, மன நோய் என அவரவர் மரபணுவுக்கும் சூழலுக்கும் ஏற்ப வந்து விடுகின்றன.

**எப்படித் தடுக்கலாம்?**

நம் எல்லோருக்கும் உடல் எடையை எப்படிக் குறைப்பது என்பது தெரியும். ஆனாலும் நடைமுறைப்படுத்துவது மிகவும் கடினமாக இருக்கிறது. வாழ்க்கை முறையில் மாற்றம் செய்தால் ஒழிய இந்த வாழ்வியல் நோயை வெல்ல முடியாது. பொதுவாகவே உடலில் அதிக எடையும் உடல் பருமனும் அடைய எவ்வளவு காலம் ஆனதோ அதே அளவு காலம் உடல் எடையைக் குறைக்கவும் ஆகும். இங்கே எந்தக் குறுக்கு வழியும் வேலை செய்வதில்லை.

நாம் அதிகப்படியாக உண்ணும் உணவுகள் அனைத்தும் கடைசியில் கொழுப்பாக மாறி உடலில் படிந்து விடுகிறது. உடலில் சேர்ந்த கொழுப்பைக் கரைக்க வேண்டுமானால் முதலில் உணவு வழியாக உடலில் சேரும் கொழுப்பைக் குறைக்க வேண்டும். அதேநேரம் சேர்ந்த கொழுப்பையும் எரிசக்தியாக்கி நாம் உபயோகித்து விட வேண்டும். சோம்பேறி வாழ்வில் இருந்து விடுபட்டு, சுறுசுறுப்பான வாழ்க்கை முறைக்கு மாற வேண்டும்.

**வீட்டில் நாம் என்ன செய்யலாம்?**

வீட்டில் குழந்தைகள் ஓடியாடி விளையாடுவதை ஊக்குவிக்க வேண்டும். உட்கார்ந்தபடியே தொலைக்காட்சியும், கைபேசியும், வீடியோ கேமும்தான் வாழ்க்கை என்று இருக்கக் கூடாது. இரண்டு வயது முடியும் வரையிலும் குழந்தைகளுக்கு எலக்ட்ரானிக் திரைகள் எல்லாம் தேவையில்லை. இரண்டு வயதிலிருந்து ஒன்பது வயது வரை தேவையிருப்பின் தினம் 30 நிமிடம் மட்டும் பெற்றோர்களின் மேற்பார்வையில் கொடுக்கலாம். குழந்தைகள் ஒரு நிமிடம் டெலிவிஷன் பார்த்தால் அதில் 4 முறை சர்க்கரையும், உப்பும் கலந்த எனர்ஜி பானங்களையும் துரித உணவுகளையும் காட்டிப் பெருமையாகப் பேசுகிறார்கள். அவைகள்தான் சிறந்த உணவு என்று மூளைச்சலவை செய்கிறார்கள். ஆனால் உண்மை அப்படி இல்லை. வீட்டில் உள்ள துரித உணவுகளையும், எனர்ஜி பானங்களையும் குழந்தைகள் பார்க்கும்படி தூக்கிக் குப்பையில் போடுங்கள்.

குழந்தை 2 வயதில் எவ்வளவு எடையும் உயரமும் இருக்கிறதோ அதைப் பொறுத்துதான் பின்னாளில் அவர்களின் வளர்ச்சியும் எடையும் இருக்கப் போகிறது. இரண்டு வயதில் குண்டாக இருக்கும் குழந்தை அதே பாதையில்தான் பயணிக்கும். இதைத் தவிர்க்க முதல் 6 மாதம் கட்டாயம் தாய்ப்பால், வீட்டிலேயே தயாரித்த இணை

உணவுகள், ஃபார்முலா உணவுகளைத் தவிர்த்தல் போன்ற குழந்தைநேய வளர்ப்பு முறைகளைப் பின்பற்ற வேண்டும். கைபேசியைக் காண்பித்து குழந்தைகளுக்கு சோறு ஊட்டத் தேவையில்லை. குழந்தைகள் எடை அதிகமாக இருக்கும்போது அடுத்த இரண்டு ஆண்டுகள் எடை அதிகம் ஏறாமல் இருந்தாலே இயல்பு நிலைக்கு வந்து விடுவார்கள்.

**வளரும்**

எக்காரணம் கொண்டும் காலை உணவைத் தவிர்க்கக் கூடாது. வீட்டில் உள்ளவர்கள் அனைவரும் சேர்ந்து உண்ணும் பழக்கம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். உணவு வேளைக்கு இடையில் தின்பண்டங்களும், நொறுக்குத் தீனிகளும், பழச்சாறுகளும் பானங்களும் தேவையில்லை. சில நேரங்களில் வாழ்க்கை போரடித்தாலும், மன இறுக்கத்தில் இருந்தாலும் கூட தின்பண்டங்களில் நாட்டம் வந்து விடும். பொழுதுபோக்குக்காக நண்பர்களுடன் உணவு விடுதிக்குப் போகும் பழக்கத்தை விட்டு விளையாட்டு, உடற்பயிற்சி என மாற்றிக் கொள்ளலாம்.

ஆரோக்கியமாகத் தூங்கும் பழக்கம் தேவை. தூக்கம் குறைவாக இருக்கும் குழந்தைகள் குண்டாக இருப்பதாக ஒரு ஆய்வு தெரிவிக்கிறது. அதுபோல தூங்கப்போகும் முன்னர் 30 நிமிடங்களுக்கு முன்னரே எல்லா எலக்டிரானிக் சாதனங்களையும் மூடி விட வேண்டும். இரவுச் சாப்பாட்டைத் தாமதமாகச் சாப்பிட்டுத் தூங்கும்போது உணவு செரித்து எரிசக்தியாகும் நிலை இல்லாததால் கொழுப்பாக மாறி உடலில் சேர்ந்து விடுகிறது.

**பள்ளியில் என்ன செய்யலாம்?**


குழந்தைகளுக்கு பள்ளியிலும் அதிகப்படியான கலோரிகள் போவதைத் தடுக்க வேண்டும். பள்ளி செல்லும் குழந்தைக்கு வீட்டில் தயாரித்த உணவே போதும். பேக்கரி ஐட்டங்களும், துரித உணவுகளும் தேவையில்லை. பள்ளிக்கூட வளாகத்திலேயே எனர்ஜி பானங்களும், தின்பண்டங்களும் கிடைக்காதவாறு செய்யலாம். தினம் குறைந்த பட்சம் ஒரு மணி நேரமாவது தொடர்ந்து விளையாடி உடலில் சேர்ந்துள்ள கொழுப்பைக் கரைத்துக் குறைக்க குழந்தைகளுக்கு விளையாட்டில் ஆர்வத்தை உண்டு பண்ண வேண்டும்.

உடல் பருமனும் அதன் விளைவாக சர்க்கரை நோயும், இருதய நோய்களும் பெருந்தொற்று போல் பரவுவதற்கு முன்னர் அனைவரும் விழித்தெழுந்து குழந்தைகளின் உடல் பருமனைத் தடுப்போம். அவர்களுக்கு வளமான எதிர்காலத்தை உண்டுபண்ணுவோம்!

●

(கட்டுரையாளர், எழுத்தாளர், குழந்தை மருத்துவ நிபுணர்.)

## வாழ்த்துகள்



சாகித்திய அகாதெமியின்
2019ஆம் ஆண்டுக்கான
**'பாஷா சம்மான்'** விருது தமிழறிஞர்
அ.தட்சிணாமூர்த்தி அவர்களுக்கு
அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்ப் பேராசிரியர், நூலாசிரியர்,
ஆய்வாளர், மொழிபெயர்ப்பாளர்,
சங்க இலக்கிய மொழிபெயர்ப்பு
முன்னோடி எனப் பன்முகச்
செயல்பாட்டாளரான தமிழறிஞர்
**அ.தட்சிணாமூர்த்தி**
அவர்களுக்கு நியூ செஞ்சுரியின்
உங்கள் நூலகம்' வாழ்த்துகளைத்
தெரிவித்துக்கொள்கிறது.




# இந்திய அரசமைப்புச் சட்டத்தைக் காப்பாற்ற வேண்டும்

## தொல்.திருமாவளவன்

எஸ்.வி.ராஜதுரையின் மொழிபெயர்ப்பில் நியூ செஞ்சுரி புத்தக நிறுவன வெளியீடாக 'இந்திய அரசமைப்பு அவையில் அண்ணல் பி.ஆர்.அம்பேத்கர் ஆற்றிய உரை (நவம்பர் 25- 1949) எனும் சிறுநூலை 18.03.2023 அன்று சென்னையில் வெளியிட்டு பாராளுமன்ற உறுப்பினர் தொல்.திருமாவளவன் அவர்கள் ஆற்றிய உரை.

உடல்நிலை சீராக இல்லாத நிலையிலும்கூட நீலகிரி மாவட்டத்திலிருந்து நெடுந்தூரம் பயணம் செய்து வந்திருக்கிறார் பெருமதிப்பிற்குரிய தோழர் எஸ்விஆர் அவர்கள். அவர் இருந்தால்தான் இந்த நூலை வெளியிடுவது சிறப்பு. அவர் இல்லாமலேகூட வெளியிடுமாறுதான் கேட்டுக்கொண்டார். ஆனால் எவ்வளவு எளிமையான நிகழ்வாக இருந்தாலும் அவர் நம்மோடு இருக்கவேண்டும் என்று நான் என்னுடைய விருப்பத்தைத் தெரிவித்தேன். அதன்படி அவர் பயணம் செய்ய இயலாத நிலையிலும்கூட பயணித்து வந்து ஏற்புரை ஆற்றியிருக்கிறார்.

தமிழாக்கம் செய்து தமிழ்ச்சமூகத்திற்குக் கொடையளித்திருப்பதற்காகவும் இந்த எளிய நிகழ்வில் வருகை தந்து ஏற்புரை நிகழ்த்தியதற்காகவும் தோழர் எஸ்விஆர் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

தோழர் சாமுவேல்ராஜ் அவர்கள் இந்த உரையில் புரட்சியாளர் அம்பேத்கர் என்ன சொல்லியிருக்கிறார் என்பதைக் குறிப்பிட்டார், எத்தகைய நெருக்கடிகளையெல்லாம் அவர் கடந்து இதைப் படைத்திருக்கிறார் என்பதையும் பதிவு செய்தார். தோழர் எஸ்விஆர் அவர்கள் நீண்ட நேரம் பேசக்கூடியவர்தான். ஆனாலும் நீங்கள் பேசவேண்டும் என்பதற்காக நான் ஒரே நிமிடத்தில் முடித்துக்கொள்கிறேன் என்று சுருக்கமாக உரையை முடித்துக்கொண்டார்.

இப்போது நாடாளுமன்றம் இருப்பதைப்போல அப்போது நாடாளுமன்றம் தனியாக இல்லை. அரசியல் நிர்ணய சபை இருந்தது. அதற்கு குடியரசுத்தலைவர்தான் தலைவர். அரசியல் நிர்ணய சபை என்பதைத்தான் ஆங்கிலத்தில் *constituent assembly* என்று சொல்வார்கள். அதற்கு உறுப்பினர்கள் வாக்களித்து தேர்ந்தெடுக்கப்படுவார்கள். அப்படி புரட்சியாளர் அம்பேத்கரும் தேர்தலில் நின்று வெற்றி பெற்று அரசியல் நிர்ணய சபை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் ஒருவர்.

அந்த அரசியல் நிர்ணய சபையிலிருந்து தனியே ஒரு அவை உருவாக்கப்பட்டது. அதுதான் *drafting commitiee* இந்தியாவுக்கு அரசியலமைப்புச் சட்டத்தை எழுதுவதற்கென்று ஒரு வரைவுக்குழு உருவாக்கப்பட்டது. அந்த வரைவுக்குழுவின் தலைவராக புரட்சியாளர் அம்பேத்கர் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் அரசியல் நிர்ணய சபை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதால்தான் அரசியல் சட்டத்தை எழுதுவதற்கான வரைவுக்குழுவில் இடம் பெறுவதற்கான வாய்ப்பு கிடைத்தது.

பட்டியல் சாதிப்பிரிவினரின் நலனைப் பாதுகாப்பதைத் தவிர வேறு எந்தப் பெரிய ஆர்வத்துடனும் நான் அரசமைப்பு அவைக்குள் வரவில்லை. நான் தேர்தலில் நின்று வெற்றிபெற்று அரசமைப்பு அவைக்குள் வருவதற்கு ஒரே ஒரு காரணம்தான் இருந்தது. எஸ்சி, எஸ்டி மக்களுடைய பிரச்சினையை அங்கே வந்து பேசவேண்டும். அது மட்டும்தான் எனக்கு ஆர்வமாக இருந்தது. அதைத்தவிர வேறு பெரிய ஆர்வம் எனக்கு இல்லை என்று அவர் பதிவு செய்கிறார்.

எனது நண்பர் சர் அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர் போன்ற என்னைவிடப் பெரிய சிறந்த மேலதிகத் திறமை வாய்ந்தவர்கள் வரைவுக்குழுவில் இருந்தனர். என்மீது இந்தளவு நல்லெண்ணத்தையும் நம்பிக்கையையும் வைத்து என்னை அவர்களுடைய கருவியாகத் தேர்ந்தெடுத்து நாட்டுக்குத் தொண்டாற்றும் வாய்ப்பைக் கொடுத்த அரசமைப்பு அவைக்கும் வரைவுக்குழுவுக்கும் நான் நன்றியுள்ளவனாக இருப்பேன் என்று புரட்சியாளர் அம்பேத்கர் குறிப்பிடுகிறார்.

மேலும் எனக்குக் கொடுக்கப்பட்டுள்ள பெருமை உண்மையில் எனக்குரியதல்ல என்றும் கூறுகிறார். ஏற்கெனவே அரசியலமைப்புச் சட்டம் தயாரிக்கப்பட்டு அதை ஆய்வு செய்து விரிவுபடுத்துவதோ, சுருக்குவதோ அல்லது விரிவுபடுத்துவதோ மேம்படுத்துவதோ போன்ற பணிதான் வரைவுக்குழுவுக்குத் தரப்பட்டது. அதற்கு முன்பு ஒரு டிராப்ட் கான்ஸ்டிடியூசன் எழுதப்பட்டிருக்கிறது. அதனை எழுதியவர் பி.எம். ராவ். அவர் அரசமைப்புச் சட்டத்தினுடைய சட்ட ஆலோசகராக இருக்கிறார்.

அதுதான் அடிப்படையான கருப்பொருள். அதனை வடிவமைத்துக் கொடுத்தவர் சர் பி.எம்.ராவ்.உண்மையிலே பாராட்டுக்கும் பெருமைக்குமுரியவர் சர் பி.எம். ராவ் அவர்கள்தான் என்று நன்றியுணர்வோடு பதிவு செய்கிறார்.

அவருக்கு மட்டுமல்லாமல் அரசியலமைப்புச் சட்டத்தில் சிறப்பான ஆலோசனைகள் வழங்கிய எஸ்.என்.முகர்ஜி அவருடைய பங்களிப்பு மகத்தானது என்றும் குறிப்பிடுகிறார். இன்னொருபுறம் அரசியல் நிர்ணய சபையிலும் வரைவுக்குழுவிலும் காங்கிரஸ் கட்சி இடம் பெற்றிருந்தது பலவகையில் பேருதவியாக அமைந்தது. அவர்கள் இடம் பெற்றதால்தான் திசை மாறாமல் குழப்பங்கள் உருவாகாமல் இயல்பாகச் சென்றதற்குக் காரணம் காங்கிரஸ் கட்சி இதில் இடம் பெற்றதுதான். அதனால் காங்கிரஸ் கட்சிக்கும் நன்றி என்றும் அம்பேத்கர் குறிப்பிடுகிறார்.

முழுதாக நிறைவேற்றி வரைவு அறிக்கையாக விவாதத்துக்கு முன்வைக்கப்பட்டபோது சிலபேர் கடுமையான விமர்சனங்களை செய்தார்கள். அவர்களையெல்லாம் கலகக்காரர்கள் என்று அம்பேத்கர் சொல்கிறார்.

அரசமைப்பு அவையின் நடவடிக்கைகள் கட்சிக் கட்டுப்பாட்டு விதிக்கு உட்பட்டிருந்தால் மந்தமானதாக இருந்திருக்கும். எல்லாவிதமான இறுக்கங்களையும் கொண்டுள்ள கட்சிக் கட்டுப்பாடு இந்த அவையை ஆமாம் சாமிகளின் கூட்டமாக மாற்றியிருக்கும். நல்வாய்ப்பாக கலகக்காரர்கள் இருந்தார்கள். திரு.காமத்.முனைவர் பி.எஸ்.தேஷ்முக். திரு.சித்வா, பேராசிரியர் சக்சேனா பண்டிட் தாகூர்தாஸ் பார்கவா. அவர்களோடு பேராசிரியர் கே.டி.ஷா, பண்டிட் ஹிர்தய்நாத் குன்ஸ்ரு ஆகியோரையும் சேர்த்துக்கொள்ள வேண்டும். இவர்களெல்லாம் கலகக்காரர்கள். இவர்களெல்லாம் பிரச்சினை செய்து கிரிட்டிஸிஸம் செய்தார்கள்.

பெரும்பாலும் அவர்கள் எழுப்பிய பிரச்சினைகள் கருத்துநிலை சார்ந்தவை ஆகும். அவர்களுடைய ஆலோசனைகளை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கவில்லை என்பதன் பொருள் அவர்களின் ஆலோசனைகளின் மதிப்பைக் குறைப்பதோ அல்லது அவை நடவடிக்கைகளை உயிரோட்டமுள்ளதாக ஆக்குவதில் அவர்களின் சேவையைக் குறைத்துவிடுவதல்ல, அவர்களுக்கு நான் நன்றிக்கடன் பட்டுள்ளேன். அவர்கள் இல்லாமல் இருந்திருந்தால் அரசமைப்புச் சட்டத்திற்கு அடிப்படையாக உள்ள கோட்பாடுகளை இயந்திரகதியில் அரசமைப்புச் சட்டத்தை நிறைவேற்றுவதைவிட முக்கியமாக இவற்றை விளக்குவதற்கு வாய்ப்பு எனக்குக் கிடைத்திருக்காது.

அவர்கள் இப்படி பிரச்சினை செய்து குழப்பத்தை உருவாக்கியதால்தான் அமைப்பினுடைய

அடிப்படைக் கோட்பாடுகளில் என்னால் கவனம் செலுத்த முடிந்தது. செழுமைப்படுத்த முடிந்தது. கூடுதலாக விவாதிப்பதற்கான வாய்ப்பும் கிடைத்தது. இதுபோல குயுக்தியாக செயல்படுபவர்களைக்கூட பாஸிட்டிவாக எடுத்துக்கொள்கிற தன்மை புரட்சியாளர் அம்பேத்கரிடம் இருந்ததை அவர் பதிவு செய்கிறார்.

எனவே அரசமைப்புச் சட்டத்தின் தகுதிகளைப் பற்றி சொல்வதற்கு முனையமாட்டேன், ஓர் அரசமைப்புச் சட்டம் எவ்வளவு நல்லதாக இருந்தாலும் அவை செயல்படுத்த அழைக்கப்பட்டவர்கள் (ஆட்சிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்) மோசமானவர்களாக இருந்தால் அதன் விளைவும் மோசமானதாகவே இருக்கும் என்று நான் கருதுகிறேன். அதேபோல ஒரு அரசமைப்புச் சட்டம் எவ்வளவு மோசமானதாக இருந்தாலும் அதனை செயல்படுத்த அழைக்கப்பட்டவர்கள் நல்லவர்களாக இருப்பின் நன்மையே விளையும் என்கிறார்.

அரசமைப்புச் சட்டம் நல்ல முற்போக்கு சிந்தனையுள்ளவர்கள். சமத்துவ சித்னையுள்ளவர்கள், சகோதரத்துவ சித்னையுள்ளவர்கள், ஜனநாயக சிந்தனையுள்ளவர்களின் கைகளிலிருந்தால் நாட்டுக்கு நல்லது விளையும். இல்லையெனில் நாட்டை எவராலும் காப்பாற்ற முடியாது என்று இந்த சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு. முதல்நாள் அம்பேத்கர் பேசியிருக்கிறார். இதனை நடைமுறைப்படுத்துவதற்கு மக்களும் அரசியல் கட்சிகளும் முக்கியம் என்று குறிப்பிடுகிறார். நல்ல ஆட்சியாளர்களைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு மக்கள் கையிலும் அரசியல் கட்சிகளின் கைகளிலும் இருக்கிறது என்று குறிப்பிடுகிறார்.

அந்த நேரத்தில் கம்யூனிஸ்ட் கட்சியினர் அரசமைப்புச் சட்டத்திற்கு எதிரான கருத்தை முன்வைக்கிறார்கள். அவர் எந்தளவுக்கு கம்யூனிஸத்தையும் கம்யூனிஸ்ட்டுகளையும் புரிந்து வைத்திருக்கிறார். சமூகத்தில் நிலவுகிற பிரச்சினைகளையும் புரிந்து வைத்திருக்கிறார். அதனை கம்யூனிஸ்ட் கட்சி எப்படி அணுகுகிறது என்பதையும் புரிந்து வைத்திருக்கிறார். அந்த முரண்கள் எப்படிப்பட்டவையாக இருக்கின்றன என்பதையும் அவர் எவ்வாறு புரிந்து வைத்திருக்கிறார் என்பது இந்த விளக்கத்தில் தெரிகிறது.

அம்பேத்கர் சொல்கிறார். அரசமைப்புச் சட்டத்தின் மீது பெரிதும் கண்டனம் கம்யூனிஸ்டு கட்சி, சோஸலிஸ்ட் கட்சி ஆகிய இருதரப்புகளிலிருந்தும் வருகிறது. அவை ஏன் அரசமைப்புச் சட்டத்தை கண்டனம் செய்கின்றன? என்பதை விளக்குகிறார். அந்த சட்டம் மோசமானது என்பதால் அல்ல. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்ற கோட்பாட்டின் அடிப்படையிலான ஒரு அரசமைப்புச் சட்டத்தை கம்யூனிஸ்ட் கட்சி விரும்புகிறது. இதுதான் கம்யூனிஸ்ட் கட்சியின் எதிர்பார்ப்பு என்று சொல்லிவிட்டு நாடாளுமன்ற ஜனநாயகம் என்பதை அடிப்படையாகக் கொண்டது என்பதால் அவர்கள் கண்டனம் செய்கிறார்கள். சோஷலிஸ்டுகள் இரண்டு விஷயங்களை விரும்புகிறார்கள். முதலாவது அவர்கள் ஆட்சிக்கு வருவார்களேயானால் இழப்பீடு எதுவும் தராமல் தனிச்சொத்து அனைத்தையும் நாட்டுடமை ஆக்கவோ அல்லது சமூகஉடைமை ஆக்கவோ அரசமைப்புச் சட்டம் அவர்களுக்கு அதிகாரம் தரவேண்டும் என்று அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். இரண்டாவது அரசமைப்பு சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் எந்த வரம்புகளுமின்றி முழுமுற்றானவையாக இருக்கவேண்டும் என்பதுமாகும் என்று குறிப்பிடுகிறார்.

இன்று நான் உருவாக்கியிருக்கிறேன். அடுத்தடுத்த தலைமுறைகளுக்கேற்ப வேறு கருத்துகள் வரலாம். மாற்றிக்கொள்ள இதில் வாய்ப்பு இருக்கிறது. இதுவே சாசுவதம் என்று நீங்கள் நினைக்கவேண்டாம். இது இந்த தலைமுறைக்கான கருத்து, வரைவுக்குழுவினருடைய கருத்து என்பதை நீங்கள் புரிந்துகொண்டால் போதும் என்று கம்யூனிஸ்டுகளுக்கு அவர் பதில் சொல்கிறார். அதாவது கம்யூனிஸ்டுகளின் கருத்தை எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்த முடியும். அதாவது உன்னுடைய தேவைக்கேற்ப அடுத்த தலைமுறையினரின் சிந்தனைக்கேற்ப அவர்களின் புரிதலுக்கேற்ப இந்த அரசமைப்புச் சட்டத்தைத் திருத்தமுடியும் என்பதைத்தான் அம்பேத்கர் நமக்குச் சொல்ல வருகிறார்.

அரசமைப்புச் சட்டத்தைத் திருத்துவதற்கான மிக எளிதான நடைமுறையை அது வழங்கியுள்ளது. இப்பொழுதுள்ள சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு உலகில் வேறெங்கேனும் எந்த அரசமைப்பு அவையும் அரசமைப்புச் சட்டத்தைத் திருத்துவதற்கான இத்தகையதொரு எளிய நடைமுறையை வழங்கியிருக்கிறதா என்று கூறுமாறு நமது அரசமைப்புச் சட்டத்தை விமர்சிப்பவர்களுக்கு அறைகூவல் விடுக்கிறேன் என்று கூறிவிட்டு நாம் உருவாக்கியிருக்கும் அரசமைப்புச் சட்டம் மேலதிகமான கூடுதலான நெகிழ்வுத்தன்மையைக் கொண்டிருக்கக்கூடியது. எந்தச் சூழ்நிலையிலும் இந்தச் சட்டத்தைத் திருத்திக்கொள்ளமுடியும் எனப் பதிவு செய்கிறார்.

இந்த அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படை கூட்டாட்சி தத்துவம். மாநில அரசுக்கும் மைய அரசுக்கும் இடையே உள்ள உறவு என்பதே அடிப்படைக் கோட்பாடு.

இறையாண்மை, சமதர்மம், மதசார்பற்ற ஜனநாயகம் நிறைந்த குடியரசு என்பதுதான் இந்திய அரசு. மற்ற நாடுகள் போல அல்லாமல்

இந்தியா மதச்சார்பற்ற நாடு. அம்பேத்கர் அவரது அறிவார்ந்த ஆற்றலால் பிற அறிவார்ந்த தலைவர்களை சமாதானம் செய்து இந்தியாவுக்கென்று ஒரு மதத்தை அறிவிக்கக்கூடாது என்றார். ஏனெனில் இங்கு எந்த மதத்தை அரச மதமாக அறிவிக்கமுடியும்? கிறித்தவ மதத்தை, இஸ்லாமிய மதத்தை, சீக்கிய மதத்தை அறிவிக்க முடியாது. பெரும்பான்மை மதத்தைத்தான் அறிவிக்கமுடியும். பெரும்பான்மை மதம் பாகுபாடுகள் நிறைந்த நச்சுத்தன்மை கொண்டதாக இருக்கிறது. இந்த மதம் பிற மதங்களைப்போல சகோதரத்துவத்தை வலியுறுத்துகிறதாக இருந்தால் பிரச்சினை இல்லை. இங்கு இந்து மதம் என்று சொல்லப்படக்கூடிய ஒரு மதம் கிடையாது.ஏனென்றால் அது ஒரு கற்பனாவாதம்.இந்து மதம் என்று ஒன்று கிடையாது. ஏனென்றால் அதற்கு புனித நூல் கிடையாது. நிறுவனர் கிடையாது. ஒரு தலைவர் கிடையாது. ஆக இந்து மதம் என்பது நாமாக கற்பனையாக சொல்லிக்கொண்டிருக்கிறோம்.

ஆக இந்துவை வரையறை செய்வதற்கு இங்கு அடையாளங்கள் எதுவும் இல்லை. இங்கு சமத்துவத்தைக் கொண்டுவரவேண்டுமெனில் மதச்சார்பற்ற அரசாகச் செயல்பட்டால்தான் முடியும்.

மிசாவைக் கொண்டுவந்தபோது எவ்வளவோ விமர்சனங்கள் இருந்தாலும் இந்திரா காந்தி அம்மையார் இந்திய அரசமைப்புச் சட்டத்திற்குள் மூன்று திருத்தங்களைக் கொண்டுவந்து சொற்களை இணைத்தார். இந்திய அரசு எனும் வரையறையில் சோசலிஸ்ட், செக்குலியர் என்ற இரண்டு வார்த்தைகளை அவர் இணைத்தார். ஒற்றுமை என்பதோடு ஒருமைப்பாடு என்ற வார்த்தையையும் சேர்த்தார்.

இந்துத்வ கருத்துகளுக்கு அம்பேத்கர்தான் கடுமையான எதிரியாக இருந்தார். இந்த மண்ணில் பெரியார் மிகக் கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்தவர். ஆனால் இவர்களையெல்லாம் கோட்சே குறி வைக்கவில்லை. நூறு சதம் இந்துத்வ சிந்தனையாளராக, ஹரே ராம் ஹரே ராம் என்று மூச்சுக்கு முந்நூறு முறை சொல்லக்கூடியவராக, இம்மையிலும் மறுமையிலும் நம்பிக்கை உடையவராக, ஒரு இந்துத்வவாதியாகவே வாழ்ந்த காந்தியடிகளை ஏன் சுட்டுக் கொன்றான் என்றால் காந்தியடிகள் மதச்சார்பற்ற அரசு என்பதில் உறுதியாக இருந்தார் என்பதால்தான்.

இந்த தேசத்துக்கு ஹிந்துஸ்தான் என்று பெயர் வைக்கக்கூடாது. இந்துக்களின் நாடு என்பது அன்றைக்குக் கோரிக்கையாக இருந்தது. அதற்கு காந்தியடிகள் ஒத்துக்கொள்ளவில்லை. அதனால்தான் அவரைச் சுட்டார்கள்.

கூட்டாட்சித் தத்துவத்தைக் காப்பாற்றுவதற்கு நான் முக்கியத்துவம் கொடுத்துள்ளேன் என்று புரட்சியாளர் அம்பேத்கர் குறிப்பிடுகிறார், கூட்டாட்சித் தத்துவத்தின் முதன்மையான அடையாளமென்பது சட்டமன்ற நிர்வாக எந்திர அதிகாரம் மைய அரசாங்கத்திற்கும் மாநில அரசுகளுக்கும் பிரித்துக் கொடுக்கப்பட்டிருப்பதுதான் என்று கூட்டாட்சித் தத்துவத்துக்கு எந்த ஆபத்தும் இல்லை எனக் குறிப்பிடுகிறார்.

இந்தியர்கள் நாட்டைத் தங்கள் நம்பிக்கைகளுக்கு மேலானதாக வைப்பார்களா அல்லது தங்கள் நம்பிக்கைகளை நாட்டிற்கு மேலானவையாக வைப்பார்களா? எனக்குத் தெரியவில்லை. ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். கட்சிகள் தங்கள் நம்பிக்கையை நாட்டிற்கு மேலானதாக வைக்குமென்றால் நமது சுதந்திரம் இரண்டாவது முறையாக ஆபத்துக்கு உள்ளாக்கப்படுவதுடன் ஒருவேளை அது என்றென்றைக்குமாக இழக்கப்படலாம். நமது கடைசித்துளி இரத்தத்தைச் சிந்தியேனும் நமது சுதந்திரத்தைப் பாதுகாக்க நாம் உறுதி பூண்டவர்களாக இருக்கவேண்டும் என்கிறார். இப்படி சிந்திப்பவர்களுக்குப் பெயர்தான் தீர்க்கதரிசி.

ஆர்எஸ்எஸ் ஜனசங்கமாக மாறும் பிஜேபியில் மோடி வருவார் அமித்ஷா வருவார், என்றெல்லாம் அம்பேத்கருக்குத் தெரியுமா? ஆனால் இப்படி வந்தால் என்ன செய்வது என்று புரட்சியாளர் அம்பேத்கர் சிந்தித்திருக்கிறார்.

இன்று நாடு எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை இந்து ராஷ்ட்டிரம் என்றுதான் நாங்கள் பெயர் வைப்போம் என்கிறார்கள். வருணாசிரம தர்மம்தான் இருக்கவேண்டும் என்று நினைக்கிறார்கள்.சமூகநீதிக்கு எதிராகச் சிந்திக்கிறார்கள். சமத்துவத்துக்கு எதிராக சிந்திக்கிறார்கள். ஒரு நாடு ஒரு கலாச்சாரம் என்கிறார்கள். ஒரு தேசம் ஒரு மொழி என்கிறார்கள். இந்த நாட்டைவிட அவர்களுடைய நம்பிக்கைகள் முக்கியம் என்று நினைக்கிறார்கள்.

அரசமைப்புச் சட்டத்தில் முக்கியமான மூன்று கோட்பாடுகள். 1. பன்மைத்துவம் 2.மதச்சார்பின்மை 3.கூட்டாட்சித் தத்துவம்.

முதலில் பன்மைத்துவத்தை குலைக்கப் பார்க்கிறார்கள். அரசாங்கத்திற்கு மதம் கூடாது என்பது அரசமைப்புச் சட்டத்தினுடைய அடிப்படைகளில் ஒன்று. மதச்சார்பின்மையை இல்லாமலாக்க முயற்சி செய்கிறார்கள். இது இந்துஸ்தான். இந்து மதத்தைச் சார்ந்த அரசு. ஆக அரசமைப்புச் சட்டத்தினுடைய அடிப்படைக் கோட்பாடுகளில் கை வைக்கிறார்கள். நாடு அவர்களுக்கு முக்கியமில்லை. தேசியக் கல்விக்கொள்கை என்ற பெயரில் மாநில அதிகாரத்தில் தலையிடுகிறார்கள். இது கூட்டாட்சித் தத்துவத்துக்கு எதிரானது.

இப்படியாக அடிப்படைக் கோட்பாடுகளைத் தகர்க்கக்கூடியவர்கள் பின்னாளில் வருவார்கள் என்பதை உணர்ந்தே அம்பேத்கர் தனது கவலையைப் பதிவு செய்கிறார்.

1950 ஜனவரி 26ஆம் நாளிலிருந்து இந்தியா ஜனநாயக நாடாக மாறிவிடும் என்று சொல்லிவிட்டு அம்பேத்கர் குறிப்பிடுகிறார். நான் முதலில் குறிப்பிட்ட அதே சிந்தனை என் மனதில் தோன்றுகிறது. இதனுடைய ஜனநாயக அரசமைப்பைப் பாதுகாக்க இயலக்கூடியதாக அது இருக்குமா?அல்லது அதை மீண்டும் இழந்துவிடுமா? இந்த இரண்டாவது சிந்தனை என் மனதில் தோன்றி முதல் சிந்தனையைப் போலவே என்னைக் கவலையுறச் செய்கிறது.

மற்ற எந்த தேசத்தைக் காட்டிலும் இந்தியாவிற்கு இந்த எச்சரிக்கை மிகமிக அவசியமானது. ஏனென்றால் பக்தி அல்லது அர்ப்பணிப்பு மார்க்கம் அல்லது வீரர் வழிபாடு என்று சொல்லப்படக்கூடியது இந்திய அரசியலில் வகிக்கும் பாத்திரம் வேறு எந்த நாட்டின் அரசியலில் அது வகிக்கும் பாத்திரத்துடன் ஒப்பிடும்போது ஈடுஇணையற்றதாக உள்ளது. மத விஷயத்தில் பக்தி என்பது ஆன்மாவின் விமோசனத்துக்கான பாதையாக இருக்கலாம். ஆனால் அரசியலில் பக்தி அல்லது வீரர் வழிபாடு என்பது சீரழிவுக்கும் நாளடைவில் சர்வாதிகாரம் ஏற்படுவதற்குமான நிச்சயமான பாதை என்கிறார் அம்பேத்கர்.

இது முக்கியமாக கவனிக்கவேண்டிய விஷயம். ஆன்மீகத் தளத்தில் பக்தி என்பது வேறு.அவர்கள் இறை வழிபாடு மேற்கொள்வதால் நாட்டுக்கோ ஜனநாயகத்துக்கோ எந்த ஆபத்தும் இல்லை.

வழிபாடு, பக்தி என்று எவரும் உள்ளே போனாலே அது ஆர்எஸ்எஸ்க்கும் சங் பரிவாருக்கும் பிஜேபிக்கும் துணையாய்ப் போவதில் போய் முடியும்.அதற்கு நாம் இடமளித்து விடக்கூடாது.

சமூக ஜனநாயகம் இல்லையென்றால் அரசியல் ஜனநாயகம் பயனில்லை. சகோதரத்துவமும் சமத்துவமும் சமூக ஜனநாயகம். அது இல்லையென்றால் பிரிட்டிஷிடமிருந்து விடுதலை பெற்றதில் எந்த அர்த்தமுமில்லை என்கிறார் அம்பேத்கர். சமூக ஜனநாயகம் என்பதன் பொருள் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றை வாழ்க்கை நெறிகளாக அடையாளப்படுத்தும் வாழ்க்கை முறை என்பதாகும்.

சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றை உள்ளடக்கிய சமூக ஜனநாயகம் இல்லையென்றால் தேர்தல் நடத்தி வெற்றிபெற்று அரசியல் ஜனநாயகம் மட்டும் இருந்தால் எந்தப் பயனுமில்லை.

சுதந்திரம் சமத்துவம் சகோதரத்துவம் இது மூன்றும் ஒன்றுதான். அதனைப் பிரித்துப் பார்க்கக்கூடாது. அப்படிப் பார்த்தால் ஜனநாயகம் தோற்கடிக்கப்பட்டுவிடும் என்கிறார்.

ஒரே சதவீதம் உள்ள ஆட்களிடம் இந்தியாவின் அனைத்து சொத்துகளும் இருக்கின்றன. எட்டே ஆண்டுகளில் உலகத்தின் மூன்றாவது பணக்காரனாக அதானி வரமுடிவது எப்படி? நம்பமுடியாத இந்த விஷயத்திற்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசு துணை போகிறது. மக்களுக்குத் தொண்டு செய்யவேண்டிய பிரதமர் அதானிக்கு வேலை செய்துகொண்டிருக்கிறார். ஒருசிலர் மட்டுமே பொருளாதாரத்தில் முன்னேறும் நிலை போன்றவற்றையெல்லாம் அம்பேத்கர் முன்கூட்டியே சிந்தித்துப் பார்த்திருக்கிறார்.

தோழர்களே! புரட்சியாளர் அம்பேத்கர் ஒரு புதிய இந்தியாவை கட்டமைக்க விரும்பினார். அது ஜனநாயக இந்தியா. சமத்துவ இந்தியா அல்லது சகோதரத்துவ இந்தியா என்று நாம் சொல்லலாம். அந்த இந்தியாவைக் கட்டமைப்பதற்கு பாதுகாக்கப்படவேண்டிய ஒன்று இந்திய அரசமைப்புச் சட்டம்.


இந்திய அரசமைப்புச் சட்டத்திற்குத்தான் இப்போது ஆபத்து வந்திருக்கிறது. பன்மைத்துவத்துக்கு எதிரானவர்களின் கைகளில், மதச்சார்பின்மைக்கு எதிரானவர்களின் கைகளில், கூட்டாட்சித் தத்துவத்துக்கு எதிரானவர்களின் கைகளில், சமூக ஜனநாயகக் கோட்பாடுகளுக்கு எதிரானவர்களின் கைகளில் ஆட்சி அதிகாரம் இருக்கிறது. அவர்கள் அரசமைப்புச் சட்டத்தை எந்தச் சூழ்நிலையிலும் தூக்கி எறிந்துவிடுவார்கள்.

ஆகவே இந்திய அரசமைப்புச் சட்டத்தைக் காப்பாற்றவேண்டும் என்பதுதான் நம் முன்னாலிருக்கிற சவால். அதற்கு புரட்சியாளர் அம்பேத்கரின் இந்த உரை நமக்கு ஒரு தெளிவைக் கொடுக்கும் என்று நான் நம்புகிறேன். இதை அனைவரும் வாங்கிப் படிக்கவேண்டும் என்பதைச் சொல்லி இதைத் தமிழாக்கம் செய்த பெருமதிப்பிற்குரிய தோழர் எஸ்.வி.ஆர் அவர்களை நெஞ்சாரப் பாராட்டி, நம் அழைப்பை ஏற்று சிலமணி நேர இடைவெளியில் இசைவு தந்து இங்கே வருகை தந்த தோழர் ஜென்ராம், தோழர் சாமுவேல் ராஜ் ஆகியோருக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து, இதனைப் பதிப்பித்துக் கொடுத்திருக்கிற என்சிபிஎச் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் சண்முகம் சரவணன் அவர்களுக்கும் நன்றியைச் சொல்லி நிறைவு செய்கிறேன்.


●

**எழுத்தாக்கம்: ஜி.சரவணன்**

# நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் புதிய வெளியீடுகள்





₹ 325/-




₹ 270/-




₹ 120/-





₹ 165/-


**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**

41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.

☎: 044-26251968, 26258410, 48601884 Email: info@ncbh.in | www.ncbhpublisher.in

நூல் அறிமுகம்




விடுதலைக்களத்தில் வீர மகளிர் | உமா மோகன் | பாரதி புத்தகாலயம், சென்னை-18. | விலை. ரூபாய் 160/-

# விடுதலைக்களத்தில் வீர மகளிர்

நிகழ் அய்க்கண்

இந்நூலினை இரண்டு பகுதிகளாகப் பிரித்து அறிந்துகொள்ளமுடிகிறது. ஒன்று, மன்னர் காலத்தில் ஆங்கிலேயர்களை எதிர்த்து நின்று போரிட்ட வீரமகளிர்கள். அடுத்தது, சுதந்திரப் போராட்டக்காலத்தில், மகாத்மாகாந்தி அழைப்பு விடுத்த ஒத்துழையாமை இயக்கம் மற்றும் உப்பு சத்தியாகிரகம் உள்ளிட்ட போராட்டங்கள் மற்றும் சேவைகளில் பங்கெடுத்துக்கொண்ட வீரமகளிர்கள் பற்றியதாகும். இந்நூல் தொகுப்பினுள் மொத்தம் 50 வீரமகளிர் பற்றிய தகவல்கள் இடம்பெற்றுள்ளன. அவற்றினையெல்லாம் தனித்தனியாக விவரித்தால் பக்கங்கள் நீண்டுவிடும் என்பதால், விரிவஞ்சி முக்கியமான வீரமகளிர் பற்றி சுருக்கி அளிக்கப்படுள்ளது.

**சிவகங்கை இராணி வேலு நாச்சியார்:**

1735இல் இராமநாதபுரம் மன்னர் செல்லமுத்து விஜயரகுநாத சேதுபதியின் மகள்தான் வேலு நாச்சியார். 1772இல் மன்னரையும் இளையராணியையும் ஆங்கிலேயர் கொன்றுவிட, வேலுநாச்சியார் தனது சின்னஞ்சிறு மகனைப் பாதுகாத்தபடி, காளையார்கோவிலிலிருந்து தப்பிச்சென்று, சிவகங்கைச்சீமையிலுள்ள மக்களைத்திரட்டி ஆங்கிலேயர்களுக்கு எதிராகப் படைகளை உருவாக்கினார். மருது சகோதரர்களும் இப்போராட்டத்திற்குத் தலைமை தாங்கினர். போரின்போது, தன் கணவரைக் கொன்ற ஆங்கிலேயர்களை பழிதீர்த்து அரசை மீட்ட வேலுநாச்சியார் 1796ல் மறைந்தார்.

**ஜான்சிராணி லட்சுமிபாய்:**

1828 நவம்பர் 19இல் பிறந்த மனு, 1842இல் ஜான்சி மன்னர் கங்காதர்ராவ் நெவல்கர் என்பவரை மணந்து, மனு ஜான்சிராணி ஆனார். 1851இல் மகன் தாமோதர்ராவ் பிறந்த நான்கே மாதங்களில் இறந்துபோக, ஆனந்த்ராவ் என்பவரை மகனாகத் தத்தெடுத்து வளர்க்கின்றனர். இந்நிலையில் மன்னர் நோய்வாய்ப்பட்டு இறந்துபோக, மகனை மன்னராக்க முயற்சிக்கின்றனர். அப்போது, டல்ஹெளசி பிரபு உருவாக்கிய அவகாசியிலிக் கொள்கையின்படி, நேரடிவாரிசு இல்லாத மன்னரின் அரசு தங்களுக்கே சொந்தம் எனக்கூறி வாரிசுரிமையை நிராகரித்தது ஆங்கிலேய அரசு. இதனையொட்டி, அண்டைநாட்டு மன்னர்களின் உதவியைப்பெற்று, மக்கள் படைகளையும் திரட்டிய ஜான்சிராணி, குவாலியர்மீது படையெடுத்து அக்கோட்டையைக் கைப்பற்றினார். 1856ல் குவாலியரில் முகாமிட்ட ஆங்கிலேயப்படை போரினை நடத்தி, குவாலியரைக் கைப்பற்றியது. போரில் ஜான்சிராணி படுகாயமடைந்து மரணமுற்றார்.

**அன்னிபெசண்ட் அம்மையார்;**

*1847இல் அயர்லாந்தில் பிறந்த அன்னிபெசண்ட், தனது 19 வயதில் பிராங்க் பெசண்ட் எனும் மதகுருவை மணக்கிறார். கருத்துவேறுபாடின் காரணமாக, கணவரைப்பிரிந்து லண்டன் திரும்பினார். பகுதிநேரப் படிப்பு, சமூகப்பணி, சீர்திருத்தப் பரப்புரை என தொடர்கிறது பணி. 1889ல் பாரீஸில் பிளாவட்ஸ்கி அம்மையாரைச் சந்தித்தவுடன் அன்னியின் சிந்தனைப்போக்கில் மாற்றம் ஏற்பட்டு, பிரம்மஞான சங்கத்தில் உறுப்பினரானார். 1891ல் பிளாவட்ஸ்கி மரணமடைய அன்னிபெசண்ட் அச்சபையின் முக்கியஸ்தரானார். 1893இல் இந்தியா வந்தடைந்த அன்னிபெசண்ட், சென்னை அடையாறில் பிரம்மஞானசபையின் தலைமையகத்தினை நிறுவினார். 1907ல் சூரத் நகரில் நடைபெற்ற இந்தியக் காங்கிரஸ் மாநாட்டில் கலந்துகொண்டார். ஹோம்ரூல் இயக்கத்தை நாடு முழுக்கத் தொடங்கி விடுதலை இயக்கத்துக்கு வலுவூட்டினார். 1913ல் 'காமன்வீல்' எனும் வாரப்பத்திரிகையையும்,1914ல் 'நியூ இந்தியா' எனும் பெயரில் நாளேடு ஒன்றையும் துவங்கி நடத்தினார். 1917இல் காங்கிரஸ் தலைவர்களோடு அன்னிபெசண்ட் அம்மையாரும் கைதாகி சிறைசென்று விடுதலையானார். அந்தவருடம் கல்கத்தாவில் நடந்த காங்கிரஸ் மாநாட்டில் அக்கட்சியின் தலைவராக ஓராண்டுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.*

**அருணா ஆசஃப் அலி;**

*1909 ஜூலை 16இல் பஞ்சாப் மாகாணம் நல்காவில் பிறந்த அருணா பட்டம் பெற்றபின் கொல்கத்தா நினைவுப்பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றி வரும்போது, பகத்சிங்குக்காக வாதாடிய வழக்கறிஞர் முகமது ஆசஃப் அலியை மணந்தார். திருமணத்திற்குப் பின் இந்திய தேசிய காங்கிரஸில் இணைந்து அரசியலில் ஈடுபட்டார். உப்புச்சத்தியாகிரகம், சட்டமறுப்பு போராட்டத்திலும் ஈடுபட்டு கைதாகி சிறைவாசமிருந்தார். 1942 இல் வெள்ளையனே வெளியேறு தீர்மானத்தை கொண்டுவரும் வாய்ப்பினை மகாத்மாகாந்தி அருணாவுக்கு அளித்தார். ஆகஸ்ட் 8ந் தேதி தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அதனையும் நிறைவேற்றினார். வெள்ளையனே வெளியேறு மாபெரும் மக்கள் இயக்கமாக மாறியது. போராட்டத்தை ஒடுக்க நினைத்த ஆங்கிலேய அரசு அருணாவிற்கெதிராக கைதுவாரண்ட் பிறப்பித்தது. அருணாவோ ராம் மனோகர் லோகியாவோடு இணைந்து 'இன்குலாப்' எனும் இதழ் நடத்திவந்தார். 1946ல் அருணாவுக்கெதிராக கைது வாரண்ட் விலக்கிக் கொள்ளப்பட்டதும் தலைமறைவிலிருந்து வெளியே வந்தார். தேச விடுதலைக்குப்பின், பெண்கள் சம உரிமை, முன்னேற்றத்தினை வலியுறுத்தி 'இந்திய மாதர் சம்மேளனத்தினை' உருவாக்கி பாடுபட்டார். பல்வேறு விருதுகளைப்பெற்ற அருணா ஆசஃப் அலி 1996 ஜூலை 26 ந்தேதி மறைந்தார்.*

**ருக்மணி லெட்சுமிபதி;**

*1892 டிசம்பர் 6இல் பிறந்த ருக்மணி, தனது விருப்பப்படி 1911இல் டாக்டர் லட்சுமிபதியை கலப்புமணம் புரிகிறார். பெண்களைத் துன்பத்தில் ஆழ்த்தும் பிரச்சினைகளைக் களைய மதுவிலக்குப் பிரச்சாரம், தேவதாசிமுறை ஒழிப்பு, பால்யவிவாஹம் போன்றவற்றிற்காக பாடுபடலானார். உப்புசத்தியாகிரக போராட்டத்தில் கலந்துகொண்டார். 1927இல் சென்னையில் நடந்த காங்கிரஸ் மாநாட்டில் மாதர் பிரிவுச் செயலாளரானார். பின்னர் 1928இல் தண்டி யாத்திரை தின ஊர்வலத்தினை தடையை மீறி நடத்தினார். தீண்டாமை எதிர்ப்பு மாநாட்டில் நிதி சேகரிப்புக்காக தனது நகைகளை காந்தியடிகளிடம் பரிசாக அளித்தது மட்டுமின்றி, தனது வீட்டில் பணியாளர்கள் அனைவரையும் ஒடுக்கப்பட்டவர்களாவே வேலைக்கு அமர்த்தினார். ராஜாஜி அமைச்சரவையிலும், அதன்பின் சென்னை மாகாண அமைச்சரவையில் பொதுச்சுகாதார அமைச்சராகவும் பணியாற்றிய இவர் 1951-ல் காலமானார்.*

**அம்மு சுவாமிநாதன்;**

கேரளாவின் மலபாரில் பிறந்தவர் சுவாமிநாதன். இளம்வயதில் தனது தந்தையை இழந்ததால், கல்வி பயில சிரமம் ஏற்பட்டது. அப்போது அவ்வூர் நகராட்சித்தலைவராக இருந்த கோவிந்தமேனன், சுவாமிநாதனுக்கு கல்விபயில உதவினார். படிப்பு முடிந்ததும் தாயகம் திரும்பியவருக்கு யாரும் பெண்கொடுக்க முன்வரவில்லை. மலபாரில் தனக்கு உதவிய கோவிந்தமேனன் குடும்பம் நினைவுக்குவர, அவரது கடைசி மகள் அம்முவை திருமணம் செய்துகொள்கிறார். அம்முவின் விருப்பப்படி, அவரது வீட்டிலேயே ஆங்கிலக்கல்வி பயிற்றுவிக்கப்பட்டது. அவர்கள் வீட்டின் பணியாளர்கள் பலரும் சாதி வேறுபாடின்றி நியமிக்கப்பட்டனர். அத்தம்பதியர்களுக்குப் பிறந்தவர்களில் முக்கியமானவர் கேப்டன் லட்சுமி, பிரபல விஞ்ஞானி விக்ரம் சாராபாயின் மனைவி மிருணாளினி ஆவர். அம்மு *1917*ல் அன்னிபெசண்ட், மார்க்கரெட் சகோதரிகள், முத்துலெட்சுமி ரெட்டி ஆகியோருடன் சேர்ந்து மகளிர் சங்கத்தினைத் தொடங்கினார். பெண்கள் அரசியலுக்கு வரவேண்டும் என்ற முடிவுக்கு வந்த இந்த அமைப்பு, குழந்தைத்திருமணத்தை முடிவுக்குக் கொண்டுவர நீண்ட போராட்டத்தை நடத்தியது மட்டுமின்றி, பெண்கள் வாக்குரிமைக்காகவும் போராடியது. *1942*ல் வெள்ளியனே வெளியேறு போராட்டம் நடத்தியதற்காகச் சிறைசென்றார். *1946*ல் அரசியல் நிர்ணய சபை உறுப்பினரானார். சுதந்திரத்திற்குப்பின் பல்வேறு பதவிகளை வகித்த அவர் *1978* ஜூலையில் காலமானார்.

**டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி;**

*1886 ஜூலை 30இல் புதுக்கோட்டை சமஸ்தான மன்னரின் ஆலோசகராக இருந்த நாராயணசாமி அய்யர் - சந்திரம்மாள் தம்பதியரின் மகள்தான் முத்துலெட்சுமி.*

புதுக்கோட்டைப் பகுதியில் மெட்ரிக்குலேஷன் தேர்வு எழுதிய முதல்பெண் இவர்தான். முத்துலெட்சுமி கல்லூரிப் படிப்பைத்தொடர மன்னர் உபகாரச் சம்பளத்துடன் அனுமதியளித்தார். இண்டர்மீடியட் தேர்வில் சென்னைப் பல்கலைக்கழகத்திலேயே முதலிடம் பிடித்து தேர்ச்சிபெற்று, சென்னை மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து 1912ல் மருத்துவப்பட்டமும் பெற்றார். தமிழ்நாட்டிலேயே பணிபுரியத் தொடங்கிய முதல் பெண் மருத்துவருமாவார். டாக்டர் முத்துலெட்சுமிக்கு ஏற்கனவே அன்னிபெசண்ட், கவிக்குயில் சரோஜினி, டாக்டர் நஞ்சுண்டராவ் ஆகியோருடனான தொடர்பினால், சமூகச் செயல்பாடுகளுக்கு முன்னுரிமை தந்து செயல்பட்டுவந்த சமயம், டாக்டர் சுந்தரரெட்டியை திருமணஞ்செய்துகொண்டார். பின்னர், அரசின் நிதியுதவி பெற்று புற்றுநோய் குறித்து மேற்படிப்பு பயில இங்கிலாந்து சென்றார். படிப்பு முடிந்ததும், தாயகம் திரும்பி, சென்னை மாகாணச் சட்டமன்ற உறுப்பினரானார். பின்னர், மகளிர் வாக்குரிமை, இருதார மணச் சட்டம், பெண்களுக்குச் சொத்துரிமை, பால்ய விவாஹச்சட்டம் போன்ற பல சீர்திருத்தங்களை முன்னெடுத்தார். காந்திஜியின் உப்பு சத்தியாகிரகப் போராட்டத்தினை ஆதரித்து, தனது பதவியினைத் துறந்தார். புற்றுநோய் சிகிச்சை மையத்தினை திறந்து சேவையாற்றினார். இவ்வாறு மக்களின் நலனுக்காகாக உழைத்தவர் 1968 ஜுலை 28இல் மறைந்தார்.

**கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன்;**

மதுரை மாவட்டம் பட்டிவீரன்பட்டி அருகிலுள்ள அய்யங்கோட்டை எனும் கிராமத்தில் பிறந்தவர்தான் கிருஷ்ணம்மாள். உள்ளூரில் ஏழாம்வகுப்புக்கு மேல் படிக்க வசதியில்லாததால், மதுரை மீனாட்சியம்மன் கோயிலுக்கு அருகில் இருந்த தட்டிப்பள்ளிக்கூடத்தில் சேர்த்துவிடப்படுகிறார். அங்கும், எட்டாம் வகுப்போடு தட்டிப்பள்ளிக்கூடம் முடிய, பள்ளித்தலைமையாசிரியரோ அவரை டாக்டர். சௌந்தரம் அவர்களிடம் அடைக்கலமாக்கினார். படிப்பைத் தொடர்ந்த கிருஷ்ணம்மாள் ஆதரவற்ற பெண்களுக்கு எழுத்தறிவித்து வந்தார். மதுரை அமெரிக்கன் கல்லூரியில் தனது கல்லூரிப் படிப்பை முடித்தார். ஒருமுறை காந்திஜி மதுரை வந்திருந்தபோது, காந்திஜியின் உதவியாளர் சுசிலா நய்யாருக்கு உதவிட கிருஷ்ணம்மாள் பணிக்கப்பட்டார். அதுவே காந்திஜியை சந்திக்கும் முதல்வாய்ப்பாக அமைந்தது. டாக்டர் சௌந்தரம் அம்மாள் மூலமாக காந்திகிராமத்தில் சமூகப்பணியாற்றி வந்தார். டாக்டர் சௌந்திரம் அம்மாளின் கணவர் இராமச்சந்திரன் மூலமாக காந்தியடிகளுக்காக தன்னை அர்ப்பணித்துக்கொண்ட ஜெகந்நாதனை திருமணம் செய்துகொள்கிறார். தேச விடுதலைக்குப் பின்னர், இருவரும் சேர்ந்து, மக்கள் நலப்பணி, சர்வோதயத்தொண்டு ஆற்றிவந்தனர். வினோபாவின் பூமிதான பாதயாத்திரையில் உதவியாளராகச் சென்றார் கிருஷ்ணம்மாள். ஜெகந்நாதன் தமிழ்நாட்டு பூமிதான இயக்கத்திற்கு பொறுப்பாளரானார். சுயசார்பு பொருளாதாரத்திற்கு ஏற்ற வாய்ப்புக்களை உருவாக்கி இன்றும் தொண்டினைத் தொடர்கிறார் கிருஷ்ணம்மாள்.

**கேப்டன் லட்சுமி;**

1914 அக்டோபர் 24இல் அம்மு சுவாமிநாதனின் மகளாகப் பிறந்தவர்தான் லட்சுமி. ஒருமுறை சரோஜினி நாயுடுவின் சகோதரி சுஹாசினி நம்பியார் மீரட் சதி வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டு, தேடப்பட்டு வந்தபோது, சுஹாசினையை அம்மு சுவாமிநாதன் தனது வீட்டில் தங்க வைத்திருந்தார். அவருடனான லட்சுமியின் உரையாடல்கள் அவரை மார்க்சியத் தத்துவம் நோக்கியும் ருஷ்யப்புரட்சி குறித்தும் சிந்திக்கத்தூண்டியது. சென்னை மருத்துவக்கல்லூரியில் பட்டம் பெற்று சேவையாற்றி வரும்போது, விமானியான ராவ் என்பவரை மணந்துகொண்டார். அத்திருமணம் முறிந்துபோகிறது. இச்சூழலில், தனது உறவினர் ஒருவருக்கு மருத்துவ உதவி செய்யவேண்டி 1940இல் சிங்கப்பூர் சென்றார். பிறகு அங்கேயே ஒரு மருத்துவமனையைத் திறந்து பணியாற்றிவந்தார். இதற்கிடையே 1941இல் ஜப்பானியர் சிங்கப்பூரைத் தாக்கினர். பிரிட்டிஷ் படை பின்வாங்கியது. அப்போது அங்கே இந்திய தேசிய ராணுவம் உருவாகிறது. இதன் மக்கள்சேவை அமைப்புதான் இந்தியச்சுதந்திர லீக் ஆகும். அதன் உறுப்பினராக லட்சுமி சேருகிறார். 1942இல் பிரிட்டிஷ்- ஜப்பான் போரில் காயமடைந்தவர்களுக்கு சேவையாற்றுவது லட்சுமியின் பணியாக இருந்தது.

1943இல் இந்தியசுதந்திர லீக்கின் அழைப்பின் பேரில் சுபாஷ் சந்திரபோஸ் சிங்கப்பூர் வந்தார். அப்போது, இந்தியச்சுதந்திரப்போரில் பெண்களும் ஆயுதப்போரட்டத்தில் பங்கெடுத்துக்கொள்ளவேண்டும் என அழைப்பு விடுக்கப்பட, ஜான்சிராணி படையின் தளபதியானார் கேப்டன் லட்சுமி. அச்சமயத்தில் மருத்துவமனை குண்டுவீசி தாக்கப்படுகிறது. அத்தாக்குதலில் கேப்டன் லட்சுமி கைதியாக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டார். இந்தியாவிற்குள் அடியெடுத்துவைத்து சுதந்திரத்திற்காகப் போராடுவோம் என்கிற லட்சுமியின் குரல் பிரிட்டிஷாருக்கு எட்டவே, லட்சுமி விசாரணையின்றி இந்தியாவுக்கு நாடு கடத்தப்பட்டார். இங்குவந்தும் சிங்கப்பூரிலிருந்து பிழைத்துவந்த இந்திய தேசிய இராணுவ வீரர்களின் புனர்வாழ்விற்காகப் பாடுபட்டார். நாடு விடுதலை பெற்றபின், இந்திய தேசிய இராணுவத்தில் பணியாற்றிய கர்னல் பிரேம்குமார் சேகலை மணந்துகொண்டார். பொதுஉடைமை இயக்கத்தில் ஈடுபாடுகொண்ட கேப்டன் லட்சுமி 1971ல் மர்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலங்களவை உறுப்பினரானார். இந்திய ஜனநாயக மாதர் சங்கத்தின் முக்கியத்தலைவரான கேப்டன் லட்சுமி 2002இல் இந்தியக் குடியரசுத்தலைவர் தேர்தலில் போட்டியிட்டு தோல்வியுற்றார். 2012 ஜுலை 23 ந்தேதி மறைந்தார்.

●

கட்டுரையாளர், எழுத்தாளர்.

## நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின்
## மகத்தான படைப்பு விரைவில்...

# சங்க இலக்கிய உரைவேறுபாட்டுக் களஞ்சியம்

### ஒரு நூற்றாண்டு வாசிப்புப் பின்புலத்தில்

பாடல் - பாடவேறுபாடு - உரைவேறுபாட்டு விளக்கங்கள் - பாடற்கருத்து - அருஞ்சொற்பொருள் - விரிவான ஆய்வு முன்னுரை எனும் அமைப்பில்

எண்மரின் பத்தாண்டுகாலக் கடும் உழைப்பில்


20 தொகுதிகள், 8000 பக்கங்கள்

உயர்ந்த கட்டமைப்பில்

தமிழக வரலாற்றில் முதல்முறையாக

## உங்கள் நூலகம் சந்தாதாரர்களுக்கு
## ஒரு வேண்டுகோள்!





**உங்கள் நூலகம் சந்தாவினைப் புதுப்பிக்காதவர்கள் தொடர்ந்து உங்கள் நூலகம் இதழினைப் பெற புதுப்பித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்**

**உங்கள் நூலகம்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
**41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,**
**அம்பத்தூர், சென்னை - 600 050.**
**தொலைபேசி எண் : 044-26251968, 26258410**

**ஏப்ரல் மாதத்துடன் முடிவடையும் சந்தாதாரர்களின் ரசீது எண்கள்**

| | | |
|---|---|---|
| 5674 | 3929 | 1158 |
| 3912 | 7826 | 5637 |
| 2959 | 5748 | |

தனி இதழ் ₹ 45.00
ஆண்டு சந்தா ₹ 540.00
மாணவர்களுக்கு ₹ 500.00.
ஆயுள் சந்தா ₹ 5400.00
அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ 4050.00
சந்தாத் தொகையை
New Century Reader's Sangam
Central Bank of India
Ambattur Branch, Chennai - 600 050
A/c.No. 1035249018
IFSC Code : CBIN0282161
*என்ற வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.*

**கிளைகள்**

அம்பத்தூர் 044 - 2635 9906, ஸ்பென்ஸர் பிளாசா 044-28490027, மதுரை 0452 - 2344106, 4374106, திருநெல்வேலி 0462 - 2323990, 4210990, திண்டுக்கல் 0451-2432172, கோயம்புத்தூர் 0422 2380554, சேலம் 0427-2450817, ஈரோடு 0424-2256667, கிருஷ்ணகிரி 04343-234387, ஓசூர் 04344 - 245726, ஊட்டி 0423 - 2441743 திருச்சி 0431 - 2700885, தஞ்சாவூர் 04362-231371, புதுக்கோட்டை 04322-227773, விழுப்புரம் 04146-227800, பாண்டிச்சேரி 0413 2280101, வேலூர் 0416-2234495, நாகர்கோவில் 04652 - 234990.

# நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் புதிய வெளியீடுகள்




₹ 325/-




₹ 75/-




₹ 200/-




₹ 130/-




₹ 90/-




₹ 70/-

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**

41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.

☎: 044-26251968, 26258410, 48601884 Email: info@ncbh.in | www.ncbhpublisher.in

கட்டுரை



# இலக்கியம் பார்வையற்றவர்களுக்கு எதிரானதா?

**கென்னத் ஜெர்னிகன்**

ஆங்கிலத்திலிருந்து தமிழில்:
**ப. பூபதி & இரா. தமிழ்ச்செல்வன்**

**பார்வையற்றவர்களுக்கான தேசியக் கூட்டமைப்பின் தலைவர் கென்னத் ஜெர்னிகன் ஜூலை 03, 1974 இல் சிகாகோவில் நடந்த ஆண்டுவிழாவில் ஆற்றிய வரலாற்றுச் சிறப்புமிக்க உரையின் தமிழாக்கம்.**

வரலாறு, மனிதர்கள் செய்த செயல்களைப் பற்றிய பதிவு; இலக்கியம், அவர்களின் எண்ணங்களைப் பற்றியது. கடந்த ஆண்டு, வரலாற்றில் பார்வையற்றவர்களின் இடத்தைப் பற்றி நான் உங்களுடன் விவாதித்தேன் - நாம் என்ன செய்தோம் என்பதை மட்டுமல்ல, வரலாற்றாசிரியர்கள் நாம் செய்ததாக எதைக் கூறி வந்திருக்கிறார்கள் என்பதையும். நாம் கண்டறிந்தபடி இரண்டும் பெரிதும் வேறுபட்டவையாக இருந்தன.

இந்த ஆண்டு இலக்கியத்தில் பார்வையற்றவர்களின் இடத்தைப் பற்றி உங்களுடன் பேச விரும்புகிறேன். பார்வையற்றவர்களாகிய நாம் இலக்கியத்தில் எப்படி உள்வாங்கப்பட்டிருக்கிறோம்? நம்முடைய பங்கு என்ன? கவிஞர்கள், நாவலாசிரியர்கள், கட்டுரையாளர்கள், நாடகக் கலைஞர்கள் நம்மை எப்படிப் பார்த்திருக்கிறார்கள்? இருப்பதை அப்படியே பதிவு செய்திருக்கிறார்களா அல்லது அவர்கள் இப்படித்தான் இருப்பார்கள் என்று நினைத்துக்கொண்டு எழுதியிருக்கிறார்களா!

வரலாற்றில் குறைந்தபட்சம் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஓர் அடிப்படை உண்மைத்தன்மை இருக்கும். திரிபுகள், புறக்கணிப்புகள் அல்லது தவறான விளக்கம் அல்லது அப்பட்டமான பொய் எதுவாக இருந்தாலும், உண்மைத்தன்மை நூலிழையாக எஞ்சி உரைகல்லாகத் தொடரும். ஏனெனில் வரலாறு தன்னை மறுவாசிப்புச் செய்து புதிய தரவுகளுக்கு என்றும் தன்னை ஒப்புக்கொடுக்கிறது. ஆனால் இலக்கியத்தில் அப்படி இல்லை. கனவுகள், கற்பனைகள், ஊகங்கள் மூலமாக உண்மைகளைத் தனக்கேற்றவாறு தகவமைத்துக் கொள்கிற வெளி எழுத்தாளனுக்கு உண்டு. வரலாற்றை விட ஆழமாகச் சென்று மக்களின் தொன்மங்களையும் உணர்வுகளையும் இலக்கியம் பதிவு செய்து வைத்திருக்கிறது. பள்ளிகள், தேவாலயங்கள், செய்தி ஊடகங்கள் அல்லது குடும்பத்தை விடவும்கூட, நமது சமூகத்தின் நம்பிக்கைகள், விழுமியங்களை இலக்கியம் அதன் அனைத்து வடிவங்களின் வழியாகவும்

கடத்துகிற வேலையைச் செய்கிறது. அப்படியானால், பார்வையற்றவர்களாகிய நாம் இலக்கியத்தில் எந்தளவு பிணைக்கப்பட்டிருக்கிறோம்?

பார்வையற்றவர்களின் வாழ்க்கையைப் பற்றி ஒற்றைக் கருத்தையோ ஒற்றைப் பார்வையையோ இலக்கியப் பதிவுகள் வெளிப்படுத்தவில்லை. மாறாக, குழப்பத்தை உண்டாக்கக்கூடிய வேறுபட்ட பிம்பங்களையே காட்சிப்படுத்தியிருக்கின்றன. இவை பல்வேறு காலம் மற்றும் பண்பாடுகளுக்கு இடையில் அல்லது வேறுபட்ட எழுத்தாளர்களின் எழுத்துகளில் மட்டுமில்லாமல், ஒரு புத்தகத்தில் உள்ள பக்கங்களுக்கிடையிலேயே பார்வையற்றவர்கள் பற்றிய முரண்பாடான, நேர்மாறான பிம்பங்கள் இடம்பெற்றுள்ளன.

இன்னும் நுணுகி ஆராயும்போது இலக்கியம் மற்றும் வெகுஜனப் பண்பாட்டின் முக்கியமான அடிக்கருத்துகள், துணைக்கருக்களைச் சுருக்கமாகப் பின்வரும் ஒன்பது வகையில் அடக்கிக் கூறலாம்: பார்வையின்மை ஒரு மாற்றான அல்லது வியத்தகு ஆற்றல்; பார்வையின்மை என்பது முற்றிலும் துன்பியல்; பார்வையற்றவர்களை முட்டாள்களாக, கையறு நிலையிலுள்ள வர்களாகப் பார்த்தல்; தீய மற்றும் கொடூர எண்ணம் கொண்டவர்கள் பார்வையற்றவர்கள்; பார்வையற்றவர்கள் நிறைவான புண்ணியவான்கள்; பார்வையின்மை பாவத்திற்கான தண்டனை; இயல்புக்கு முரணானவர்களாகவும் மனிதநேயமற்றவர்களாகவும் பார்வையற்றவர்களைப் பார்த்தல்; பார்வையின்மை பாவத்தைக் களைதலின் வெளிப்பாடு; குறியீடு அல்லது நீதிக்கதையின் கருவாகப் பார்வையின்மை.

பார்வையின்மையென்பது எப்படி ஒரு மாற்றான ஆற்றலாக சித்திரிக்கப்பட்டுள்ளது என்பதிலிருந்து தொடங்குவோம். பார்வையற்றிருப்பதில் ஏதேனும் நன்மை இருக்கிறது என நான் நினைக்கிறேனா? என்று உங்களில் ஒருவர் என்னிடம் கேட்கிறீர்கள் என்று வைத்துக்கொள்வோம். நான் அந்தக் கேள்விக்கு இவ்வாறு பதிலளிப்பது பொருத்தமாக இருக்கும்: ‘ஒருவகையில் ஒரு நன்மையும் இல்லை. ஆனால் பார்வையற்றிருப்பது ஒருவர் யூகிக்க இயலாத அளவிற்கான வியத்தகு ஆற்றல். ஆம், ஒரு புதிய உலகை அறிவதற்கான திறப்பு, புதிய அனுபவங்கள், புதிய வலிமைக்கான எழுச்சி; விசித்திரமான புதிய பார்வைகள்; இயல்பெல்லைக்குள் உட்படாத வாழ்க்கை.’ இந்தப் பதிலுக்கு நீங்கள் எப்படி வினையாற்றுவீர்கள்? நான் சந்தேகிக்கிறேன், நீங்கள் என்னை எள்ளிநகையாடி அறையைவிட்டு வெளியேற்றிவிடுவீர்களென்று. பொதுப்புத்தியிலுள்ள இம்மாதிரியான மூடத்தனத்தை நீங்கள் எவரொருவரும் ஏற்கமாட்டீர்கள் என்றே கருதுகிறேன். பார்வையின்மையென்பது இயல்பெல்லைக்குள் உட்படாத வாழ்க்கையோ புதிய வலிமைக்கான எழுச்சியோ விசித்திரமான புதிய பார்வையோ சாகசமான உலகை அறிவதற்கான திறப்போ இல்லையென்று உங்களுக்கும் எனக்குமுள்ள நேரடி அனுபவத்தின் மூலம் நாம் அறிவோம். நான் மேலே மேற்கோளாகக் கூறியது சில ஆண்டுகளுக்கு முன்பு வெளிவந்த ஒரு புகழ்பெற்ற நாவலில் வரும் பார்வையற்ற கதாபாத்திரத்தினுடைய வார்த்தைகள். (பார்வையற்றவர்கள் ஓர் ‘அகக் கண்’ பெற்றிருக்கிறீர்கள் என்ற பொருளில் வரும் இந்தக் கருத்துக்கு முக்கியத்துவம் உள்ளதா என்று எனக்குத் தெரியவில்லை, ஆனால் புறக்கண்களுக்கொன்றும் குறைவில்லாதது இது).

பார்வையின்மையை மாற்று ஆற்றலுடன் இணைத்து ஒரு பார்வையற்ற துப்பறியும் கதாபாத்திரம் கூறியதாக நான் மேலே குறிப்பிட்டது, நம்மை செவ்வியல் தொன்மத்தைப் பாராட்டுகின்ற மரபை நோக்கி இட்டுச் செல்கிறது. பழங்கால கிரேக்க கடவுள்களிடையே பார்வையைப் பறிப்பது ஒரு விருப்பத்திற்குரிய தண்டனையாக இருந்தது- மேலும் இது மரணத்தை விடக் கொடிய தண்டனையாகக் கருதப்பட்டது - அப்படிப் பார்வையிழந்தவர்கள்மேல் கருணை கொண்ட கடவுள்கள் எதிர்காலத்தைக் கணிக்கக்கூடிய அசாதாரண ஆற்றலை அவர்களுக்கு வழங்கினார்கள் என நம்பப்பட்டது. இம்மாதிரியான ஒரு வரத்தின் வழியேதான் ஹோமர் கவிதை எழுதும் திறனைப் பெற்றதாகப் பரவலாகக் கருதப்படுகிறது. இதே போலத்தான் சோஃபகிளிஸ் எழுதிய நாடகங்களில் வரும் பார்வையற்ற டைரிசியஸ் ஒரு தீர்க்கதரிசியாகப் பார்க்கப்படுகிறார்.

கடவுள் பழிதீர்ப்பதன் பகுதியாகவே பார்வையற்றவர்கள் தெய்வீக ஆற்றலைப் பெறுகிறார்கள் என்ற கருத்து பேகன் மதங்கள் *(Pagan Religions)* வீழ்ச்சியிலிருந்த போதும் நிலைபெற்றது. ஷெர்லாக் ஹோம்ஸ் கதாபாத்திரத்தை உருவாக்கிய கடந்த நூற்றாண்டின் மிகச் சிறந்த நாவலாசிரியர்களில் ஒருவரான சர் ஆர்தர் கோணன் டோய்ல் தனது சர் நைஜெல் என்ற நூலில் ஹோம்ஸைப் போலத் துப்பறியும் திறமைகளுடன் கூடிய பார்வையற்ற கற்பனைக் கதாபாத்திரம் ஒன்றை உருவாக்கியிருப்பார். இந்தக் கதாபாத்திரம், படைவீரர்களால் முற்றுகையிடப்பட்ட கோட்டைக்கு அடியில் இருக்கும் ஒரு மறைவான குகையைத் தனது விசித்திரமான கேட்கும் திறனைக் கொண்டு கண்டுபிடிக்கக்கூடியதாக அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும். நாவலில் பார்வையற்ற கதாபாத்திரத்தின் வியத்தகு ஆற்றல், இரண்டு நபர்களுக்கு இடையேயான உரையாடல் மூலம் விவரிக்கப்பட்டுள்ளது:

’இந்த மனிதர் ஒரு காலத்தில் செல்வந்தனாகவும் நற்பெயருடனும் இருந்தார் [ஒருவர் கூறுகிறார்], ஆனால் இவருடைய செல்வம் திருட்டு அரசனொருவனால் கொள்ளையடிக்கப்பட்டதுடன் இவருடைய பார்வையும் பறிக்கப்பட்டது. அதனால் இவர் மற்றவர்களின் தயவில் பிழைத்துக்கொண்டு பல ஆண்டுகளாக இருளில் வாழ்ந்து வருகிறார்.

இவர் பார்வையற்றவராக இருப்பதால், நம்முடைய முன்னெடுப்பிற்கு இவரால் எவ்வாறு உதவி செய்ய முடியும்? [அவரின் நண்பர் கேட்கிறார்.]

பார்வையின்மை என்ற காரணத்தினாலேயே, மற்ற மனிதர்களைவிட இவர் அதிகமாகப் பயன்படுவார். ஏனென்றால், ஒரு மனிதன் ஒரு புலனை இழந்துவிட்டால், எஞ்சியிருக்கும் புலன்களின் திறன் கருணைமிக்க கடவுளால் கூர்மையாக்கப்பட்டிருக்கும். எனவே இந்த ஆண்ரேஸ் மரங்களில் உள்ள நீரோட்டத்தை அல்லது புதைகுழியிலுள்ள எலியின் சப்தத்தைக் கேட்கும் அளவிற்குத் திறன் கொண்டவராக இருப்பார்.’

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தலைசிறந்த நாவலாசிரியரான விக்டர் ஹியூகோ, தனது 'தி மேன் ஹூ லாஃப்ஸ்' என்ற நாவலில் பார்வையிழப்பிற்கான பரிகாரமாகப் புனிதத்தன்மையையும் பரவசத்தையும் பார்வையற்றவர்கள் பெற்றிருக்கிறார்கள் என்ற கருத்தைச் சித்திரித்திருக்கிறார். இச்சித்திரிப்பினை அக்கால நவீன எழுத்தாளர்கள் பலரிடமிருந்த சிந்தனையின் வடிவமாகவே பார்க்கலாம். இவரது நாவலில் வரும் 'டி' என்ற பார்வையற்ற கதாநாயகி, பார்வையற்றவர்களுக்கே உரித்தானதாகக் கருதப்படும் பரவசத்தால் திளைத்திருப்பதாகவும் ஓர் உயிர்ப்பான இசையைக் கேட்கும்போது அதை ஆத்மார்த்தமாக உள்வாங்கிக்கொண்டு அந்த ரசனையில் தான் இழந்த ஒளியை ஈடுசெய்து கொள்வதாகவும் சித்திரிக்கப்பட்டிருக்கிறாள். பார்வையிழப்பு பற்றி ஹியூகோ கூறும்போது 'அது ஒரு முடிவற்ற நீண்ட குகையை நோக்கிய நகர்வு' என்கிறார்.

பார்வையற்றவர்களோடு 'ஆறாவது அறிவு' என்ற மாயக் கருத்தைப் பொருத்திப் பார்ப்பதே, புகழ்பெற்ற புனைகதைகளில் பார்வையற்றவர்கள் துப்பறிவாளர்களாகவும் புலனாய்வாளர்களாகவும் வருவதற்குக் காரணமாக இருக்கலாம். 1914 இல் வெளிவந்த மேக்ஸ் கராடோஸ் என்ற நூல் பார்வையற்றவர்கள் 'நான்காவது பரிமாணத்தில்' வாழ்வதைப் பற்றிப் பேசுகிறது. மேலும் மனித வாழ்க்கைக்கு அப்பாற்பட்ட வாழ்க்கை பற்றி 1920 களில் வெளிவந்த எழுத்துகளுக்கு இந்நூலை ஓர் உந்துதலெனக் கூறலாம். 1915 ஆம் ஆண்டில் வந்த மற்றொரு நாவல் தனது வழக்குகளில் தோல்வியே தழுவாத டேமன் காண்ட் என்ற பார்வையற்ற துப்பறிவாளர் பற்றிப் பேசியிருக்கிறது. இந்தக் கதாபாத்திரத்தையொத்ததுதான் கிளின்டன் எச். ஸ்டாக் உருவாக்கிய தோர்ன்லி கோல்டன் என்ற பார்வையற்ற துப்பறிவாளர் கதாபாத்திரமும். பார்வையில்லாது அகக்கண் வழிக் கண்டறிதலின் மூலம் புகழ்பெற்ற பார்வையற்ற துப்பறியும் கதாபாத்திரமான கேப்டன் டங்கன் மெக்லைன் பற்றிய தனித்தன்மைகள் நூலின் அட்டையின் மீதே இடம் பெற்றிருக்கும்:

'ஒலியைக் கேட்டுக்கொண்டே துப்பாக்கி சுடுவது, துல்லியமாகச் சதுரங்கம் விளையாடுவது, எதிர் பாலினத்தவரின் இதயங்களைத் தன்வசப்படுத்துவது என்பதான காரணங்களால் கேப்டன் மெக்லைன் விமர்சகர்களின் சமரசமில்லாத பாராட்டைப் பெற்றிருக்கிறார்.'

அந்த நாவலாசிரியர் கூடத் தனது கதாநாயகனின் மேதைமைத் தன்மையால் கவரப்பட்டிருந்தார். 'பல தருணங்களில் இயல்பான மனிதர்களை விடச் சற்றே அதிகமான ஆற்றலை டங்கன் மேக்லைனுக்கு வழங்கியிருந்தேன்' என்று அவர் எழுதுகிறார். அத்தகைய தருணங்கள் அவருக்குக் கவலையளிப்பதாக இருந்திருக்கின்றன.

அந்தத் தருணங்கள் நமக்கும் வருத்தமுண்டாக்கக் கூடியதாகத்தான் இருக்கக்கூடும். ஏனென்றால் இயல்புக்கு மாறான அல்லது இயற்கைக்கு அப்பாற்பட்ட ஆற்றலைப் பார்வையற்றவர்கள் பெற்றிருப்பவர்களாகப் பார்க்கிற மாயாஜாலக் கருத்தானது, பார்வையற்றவர்கள் வேற்றுகிரகவாசிகள், இயற்கைக்கு மாறான, விசித்திரமான தன்மையைப் பெற்றவர்கள் என்று சமூகத்தில் உறைந்துகிடக்கிற பொதுப்புத்தியில் எந்தவித மாற்றத்தையும் ஏற்படுத்துவதில்லை. மாயாஜாலக் கருத்துகள் பார்வையற்றவர்கள் பற்றிய பொதுப்புத்தியை மேலும் மோசமடையச் செய்வதாகத்தான் இருக்கிறது.

ஆற்றல் குறித்த கருத்தானது உண்மைக்குப் புறம்பானது மட்டுமல்ல, பார்வையற்றோருக்கு இழைக்கப்படும் கொடிய அவமானமும் கூட. ஏனெனில், பார்வையற்ற ஒருவர் எதைச் சாதித்தாலும் அது அவரது சொந்தத் திறனால் அல்ல, மாறாகப் பார்வையின்மையால் பெற்ற உள்ளார்ந்த சில மந்திர ஆற்றலால்தான் நிகழ்கிறது என்பதை இக்கருத்து அறிவுறுத்துகிறது. மாற்று ஆற்றல் பற்றிய இவ்வாறான அனுமானம், பார்வையற்ற நபரை ஒரு சாதாரண மக்களின் அன்றாட உலகத்திலிருந்து அகற்றி இயல்புக்குப் புறம்பான இடத்தில் வைக்கிறது. பார்வையற்றவர்களை இயல்பை மீறிய ஆற்றல் கொண்டவராகவோ அல்லது இயல்பைவிடத் தாழ்வான வாழ்க்கை வாழ்பவராகவோ பார்த்தலென்பது ஒரு பொருட்டல்ல - ஏனெனில் பொதுவாக அவர்களைப் பொறுப்பற்றவர்களாக, உரிமைகளற்றவர்களாக, சமூகமற்றவர்களாகப் பார்ப்பதே இயல்பாக இருக்கிறது. இரண்டாம்தரக் குடிமக்களாகக் கருதுகிற இந்தப் பார்வையில் நாம் நீண்ட காலமாக இணைக்கப்பட்டிருக்கிறோம். இந்த நாடகம் முடிந்துவிட்டது. இனிமேல் மந்திர ஆற்றலோ மாற்று ஆற்றலோ நமக்கு வேண்டாம். குடிமக்களாகவும் மனிதர்களாகவும் வாழ்கிற உரிமைகளைப் பெறுவதையே நாம் விரும்ப வேண்டும்.

வசீகரம் மற்றும் திறமையைப் பெற்றிருந்தும் மெக்லைன் ஒரு பெண்ணை, ஏன் எந்தப் பெண்ணையும் கைபிடிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. காதல், பாலுறவு, திருமணம் ஆகிய இயல்பான மனித நடத்தைகளுக்கே மெக்லைன் தகுதியற்றவர் என்று நாவலாசிரியர் கருதியிருக்கிறார். தங்களின் துணை ஆறுதலாக இருக்கிறது என்று தன்னிடம் கூறிய நண்பருக்கு மேக்ஸ் கராடோஸ் என்ற பார்வையற்ற கதாபாத்திரம் 'பார்வையின்மை நம்பிக்கையை அளிக்கக்கூடியது, நடந்து முடிந்த மனிதர்களிடையேயான போட்டியில் நாங்கள் பங்கேற்காமல் வெளியேதான் இருந்தோம்' என்று பதிலளிக்கிறது.

மாற்று ஆற்றல் என்கிற பார்வை - பார்வையின்மையே வெகுமதி என்கிற கருத்தாடல் - இவை பாராட்டு அல்ல, அவமதிப்பு. மாற்று ஆற்றல் என்கிற கருத்தானது நமது சாதனைகளுக்கான அனைத்து நன்மதிப்பையும் நமது தோல்விகளுக்கான எல்லாவிதப் பொறுப்பையும் நம்மிடமிருந்து பறித்துவிடுகிறது. மேலும் இது நிலைமைகளைச் சமன்படுத்துவது, வாய்ப்புகளை வழங்குவது, நமக்கு நாமே உதவுவது ஆகிய கடமைகளிலிருந்து சமூகத்தைத் தெளிவாக விடுவித்து விடுகிறது. நம்மைச் சுற்றியுள்ள போட்டி மிகுந்த வாழ்க்கையில் இயல்பாக நாம் பங்கெடுப்பதற்கான தகுதியை இறுதியில் இல்லாமலேயே செய்துவிடுகிறது. சுருக்கமாகக் கூறினால் (இந்தப் பார்வையின்படி) பார்வையற்றவர்கள் அசாதாரணமானவர்களாக இருக்கலாமேயொழிய இயல்பான மனிதர்களாக இருக்க முடியாது. உங்களுக்கு நம்பிக்கையில்லையா! நாம் இயல்பான மனிதர்கள் - ஆசீர்வதிக்கப்பட்டவர்களோ

சபிக்கப்பட்டவர்களோ அல்ல - இயல்புக்கு எதிரான இவ்வாறான கற்பனைகள் முடிவுக்கு வர வேண்டும். நாம் கேட்பதெல்லாம் மாயாஜால வித்தையோ அல்லது மந்திர ஆற்றலோ அல்ல - உரிமையும் சுதந்திரமுமுள்ள மனிதர்களாக, பொறுப்புள்ள குடிமக்களாக, சுயமரியாதையுள்ள மனிதர்களாக வாழ்வதற்கான அங்கீகாரம்.

புனைகதை, கற்பனை இலக்கியங்களில் விரவிக்கிடக்கும் பார்வையற்றவர்கள் குறித்த மற்ற கருத்துகளை ஒப்பிடும்போது மாற்று ஆற்றல் குறித்த பிம்பம் எதிர்மறையாக இருந்தாலும் குறைவான ஆபத்தையும் தீமையையும் தரக்கூடியது. பார்வையின்மை என்பது முற்றிலும் துன்பியல் என்ற கருத்துதான் மிகவும் பழமையானதாகவும் தொடர்ந்து வருவதாகவும் எல்லாவற்றையும்விட அதிகம் பாதிப்பு விளைவிப்பதாகவும் இருக்கிறது. இந்தக் கருத்தைப் பிரதிபலிக்கும் விதத்தில் 'பார்வையற்றவர் இறந்தவருக்கு சமம்' என்ற பண்டைய ஹீப்ரு பழமொழிகூட உள்ளது. இடிபஸ் பற்றிய கிரேக்கத்தின் துன்பியல் நாடகங்கள், வாழ்க்கையென்பது பயனற்றது என்ற கருத்தை மிகத் தீவிரமாகத் அடுத்த கட்டத்திற்கு நகர்த்தின. இடிபஸ் ரெக்ஸ் என்ற நாடகத்தில் அரசன் தனது சொந்தக் கண்களைப் பறித்துக்கொள்ளும்போது, 'பார்வையற்றவராக வாழ்வதை விட நீ இறந்துவிடுவதே நல்லது' என்ற வசனம் வருவதை இதற்குச் சான்றாகக் குறிப்பிடலாம். ஐரோப்பியாவில் பார்வையின்மையென்பது பெருந்துயரமாகக் கருதப்படுவதற்கு இந்தக் கருத்தே அடிப்படையாக இருக்கிறது என்று கூறலாம்.

ஜான் மில்டன் தனது சாம்சன் அகனிஸ்ட் என்ற துன்பியல் கவிதையில் இவ்வாறு கூறுகிறார்: 'எதிரிகள் மத்தியில் பார்வையற்றவர்கள் - அடிமைகளைவிடத் தாழ்வானவர்கள், பாதாளச் சிறைவாசிகள் பிச்சைக்காரர்கள், நலிந்த வயதினர்!... கொடியவர்களுக்கும் தாழ்வானவர்களாகிப்போன இவர்கள் தற்போது மனிதப் புழுக்களாக. இந்தக் கொடியவர்கள் என்னைவிடச் சிறப்பானவர்களாகிவிட்டார்களோ! அவர்கள் ஊர்ந்து செல்கிறார்கள், ஆனால் நானோ வெளிச்சத்தில் இருளைக் காண்கிறேன். நாள்தோறும் மோசடி, அவமதிப்பு, அத்துமீறல், அறைக்குள்ளோ அல்லது அறைக்கு வெளியிலோ தவறுகள்... மற்றவர்களின் அதிகாரத்தால் இன்னும் ஒரு முட்டாளாகவே நான். இப்போதெல்லாம் நானாகவே இருப்பதில்லை. என்றாவதுதான் அரிதான பாதி வாழ்க்கையை வாழ்வதாகத் தோன்றுகிறது. பாதிக்கு மேலானது காணாமல் போய்விட்டது.... எனது வாழ்க்கையே ஒரு நடமாடும் கல்லறையாகிவிட்டது.

மேலே குறிப்பிட்ட காவியக் கவிதையில் மிகவும் கவனிக்கத்தக்க செய்தி என்னவென்றால், நாம் எதிர்பார்த்தது போலப் பார்வையின்மை பெருந்துயரம் என்ற கருத்து அல்ல. அனைவரும் அறிந்த மில்டன் அதன் ஆசிரியர் என்பதுதான். பாரடைஸ் லாஸ்ட் உட்பட, அவருடைய மிகச்சிறந்த படைப்புகள் அனைத்தும் அவரது பார்வையிழப்பிற்குப் பிறகே எழுதப்பட்டவை. பிறகு ஏன் இவர் பார்வையற்றவர்கள் பற்றி இப்படிச் சித்திரித்திருக்கிறார்? பதில் எளிமையானது: பார்வையற்றவர்களான நாம், மற்றவர்கள் நம்மைப் பார்ப்பது போலவே நாமும் நம்மைக் காண்கிறோம். இது நமக்கு எதிரானதெனத் தெரிந்தாலும், நமது வரம்புகளைப் பற்றிய பொதுப் பார்வையை நாம் அப்படியே ஏற்றுக்கொள்கிறோம். அந்த வகையில் அந்த வரம்புகளை உண்மையாக்குவதற்கும் உதவுகிறோம். இலக்கியம் மற்றும் மரபார்ந்த சக்திகளால் ஏமாற்றப்பட்ட மில்டன், அவருக்கு எழுதக் கிடைத்த வாய்ப்பில் தனக்கும் தன்னையொத்த சகப் பார்வையற்றவர்களுக்கும் துரோகம் செய்திருக்கிறார். உண்மையில், மில்டனின் சுயஅனுபவம் இச்சித்திரிப்பிற்கு முரணாக இருந்தபோதும்கூட அவர் இதைச் செய்திருக்கிறார். இதன் மூலம் பார்வையற்றவர்கள் பற்றிய பொதுப்புத்தியை வலுப்படுத்தி அதைத் தீவிரமடையச் செய்திருக்கிறார். உண்மையில் இலக்கியத்தின் ஆற்றல் அப்படியானதாக இருக்கிறது.

பார்வையின்மை என்பது பெருந்துயரம் என்ற கருத்து மில்டனுடன் முடியவில்லை. பதினெட்டாம் நூற்றாண்டில் வெளிவந்த ஷில்லரின் வில்லியம் டெல் என்ற நாடகம் பார்வை பறிக்கப்பட்ட வயோதிக மனிதரொருவர் பிச்சைக்காரராக மாற வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவதை நமக்குக் காட்டுகிறது. அந்த நாடகத்தில் வரும் வயோதிகரின் மகன் இவ்வாறு கூறுகிறார்: 'ஓ, கண்ணின் 'ஒளி'தான் சொர்க்கத்திலிருந்து அன்பாக அளிக்கப்பட்ட அனைத்துப் பரிசுகளிலும் சிறந்தது... பார்வையற்றவர் தனது நாட்களை முடிவற்ற இருளிலேயே கடத்த வேண்டும். மரணிப்பது ஒன்றுமில்லை. ஆனால் பார்வையில்லாமல் வாழ்வது - ஓ, அது உண்மையில் அவலம்!

பார்வையின்மையைப் பெருந்துயரமாகப் பார்க்கும் கருத்தென்பது ஒரு நூற்றாண்டுக்குப் பிறகும்கூட எப்போதும் போலவே செல்வாக்குடன் இருந்து வருகிறது. தி லைட் தட் ஃபெயில்டு என்ற தனது நாவலில், பார்வையின்மை மரணத்தை விடக் கொடியது என்று அழுத்தமாகச் சித்திரிக்கிறார் கிப்ளிங். நாவலில் கதாநாயகன் டிக் ஹெல்டர், தனக்குப் பார்வை பறிப்போகப் போகிறது என்பதை அறிந்ததும் 'இது மரண வாழ்க்கை.... இருளில் அடைபட்டு வாழ வேண்டும்... யாரையும் பார்க்க முடியாது. நூறு ஆண்டுகள் வாழ்ந்தாலும்கூட நாம் விரும்புகிற எதையும் ஒருபோதும் வைத்திருக்க முடியாது' என்று குறிப்பிடுகிறார். 'பார்வையற்றவர்கள் பற்றிப் பொதுப்புத்தியில் உறைந்து கிடக்கும் கருத்தானது இன்னும் மறையவில்லை. பார்வையற்றவர்கள் உயிரற்ற உடலாகவும் சுமையாகவுமே உலவி வருகிறார்கள்' என்று கதாநாயகன் டிக் ஒட்டுமொத்த உலகத்திற்கெதிராக ஆவேசமாகப் பேசுவது நாவலின் பின்பகுதியில் காட்டப்பட்டுள்ளது. தன்னிரக்கப்படக்கூடிய டிக் என்ற கதாபாத்திரம் தொடர்புடைய அனைவரின் மனநிறைவுக்காகத் தற்கொலை செய்துகொண்டபோதுகூட 'தோட்டக்கள் அவருடைய தலையைத் துளைக்கும் கணத்தில்கூட அவருக்குத் தோட்டக்கள் கருணை காட்டின. அவருக்கு இறுதிவரை அதிர்ஷ்டம் இருந்தது' என்று சிறந்த

எழுத்தாளரென அனைவராலும் சொல்லப்படும் கிப்லிங் கூறுகிறார்.

ஜோசப் கான்ராட் தனது தி எண்ட் ஆஃப் தி டெதர் என்ற குறுநாவலில் பார்வையின்றி உயிருடன் இருப்பதைவிட இறந்துவிடுவதே சரியென்று கருதி கேப்டன் வாலி என்ற கதாபாத்திரம் நீரில் மூழ்கடித்துக் கொல்லப்படுகிறது. டி. எச். லாரன்ஸின் தி பிளைண்ட் மேன் என்ற சிறுகதையில் போரினால் பார்வையிழந்த மோரிஸ் என்ற கதாபாத்திரம் வருகிறார். விரக்தியிலும் துயரத்திலும் இருக்கும் மோரிஸ் அவற்றிலிருந்து மீள்வதற்கான எதிர்கால நம்பிக்கையில்லாதவராக வருகிறார். லாரன்ஸை விட மேன்மையானது அல்லது தாழ்வானது என்கிற வகையில் கூறத்தக்க ஒரு பார்வையிழந்த கதாபாத்திரத்தை ரோசாமண்ட் லெமன் தனது இன்விடேஷன் டு தி வால்ஸ் என்ற நாவலில் காட்டியிருப்பார். இந்நாவலில் வரும் போரினால் பார்வையிழந்த கதாநாயகன் மரியாதைக்குரிய வாழ்க்கையை வாழ்வதான தோற்றத்தைக் காட்டினாலும் நடைமுறை வாழ்க்கையில் நடைப்பிணமாக வாழ்வதாகவே சித்திரிக்கப்பட்டிருப்பார். பார்வையிழந்த கதாபாத்திரம் துன்பம் நிறைந்த வாழ்க்கையை மறைப்பதற்கு ஒரு போலியான வாழ்க்கை வாழ்வதாக நாவல் நமக்குக் காட்டுகிறது. எல்லாவற்றையும் கடந்து முன்னால் காதலியுடன் அவர் நடனமாடுகிற காட்சி துயரமான வகையில் காட்டப்படுகிறது. ‘அவரின் காதலி அன்புடனும் துயரத்துடனும் நடனமாடினாள்’ என்று நாவலாசிரியர் கூறுகிறார். ‘அவளை நெருக்கமாகப் பற்றியிருந்தபோதும்கூட அவர் அவளிடமிருந்து வெகுதொலைவிலேயே இருந்தார். அங்கு ஒலித்துக்கொண்ட இசையிலிருந்து விடுவித்துக்கொண்டு அந்நியமானவாராய் அவர். அவரின் இளமைப்பருவத்துடனும் மரணத்துடனுடன் நடனமாடியபடி அவள்.’

இது போன்ற எழுத்தாளர்களுக்குப் பார்வையின்மையினால் ஏற்படும் துயரத்தைத் தாங்க முடியாது. இதற்கு இரண்டு தீர்வுகளை மட்டுமே கற்பனை செய்து பார்க்க முடியும். பார்வையற்றவர் குணப்படுத்தப்பட வேண்டும் அல்லது அவர் கொலை செய்யப்பட வேண்டும். இதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டை, சூசன் கிளாஸ்பெல்லின் தி க்ளோரி ஆஃப் தி கன்கார்டு என்ற நாவலிலிருந்து பார்க்கலாம். அந்நாவலைப் பற்றி ஓர் இரக்கமற்ற திறனாய்வாளர் இவ்வாறு எழுதுகிறார்: 'நூலின் இறுதியில் பார்வையற்ற அந்தக் கதாநாயகனைச் சாகடிப்பதே பிரச்சனைக்கு மிகவும் எளிதான வழி. ஏனெனில் அந்தக் கதாபாத்திரத்தை வைத்துக்கொண்டு என்ன செய்வது என்று அந்த நாவலாசிரியர்க்கும் தெரியவில்லை.’

இப்போது பார்வையின்மை துன்பியல் என்ற கருத்தை விட்டுவிட்டு, பார்வையற்றவர்களை முட்டாள்களாக, கையறு நிலையிலுள்ளவர்களாகப் பார்த்தல் என்பதை நோக்கி நகர்வோம். வேடிக்கைக்குரியவராகவும் கேலிக்குரியவராகவும் பார்வையற்றவர்களைக் காண்பதென்பது அங்கத நாடகங்களை விடப் பழமையானது என்பதில் சந்தேகமில்லை. மத்தியக்காலங்களில் பூசணிக்காயைத் தடவிப் பார்த்து உருவம் காணவைக்கிற கேலிக்கூத்து இருந்தது. அது வழங்கொழிந்து பின்னர்ப் பார்வையற்ற பிச்சைக்காரர்களை வட்டமாக நிற்கவைத்துக் கழுதையின் காதுகளில் பேசவைப்பதான காட்சிகள் விழாக்கால விடுமுறை நாட்களில் அரங்கேற்றப்படுவது வழக்கமாக இருந்தது. இவ்வாறான பொதுக்கேலிக்கூத்தைப் பிரதிபலிக்கும் வகையில், சாசர் தனது தி மெர்ச்சண்ட்ஸ் டேல் என்ற கதையில் ஓர் இளம் மனைவி பற்றிக் கூறுகிறார். வயதான பார்வையற்ற ஒருவரைத் திருமணம் செய்து கொண்ட அந்த இளம் மனைவி கணவனை நடைபயிற்சிக்கு அழைத்துச் செல்லும் போது கணவனை ஏமாற்றிவிட்டு மரத்தருகில் தனது காதலனைச் சந்திக்கிறார். சாசரின் முடிச்சு என்னவென்றால், இளம் மனைவி தனது காதலுடன் உறவு வைத்துக்கொண்டிருக்கும்போது கணவனுக்குத் திடீரென்று பார்வை திரும்புகிறது. அதை அறிந்த அந்தப் புத்திசாலிப் பெண் பார்வை திரும்புவதற்காக மட்டுமே இவ்வாறு செய்தேன் என்று விளக்குகிறார். ஷேக்ஸ்பியர் கூட இப்படித்தான் இழிவாகச் சித்திரித்திருக்கிறார். தனது கிங் லியர் என்ற நாடகத்தில் க்ளாஸ்டர் என்ற பார்வையற்ற கதாபாத்திரத்தை மிகவும் குழப்பமானவராகவும் கையறுநிலையிலுள்ளவராகவும் காட்சிப்படுத்தியிருக்கிறார். எதையும் நம்பவைத்து எந்தத் தந்திரத்தாலும் அவர்களை ஏமாற்ற முடியுமெனக் காட்டியிருக்கிறார். பழைய ஏற்பாட்டில் வரும் ஐசக், அவரது மகன் ஜேக்கப்பால் ஏமாற்றப்படுகிறார். அவர் தனது சகோதரர் 'எசே' போல மூகமுடி அணிந்து மாறுவேடத்தில் ஆட்டுத்தோலைப் போர்த்திக்கொண்டு தனது தந்தை விரும்பிய மான் இறைச்சிக்குப் பதிலாக ஆட்டிறைச்சியைத் தருகிறார். முதியவரான ஐசக்கால் அதைக் கண்டறியமுடியவில்லை. ஏனெனில் பார்வை உட்பட அனைத்துப் புலன்களின் உணர்வையுமே நிச்சயம் இழந்திருக்கக்கூடும்.

பதினாறாம் நூற்றாண்டில் வெளிவந்த டெர் யுயென்ஸ்பிஜல் மிட் டென் பிளெண்டென் என்ற நாடகம் பார்வையற்றவர்கள் ஏமாற்றப்படுவதை பற்றி அறிந்து கொள்ள உதவும் அரிதான ஒரு கொடூரமான எடுத்துக்காட்டு. அந்த நாடகத்தில் மூன்று பார்வையற்ற பிச்சைக்காரர்களைச் சந்திக்கும் கதாநாயகன், அருகில் உள்ள விடுதியில் உணவிற்காகவும் தங்குவதற்காகவும் ஒரு மதிப்புமிக்க நாணயத்தை வழங்குவதாக உறுதியளிக்கிறார். ஆனால் அவர்கள் தேவைக்காக நாணயத்தைத் தேடும்போதுதான் அவர் அதை யாருக்கும் அளிக்கவில்லை என்பதை அறிகிறார்கள். ஓவ்வொருவரும் அதைப் பிறிதொருவர் பெற்றதாக நினைத்துக்கொண்டிருந்தார்கள். வேடிக்கையான முடிவை நீங்கள் கற்பனை செய்யலாம். அவர்கள் விடுதிக்குச் சென்று ஆடம்பரமாக உணவருந்திய பிறகு, விடுதிக் காப்பாளர் உணவிற்கான பணத்தைக் கோருகிறார். பணம் இல்லாததை அறிந்துகொண்ட பார்வையற்ற பிச்சைக்காரர்கள் ஒவ்வொருவரும் மற்றவர்களைப் பொய், திருட்டு எனப் பல்வேறு குற்றங்களைக் கூறிக்கொள்கிறார்கள். ‘நீங்கள் எல்லோரையும் ஏமாற்றுகிறீர்கள்’ என்று கூச்சல் போடும் விடுதிக் காப்பாளர் மூவரையும்

தனது பன்றிபட்டிக்குள் அடைத்துப் பூட்டிவிட்டுத் தன் மனைவியிடம் புலம்புகிறார். ‘இவர்களை என்ன செய்வோம், இவ்வளவு சாப்பிட்டுவிட்டுக் குடித்துவிட்டு இருக்கும் இவர்களிடம் ஒன்றும் வாங்காமல் எந்தத் தண்டனையும் இல்லாமல் அனுப்பலாமா? ஆனால் நாம் அவர்களை இங்கே வைத்திருந்தால், சீலைப்பேன், கொசுக்களையெல்லாம் பரப்புவார்கள். மேலும் அவர்களுக்கு நாம் உணவளிக்கவும் வேண்டும். இவர்களைத் தூக்கு மேடையில் நிறுத்துவதையே நான் விரும்புகிறேன்.’ நாடகத்தின் முடிவு மகிழ்ச்சியானதே. ஆனால் பார்வையற்றவர்களைக் குற்றவாளிகள், ஏமாற்றுகிறவர்கள், அசுத்தமானவர்கள், குழப்பக்காரர்கள், வீடற்றுத் திரிகிறவர்கள், கையறு நிலையிலுள்ளவர்கள், வேற்றுகிரகவாசிகள் என்று காட்டும் பிம்பம் இந்த நாடகத்திலும் தொடர்கிறது. இவர்களின் வாழ்க்கைக் கதையை ‘கல்லிபெல்ஸ் டிராவல்ஸ்’ *(Gullible’s Travels)* என்று அழைக்கலாம்.

பார்வையற்றவர்களைக் கையறுநிலையிலுள்ளவர்களாகக் காண்பது ஓர் உலகளாவிய பொதுப்புத்தி. மீட்டர்லிங்ஸ் என்பவரின் தி பிளைண்ட் என்ற நாடகத்தில் வரும் அனைத்துக் கதாபாத்திரங்களும் ஒரு தத்துவக் கருத்தை வெளிப்படுத்துவதற்காகப் பார்வையற்றவர்களாகச் சித்திரிக்கப்பட்டிருப்பார்கள். ஆனால் இதே நாடகம் மேடையில் அரங்கேற்றப்படும்போது பார்வையற்றவர்கள் திறந்தவெளியில் தடவுவது, முணுமுணுப்பது, ஏதோ ஒன்றைத் தாங்கிப் பிடிப்பதென அபத்தமாகக் காட்டப்படுவார்கள்.

பார்வையின்மை பற்றிய உண்மையை மறைத்து மிக மோசமாக அவமதித்தவர்களில் ஒருவர் புகழ்பெற்ற சமகால பிரெஞ்சு எழுத்தாளர் ஆண்ட்ரே கைடு. இவரின் லா சிம்ஃபொனி பாஸ்டரேல் என்ற நாவலில் இதைக் பார்க்கலாம். ஒரு பார்வையற்ற திறனாய்வாளர் இந்த நாவலை நன்றாக விவரித்துள்ளார்: ’பதினைந்து வயதுடைய பார்வையற்ற இளம்பெண் கேர்ட்ரூட்-டுக்கு, அவளின் போதகர் கல்வி கற்பிக்கத் தொடங்கும் முன்னரே அவள் அசட்டுத்தனத்திற்கான அனைத்து அறிகுறிகளையும் கொண்டிருந்தாள். இதற்குக் காரணமாக அவளுடைய பார்வையின்மையைக் கூறும் நாவலாசிரியர் கைடு, புறக்கண்களினால் பெறுகிற பார்வையில்லாமல் உண்மையை அறிய முடியாது என்றும் உறுதியாகக் கூறுகிறார். போதகர் உருவாக்கிக் கொடுத்த களங்கமற்ற உலகில் மகிழ்ச்சியாக வாழ்கிறாள் கேர்ட்ரூட். நிஜ உலகில் உள்ள தீமை, வலி பற்றி எதுவும் தெரியாதவளாகயிருந்தாள் அவள். பார்வையற்றவளாக அவளால் பழிபாவங்களை அறிய முடியாது, ஆதாமும் ஏவாளும் தடைசெய்யப்பட்ட பழத்தைச் சாப்பிடும்முன் எதையும் அறியாது எப்படிப் பேரின்பமாக இருந்தார்களோ அதைப்போலவே இருந்தாள் கேர்ட்ரூட். அவளுடைய பார்வை திரும்பியபோதுதான் அவள் உண்மையில் தீமையையும் அதற்கான காரணத்தையும் பழிபாவங்களையும் அடையாளம் கண்டுகொள்கிறாள். போதகருடன் தான் செய்தது பாவம் என்று அறியாத கேர்ட்ரூட் அதை அறிந்ததும் பரிதாபமாகத் தற்கொலை செய்து கொள்கிறாள்.’

இலக்கியத்தில் பார்வையற்றவர்கள் முட்டாள்களாக மட்டும் சித்திரிக்கப்படவில்லை, கொடூர எண்ணம் கொண்ட பிறவிகளாகவும் காட்டப்பட்டிருக்கிறார்கள். இதற்கு எடுத்துக்காட்டாக, ஸ்டீவன்சனின் ட்ரெஷர் ஐலேண்ட் நாவலில் வரும் வயதான பார்வையற்ற கடற்கொள்ளைக்காரக் கதாபாத்திரம் பியூ - வைக் குறிப்பிடலாம். இளம் நாயகனாக வரும் ஜிம் ஹாக்கின்ஸ், பியூவை முதன்முதலில் பார்த்த போது, இவரைப்போன்ற அச்சமும் கொடூரமும் நிறைந்த பார்வையற்ற ஓர் உயிரினத்தை இதுவரை பார்த்ததில்லை என்றும் பியூவின் கையைப் பற்றிக்கொண்டு ஜிம் உரையாடிய தருணத்தில் பியூவின் குரலைப் போல் கொடூரமான, அருவெருப்பான குரலைக் கேட்டதில்லை என்றும் உணர்கிறான்.

பார்வையற்றவர்கள் கொடூரஎண்ணம் கொண்டவர்கள் என்ற கருத்து வெகுகாலத்திற்கு முன்பாக, அதாவது பதினாறாம் நூற்றாண்டில் வெளிவந்த லாஜரில்லோ டி டோர்ம்ஸ் என்ற நாவலிலேயே காணலாம். லாஜரில்லோ என்ற சிறுவன் ஒரு வயதான பார்வையற்ற மனிதஒருவருக்கு வழிகாட்டியாக இருக்கிறான். ஆனால் அந்தப் பார்வையற்றவர் தீமையின் வடிவமாக இருக்கிறார். ’சிலையின் மீது காதை வைத்து ஒரு வித்தியாசமான சத்தத்தைக் கேட்கும்படிப் பார்வையற்றவர் லாஜரில்லோவிடம் சொன்னபோது, அதற்குக் கட்டுப்பட்டுக் கேட்டுக்கொண்டிருந்தபோது லாஜரில்லோவின் தலையைக் கடுமையாகத் தாக்குகிறார் அந்தப் பார்வையற்றவர். அந்தச் சத்தம் லாஜரில்லோவின் காதுகளில் மூன்று நாட்கள் ஒலித்துக்கொண்டிருந்தன.’

காலங்காலமாகப் பார்வையின்மை மற்றும் கொடூரத்திற்குமிடையேயான தொடர்பென்பது எழுத்தாளர்களுக்கு ஒருவகையில் தவிர்க்க முடியாததாக இருந்து வருகிறது. மேலும் இதை வாசகர்களும் விரும்பியவர்களாக இருந்திருக்கிறார்கள். ஏனெனில் நாட்டுப்புறக் கதைகள் மற்றும் கட்டுக்கதைகள் மூலமாக பார்வையின்மையென்பது கேடானது என்ற எண்ணம் ஏற்கனவே வாசகர்களிடம் உறைந்திருந்தது. இயல்பாகவே பார்வையற்றவர்கள் கொடூர எண்ணங்கொண்டவர்கள் என்று நிலவிவரும் கருத்து, பார்வையற்றவர்களைச் சித்திரிக்கும் அவலட்சணமான கேலிச்சித்திரங்களுக்கு ஒரு வசதியான காரணத்தையும் நியாயத்தையும் வழங்கியுள்ளது. எல்லாவற்றிற்கும் மேலாக, பார்வையற்றவர்கள் கொடியவர்கள், இழிவான எண்ணம் கொண்டவர்கள் என்று கருதப்படுவதால் அவர்கள் அதற்கேற்பவே நடத்தப்படட்டும் - எந்தவிதக் கருணையுமின்றி.

பார்வையின்மை என்பது முற்றிலும் தீங்கானது என்ற கருத்திற்கு மாறானது பார்வையின்மை நல்லொழுக்கம் என்ற கருத்து. அனைவரும் அறிந்த இந்த இரண்டு பொதுப்புத்திகளும் மேலோட்டமாகப் பார்த்தால் முரண்பாடானவை. ஆனால் இவை ஒரு போலி நாணயத்தின் எதிரெதிர் பக்கங்கள். இதைப் புரிந்து கொள்ள பெரிய உளவியல் நுண்ணறிவு எதுவும் தேவையில்லை. இவற்றில் பொதுவானதென்பது பார்வையின்மையால் நிகழும் மாற்றம். இவ்வாறான மாற்றம், இயல்பான வாழ்க்கைச் செயல்பாடுகளிலிருந்தும் மனிதகுலத்திலிருந்தும் பார்வையற்றவர்களை முற்றிலுமாக அகற்றுகிறது.

பார்வையின்மை ஒரு பாவத்தின் அல்லது தீய ஆற்றலின் வடிவமாகவோ தேவதை அல்லது

ஜோதியின் வடிவமாகவோ இருப்பதையே பார்க்க முடிகிறது. இரண்டாவது வகையைச் சார்ந்தது லாரா ரிச்சர்ட்ஸின் மெலடி என்ற நாவல். இந்நாவலில் மெலடி என்ற பார்வையற்ற குழந்தை தன்னுடைய வாழ்க்கையைத் தன் கையால் தொட்டுப்பார்த்தே அறிந்து கொண்டதாகக் காட்டப்பட்டுள்ளது. காட்டிலுள்ள ஒவ்வொரு மரத்தையும் அதன் பட்டையை வைத்து அறிந்து கொள்பவளாக அவள் இருந்தாள். எப்போது பூக்கும், எப்படிப் பூக்கும் என்பதையும்... அவளுடைய கிராமத்தில் உள்ள பூனை, நாயெல்லாம் மெலடியின் ஒரே அழைப்பில் தன் சொந்த எஜமானனையே விட்டுவிட்டு அவளிடம் வந்துவிடும். அவள் நல்லொழுக்கமுள்ளவள் மட்டுமல்ல; ஒரு மாயாஜாலக்காரி. அவள் எரியும் கட்டிடத்திலிருந்து குழந்தையைக் காப்பாற்றுகிறாள், நோய்வாய்ப்பட்டவர்களைப் பாடுவதன் மூலம் குணப்படுத்துகிறாள், மேலும் குடிகாரர்களை அந்தப் பழக்கத்திலிருந்து மீட்கிறாள்.

லாரா ரிச்சர்ட்ஸின் இந்தக் கதாபாத்திரம் விசித்திரமாக இருக்கிறது. இதில் எல்லாவற்றையும் விட விசித்திரமானது என்னவென்றால், இந்த அபத்தமான மெலடி கதாபாத்திரத்தை உருவாக்கிய லாரா ரிச்சர்ட்ஸ் பார்வையற்றவர்களின் முன்னோடிக் கல்வியாளரான சாமுவேல் கிரிட்லி ஹாவின் மகள் என்பது. மில்டனைப் போலவே ரிச்சர்ட்ஸுக்கும் பார்வையற்றவர்களைப் பற்றி நன்றாகத் தெரியும். மரபு, பழக்கவழக்கங்கள், நாட்டுப்புறக்கூறுகள் மற்றும் இலக்கியத்தின் தாக்கங்களுக்கு லாரா ரிச்சர்ட்ஸ் பலியாகியிருக்கிறாள். இதன்மூலம் அவள் தன்னையும் பார்வையற்றவர்களையும் ஏமாற்றிப் பார்வையற்றவர்கள் பற்றிய சமூகப் பொதுபுத்தியை மேலும் வலுப்படுத்தியிருக்கிறாள். எல்லாவற்றையும் விடக் கொடுமையானது என்னவென்றால், அவள் தான் என்ன செய்தேன் என்று ஒருபோதும் அறிந்திருக்கவில்லை. மேலும் பார்வையற்றவர்களுக்கு நன்மை செய்ததாகவும் அவர்களின் சிக்கல்களைப் பொதுவெளியில் கொண்டு சேர்த்ததில் வெற்றி பெற்றதாகவும் கருதுகிறாள். அறியாமை என்பது உண்மையில் அனைத்துத் துயரங்களிலும் மிகப்பெரியது.

எல்லாத் துயரமான மாயைகளிலும் புனிதமான கருத்தாக இருப்பது பார்வையின்மை ஒரு எதிர்பாராத வரம் என்பது. ஜான் ஜி. மோரிஸ் எழுதிய தி பிளைண்ட் கேர்ள் ஆஃப் ரிட்டன்பெர்க் என்ற நாவலில், ஒரு இளைஞன் நாயகியிடம் கூறுகிறான்: 'கடவுள் உன் பார்வையைப் பறித்துவிட்டார், ஆனால் உன்னுடைய இதயம் மிகவும் பிரகாசமான ஒளியால் மிளிர்கிறது.' எனக்குத் தெரிந்த ஒவ்வொரு பார்வையற்ற பெண்ணும் இதுபோன்ற உளறல்களுக்கு முகத்திலேயே அறைந்திருப்பாள். ஆனால் நாவலில் வரும் கற்பனைக் கதாநாயகியின் பதில் எதார்த்தமான கருத்தை விட மோசமானது: 'உங்களுக்குத் தெரியாதா, பார்வையற்றவர்களாகிய எங்களுக்குள் ஓர் உலகம் இருக்கிறது, அது உங்களை விட அழகாக இருக்கலாம், எங்களுக்குள் ஓர் ஒளி இருக்கிறது. அது சூரிய ஒளியை விடப் பிரகாசமாக ஒளிர்ந்து கொண்டிருக்கிறது' என்கிறாள்.

இதுபோன்ற கட்டுக்கதைகள் ஒருவகையில் தித்திப்பாய் இருந்தாலும் இவைகள் நம்மைக் காயப்படுத்தி மனிதகுலத்திடமிருந்து பிரித்தே வைக்கின்றன. ஜேம்ஸ் லட்லோவின் சகிக்கமுடியாத நாவலான டேபராவில் வரும் அகக்கண்களால் காணும் பார்வையற்ற சிறுவன் காலேப், டிக்கன்ஸின் தி கிரிக்கெட் ஆன் தி ஹார்த் என்ற குறுநாவலில் விவரிக்கமுடியாதளவிற்கு இனிமையும் மேன்மையும் பெற்று பார்வையற்ற நாயகியாகவும் இறுதியில் ஏறக்குறைய அறிவிலியாகவும் வரும் பெர்த்தா, தி லாஸ்ட் டேஸ் ஆஃப் பாம்பேயி நாவலில் தன்னையே தியாகம் செய்துகொள்ளும் நிடியா, ஹால் கெய்னின் ஸ்கேப் கோட் என்ற நாவலில் வரும் நயோமி... போதும். இவையெல்லாம் ஒளியற்ற இனிமையாகவும் அறிவற்ற இலக்கியமாகவுமே உள்ளன.

புனைகதைகளின் வரலாற்றில் மிகவும் பழமையான மற்றும் கொடூரமான கருத்து பார்வையின்மை பாவத்திற்கான தண்டனையென்பது. கூடாப்பாலுறவுக்காக சோஃபகிளிஸ் கதாபாத்திரமான இடிபஸுக்கும் தகாத உறவுக்காக ஷேக்ஸ்பியரின் க்ளாஸ்டருக்கும் பார்வை பறிப்புத் தண்டனையாக வழங்கப்படுகிறது. இது பார்வையின்மை என்பது பாவத்தை நீக்கிப் புனிதப்படுத்துதல் என்ற பொதுப்புத்தியில் நிலவிவரும் கருத்துடன் கைகோர்த்துச் செல்கிறது. இந்தக் கருத்து கற்பலகையைச் சுத்தமாகத் துடைத்து இயல்புநிலைக்குக் கொண்டுவருவது போல மனிதத்தன்மையையும் புனிதப்படுத்தி நற்குணமுள்ளவனாக மாற்றுவது மாதிரியானது. கிங்ஸ்லியின் வெஸ்ட்வேர்டு ஹோ என்ற நாவலில் ஆமியஸ் லீ என்ற ஏமாற்றுப் பேர்வழிக் கதாபாத்திரம் மின்னல் தாக்கிப் பார்வையிழந்த பிறகு புனிதத்தன்மை வாய்ந்தவராக மாறுகிறார்.

மனிதநேயமற்றவர்களாகப் பார்வையற்ற வர்களைப் பார்த்தல் என்ற கருத்து இயல்பான வாழ்க்கை மற்றும் உறவுமுறைகளிலிருந்து பார்வையற்றவர்களைப் பிரிக்கிறது. இது அசிங்கமான கறையாகப் பல இலக்கியங்களின் கதைக்களங்களிலும் தொடர்ந்து இடம்பெறுகிறது. டிக்கென்ஸின் பார்வையற்ற நாயகி பெர்த்தாவும் பல்வர் - லிட்டனின் நாவலில் வரும் நிடியாவும் காதலுக்காக ஏங்கியபோது நாவல்களில் வரும் மற்ற கதாபாத்திரங்களோ வாசகர்களோ எவருமே சிறிதளவு கூட அவர்களை விரும்பவில்லை. கிப்ளிங்கின் 'தே' என்ற சிறுகதையில், குழந்தைகளை நேசிக்கும் ஆனால் குழந்தைகளைப் பெற்றுக்கொள்ள தகுதியற்றவராகக் காட்டப்படுகிறார் ஃபுளோரன்ஸ் என்ற அழகான பார்வையற்ற குடும்பப்பெண். குழந்தைகளை ஏன் பெற்றுக்கொள்ள முடியாதென்று கதையில் கிப்ளிங் கூறவில்லை. ஆனால் பார்வையற்ற அவள் திருமணம் செய்து கொள்வதையோ அல்லது குழந்தைகள் வளர்ப்பதையோ அவளால் கற்பனை செய்து பார்க்க முடியாது என்பது இங்குத் தெளிவு. இந்த இழப்பிற்காக ஒரு வகையான மாயஜால ஆற்றலால் ஈடுசெய்யப்படுகிறார் ஃபுளோரன்ஸ். அக்கம்பக்கத்தில் இறந்த சிறு குழந்தைகள் ஆவியாக வந்து அவளைச் சூழ்ந்து கொள்கிறார்கள். அவள் ஒரு கோட்டானைப் போலப் பித்துப்பிடித்தவள் என்று நாம் புரிந்து கொள்ளக்கூடாது - அவள் பார்வையற்றவள், அதனால் அவள் பயமுறுத்தும் செய்கைகளைச் செய்ய உரிமையானவள்.

புகழ்பெற்ற இலக்கியக் கருப்பொருள்களில் இறுதியானது அங்கதம் அல்லது நீதிக்கதைகளுக்காகப் பார்வையின்மையைக் குறியீடாகக் கையாள்வது. பார்வையில்லையென்றால் மக்கள் அழிந்து போவார்கள் என்ற பழமொழிக்கேற்ப, நாட்டுப்புறக் கதைகள் முதல் திரைப்படம் வரை பார்வையின்மை மரணத்தின் வடிவமாகவோ அல்லது சாபமாகவோ அல்லது வேறு வகையான கண்ணுக்குத் தெரியாத அடையாளமாகவோ காட்டப்பட்டு வருகிறது. ஹச் ஜி.வெல்லின் புகழ்பெற்ற தி கன்ட்ரி ஆஃப் தி பிளைண்ட், பால் கோரி எழுதிய தி ப்ளெணட் ஆஃப் தி பிளைண்ட், மீட்டர்லிங்கின் தி பிளைண்ட் ஆகிய படைப்புகள் எல்லாம் மேற்கூறிய வகையில் அடங்கக்கூடியவை. கான்ராட் ஏகன் என்பவரின் சைலண்ட் ஸ்னோ, சீக்ரெட் ஸ்னோ என்ற சிறுகதையில் பார்வையின்மை என்பது மூளைக்கோளாறின் உருவகமாகக் காட்டப்பட்டுள்ளது.

இதுவரை விளக்கப்பட்ட அனைத்திலும் பார்வையின்மையென்பது அறியாமை மற்றும் குழப்ப நிலையின் வடிவமாகக் காட்டப்பட்டுள்ளது. மேலும் இயல்பு மற்றும் விழுமியங்களுக்கு மாறானதாகவும் மரணத்தை விடக் கொடியதாக இல்லையென்றாலும் மரணத்திற்கு ஒத்ததாகக் காட்டப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் இந்த இலக்கிய மரபுகளால் பார்வையற்றவர்களின் வாழ்க்கையில் ஏற்பட்ட இழப்புகளைத் திரும்ப மீட்டெடுக்க இயலாது. ஆனால் எதிர்காலம் இன்னும் தீர்மானிக்கப்படாமலிருக்கிறது. அந்த எதிர்காலத்தை உண்மை என்ற ஆயுதம் கொண்டு தீர்மானிப்போம். தன்னை உணர்தல், தன்னைச் சார்ந்திருந்தல் ஆகியவை போர்க்குணத்திற்கான அடையாளமோ தன்னை அழித்துக்கொள்ளும் செயலோ அல்ல. நம் எதிர்காலத்தை நிர்மாணிக்கக்கூடிய சவாலை நாம்தான் ஏற்றுக் கொள்ள வேண்டும். நமக்குத் தெரியும் நாம் யாரென்று; நமக்குத் தெரியும் நாம் என்ன செய்ய முடியுமென்று; நாம் அறிவோம் குழுவாக எப்படி இயங்குவதென்று.

இந்த இலக்கிய ஆய்வுகளிலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்ளலாம்? இவையெல்லாம் என்ன உணர்த்துகின்றன? பார்வையற்றவர்களுக்காகப் பணிபுரிக்கூடிய பிரபலமான பல அறிஞர்களின் எழுத்துகளின் பார்வையைப் புதிய கண்ணோட்டத்தில் புரிந்து கொள்ள இவை உதவுகின்றன. பார்வையற்றவர்களுக்காகப் பணிபுரியும் தொழில்நுட்ப வல்லுநர்கள், பார்வையற்றோருக்காக இயங்கும் அமெரிக்க அறக்கட்டளை மற்றும் அமெரிக்க மருத்துவம் & கல்வி, நல்வாழ்வுத்துறையில் பணிபுரிபவர்கள், அரசாங்க மானியங்கள், உயரிய பட்டங்கள், கவர்ந்திழுக்கக்கூடிய ஆய்வுக்கட்டுரைகளைத் தன்னகத்தே வைத்துக்கொண்டு உலவும் போலியான விஞ்ஞானிகளெல்லாம் பார்வையின்மையென்பது ஒளியிழப்பு அல்ல ஒட்டுமொத்தமாக வேறுநிலைக்கு மாற்றக்கூடியது எனக் கூறிக்கொண்டிருக்கிறார்கள்.

பார்வையின்மையென்பது கண்களுக்கு மட்டுமல்ல, ஆளுமைக்கும் ஓர் இழப்பு என்று இவர்கள் கூறுகிறார்கள். பார்வையின்மை ஒரு மரணம், தனிமனித இருப்புக்கு ஓர் அடி என்று கூறும் இவர்கள், கண் ஒரு பாலினக் குறியீடு என்றும் பார்வையற்றவர் ஒரு முழு ஆணாகவோ பெண்ணாகவோ இருக்க முடியாது என்றும் சொல்கிறார்கள். மேலும் நம்மிடம் பல போதாமைகளும் குறைபாடுகளும் இருப்பதாக இவர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

பார்வையற்றோருக்கான அமெரிக்க அறக்கட்டளை நாம் பின்பற்றவேண்டிய நடத்தைகளாக 239 பக்க அளவில் ஒரு வழிகாட்டிக் கையேட்டை உருவாக்கியுள்ளது. இக்கையேட்டில் குளிப்பதற்கு உதவும் பதினாறு வழிகாட்டுதல் நெறிமுறைகளும் கைதட்டல் மற்றும் தலையை அசைப்பதற்கான குறிப்பிட்ட நுட்பங்களும் கூறுப்பட்டுள்ளன. மேலும் ரொட்டியில் வெண்ணெயைத் தடவுவதற்கும் காலணிகளைக் கட்டுவதற்கும் விரிவான வழிமுறைகள் இடம்பெற்றுள்ளன. மேல், கீழ் என்ற வார்த்தைகளுக்கான பொருள்களைப் புரிந்துகொள்வதற்கும் குறிப்புகள் உள்ளன. இவையனைத்தும் அமெரிக்க ஒன்றிய மானியங்களுடன் செய்யப்பட்டுள்ளன. மேலும் இவற்றைப் புதிய கண்டுபிடிப்பு என்றும் நவீனச் சிந்தனை என்றும் வற்புறுத்திக் கூறுகிறார்கள்

ஆனால் நமது இலக்கிய ஆய்வு இதைப் பொய் என்றும் இவையொன்றும் புதிய கருத்துகள் அல்ல என்றும் கூறுகிறது. இவையெல்லாம் இடைக்காலத்தில் நிலவிய அறிவற்ற கருத்துகளைப் போன்றவை. கிரேக்க நாடகமான இடிபஸ் ரெக்ஸ் போன்றே இக்கருத்துகளும் பழமையானவை. மனிதனுக்குப் பண்டையக் காலம்தொட்டு இருந்து வருகிற இருளைப் பற்றிய பயமே இவர்களிடம் உள்ளது என அறிவியல் கூறுகிறது. பார்வையற்றோர்க்கான வழிகாட்டுதல் நெறிமுறைகளெல்லாம் உண்மையல்ல, கற்பனையே. இவை புதியவைகளும் அல்ல, இவைகளெல்லாம் மந்திரங்கள். நவீனப் போர்வையில் அலங்கரிக்கப்பட்ட கணினிமயமாக்கப்பட்ட புராணங்கள். நமது அமெரிக்க ஒன்றிய அரசின் வரிப்பணத்தின் மூலம் நமக்குக் கிடைத்திருக்கிற தொழில்நுட்ப வசதிகள், ஏராளமான அரசாங்க மானியங்களெல்லாம் பழங்கால ஜோதிடத்தில் வரும் பழகிப்போன பழைய கட்டுக்கதைகள். இரவைப் பற்றிய அச்சத்தின் தொடர்ச்சி.

அமெரிக்காவின் பார்வையற்றோர் மற்றும் பார்வை குறைபாடுடையோர்க்குச் சேவை செய்யும் முகமைகளுக்கான தேசியத்தர நிர்ணய அமைப்பை நாம் மறந்துவிடக் கூடாது. இந்த அமைப்பின் பணியாளர்களும் உறுப்பினர்களும் நமது பாதுகாவலர்களாகவும் காப்பாளர்களாகவும் செயல்பட முயற்சிப்பது, எலிசபெத்தின் காலத்தில் 'ஏழைகளின் காவலர்கள்' என்று சொல்லிக்கொண்டு மரியாதையுடன் நடத்தினார்களே அதைப் போன்றது. 600 ஆண்டுகளுக்கு முன்பிருந்த பூசணிக்காயைத் தடவிப் பார்த்து உருவம் காணவைக்கிற கேலிக்கூத்தை, எப்படி நேர்த்தியுடனும் அதிகச் செயல்திறனுடனும் கழுதையின் காதுகளில் நம்மை உளறவைக்க முயற்சித்தார்களோ அதையேதான் இவ்வமைப்பினரும் செய்து கொண்டிருக்கிறார்கள்.

நமது தாழ்நிலை, கையறுநிலை பற்றிய தவறான கட்டுக்கதைகளை இன்று நாம் நிராகரித்துவிட்டோம். நாம் மாயஜால ஆற்றல் கொண்டவர்கள், வெகுளியானவர்கள் அறியாமையிலுள்ளவர்கள் என்கிற கருத்துகளையெல்லாம் நிராகரித்திருக்கிறோம். கடந்த

காலத்தில் வாழ வேண்டும் என்று நம்மை வற்புறுத்த முயற்சிப்பவர்கள் காணாமல் போவார்கள். ஒரு முறை மக்கள் சுதந்திரத்தை நுகர்ந்துவிட்டால், அவர்களால் திரும்பிச் செல்ல முடியாது. பிறரின் கவனிப்பில் இருக்கும் நிலைக்கோ இரண்டாம்தரக் குடிமக்களாகக் கண்காணிப்பு முகமைக்குள் வாழும் நிலைக்கோ நாம் மீண்டும் திரும்ப மாட்டோம். பழைய நிலை மீண்டும் அரங்கேறும் முன்பாக அதைத் தடுத்து நிறுத்த பார்வையற்றவர்கள், பார்வையுடையவர்களெல்லாம் இணைந்து தெருவில் இறங்கி அமைதியாகப் போராடுவோம்.

நாம் ஒருபோதும் இலக்கியத்தின் ஆற்றலை மறந்துவிடக் கூடாது. புரட்சிகள் தெருக்களில் தொடங்குவதில்லை, அவை நூலகங்களிலும் வகுப்பறைகளிலுமே தொடங்குகின்றன. வரலாறு முழுவதும் அவ்வாறுதான். எடுத்துக்காட்டாக, அமெரிக்காவில் நடந்த பயங்கரமான உள்நாட்டுப் போரில் எழுத்தாளர்கள், கவிஞர்கள் கூடப் போராடினர்கள். அமெரிக்காவின் தெற்கு இராணுவப் படைகள் புல்-ரன் என்ற இடத்திற்கு வந்தபோது, அவர்கள் சர் வால்டர் ஸ்காட் தனது நாவல்கள் மூலம் கற்றுக்கொடுத்த வாழ்க்கைப் பாடங்களை நெஞ்சில் நிலைநிறுத்தியபடி வந்தனர். ஸ்டோன்வால் ஜாக்சனின் தலைமையிலான தெற்குப் படைகள் பூர்வகுடியையைச் சார்ந்த வடக்குப் படை சிப்பாய்களைத் தாக்குவதற்கு வால்டர் ஸ்காட் நாவலின் இவான்ஹோ மற்றும் துணிச்சலான கிங் ரிச்சர்டு கதாபாத்திரங்கள் துணைநின்றன. கவிஞர்களின் கனவுகள் மட்டும் இல்லாமலிருந்திருந்தால் போர் விரைவிலேயே முடிந்திருக்கக்கூடும். வடக்குத் துருப்புகள் சவால் மிகுந்த பல மைல்தூரப் பாதையைக் கடந்து ரிச்மண்டிற்குச் சென்றபோது ஹாரியட் பீச்சர் ஸ்டோ-வின் பேட்டில் ஹிம் ஆஃப் தி ரிபப்ளிக் கவிதை நூலை உடன் எடுத்துச் சென்றனர். ஹாரியட் பீச்சர் ஸ்டோவின் அங்கிள் டாம், எலிஜா கதாபாத்திரங்களே தெற்குப் படைகளின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தி அவர்களின் எல்லைக் கோடுகளைத் தகர்த்தெறிந்தன. வால்டர் ஸ்காட்டும் ஹாரியட் பீச்சர் ஸ்டோவும் நடந்ததைத் துல்லியமாக அவ்வாறே கூறினார்கள் என ஒருபோதும் எடுத்துக்கொள்ள வேண்டும். ஆனால் அவர்கள் என்ன சொன்னார்களோ அதுவே நம்பப்பட்டது. அந்த நம்பிக்கையே நிஜமானது.

இலக்கியம் பார்வையற்றவர்களாகிய நமக்கு எதிரானதா என்ற வினாவுக்குப் பொருத்தமான விடையொன்று இருக்க முடியாது. ஒருவேளை கடந்த காலத்தை மட்டுமே நாம் கருத்தில் கொண்டால், உறுதியாக 'ஆம்' என்பதே பதில். மரபைத் தூக்கிப்பிடிக்கும் வரலாற்றைப் போலவே இங்குப் புனைகதைகள் உள்ளன. இவைகள் எதார்த்தத்திற்கு மாறானதையே சொல்லியிருக்கின்றன. குறிப்பிடத்தக்க விதிவிலக்குகள் சில இருப்பினும் கதைகள் ஒரே மாதிரியாகவும் எதிர்மறையாகவும் இருக்கின்றன. நிகழ்கால இலக்கியத்தை நாம் கருத்தில் கொண்டால், கலவையானது என்பதே அதற்கான பதில். மாற்றத்திற்கான அறிகுறிகள் தென்படுகின்றன, ஆனால் சமூகத்தில் உறைந்து கிடக்கும் பொதுபுத்திகளும் தவறான பிம்பங்களும் இன்னும் ஆதிக்கம் செலுத்துகின்றன. ஆதிக்கம் செலுத்தும் இவைகள் நமக்காகப் பணிபுரியும் 'வல்லுநர்கள்' பலரின் எழுத்துகள் மற்றும் நம்பிக்கைகளால் மேலும் வலுப்படுத்தப்பட்டு திரும்பப் புகுத்தப்படுகின்றன.

இலக்கியத்தில் நமது எதிர்காலமென்பது நமது வாழ்க்கையைப் போல முன்னரே தீர்மானிக்கப்பட்டதாக இருக்காது. அது நம்மால் தீர்மானிக்கப்படுவதாக இருக்கும். தனித்தனியாகவும் ஒன்றிணைந்தும் நம் வாழ்க்கையை நாம் வடிவமைப்பதுபோல நமது இலக்கியத்தையும் உருவாக்குவோம். எழுத்தாளர்கள் நம்மைப் பார்ப்பது போல் நாம் நம்மைப் பார்த்தால்தான் பார்வையின்மை ஒரு துன்பியல். இலக்கியப் பக்கங்களின் உள்ளடக்கங்கள் அந்தக் காலத்தின் நிலையைப் பிரதிபலிப்பதாக நம் பகுப்பாய்வின் வழிப் புரிந்து கொள்ளலாம். இலக்கியத்தின் அமைப்பு ஒரு கண்ணாடி அறை. நாம் எதைக் காட்டுகிறோமோ அதையே பிரதிபலிக்கிறது. அது வாழ்க்கையை விடச் சற்றுப் பெரியதாகவோ அல்லது சிறியதாகவோ கூட இருக்கும். இந்தச் சமூகத்தை விழிப்புணர்வுள்ளதாக உயர்த்தி அதன் மனசாட்சியை சீர்திருத்துவதே இன்று நமக்கு முன்னிருக்கும் சவால். கற்பனையில் ஊறிக்கிடக்கும் நமது கதைகளை விடுவித்து அவற்றை உண்மையை நோக்கி நகர்த்த வேண்டும். அப்பொழுதே எதார்த்தத்துடன் பொருந்தக்கூடிய ஓர் இலக்கியத்தையும் உண்மையுடன் பொருந்தக்கூடிய பார்வையின்மை பற்றிய பொதுபிம்பத்தையும் நம்மைப் பற்றி இயல்புக்கு ஒத்துப்போகிற எண்ணத்தையும் கட்டமைக்கமுடியும்.

கவிதை என்பது ஆற்றல்மிகு பாடல், ஆன்மாவின் மொழி. சுதந்திரத்திற்கான நமது போராட்டத்தின் மேடை - நமது இயக்கத்தின் கதை - பழைய கட்டுப்பாடுகளிலிருந்து பார்வையற்றவர்களை விடுவிப்பதற்கான நமது போராட்டம் - இருளைப் பற்றிய மனிதனின் ஆதிகாலப் பயம் - இவையெல்லாம் காவியங்களாக படைக்கப்படுவதற்கும் கவிதைகளாக வடிக்கப்படுவதற்கும் காத்துக்கொண்டிருக்கின்றன. கவிஞர்களும் நாவலாசிரியர்களும் வார்த்தைகளை எழுதலாம், ஆனால் நாம்தான் இசையை உருவாக்க வேண்டும்.

பார்வையற்றோர் வரலாற்றில் நாம் ஒரு முக்கியமான தருணத்தில் இருந்து கொண்டிருக்கிறோம். நாம் தடுமாறினாலோ அல்லது பின்வாங்கினாலோ பார்வையின்மையின் துயரம் உண்மையில் பெரிதாக இருக்கும். ஆனால், நிச்சயமாக, நாம் தடுமாறவோ பின்வாங்கவோ போவதில்லை. மாறாக, நாம் மனங்களில் மகிழ்ச்சியோடும் உதட்டில் புன்னகையோடும் முன்னோக்கிச் செல்வோம். எதிர்காலம் நம்முடையதே, இதையே நாவலாசிரியர்களும் கவிஞர்களும் பதிவு செய்வார்கள். வாருங்கள்! தடைகளுக்கான போராட்டத்தில் என்னுடன் இணையுங்கள், நாம் அவற்றை வென்றெடுப்போம்.

●

கட்டுரையாளர்கள்: ப.பூபதி: ஆங்கில உதவிப் பேராசிரியர்,
தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழகம்
&
இரா.தமிழ்ச்செல்வன்: தமிழ் உதவிப் பேராசிரியர்,
அலீகர் முஸ்லிம் பல்கலைக்கழகம்